

**March 2014**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |



| March 2014 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| S | M | T | W | T | F | S |
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

பனித்திரை...

1

வந்தாள் மகாலட்சுமியே - என் வீட்டில்

என்றும் அவள் ஆட்சியே...

டிவியில் பழைய பாடல் ஓடிக் கொண்டிருக்க.. ராஜ லட்சுமி அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்... வாசலில் ஏதோ சத்தம் கேட்டது.. டிவி திரையிலிருந்து பார்வையை விலக்கி வாசலைப் பார்த்தாள். வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு.. வீராவேசமாய் மீசையை முறுக்கியபடி சத்தம் போட்டுக் கொண்டிருந்தார் லிங்கய்யன்.. பின் கட்டிலிருந்து கோதை நாச்சியார்.. ஈரக்கைகளை முந்தானையில் துடைத்தபடி வந்து எட்டிப் பார்த்தாள்..

"வாசலில் என்னத்தை ஒரே சத்தமா இருக்கு..?"

"வேறு யாரு சத்தம் போடுவா..? இந்த எட்டு ஜில்லாவும்.. கேட்கிற.. இடியோசை போல சத்தமா பேசுவதற்கு உன் புருசனை விட்டால் வேறு யாரு இருக்கிறாங்க..?"

"போதுமே.. உங்கள் மகன் பெருமை.. எதுக்கு இந்தச் சத்தம் போடுகிறாராம்.."

"அதை அவன் உள்ளே வந்து சொன்னால்தானே தெரியும்.."

ராஜலட்சுமி டிவியில் ஆழ்ந்து போனாள்.. அதை உணர்ந்த கோதை நாச்சியார் உதடுகளில் சிறு புன்முறுவலுடன் சமையலறைக்குள் போய்விட்டாள்.

சுற்றிலும் நிறைய இடமிருக்க.. நான்கு பக்கமும் கோட்டைச் சுவர்கள் போல எழுந்து நின்ற சுற்றுப்புற மதில்களுக்கு நடுவில்.. மூன்று கட்டாக அமைந்திருந்த மாடி வீடு அது..

வீட்டின் முன்புறம் சிமிண்ட் தரை போடப்பட்டிருக்க அதில் தானிய வகைகள் காயப் போடப்பட்டு இருந்தன.. நீண்ட

வாயில் நடுவில் போக.. இருபக்கமும் பெரிய திண்ணைகள் வழவழப்பாகக் காணப்பட்டன.. அந்தத் திண்ணைகளில் ஒன்றில் அமர்ந்து.. ஒரு காலை மடக்கி.. மறுகாலை ஆட்டிக் கொண்டே.. மகன் கூறும் நியாயத்தைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார் சோமய்யன்.. மகனைப் போலவே அவருக்கும் கடாமீசை இருந்தது. அதைத் தடவிக் கொண்டே.. தலையை ஆட்டிக் கொண்டிருந்தார் அவர்..

"கண்மாய்த் தண்ணிக்கு.. நீ மட்டும்தான் சொந்தம் கொண்டாடணுமா.. எனக்கு அந்த உரிமையில்லையான்னு கேட்கிறான்ப்பா.."

"அவன் கேட்பதும் நியாயம்தானேடா.."

"என்னப்பா பெரிசாய் நியாயத்தைக் கண்டுட்டிங்க.. போன வருசம் பெய்த பேய் மழையில கண்மாய்க் கரை உடைப்பெடுத்து வெள்ளம்.. ஊருக்குள் வரத் தெரிஞ்சது.. ராப்பகலா.. நானூறு ஆள்களை விட்டு.. பணத்தைத் தண்ணியா செலவழிச்சு.. பாடுபட்டு அந்தக் கண்மாய்க் கரையைச் செப்பனிட்டது நானு.. இப்ப.. மீன் பிடிக்க மட்டும் போட்டிக்கு வருகிறானுங்க.."

"ஏன்டா.. நமக்குப் போட்டியா.. வர்றதுக்கு.. நமக்குச் சரியான ஆளாடா அவன்..? புதுப்பணம் வந்ததில் துள்ளுறான்.. துள்ளிட்டுப் போகட்டும்.. விடு.."

"என்னப்பா நீங்க இப்படிச் சொல்றீங்க... அப்ப கண்மாயை அவனுக்கு விட்டுக் கொடுத்து விடுவதா..?"

"போடா... புரியாதவனே.. இன்றைக்குக் கல்யாணம் பண்ணி வைத்தால்.. நாளைக்குப் பிள்ளையைப் பெற்று விடும் இளந்தாரிப் பயலுக்கு அப்பனா இருக்கிறவன் பேசுகிற பேச்சாடா இது.. பேரன்.. பேத்தி எடுக்கப்போகிற வயதில் கூட.. உனக்கு வேகம் தான் இருக்கிறது.. விவேகம் இன்னும் வரலையே.."

"ஏன்ப்பா, சொல்வதைக் கொஞ்சம் புரியும்படி சொல்லக் கூடாதா..?"

"டேய்.. ஏலம் எடுத்தால்தான்.. கண்மாய் அவன் கைக்குப் போகும்.. அவன் ஏலம் எடுக்க வர மாட்டான்.. கவலையை விடு.."

"அப்பா..."

"நான் உனக்கு அப்பன்டா.. கண்மாயை நாம போட்டியில்லாம.. இது வரை குத்தகைக்கு எடுத்தோம்.. இந்த வருசம்.. அவன் போட்டிக்கு வர்றான்.. வருகிறவனை வராதேன்னு நாம சொன்னால் கண்மாய்க்கு நீ என்ன சொந்தக்காரனான்னு கேட்டுத்தான் வைப்பான். அதனால்.. அவனைக் கண்டு கொள்ளாமல் விடு.. ஏலத்திற்குத் தயார்னு சொல்லிவிடு. அப்பத்தான் ஊரில்.. நம் மேல் சந்தேகப்பட மாட்டார்கள்."

"சரிங்கப்பா..."

"ஏலம் நடக்கிற அன்றைக்கு அவன் ஏலம் எடுக்க வரமாட்டான். அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.."

"சரிங்கப்பா..."

"ஆமாம்.. உன் மகன் எங்கே காணோம்.. காலேஜில் லீவு விட்டால் உடனே வீட்டுக்கு வர மாட்டேன் என்கிறான்... தப்பித் தவறி வந்தால்.. வீட்டில் தங்காமல் புல்லட்டை எடுத்துக்கிட்டு ஊரைச் சுற்றுகிறான்.. என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்.."

"இளம் ரத்தம்தானேப்பா.. போகப் போகச் சரியாகி விடுவான்.."

"எனக்கென்னவோ.. அவன் படிப்பை முடிச்சதும் ஒரு கால்கட்டைப் போட்டுவிடணும்னு தோணுது.."

"அவனுக்கென்னப்பா அவசரம்.. முதலில் ராகினிக்குக் கல்யாணம் நடக்கட்டும்.. அப்புறம் ரஞ்சனுக்குக் கல்யாணம் பேசலாம்.."

"ராகினிக் கென்னப்பா.. அவள் சின்னப் பொண்ணு.. மெதுவாய்க் கல்யாணம் பண்ணிக் கொடுக்கலாம்.."

"இல்லேப்பா.. முதலில் பொம்பளப் புள்ளயத்தான் கரையேத்தனும்.."

"யாருடா இவன்..? கூடக் கூடப் பேசிக்கிட்டு இருக்கிறவன்... ஏன்டா.. இன்ஜினியருக்குப் படிச்சு முடிக்கப் போகிற இளந்தாரிப் பயலும்.. பத்தாவது படிச்சுக்கிட்டு இருக்கற.. பச்சை மண்ணும் ஒன்னாடா..? போடா.. போய்.. உள்ளே உங்கம்மா.. பழைய பாட்டாக் கேட்டுக்கிட்டு இருப்பா.. அவகிட்டயே போய் உன் பழமையைச் சொல்லு..."

சோமய்யனின் அதட்டலுக்குப் பணிந்து வீட்டுக்குள் போன லிங்கய்யன்.. அப்படி ஒன்றும் சாமானிய மனிதரல்ல. அந்த ஊருக்குப் பெரியதனக்காரர்... ஊர் பஞ்சாயத்தில் நியாயம் சொல்பவர்.. சிலம்பாட்ட வீரர்.. நூறுபேர் எதிர்த்தாலும்.. ஒற்றை ஆளாய் நின்று பந்தாடக் கூடிய தைரியசாலி.. பலசாலி.. வீட்டை விட்டு வெளியே போனால்.. அவரின் நிழலைக் கண்டு கூட ஊர் மரியாதை கொடுக்கும்.. பயப்படும்..

ஆனால் வீட்டில் அவருடைய அப்பாவின் முன்னால் பள்ளிக்கூட மாணவன் போல.. அடக்க ஒடுக்கமாய்க் கைகட்டி நிற்பார் அவர்.. அவரைப் பொறுத்தவரை சோமய்யன் அவருடைய தந்தை மட்டுமல்ல.. வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கும் ஆசான்..

"கண்ணன் என்னும் மன்னன் பெயரைச்

சொல்லச் சொல்ல...

கல்லும் முள்ளும் பூவாய் மாறும்

மெல்ல.. மெல்ல..."

திரையில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. ராஜலட்சுமி உள்ளே வரும் மகனைப் பார்த்தவுடன்.. வெண்ணிற ஆடையை மறந்து விட்டு.. மகன் சொல்லும் அக்கப்போரைக் கேட்கத் தயார் ஆனாள்..

"என்னடா லிங்கம்.. அப்படிச் சத்தம் போட்டுக்கிட்டு இருந்த...?"

"எல்லாம்.. புதுப் பணக்காரன் கொடுக்கற ரவுசு தாங்காமல்தான் அம்மா.."

"ஏன்டா.. அவனே ஒரு சித்தெறும்பு.. அவனுக்கெல்லாம் ஒரு கணக்காடா மகனே.."

"சித்தெறும்புன்னு ஈஸியா விட்டுவிட முடியாதும்மா.. பெரிய யானையின் காதுக்குள் அந்தச் சித்தெறும்பு இறங்கி விட்டால் என்ன ஆகும்ன்னு யோசிச்சுப் பாரு.."

"அது காதில் ஏறுகிறவரை காதைக் கொடுப்பானேன்.. நசுக்கி விட்டால்.. கர்மம் ஒழிஞ்சிடும்ல்ல..."

"ம்ம்.. அதுக்கும் ஒரு நேரம் வரும் அம்மா.."

"இப்ப என்னடா வினை இழுக்கிறான்... அந்த வில்லங்கம் பிடிச்ச பயல்..?"

"கண்மாயைக் குத்தகைக்கு எடுக்க அவனும் போட்டிக்கு வருகிறான்..."

"அடக் கருமாயம் பிடிச்சவனே.. வம்சாவளியாய்.. நாம குத்தகைக்கு எடுக்கற கண்மாய்டா அது.. அதில போய் வில்லங்கம் பேச வந்துட்டானா.. அந்த விளங்கா மூஞ்சிப் பயல்..."

"அதை நினைச்சுத்தான் என் மனசு ஆறலை..."

"எப்படி ஆறும்.. பஞ்சம் பிழைக்கப் போனவன்.. பம்பாய் பக்கம் ஒதுங்கி.. கள்ளக் கடத்தல் பண்ணி.. கை நிறையக் காசோடு இந்த ஊருக்குள் வந்தாலும் வந்தான்.. அவன் வந்த அன்றைக்கு இருந்து.. இன்றைக்கு வரைக்கும்.. விவகாரத்தைத்தான் வெடிக்க வைக்கிறான்.. ஐஸ்வர்யம் வந்தால்.. அமைதியாய் வாழணும்.. ஆடிப் பார்க்கக் கூடாது.."

"ஏம்மா.. அற்பனுக்கு வாழ்க்கை வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிக்காமல் வேறு என்ன செய்வான்..?"

"அதைச் சொல்லு.."

"ம்ம்... எங்கேம்மா.. நம்ம ராகினியைக் காணோம்..?"

"மாடியில் படிச்சுக்கிட்டு இருந்தாள்.. இரு.. கூப்பிடுகிறேன்.."

"ஏம்மா.. நீ கூப்பிடாட்டி என்ன..? நான் கூப்பிடுகிறேன்.."

"எதுக்குப்பா.. விசப்பரிட்சை..? என் பேத்தி பயந்து போகிறதுக்கா.. உன் இடி முழக்கத்தை வீட்டுக்கு வெளியில் வைச்சுக்கோ.. வீட்டுக்குள் வேண்டாம்... ராகினி.. அம்மா.. ராகினி.."

ராஜலட்சுமி.. மாடிப்படிகளைப் பார்த்துக் குரல் எழுப்பினாள்.. சற்று நேரத்தில் கொலுசுச் சத்தம் முன்னே வர.. ராகினி பின்னால் வந்தாள்..

"என்ன பாட்டி.. எதுக்குக் கூப்பிட்டிங்க..?"

"நானெங்கேடி உன்னைக் கூப்பிட்டேன்..? உன் அப்பன் கூப்பிட்டான்.."

"ஏன் பாட்டி.. அப்ப.. இப்பக் கூப்பிட்டது யாராம்..?"

"நான்தான் கூப்பிட்டேன்.."

"அப்புறம்.. அப்பா கூப்பிட்டு விட்டார்ன்னு கதை சொல்கிறீங்க.."

"ஆத்தா.. கூப்பிடச் சொன்னது உங்க அப்பன்... கூப்பிட்டது நானு.. அவன் கத்திக் கூப்பிட்டால்.. நீ தாங்க மாட்டேன்னு.. அவனுக்குப் பதிலாய் நான் கூப்பிட்டேன்.. அதனால்.. காரணத்தை உன் அப்பன் கிட்டேயே கேளு.."

"என்னப்பா..?"

"இங்கே வா கண்ணு..."

அருகில் வந்த மகளை அன்புடன் பார்த்தார் லிங்கய்யன்..

"உட்காரும்மா..."

ராகினி அவரின் அருகே உட்கார்ந்து கொண்டாள்.. மகளின் தலையைப் பாசத்துடன் வருடிக் கொடுத்த லிங்கய்யன்..

"என்னம்மா.. பண்ணிக்கிட்டு இருந்தே..?" என்று அன்பொழுகக் கேட்டார்.

"படிச்சுக்கிட்டு இருந்தேன்ப்பா..."

"ஏம்மா... ராப்பகலாய் கண் விழித்துப் படித்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்.. கொஞ்சமாய்ப் படிம்மா.."

"அது எப்படிப்பா முடியும்..?"

முகவாயில் கையை வைத்துக் கொண்டு.. தகப்பனும் மகளும் பேசிக் கொள்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராஜலட்சுமி மருமகள் அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"என்ன கோதை..."

"டிவி பார்த்துக்கிட்டு இருக்கீங்களா...?"

"அந்தச் சினிமாவை விட.. இங்கே.. நம்ம நடு வீட்டில் நடக்கும் இந்தச் சினிமா நல்லா இருக்கு கோதை.. பாசமலர் சினிமாவையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விடும்ன்னா... பாரேன்.."

"என்ன சொல்கிறீங்க..?" என்றபடி.. பின் கட்டிலிருந்து ஹாலுக்குள் வந்த கோதை நாச்சியாருக்கு.. கணவனையும்.. மகளையும் பார்த்ததும் விசயம் புரிந்து விட்டது...

அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.. லிங்கய்யன் மனைவியைப் பொய்க் கோபத்துடன் முறைத்தார்..

"எதுக்குடி.. இந்தச் சிரிப்பு சிரிக்கிறவ..?"

"இப்படி அப்பாவும் பெண்ணும் உட்கார்ந்து பாசமழை பொழிஞ்சா.. வீடு நனைந்து விடாதா..?"

"என் மகள்கிட்ட நான் பாசமாய் இருந்தால்.. உனக்கும் உன் மாமியாருக்கும் ஏன்டி.. இத்தனை பொறாமை..?"

"அடேங்கப்பா.. இவரையும்.. இவர் மகளையும் பார்த்துக் கண் வைக்கத்தான்.. நாங்கள் காத்திருக்கிறோம்..

வந்திட்டாரு வியாக்கியானம் பேசிக்கிட்டு.. ஆமாம்.. வாசலில் எதுக்கு அப்படி ஒரு சத்தம் போட்டிங்க..."

"அதை அப்புறம் சொல்கிறேன்.. பசிக்குது. தட்டைப் போடு..."

கோதை நாச்சியார் கணவன் கூறுவதைக் கவனிக்காமல் வாசலைப் பார்த்தாள்.. அதைக் கவனித்த லிங்கய்யன் அதட்டினார்..

"ஏன்டி.. அசுரப் பசியில் இருக்கிறேன்.. சாப்பாட்டைப் போடுடின்னு சொன்னால்.. வாசலைப் பார்த்துக்கிட்டு நிற்கிற.. அப்பாவை நான் கூப்பிட்டுக்கிட்டு வாரேன்.."

"நான் மாமாவைப் பார்க்கலை.. ரஞ்சனை இன்னும் காணோம்.. அவனைத்தான் பார்த்தேன்..."

"அவன் என்ன சின்னப் புள்ளயா..? வெளியில் போயிருக்கிற இளவட்டப் பயல்.. வீட்டுக்கு வர நேரம் தான் ஆகும்.. நீ தட்டைப் போடு.. நாம சாப்பிடலாம்..."

"ம்ம்.. அனுபவம் பேசுது மருமகளே.. அந்தக் காலத்தில் இவனும் ஊர் சுத்தினவன்தான்.. உன்னைக் கட்டி வைச்சேன்.. வீட்டில் அடங்கி நின்னான்.. நீயும் உன் மகனுக்கு ஒரு கால் கட்டைப் போட்டு விடு.. அவனும் அடங்கி நிற்பான்.."

ராஜலட்சுமி விளையாட்டாய்க் கூறிக் கொண்டிருந்த போது, ரஞ்சன் வீட்டுக்குள் பிரவேசித்தான்..

## 2

"என்னம்மா.. இங்கே வட்ட மேஜை மாநாடு நடக்குது...?" என்று கேட்டுக் கொண்டே வந்த ரஞ்சன்.. ஆறடி உயரத்தில் இருந்தான்.. மாநிறமாய்.. அலையலையாய்த் ததும்பும் கேசத்துடன்.. அளவான உடற்கட்டுடன் இருந்தான்..

குடும்பத்தின் மீசைப் பரம்பரைப் பெருமையைக் காப்பாற்றும் பொருட்டு.. அடர்த்தியான மீசையை வைத்திருந்தான்.. ஆனால்.. இளம்வயது.. கல்லூரி மாணவன்.. என்ற காரணங்களினால்.. முறுக்கு மீசையைத் தவிர்த்து விட்டிருந்தான்..

"எங்கேடா ராஜா போயிருந்த..?"

"ஏன்டி.. அதுதான்.. ஆண்பிள்ளைக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும்ன்னு சொல்லியிருக்கிறேனா இல்லையா..? அவனை ஏன் வேண்டாத கேள்வியைக் கேட்கிற..?"

"நேரா நேரத்துக்குச் சாப்பிடாவிட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்..? சாப்பாட்டு நேரத்திற்கு வர வேண்டாமாடா ராஜா.."

"ஏன்டி.. உன் சாப்பாட்டை விட்டால் அவனுக்கு வாய்க்கு ருசியாய் வேறு சாப்பாடே கிடைக்காதா..? எல்லாம் ஹோட்டலில் சாப்பிட்டிருப்பான்..."

கோதை நாச்சியாருக்குச் சுர்ரென்று கோபம் வந்தது. கணவனை எரித்து விடுமளவிற்கு முறைத்தாள்.

"நான் என் மகன்கிட்ட கேள்வி கேட்டால் நீங்க ஏன் ஊடாலே குறுக்குச் சால் ஓட்டுகிறீங்க..? உங்களைக் கேட்டால் நீங்க பதில் சொல்லுங்க..."

"ஏன்டி.. இப்ப நான் என்னத்தைச் சொல்லிப் புட்டேன்னு இந்தப் பாய்.. பாயுறவ..? உள்ளதைத் தானே சொன்னேன்..."

"உள்ளதை என் மகன்.. என்னிடம் சொல்லுவான்.. நீங்க ஊடாலே வராதீங்க..."

லிங்கய்யன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டே முகம் கழுவப் போகிறவர் போல் மனைவியைக் கடந்து.. பின் பக்கம் போனார்..

போகும் போது மனைவிக்கு மட்டும் கேட்கும்படி அவளது காதோரம் முணுமுணுத்து விட்டுச் சென்றார்.

"என்னமோ உன் மகன்.. உன் மகன்ங்கிறாயே.. நான் இல்லாமலா உனக்கு மகன் வந்து விட்டான்..."

அவ்வளவுதான். கோதை நாச்சியாரின் முகம் குங்குமமாய்ச் சிவந்து விட்டது.. அவள் பல்லைக் கடித்துக் கொண்டு கணவனை முறைத்தாள்.. லிங்கய்யனின் விழிகளில் விசமம் கூத்தாடியது...

'வயதுக்கு வந்த மகனையும்.. மகளையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு இந்த மனிதன் பேசுகிற லட்சணத்தைப் பார்...'

மனதிற்குள் எரிச்சல் பட்டபடி முகம் திருப்பிக் கொண்டாள் கோதை நாச்சியார்...

"விடுங்கம்மா.. அப்பாவிற்குத் தெரிந்தது அவ்வளவு தான்..." என்று இயல்பாக ரஞ்சன் கூறியதும், கோதை நாச்சியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது...

'ஐயையோ.. இந்த மனுசன் பேசியது பிள்ளை காதில் விழுந்து விட்டது போல இருக்கே.. வாயை வைத்துக் கொண்டு இந்த மனுசன் சும்மா இருந்து தொலைக்கிறாரா..?'

"ஏன்டா பேராண்டி.. என்ன.. என் மகனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்னு அவ்வளவு ஈஸியா சொல்றே.. அவனுக்கு எவ்வளவு தெரியும்ன்னு.. இந்த ஊருக்கே தெரியும்.. இந்த வீட்டில் இருக்கிறவங்களுக்குத் தான் தெரிய மாட்டேங்குது..."

ராஜலட்சுமி... மருமகளை ஜடையாகத் தாக்கினாள்.. ரஞ்சன் வாய்விட்டுச் சிரித்தான்..

"பாட்டி.. உங்களுக்கு உங்க மகன் உயர்த்தின்னா.. எங்க அம்மாவிற்கு நான் உயர்த்தி.. உங்க மகனைச் சொன்னால் உங்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறதா.. இல்லையா.. அது போலத்தான்.. என்னிடம் பேச விடாவிட்டால் அம்மாவிற்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது..."

"ம்ஹூம்.. நீ ரொம்பத்தான் கண்டு விட்டாய்..."

"கொஞ்சம் என்னை என் மகன் கூடப் பேச விடுகிறீங்களா. இந்நேரம் வரைக்கும் உங்கள் மகன் ஊடுசால் ஓட்டினார்.. இப்போ நீங்கள் ஆரம்பித்து விட்டீங்களா..."

கோதை நாச்சியார்.. கொதிக்கும் நாச்சியாராக ராஜலட்சுமி அடங்கிப் போய்.. டிவியைப் பார்க்க ஆரம்பித்து விட்டாள்..

"எங்கேடா போயிருந்த..?"

"பிரண்ட்ஸைப் பார்க்கப் போயிருந்தேன்ம்மா..."

"ஏய்யா.. லீவுக்கு வருவதே ஆறு நாள்கள்தான்.. இதில் பிரண்ட்ஸைப் பார்க்கப் போய் விட்டால்.. அம்மா கையால் ஒரு வாய் சாப்பிட வேண்டாமா..? உனக்குப் பிடித்ததாச் சமைத்து வைத்திருக்கிறேன்.. உன்னைக் காணலைன்னா எனக்கு எப்படி இருக்கும்..?"

"அதுதான் சாப்பாட்டு ராமன்.. சாப்பாட்டு நேரத்துக்கு கரெக்டா வந்து விட்டானில்ல.. அப்புறமென்ன.."

ராகினியின் முறை இதுவாகிப் போனது.. மீண்டும்.. மகனுடன் பேசுவதில் தடங்கல் ஏற்பட்டதில் கோதை நாச்சியார் நெற்றிக் கண்ணைத் திறந்தாள்...

"உனக்கு ஒரு தரம் தனியாச் சொல்லணுமா.. அதென்ன உன்னை விட ஏழு வயது மூத்தவனை அவன்.. இவன்னு சொல்லிக்கிட்டு அலையறே.. நாக்கில் சூடு வைத்து விடுவேன்.. அதிலும் சாப்பாட்டு ராமனாமில்ல.. கொஞ்சமாவது மட்டு மரியாதை தெரிகிறதா..? இரு.. பின்பக்கம் போயிருக்கிற உன் அப்பா வரட்டும்.. சொல்கிறேன்.."

ஆண் பிள்ளையின் அருமை பெருமைகளை அள்ளி வீசும் தகப்பனார் வந்தால் எத்தனை மணி நேரம்.. இதற்காக மண்டகப்படியும்.. மந்திரோபதேசமும்.. பண்ணுவாரோ என்று திகிலடைந்து விட்டாள் ராகினி...

"அம்மா.. அம்மா.. வாய் தவறி வந்துவிட்டதும்மா.."

"அது எப்படி வாய் தவறும்..? சூடு வைத்தால் தவறுமா..?"

"டேய் அண்ணா.. நீயாவது சொல்லேன்டா.."

"ஏய்.. திரும்பவும்.. என் முன்னாலேயே.. என் பிள்ளையை 'டேய்' போடுகிறாயா..?"

"மதிப்பிற்குரிய அண்ணா அவர்களே.. உங்க தங்கையைக் காப்பாற்ற மாட்டீர்களா...?"

ராகினி தலைக்கு மேல் கரம் குவிக்கவும்.. ரஞ்சன் சிரித்து விட்டான்.. அவளின் காதுகளைப் பற்றித் திருகியவாறு...

"விடுங்கம்மா.. இவளே வாலு.. புதிதாய் வாங்க.. போங்கன்னு கூப்பிடச் சொன்னால் எப்படி இவளுக்கு அது வரும்..? பிறந்ததிலிருந்து வந்த பழக்கத்தை மாற்ற முடியாது ம்மா..."

"அதற்காக இப்படியா..? இந்த வருசம் உன் படிப்பு முடிந்து விட்டது.. இன்ஜினியராகி விட்டாய்.. நாளைக்கே உனக்குக் கல்யாணமாகி.. அண்ணியென்று ஒருத்தி வந்து விட்டால்.. அப்போதும் இவளுக்கு இந்தப் பழக்கம்தானே வரும்.. இப்போதிலிருந்தே மாற்றிக் கொள்ள வேண்டாமா..?"

"நாளைக்கே கல்யாணமா..? நோ சான்ஸ்.. அதற்கு இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் போக வேண்டும்.."

"நாளைக்குன்னா நாளைக்கேவா பண்ணப் போகிறோம்.. அதற்கும் நாளிருக்குடா.. ஒரு பேச்சுக்குச் சொன்னேன்.."

அப்போது.. முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டே அங்கு வந்த லிங்கய்யன்.. மனைவியைப் பார்த்து..

"ஒரு பேச்சு பேசுகிற ஆளாடி நீ.. விட்டால் நாள் பூராவும் உன் மகனோடு பேசிக் கொண்டிருப்பாயே.. மனுசன் பசியில்.. சிறுகுடலைப் பெருங்குடல் தின்று கொண்டிருக்கிறது. அப்போதிருந்து புலம்புகிறேன்.. அதைக் கண்டு கொள்ளாமல் உன் அன்பு மகனைக் கொஞ்சிக் குலாவிக்கிட்டே நிக்கிற.. போடி.. போய்த் தட்டுகளைப் போடு.. இதோ, அப்பாவும் சாப்பிட வந்து விட்டார்.." என்றார்..

கணவரின் பேச்சிற்கு எதிர்ப்பேச்சுப் பேச வாயைத் திறந்த கோதை நாச்சியார்... மாமனாரைக் கண்டதும் அவசரமாய்ச்

சாப்பாட்டு அறையில் தட்டுக்களை எடுத்து வைக்க ஆரம்பித்தாள்...

"என்ன.. சிறிசுகளா.. உங்கள் சத்தம் தெரு முனைவரைக்கும் கேட்கும் போல இருக்கே.. இங்கே என்ன பஞ்சாயத்து..?" என்று சோமய்யன் கேட்டதும், அவசரமாய் டிவியின் ரிமோட்டை எடுத்து சேனலை மாற்றி... டிவி பார்ப்பது போல் பாவனை செய்ய ஆரம்பித்தாள் ராகினி..

"பார்க்காதே.. என்னைப் பார்க்காதே..." என்று திரையில் பாடல் வரிகள் ஒலித்தன..

பழைய படத்தை விட்டு விட்டு.. புதிய படத்திற்குப் பேத்தி மாற்றி வைத்ததால் கோபம் கொண்ட ராஜலட்சுமி..

"ஏன்டி.. சின்னவளே.. அதுவே.. என்னைப் பார்க்காதேன்னு பாடுதே.. அப்புறமும் ஏன்டி.. அதையே போடுகிற.." என்று கடிந்து கொண்டாள்..

"என்னம்மா ராகினி.. உன் பாட்டி இந்நேரம் வரைக்கும் யார் அழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..?" சோமய்யன் மனைவியை ஜாடையாய்ப் பார்த்தபடி வினவினார்..

"சரோஜா தேவி அழுதுகிட்டு இருந்தாங்க தாத்தா.."

"என்ன சொல்லி அழுதுச்சோ.. ச்சு.. ச்சு..."

"யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்...

அம்மம்மா... பூமியிலே.. யாவும் வஞ்சம்..." ராகினி பாடிக் காட்டினாள்...

"நம்பாததைப் பார்க்கலாம்.. பார்க்காதேன்னா பார்க்கக்கூடாதா.. இது என்னம்மா நியாயம்..?"

"அதை நீங்களே பாட்டிகிட்ட கேளுங்க தாத்தா.."

"நான் கேட்டால் உடனே பதில் சொல்லி விடுவாளா..?"

"அடடா.. என்ன தாத்தா நீங்க.. அப்பா.. அம்மா கிட்ட தோப்புக்கரணம் போடுகிறது போல.. நீங்க.. பாட்டிகிட்ட இப்படி சரண்டர் ஆகிறிங்க.. ஷேம்.. ஷேம்.. பப்பிஷேம்..

என்னவோ.. நீங்களும் அப்பாவும் மாவீரர்கள்ன்னு ஊருக்குள் பேசிக்கிறாங்களே..."

"அதெல்லாம் அப்படித்தானம்மா.. வீட்டில் எலி.. வெளியில் புலி கதைதான்.. வேறு என்ன செய்கிறது..? நீ எங்கேடா போயிருந்த ரஞ்சா.. இவ்வளவு நேரமா ஆளைக் காணோமே...!"

"இதை அம்மா.. அண்ணன் கிட்ட கேட்டதுக்குத் தான்.. ஆண் பிள்ளைக்கு ஆயிரம் வேலை இருக்கும்.. நீயென்ன கேட்கிறதுன்னு கேட்டு.. அப்பா அம்மாவிடம் மூக்குடை பட்டார்.."

"அப்படியா சேதி.. அப்போ நானும் அடக்கித்தான் வாசிக்கணுமோ.." சோமய்யன் பயந்தது போல் நடித்ததைப் பார்த்துக் கொண்டே கோதை நாச்சியார் அங்கே வந்தாள்..

அவள் மருமகளாக வந்த புதிதில்.. ஊரையே அடக்கி ஆளும் மாமனாரின் முரட்டுத் தோற்றத்திலும்.. கணவனின் இடி முழக்கம் போன்ற கர்ஜனையிலும்.. பயந்து போயிருந்தாள்..

போகப் போக.. வீடு வேறு.. வெளியுலகம் வேறு.. என்று பிரித்து வைத்து வாழ்ந்த அந்த ஆண்களின் தன்மை கண்டு.. பயம் விலகி இயல்பானாள்..

வெளியுலகில் இருக்கும் விரைப்பை வீட்டுக்குள் சோமய்யனும்... லிங்கய்யனும் காண்பித்ததில்லை.. வீட்டைப் பொறுத்தவரை சோமய்யன் ராஜலட்சுமிக்கு அருமையான கணவன்.. கோதை நாச்சியாருக்குக் கனிவு காட்டும் மாமனார்.. பேரன் பேத்தி.. சலுகை எடுத்துக் கொள்ளும் பாசமிகு தாத்தா...

லிங்கய்யன் எல்லாவற்றிலும் தகப்பனைப் பின்பற்றுபவர்... பெற்றோர்களுக்கு அடங்கிய மகன்.. அதே சமயம்.. கோதை நாச்சியாரின் காதல் கணவன்.. ரஞ்சன்.. ராகினியின் கண்டிப்பான அப்பா..

இந்த மாதிரியான சூழலில் பிறந்து வளர்ந்த ரஞ்சன்.. இயல்பிலேயே.. தாத்தா.. தகப்பனாரைப் போன்ற பரம்பரையாய் வரும் முரட்டு சுபாவம் உடையவன்..

பெண்களைப் போற்றும் அந்த வீட்டில் பாட்டி.. தாய்.. தங்கையை நேசிப்பவன்.. தாத்தாவிடம் பாசத்தையும்.. தகப்பனாரிடம் மரியாதையையும் காண்பிப்பவன்..

இன்ஜினியரிங் படித்து முடிக்கப் போகும் அவன் காம்பஸ் இன்டர்வியூவில்.. பெங்களூரில் உள்ள ஒரு மல்ட்டி இன்டர் நேஷனல் கம்பெனியில் வேலை செய்வதற்காகத் தேர்வு செய்யப்பட்டிருந்தான்..

இத்தனைக்கும் மேலாகக் கூடுதல் தகவல் ஒன்றும் உண்டு.. அவன் மணிஷா என்ற வட இந்தியப் பெண்ணொருத்தியைத் தீவிரமாகக் காதலித்துக் கொண்டிருந்தான்..

தமிழ்ப் பண்பாட்டில் ஊறித்திளைத்த மீசைக் குடும்பத்தில்.. இந்தி பேசும் வட இந்தியக்காரி மருமகளாக வரப்போவதைச் சொல்ல நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்...

3

சசிரேகா உற்சாகமாக இருந்தாள்.. அவளுக்குச் சந்தோசத்தில் வானில் பறக்க வேண்டும் போல இருந்தது.. அன்றைக்கு நடந்த கேம்பஸ் இண்டர்வியூவில் அவள் தேர்வு செய்யப்பட்டு இருந்தாள்.. பெங்களூரில் உள்ள பெரிய நிறுவனம்..

"வாவ்.. மல்ட்டி நேஷனல் கம்பெனி சசி.. யு ஆர் வெரி.. வெரி.. லக்கி பெர்ஸன்.. யு நோ.. நீ பாரின் போய் வேலை பார்க்கும் சான்ஸ் கூடக் கிடைக்கும்..." ஜூலியின் கண்களில் பொறாமை வெளிப்படையாகத் தெரிந்தது..

"பாவம்... ஜூலிதான் அந்தக் கம்பெனியில் செலக்ட் ஆகிவிட வேண்டும்ன்னு பறப்பாய்.. பறந்தாள்.. பட்.. அவள் செலக்ட் ஆகவில்லை... நீ செலக்ட் ஆகிவிட்டாய்.."

பரிதாபப்படுவது போல் ஜூலியின் வேதனையைக் கிளறி விட்டு வேடிக்கை பார்த்தாள் பூமிகா..

"ஏய்ய்.. நான் எப்போதடி பறந்தேன்..? நீ அதைப் பார்த்தாயா..?" பூமிகாவுடன் சண்டைக்குப் போனாள் ஜூலி.

"கூல்டவுன் ஜூலி.. அவள் என்னவோ விளையாட்டுக்குச் சொல்லி விட்டாள்.. ஈஸியாக எடுத்துக் கோயேன்.. ப்ளீஸ்.." சசிரேகா இடையிட்டுச் சமாதானம் செய்து வைத்தாள்.

கல்லூரியில் பேராசிரியர்களும்.. விரிவுரையாளர்களும் அவளுக்கு வாழ்த்துச் சொன்னார்கள். வீட்டுக்கு இறக்கையில்லாமல் பறந்து வந்தாள்..

"மம்மி.. ஐ டிட் இட்.."

ஓடி வந்து கழுத்தைக் கட்டிக் கொண்ட சசிரேகாவின் முடி கோதி அவளது நெற்றியில் செல்லமாக முத்தமிட்டாள்.. அவளுடைய தாய் ஜானகி..

"வாட் இஸ் தி மேட்டர் டார்லிங்.." என்று வினவிய படி கழுத்து டையை அவிழ்த்த வண்ணம் வீட்டுக்குள் வந்தார் சசிரேகாவின் தந்தை ரங்கநாதன்..

"டாட்.. நான் கேம்பஸ் இன்டர்வியூவில் செலக்ட் ஆகிவிட்டேன் தெரியுமா..?"

ரங்கநாதனின் தோளில் தொங்கியபடி கூறினாள் சசிரேகா.. மகளின் தோளை வளைத்த வண்ணம் சோபாவில் அமர்ந்த ரங்கநாதன்,

"நீ செலக்ட் ஆகாவிட்டால்தான் அது ஆச்சர்யம்.. செலக்ட் ஆனதில் என்ன ஆச்சர்யம்..?" என்று வினவினார்..

அதற்குள் மகள் வென்று விட்டதற்காக அவசரமாய் இனிப்பு செய்து சூடாகக் கொண்டு வந்தாள் ஜானகி..

"எப்படி மம்மி.. இவ்வளவு வேகமாய் பிரிபேர் பண்ணினீங்க..?"

"உன் அம்மா என்பதை நானும் புரூப் பண்ண வேண்டாமா..? அதனால் தான் பாஸ்ட் புட் ரெடிபண்ணினேன்.."

"ஜானு.. நான் எத்தனை டீலிங்கை வெற்றிகரமாக முடித்திருக்கிறேன்.. அப்போதெல்லாம்.. நீ இப்படி ஒரு பாஸ்ட்டாய் ஸ்வீட் செய்து கொடுத்ததில்லையே.."

"டாடி.. என்னுடன் போட்டிக்கு வருகிறீர்கள்.. பார்த்தீங்களா..?"

"நோ டார்லிங்.. உன் அம்மாவிற்கு.. என்னைவிட நீதான் உயர்த்தி.. அதைச் சொன்னேன்..."

ரங்கநாதனின் கண்கள் ஜானகியைப் பார்த்துச் சிரித்தன.. அவரைப் பொய்க் கோபத்துடன் பார்த்த ஜானகி.. கூந்தலை அழகாகவும்.. நவீனமாகவும் கொண்டை யிட்டிருந்தாள்.. அவளது அசைவுகளில் மேல் தட்டு நாகரிகம் தென்பட்டது.. நுனிநாக்கில் ஆங்கிலம் பேசினாள்.. செயல்களில் நாசூக்குத் தெரிந்தது..

காதோரம் மிக லேசாக நரை தெரிந்த ரங்கநாதன் கம்பீரமாய் கோட்.. சூட்டுடன் இருந்தார்.. சோபாவில் சாய்ந்து.. கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்ததில் ஒரு தோரணை தென்பட்டது.. அவரது முகத்தில் பணக்காரத்தனம் வெளிப்பட்டது..

இவர்களின் ஒரே மகளான சசிரேகா.. எலுமிச்சை நிறத்தில் அழகாக இருந்தாள்.. மாசு மருவற்ற சருமம்.. அடிக்கடி அழகு நிலையத்திற்குப் போவதால்.. இன்னும் பளிச்சென்று இருந்தது.. இன்றைய நாகரிகப்படி முடியை வெட்டி.. விரித்து விட்டிருந்தாள்.. சிரிக்கும் போது அவளது கன்னத்தில் குழி விழுந்தது அவளது அழகுக்குக் கூடுதல் அழகைச் சேர்த்தது..

"பட்.. சசி.. நீயேன் வெளியிடத்தில் வேலை பார்க்க வேண்டும்..? நம் கம்பெனி.. நீ தலைமை ஏற்பதற்காகக் காத்திருக்கிறது.. உன்னை என்ஜினியரிங் படிக்க வைத்ததே.. மோட்டார் உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் நம் கம்பெனியின் எம்டியாக ஆக்குவதற்காகத்தானே.. அதைப் பொறுப்பேற்பதை விட்டு விட்டு.. வெளியூர் போய் நீ வேலை பார்க்க வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது..?"

"டாட்.. நம் கம்பெனியில் எம்டியாக ஆவதற்கு.. நான் உங்கள் மகள் என்ற அடையாளம் போதும்.. ஆனால்.. இந்த வேலை.. என் திறமைக்கும்.. தகுதிக்கும் கிடைத்த பரிசு டாடி.. இதை நான் பரிபூரணமாக அனுபவிக்க விரும்புகிறேன்..."

"அப்போ.. நம் கம்பெனி என்ன ஆவது..?"

"அதைப் பார்த்துக் கொள்ளத்தான் நீங்க இருக்கிறீங்களே டாடி.."

"எனக்குப்பின் நீதானே அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்..? அதற்கு இப்போதிருந்தே நீ தயாராக வேண்டாமா..?"

"கொஞ்ச நாள் எனக்காக இந்த வேலையைப் பார்க்கிறேனே.."

"எப்போது திரும்பி வருவாய்..?"

"வரும் போது வருவேன்..."

மாடிப்படிகளில் தாவியேறி ஓடிய சசிரேகாவைக் கவலையுடன் பார்த்தார் ரங்கநாதன்.. அவரின் கவலையைக் கண்ட ஜானகி.. கணவனைச் சமாதானம் செய்ய முற்பட்டாள்..

"ஈஸி டார்லிங்.. அவள் சிறு பெண்.. அவளது ஆசைப்படி கொஞ்ச நாள் பிடித்த வேலையைப் பார்க்கட்டுமே..."

"இல்லை ஜானகி.. நாம் அப்படி விட்டுவிடக்கூடாது.. இந்தப் பிரிவு.. நிரந்தரமாய் அமைந்து விடுமோன்னு எனக்குப் பயமாக இருக்கிறது..."

"என்ன வார்த்தை சொல்கிறீங்க... பயமா.. உங்களுக்கா..? அது வரலாமா..?"

"நம் பெண்ணுக்குக் கல்யாண வயது வந்து விட்டது ஜானகி.. அதனால்.. பயமும் வந்து விட்டது.."

"அவள் சிறு பெண் என்றேனே.. மறந்து விட்டதா.. அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க இன்னும் நாளிருக்கிறது.."

"இல்லை.. நமக்கு அந்த நாள்வரை காத்திருக்கப் பொறுமை இல்லை.. விசயம் கைமீறு முன்... ஏதாவது செய்ய வேண்டும்.."

ரங்கநாதன் சுற்று முற்றும் வேலைக்காரர்கள் யாராவது தென்படுகிறார்களா.. என்று பார்த்துக் கொண்டே இதைக் கூறினார்.. பின்னர்.. அவசரமாய் எழுந்து மாடியேறினார்.. ஜானகியின் முகம் மாறிவிட்டது.. அவளும் கணவனைப் பின் தொடர்ந்தாள்.. அவர்களின் படுக்கையறைக்குள் நுழைந்த ரங்கநாதன் கதவைச் சாத்திவிட்டு.. உடை மாற்றலானார்.. ஜானகி.. அவரின் கோட்டைக் கழற்ற உதவியபடி.. பேச்சைத் தொடர்ந்தாள்..

"இன்றைக்கு ஏன்.. ஏதேதோ சொல்கிறீங்க டியர்.."

"ஜானு.. நம் சசி காதலில் விழுந்து விட்டாள்.."

"வாட்.."

ஜானகி.. அதிர்ச்சியுடன் கணவனைப் பார்த்தாள்.. அவர் கட்டிலின் மேல் அமர்ந்தார்..

"ஆமாம் ஜானு.. சசி.. அவளுடன் படிக்கும் டேவிட் என்கிற பையனைக் காதலிக்கிறாள்.."

"வேறு மதமா..?"

"காதலுக்குத்தான் ஜாதி - மதம் கிடையாதே..."

"ஆனால்.. நம் சொந்தத்தில் என்ன சொல்வார்களோ.."

"அதை நினைத்துத்தான்.. நானும் கவலைப்படுகிறேன்.. நாம் சென்னை வாசிகளாக இருந்தாலும்.. நமது வேர் கிராமத்தில்தானே இருக்கிறது.."

"ம்ம்.. இதுவரை ஒரு சொல்லில்லாமல் வாழ்ந்து விட்டோம்.."

"இப்போது சசியால் அது கெட்டு விடும் போல இருக்கிறதே.."

"என்ன செய்யலாம்..?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை ஜானு.. சசி கேம்பஸ் இன்டர்வியூவில் செலக்ட் ஆகிவிட்ட நியூஸ் எனக்கு மதியமே தெரியும்.. அப்போதே எனக்கு டென்சன் ஆரம்பித்து விட்டது.."

"ஏன்...?"

"அந்த டேவிட்டும் அதே கேம்பஸ் இன்டர்வியூவில்.. அதே கம்பெனியில் வேலை செய்ய செலக்ட் ஆகியிருக்கிறான் ஜானு.."

"இது வேறா..? இனி என்ன செய்வது..?"

"எதையாவது செய்ய வேண்டும்.. சசியின் உற்சாகம் அவளது திறமைக்கு வேலை கிடைத்ததற்காக இல்லை.. நமது கையை எதிர்பார்க்காமல் சுயமாய்க் காலை ஊன்ற அவளுக்கும்.. அவளுடைய காதலனுக்கும் ஒரே கம்பெனியில் வேலை கிடைத்திருக்கிறது என்பதற்காக.. இப்போது நம் மகளைவிட்டு விட்டால்.. அவள் அந்த டேவிட்டைக் கல்யாணம் செய்து கொண்டு.. வெளி நாட்டிற்குப் பறந்து விடுவாள்.."

ஜானகியின் முகம் வெளுத்து விட்டது.. அவளது மனக்கணக்கில் திருச்சிக்கு அருகிலிருக்கும் தோப்பூர் கிராமம் தோன்றியது.. ஊரின் சின்னப் பண்ணையாரின் செல்ல மகள் அவள்.. நாளைக்கு அவளது மகள் இப்படி ஒரு காதல் கல்யாணத்தைப் பண்ணி விட்டால் அவளால் பிறந்த ஊரில் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா..?

சிந்தனையுடன் கீழே சென்றாள் அவள்.. சமையல் காரப் பொன்னம்மாள்.. இரவுச் சமையலை முடித்து விட்டிருந்தாள்.. பாத்திரங்களை எடுத்து டைனிங் டேபிளில் அடுக்கிக் கொண்டிருந்தாள் ஜானகி..

"மம்மி.. பசிக்குது..."

வெண்மை நிற நைட்டியில் ஒரு தேவதையைப் போல் வந்து அமர்ந்த மகளைக் கூர்ந்து பார்த்தாள் ஜானகி..

'இந்தப் பிள்ளை முகத்திற்குள் நானறியாத ரகசியம் ஒளிந்து இருக்கிறதா..?'

"என்ன மம்மி அப்படிப் பார்க்கறீங்க..."

"சும்மாதான்.."

"இன்றைக்குத்தான் என்னைப் புதிதாகப் பார்ப்பது போல் பார்க்கறீங்களே மம்மி.."

"இன்றைக்கு என் கண்ணுக்கு நீ புதிதாகத்தான் தெரிகிறாய்.."

"என்னவோ போங்க மம்மி.. நீங்க சொல்வது எதுவுமே எனக்குப் புரியவில்லை..."

"எனக்கும் கூடச் சில விசயங்கள் புரியத்தான் இல்லை சசி.."

"போதும் மாம்.. புரியாத புதிரைப் பற்றி எதற்குப் பேச வேண்டும்..? டாடி எங்கே...?"

சசிரேகா ரிமோட்டைக் கையில் எடுத்து.. டிவியின் திரையை உயிர்ப்பித்தாள்.. கறுப்பு வெள்ளைத் திரைப்படப் பாடல் காட்சி ஒன்று திரையில் தோன்றியது..

"ச்சு.. பழைய படம்.." என்றபடி சேனலை மாற்றப் போனவள்.. பாடலின் வரிகளைக் கேட்டதும்.. சேனலை மாற்றாமல் டிவியில் ஆழ்ந்து போனாள்..

"காதலுக்கு ஜாதியில்லை.. மதமுமில்லையே..

கண்கள் பேசும் வார்த்தைகளில்.. பேதமில்லையே..

வேதமெல்லாமல் காதலையே மறுப்பதில்லையே.. அது..

வேதம் சொல்லும் முனிவரையும்.. விடுவதில்லையே.."

திரைப்படப் பாடலைக் கேட்ட சசிரேகா விழி விரித்தாள்..

"வாவ்.. எவ்வளவு அழகான பாடல் மம்மி.. சிம்ப்ளி சூப்பர்ப்.."

ஜானகி எரிச்சலுடன் மகளை நோக்கி விட்டு.. டிவியில் ஓடிய பழைய பாடலை முறைத்தாள்..

'நேரம்.. காலம் தெரியாமல்.. இந்தப் பாட்டு வேறு வந்து என் உயரைக் குறைக்கணுமா..?'

அவளின் கோபத்தைச் சட்டை செய்யாமல் பழைய பாடல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது..

"பாலிருக்கும்.. பழமிருக்கும்.. பசியிருக்காது...

பஞ்சணையில் காற்றுவரும்.. தூக்கம் வராது..

நாலுவகை குணமிருக்கும்.. ஆசை விடாது..

நடக்க வரும் கால்களுக்கும் துணிவிருக்காது.."

கன்னத்தில் கையை வைத்து.. பசியை மறந்து பாடலை ரசிக்கும் மகளைப் பார்த்தபடி மாடியிறங்கினார் ரங்கநாதன்..

டைனிங் டேபிளின் அருகே நின்று கொண்டிருந்த ஜானகியின் கண்களும்.. அவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன.. அவை பேசிய செய்தி ஒன்றுதான்.. 'இனி என்ன செய்வது..?'

## 4

சசிரேகா கல்லூரிக்குக் கிளம்பிச் சென்றாள்.. அவள் மனம் பூராவும் உல்லாசத்தில் நிரம்பியிருந்தது.. கார் கல்லூரிக்குச் செல்லும் சாலையை விட்டுக் கிழக்குக் கடற்கரைச் சாலையின் பக்கம் திரும்பியது.. சற்றுத் தூரம் சென்றதும்.. சாலையின் ஓரமாய் நின்றிருந்த அந்த உயரமாய்.. சிவந்த தோற்றத்துடன் இருந்த வாலிபனின் அருகில் போய் நின்றது கார்..

"ஏறுங்க டேவிட்.."

அந்த டேவிட் காரின் முன்பக்கம் கதவை மிகச் சுவாதீனமாய்த் திறந்து காரில் ஏறி அவள் பக்கத்தில் அமர்ந்தான்.. கார் மகாபலிபுரம் நோக்கிப் பறந்தது..

கற்களைக் குடைந்து அதில் காவியம் படைத்திருந்த பல்லவர்களின் சிற்பங்களின் மத்தியில் நடந்து கொண்டிருந்தார்கள் அவர்கள்..

"இன்னும் இரண்டு மாதம்தான் சசி.."

"ஆமாம்.. அதன் பின்னால் எக்ஸாம் முடிந்து விடும்.."

"ரிஸல்ட் வந்தவுடன் நாம் பெங்களூர் போய்விடலாம்.."

"முதல் மாதச் சம்பளம் வாங்கியவுடன் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்.."

"நமக்கென்று ஒரு வீடு.. அதில் வீட்டுக்குத் தேவையான சாமான்கள் இதையெல்லாம் வாங்கி விட்டுக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்.."

"நமக்கென்று ஒரு வீடு பிடிக்க.. நம் இருவரின் சம்பளம் போதும் டேவிட்.. மேற்கொண்டு தேவையானதை மெதுவாய் வாங்கிக் கொள்ளலாம்.."

"ஏன் அவசரப்படுகிறாய் சசி.."

"நாம் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும்.. நாம் பிரிந்து விடும் அபாயம் இருக்கிறது டேவிட்.."

"சும்மா பயப்படாதே.. இது கம்ப்யூட்டர் காலம் சசி.. இப்போது போய்க் காதல் கல்யாணம் பண்ணப் பயப்படுவாங்களா..?"

"நான் பயப்படுவேன்.."

"அதான் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது.. உன்னைப் போல் ஒரு அல்ட்ரா மாடர்ன் பெண்.. காதலிக்கவும்.. கல்யாணம் செய்து கொள்ளவும் பயப்படுவதா..?"

"அல்ட்ரா மாடர்ன் பெண்ணுக்குக் கட்டுப்பாடுகள் இருக்காதா..?"

"நான் அப்படிச் சொல்லவில்லை சசி.."

"நீ எப்படியும் சொல்ல வேண்டாம்.. நீ இதைப் போல் அடிக்கடி சொல்கிறாய் டேவிட்.. ஏனென்றுதான் புரியவில்லை.."

"பின்னே என்ன சசி.. சும்மா.. எல்கேஜி படிக்கும் குழந்தை போல அம்மா.. அப்பாவிடம் பயந்து கொண்டே இருந்தால் எப்படி..? உன் வயதுக்குத் தைரியமாய்.. உன் பேரண்ட்ஸிடம் போய்.. நான் டேவிட் என்கிற பையனைக் காதலிக்கிறேன்.. அவனையே கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்னு சொல்ல வேண்டாமா.. அதை விட்டுவிட்டு.. தெரியாமல் கல்யாணம் பண்ணிக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறாயே.."

"தெரிந்தால் என் வீட்டில் சம்மதம் தர மாட்டார்கள்.."

"அப்போது வீட்டை விட்டு வெளியில் வா..."

"எப்படி வர முடியும்..?"

"ஏன்.. வீட்டில் சிறை வைத்து விடுவார்களா...?"

"ஆமாம்.."

"நான் போலிஸோடு வந்து உன்னை மீட்கிறேன்.."

"அவர்கள் பூவேலி போட்டிருப்பார்கள்.. அதைத் தாண்டி வர என்னால் முடியாது.."

"இதோ பார்.. சில சமயம் நீ பேசுவது சினிமா டயலாக் போலவே எனக்கு இருக்கிறது.. அது என்ன பூவேலி..? முள்வேலி.. இரும்பு வேலியைப் போட்டாலே.. நீ தாண்டி வந்து விடும் மன உறுதி படைத்தவள்.. போயும்.. போயும்.. ஒரு பூவேலியைத் தாண்டமாட்டாயா என்ன..?"

"டேவிட்.. பூவேலியென்றால் என்னவென்று தெரியாமல் நீ பேசுகிறாய்.. அது இரும்பு வேலியை விட வலிமை வாய்ந்தது.. என் பேரண்ட்ஸ் என்னைப் பாசத்தால் கட்டிப் போட்டு விட்டால் என்னால் அதைத் தாண்ட முடியாது.. அதைத்தான் அப்படிச் சொன்னேன்..."

"உனக்கு மட்டும்தான் பேரண்ட்ஸ் இருக்கிறாங்களா.. எனக்கு இல்லையா.. நான் உன்னை மாதிரியா புலம்பிக் கொண்டிருக்கிறேன்.."

"ச்சு.. விடு டேவிட்.. நீ இப்படித்தான் என்னை மூட் அவுட் பண்ணிக் கொண்டே இருப்பாய்.. புரிந்து கொள்ள மாட்டாய்.."

சசிரேகா.. சலிப்புடன் அந்தப் பாறை மேல் சாய்ந்து நின்றாள்.. டேவிட் அவளருகே நெருங்கினான்.. அவன் முத்தமிடப் போன கடைசி நொடியில் அவள் சட்டென்று விலகிவிட்டாள்.. டேவிட்டின் முகத்தில் ஏமாற்றமும்.. எரிச்சலும் போட்டி போட்டுக் கொண்டு வந்தது..

"ஏன் இப்போது விலகுகிறாய்..?"

"இப்படி பிஹேவ் பண்ணாதேன்னு எத்தனை முறை உனக்குச் சொல்வது..?"

"ஒரு முத்தம் கூடக் கொடுக்கக் கூடாதா..?"

"கூடாது.."

"சசி.. நாம் லவ்வர்ஸ்.."

"லவ்வர்ஸ் மட்டும்தான்.. ஹஸ்பெண்ட் அன்ட் வொய்ப் இல்லை.."

"சே.. இதையே எத்தனை முறை சொல்வாய்.."

"அத்தனை முறை நான் சொல்லியும் என் பக்கத்தில் வருகிறாயே.. உன்னை என்னதான் செய்வது..?"

சசிரேகா கோபத்துடன்.. காரை நோக்கி நடந்தாள்.. பின் தொடர்ந்த டேவிட்டின் மனதில் புயல் அடித்தது..

'கிட்டே நெருங்க மட்டும் விட மாட்டேன் என்கிறாளே..'

அவர்களின் கார்.. கல்லூரியை நோக்கிச் சென்ற போது.. அதுவரை அவர்களின் காரைத் தொடர்ந்து வந்த ரங்கநாதனின் கார் வீடு நோக்கிப் பறந்தது..

"என்னங்க.. இப்போதே திரும்பி வந்து விட்டிங்க.. பைல் எதையும் மறந்து விட்டிங்களா..?"

"மாடிக்கு வா ஜானகி.. நிலைமை கைமீறுகிறது.."

கணவனின் முக இறுக்கத்தைக் கண்டு பதறிப் போய் விட்டாள் ஜானகி.. ரங்கநாதன் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்..

"என்ன ஆச்சுங்க..."

"ஜானகி.. சசி காலேஜிற்குப் போகவில்லை.."

"ஐயையோ.. வேறு எங்கே போனாள்..?"

"அந்த டேவிட்டைக் கூப்பிட்டுக் கொண்டு.. இந்நேரம் வரை மகாபலிபுரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறாள்.. ஜானகி.. அந்த டேவிட் நல்லவன் இல்லை.."

"நம் சசியா இப்படி..? நம்பவே முடியவில்லையே..?"

"எனக்கும்தான்.. பையன் நல்லவனாக இருந்தால்.. மதத்தைப் பற்றி நான் யோசிக்க மாட்டேன்.. அவன் நல்லவன் இல்லைடி.."

"உங்களுக்கு எப்படி இது தெரியும்..?"

"கொஞ்ச நாளாகவே அவனை நான் அவனுக்குத் தெரியாமல் பாலோ பண்ணிக் கொண்டு இருக்கிறேன்டி.. டிடெக்டிவ் ஏஜன்ஸியின் ரிப்போர்ட் திருப்திகரமாக இல்லை.. சசியின் மனது பிரகாரம் அவனை அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க முடியாது ஜானகி.. அவன் எந்த மதமாக இருந்தாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.. ஆனால் பையன் நல்லவன் இல்லையே.."

"இப்போது என்ன செய்வது..?"

"நாளைக்கே நாம் தோப்பூர் போகிறோம்.."

ஊருக்கு மத்தியில் உச்சிப் பிள்ளையாரும்.. ஊரின் ஒருபுறத்தில் ஸ்ரீரங்கநாதன் பள்ளி கொண்டும் காத்தருளும் திருச்சி மாநகரம்.. தினமும் வந்து போக நாள் ஒன்றுக்கு மூன்று மணி நேரத்திற்கு மேல் ஆகிறது என்று கணக்குச் சொல்லி.. அங்கேயிருந்த இன்ஜினியரிங் காலேஜில் ஹாஸ்டலிலேயே தங்கி விட்ட ரஞ்சன்.. அன்று

கொள்ளிடக் கரையில்.. கல்லணை ஓரமாய் இருந்த பூங்காவில் அமர்ந்திருந்தான்..

அவனருகே.. செக்கச் சிவந்த நிறத்தில்.. உதடுகளில் ரத்த நிறத்தில் சாயம் தீட்டி.. புருவம் திருத்தி.. இறக்கி வெட்டப்பட்டிருந்த சுடிதாரைத் துப்பட்டா கொண்டு மறைக்காமல்.. ஒட்டி உரசிக் கொண்டு அமர்ந்திருந்தாள் மணிஷா..

"மணிஷா..."

"ம்ம்ம்..."

"கொஞ்சம் நகர்ந்து உட்கார்.."

ஆங்கிலத்தில் கொஞ்சலாகக் கூறினான் ரஞ்சன்.. யாராவது பார்த்து விடுவார்களோ என்ற சங்கடம் அவனுக்கு..

"நோ ரஞ்சன்..."

"ப்ளீஸ் மணிஷா.."

"காதலியை ப்ளீஸ் போட்டு கிட்டே வரத்தான் சொல்வார்கள்.. நீங்கள் என்னவென்றால் தள்ளி உட்காரச் சொல்லி ப்ளீஸ் போடுகிறீர்களே.."

அவள் படபடவென்று ஆங்கிலத்தில் பொரிந்தாள்.. அவள் நெருங்கி அமர்ந்திருந்தாள்.. மொழுமொழு வென்றிருந்த அவளது கைகள்.. அவனது கையோடு பிணைந்து கொண்டன.. ரஞ்சனின் ரத்தம் சூடேறியது.. கையில்லாத ஸ்லீவ்லெஸ் சுடிதார் டாப்ஸை அணிந்திருந்தவளின்.. முன்புறத் தோற்றம்.. மீண்டும் என்னைப் பார்.. என்று அழைத்தது..

'இவள் ஏன்.. இப்படிப்பட்ட உடையைப் போடுகிறாள்.. இந்த டிரெஸ்ஸில் மட்டும் இவளைத் தாத்தா பார்த்தால் என்னைத் தொலைத்து விடுவார்..'

ரஞ்சன் நகர முயன்ற போது.. மணிஷா.. அவனது முகத்தைத் தன் புறம் வளைத்து.. அவனது கன்னத்தில்

முத்தமிட்டு விட்டாள்.. ரஞ்சனின் உணர்வுகள் பொங்கின.. அவளது செழுமையான தோள்மீது கை போட்டு.. தன்புறம் இழுத்துக் கொண்டு.. அவள் முகம் நோக்கிக் குனிந்தான்..

அவளோ.. எதற்கும் தயார்.. என்று இசைந்து கொடுத்தாள்.. தன்னை மறந்து.. அவளது இதழில் இதழ் பதிக்க நெருங்கியவனின் மனதில் சோமய்யன் தோன்றி,

'டேய் பேராண்டி..' என்று ஒரு அதட்டல் போட்டார்..

பட்டென்று ரஞ்சனின் உணர்வுகள் வடிந்து விட்டன.. அவன் அவளிடமிருந்து விலகி அமர்ந்தான்..

"வாட் இஸ் திஸ் ரஞ்சன்.." மணிஷா ஏமாற்றத்துடன் சிணுங்கினாள்..

"திஸ் இஸ் தி லிமிட் மணிஷா.." ரஞ்சன் எழுந்து கொண்டான்.

கோபத்துடன் எழுந்து நின்ற மணிஷா.. கால்களைத் தரையில் தேய்த்து நடந்தாள்.. அவளது தாபம் ரஞ்சனுக்குப் புரியாமல் இல்லை.. ஆனால்.. முத்தத்தில் ஆரம்பிப்பது.. வேறு எதிலாவது முடிந்து விட்டால் வீட்டில் உள்ள பெரியவர்களின் முகத்தை எப்படி நிமிர்ந்து பார்ப்பது என்ற தவிப்பும்.. பயமும் அவனக்குள் தோன்றியிருந்தன..

மணிஷா விலகிச் செல்கிற பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லை.. அவளோ.. அவன் லேசாய்த் தொட்டுப் பேசினால்..கட்டிக் கொண்டு பேச ஆரம்பித்து விடுகிறாள்.. இதில் அவளைக் கட்டிக் கொண்டு பேச ஆரம்பித்தால்.. நிச்சயம் கட்டில் வரை அவனைக் கொண்டு போய் விடுவாள்..

'எப்படி.. இப்படிப் பயமில்லாமல் தொட்டுப் பழகுகிறாள்..'

என்னதான் காதலியென்றாலும்.. ரஞ்சனின் மனதிற்குள் இந்தக் கேள்வி.. அடிக்கடி முளைத்தது.. தன் குடும்பத்திற்கு இவளது அரைகுறை உடையும்.. உதட்டுச் சாயமும் சரிப்பட்டு வருமா.. என்ற சந்தேகம் அவன் மனதில் எழத்தான் செய்தது..

அப்படியான தருணங்களை எப்படியோ உணர்ந்து கொண்டு விடுவாள் மணிஷா.. விழிகளில் தாபம் நிரப்பி.. காதல் வார்த்தைகள் பேசி.. அவனுடன் ஒட்டி உரையாடி.. அவனை மீண்டும் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்து விடுவாள்..

புல்லட்டில் ஏறி.. முன்னாலிருந்த கண்ணாடியைச் சரி செய்து கொண்டிருந்தவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.. அவனது கன்னத்தில் சற்று முன் மணிஷா முத்தமிட்டதால்.. அவளது உதட்டில் தீட்டியிருந்த சாயம் இதழ் வடிவில் பதிந்திருந்தது.. அவசரமாய்க் கைக்குட்டையை எடுத்துத் தன் கன்னத்தைத் துடைத்துக் கொண்டான்..

'சே.. இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்.. காலம் முழுவதும்.. இப்படி கர்சீப்பால் கன்னத்தைத் துடைத்துக் கொண்டுதான் அலைய வேண்டும்..'

எரிச்சலுடன் வண்டியைக் கிளப்பினான்.. அவனது முக மாறுதலைக் கவனித்த மணிஷா.. மலரெனப் புன்னகைத்தாள்.. இப்படிச் சிரிப்பவளிடம் எப்படி முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வது.. பதிலுக்கு லேசாகச் சிரித்தான் ரஞ்சன்.. மணிஷா அவன் பின்னால் ஏறி அமர்ந்தாள்.. காவேரிக் கரையோரம்.. புல்லட் ஓட ஆரம்பித்தது..

"மணிஷா.. கொஞ்சம் இந்த லிப்ஸ்டிக்கை அவாய்ட் பண்ணு.. டிரெஸ் கூட இவ்வளவு கவர்ச்சியாய் வேண்டாம்.. கண்ணியமாய் டிரெஸ் பண்ணு.."

'ஆரம்பித்து விட்டானா...' என்று இருந்தது மணிஷாவிற்கு.. அவளுக்கு அவனது அறிவுரைகள் பிடிக்க வில்லை.. ஆனாலும் அவனது கணக்கு வழக்கில்லாத சொத்துக்கள் பிடித்து இருந்தன.. அதனால் ரஞ்சனின் பேச்சிற்குப் பதில் சொல்லாமல்.. அவனை இறுகக் கட்டிக் கொண்டு ஒட்டி அமர்ந்து கொண்டாள்..

தோப்புக்களால் சூழப்பட்டிருந்த... காவேரி நதிக்கரையில் அமைந்திருக்கும் தோப்பூர் கிராமம்.. அந்தத் தோப்பூர் கிராமத்தில் முடி சூடா மன்னன் போல் இருக்கும் லிங்கய்யன்.. மாலை நேரத்தில் வீட்டுத் திண்ணையில் தகப்பனார் சோமய்யனின் முன்பு பவ்யமாய் அமர்ந்திருந்தார்..

"என்னப்பா.. கண்மாய் ஏலத்தை எடுத்து விட்டாயா..?"

"எடுத்துட்டேன்ப்பா.. ஆனால்..."

"அது என்னடா.. ஆனா.. ஆவன்னா போடுகிற..?"

"அவன் எப்படிப்பா ஏலத்திற்கு வராமல் போனான்..?"

"அது உனக்கு ரொம்ப முக்கியமாடா..? ஆகிற வேலையைப் பாருடா மகனே..."

"அதில்லப்பா.. முதல் நாள் ராத்திரி கூட.. எத்தனை கோடி பணம்ன்னாலும் ஏலத்தில் கண்மாயைக் குத்தகைக்கு எடுக்காமல் விட மாட்டேன்னு ஊருக்குள் பேசிக்கிட்டு அலைந்திருக்கிறான்.. அப்புறம் எப்படி வராமல் போனான்..."

"அவனை அடித்துக் கையைக் காலை முறித்துப் போட்டிருப்பேன்னு நினைக்கிறாயாடா..?"

"அப்படித்தான் நேற்று வரைக்கும் நினைத்தேன்ப்பா.. இன்றைக்குக் காலையில் என்னடா வென்றால்.. அவன் என் எதிராகவே.. நடந்து வருகிறான்.. என்னைக் கண்டதும் சண்டைக்கு வருவான்னு பார்த்தால்.. தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டு.. ஒதுங்கிப் போகிறான்.. என்னதான் நடந்ததுப்பா.."

"அது உனக்குத் தானாய்த் தெரியும்.. போ.."

அதற்கு மேல் பேச வழியில்லாமல்.. லிங்கய்யன் வீட்டுக்குள் நகர்ந்தார்..

"லிங்கய்யா..."

"அப்பா.."

"உன் அம்மாவை நான் வரச் சொன்னேன்னு சொல்லு.."

"சரிங்கப்பா.."

வீட்டுக்குள் அவன் போனபோது... கண்களில் நீர் துளிர்க்க.. பழைய படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜலட்சுமி..

"காலமென்னும் கடலினிலே...

ஓடும் நதி...

கன்னிமகள் வழியினிலே

ஆடும் விதி...

நதியோடு செல்லும் வெள்ளம்

ஊருக்காக...

விதியோடு செல்லும் உள்ளம்

யாருக்காக..."

தனக்குப் பிடித்த சீரியலைப் பார்க்க விடாமல் அழும்பு பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் மாமியாரைக் கையாலாகாத கோபத்துடன் பார்த்தாள் கோதை நாச்சியார்...

"அம்மா.." என்று லிங்கய்யன் அழைத்தார்..

"என்னடா..." டிவி திரையை விட்டுப் பார்வையை விலக்காமல் பதிலைச் சொன்னார் ராஜலட்சுமி...

"அப்பா உன்னைக் கூப்பிடுகிறார்..."

"என்னை எதுக்குடா அந்த மனுசன் இப்போ போய்க் கூப்பிடுகிறாரு..? நானே.. இந்தப் பொண்ணு படும் பாட்டைத் தாங்க முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க உட்கார்ந்திருக்கிறேன்.. இந்த நேரம் பார்த்து பழமை பேசக் கூப்பிடுகிறாரா..? அவரு பழமை பேச வேற நேரம் கிடைக்கலியா..."

கோதை நாச்சியார்.. தான் இருக்கும் இடத்திலிருந்து கணவனிடம் கூறுவது போல் ஜாடையாய் மாமியாரைத்

தாக்கினாள்...

"எப்படி அவருக்கு நேரம் கிடைக்கும்..? நாமதான் இருபத்து நாலு மணி நேரமும்.. பழைய படத்தையாப் பார்த்து கண்ணீர் விட்டு வீட்டைக் கழுவி விட்டுக் கொண்டு இருக்கிறோமே.. அப்புறம் அவர்தான் என்ன பண்ணுவாரு..."

ராஜலட்சுமி கோதை நாச்சியாரைக் கண்டு கொள்ளாமல் எழுந்தாள்.. டிவியை அணைத்து ரிமோட்டைத் தூக்கிப் போட்டாள்.. பின் மகனைப் பார்த்துப் பேசும் பாவனையில் மருமகளுக்குப் பதில் சொன்னாள்..

"டிவி ரிமோட்டைப் போட்டுட்டேன்ப்பா.. உன் பெண்டாட்டியை வந்து பிடிச்ச சீரியலாப் பார்த்து.. ஒவ்வொருத்தனும் பண்ணிக்கிற இரண்டு மூன்று கல்யாணத்துக்கு அட்சதை போட்டு.. ஆசிர்வாதம் பண்ணச் சொல்லு.. எந்தச் சீரியலிலாவது ஒரு கல்யாணத்தைப் பண்ணினோம்.. உருப்படியாய் குப்பை கொட்டினோம்ன்னு காண்பித்து இருக்கிறாங்களா.. எல்லாருமே இரண்டு மூன்று கல்யாணம்தான்... அவனவன் அடி மனசில் ஆயிரம் கல்யாணம் பண்ணிக்கனும்கிற ஆசை இருக்கறதையெல்லாம்.. கதையாய் எழுதித் தள்ளுகிறான்க.. இவளைப் போல்.. பொழப்பில்லாதவளுக விழுந்து விழுந்து பார்க்கிறாளுக.. அதைப் பார்த்து விட்டு.. அழுது புலம்பி வீட்டைக் கழுவி விடலாமாம்.. பழைய படத்தைப் பார்த்து அழுகக் கூடாதாம். எந்த ஊர் நியாயம்டா இது..."

"நம்ம ஊரு நியாயந்தான்.. நீ போய் அப்பா கூப்பிட்ட வார்த்தைக்கு.. 'என்ன'ன்னு ஒரு வார்த்தை கேட்டு விட்டு வந்திரும்மா..."

அதற்கு மேல் தாயாரை அங்கே நிற்க விட்டால்.. உள் வீட்டுக் கலவரம் வெடித்து விடும் அபாயம் இருந்ததால்.. ராஜலட்சுமியை வாசலுக்குத் தாட்டி விடுவதிலேயே குறியாக இருந்தார் லிங்கய்யன்..

கோதை நாச்சியார்.. போர் முரசு கொட்டத் தயாராகி எழுந்திருப்பதற்குள்.. ராஜலட்சுமி வாசல் பக்கம் போய் விட.. கோதை தன் கணவனைப் பிடித்துக் கொண்டாள்..

"என்ன நினைச்சுக்கிட்டு இருக்காங்க உங்க அம்மா.."

"அதை என்கிட்ட கேட்டால் எனக்கெப்படிடீ தெரியும்.. நான் என்ன நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு கேளு.. உன்னைத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்கிற உண்மையைச் சொல்கிறேன்.. அதை விட்டுவிட்டு அம்மாவை ஏன்டி.. நமக்கு நடுவில் இழுக்கிற.."

அழகாய்க் கூந்தலைக் கொண்டையிட்டு.. அதன் மேல் வளைவாய் மலர்ச் சரத்தை வைத்து.. நெற்றியில் அகலமாய்க் குங்குமம் துலங்க.. கழுத்தில் வரை அட்டிகையும்.. தாலிக் கொடியும்.. மின்ன, கை நிறையப் பொன்வளையல் களுடன்.. பட்டுச் சேலையின் முந்தானையை ஒரு பக்கம் இழுத்துச் செருகி.. நின்றிருந்த மனைவியை ஒரு மார்க்கமாய்ப் பார்த்தவாறு நெருங்கினார் லிங்கய்யன்...

கணவனின் வழிசலைப் புரிந்து கொண்ட கோதை நாச்சியார் சட்டென்று சமையலறைக்குள் வேலையிருப்பது போல் போய்விட.. லிங்கய்யனும் பின் தொடர்ந்தார்...

"அடுக்களைக்குள் ஆம்பளைக்கு என்ன வேலை..?"

"தாகமாய் இருக்குடி..."

"சாப்பாட்டு மேஜையில் தண்ணீர் கூஜா இருக்குதே.. எடுத்துக் குடிக்க வேண்டியதுதானே.."

"இது தண்ணீர் குடித்தால் தணிகிற தாகமில்லைடி.."

லிங்கய்யன்.. மனைவியை முரட்டுத்தனமாய் அணைத்துக் கொண்டார்.. விடுபடாமல் இசைந்து கொடுத்தாள் கோதை நாச்சியார்...

"ச்சு.. மாடியில் ராகினி படிச்சுக்கிட்டு இருக்கா.."

"மாடியில்தான இருக்கா..."

"வாசலில் உங்க அப்பாவும்.. அம்மாவும் இருக்கிறாங்க..."

"வாசலில்தான இருக்காங்க..."

"வயசுக்கு வந்த மகனையும்.. மகளையும் வைத்துக் கொண்டு உங்க ரவுசு தாங்க முடியலை..."

"ஏன்டி அலுத்துக்கறே.. அம்மா சொன்னது போல.. டிவி சீரியலில் வரும் ஆம்பிளைகள் போல ரெண்டு மூணு கல்யாணமா நான் பண்ணிக்கிட்டு இருக்கேன்...? நான் ஸ்ரீராமன்டி..."

"அந்த நினைப்பு வேற மனசில் இருக்கா...?"

"உன் நினைப்பைத் தவிர.. வேறு எந்த நினைப்பும் என் மனசில இல்லைடி.. உனக்கு இது தெரியாதா..."

தெரிந்ததால் கோதை நாச்சியார் விட்டுக் கொடுத்தாள்.. எவ்வளவு நேரம் என்று தெரியாமல்.. மனைவியைக் கட்டி அணைத்து அவளது காதோடு ரகசியம் பேசிக் கொண்டு தழுவிக் கொண்டு நின்றிருந்தவர்..

"கோதை.. அடியே.. கோதை.." என்று அழைத்தபடி ராஜலட்சுமி வரும் சத்தம் கேட்டு அரண்டு விலகினார்...

திருதிருவென விழித்துக் கொண்டு நின்ற கணவனைக் கண்டு கோதை நாச்சியாருக்குச் சிரிப்பு வந்து விட்டது.. ஆனாலும்.. சட்டென்று சமையலறையை விட்டு வெளியே சென்று..

"என்னங்கத்தை..." என்று வினவினாள்..

"இந்தக் கூத்தைக் கேட்டியா..?"

"எந்தக் கூத்து அத்தை..."

"அடிக்கிற காத்தில் அம்மிக் கல்லு பறந்திருச்சாமில்ல.."

"கொஞ்சம் விளங்கத்தான் சொல்லுங்களேன்.."

"அதை விளக்கிச் சொல்லிவிட்டாலும்.. கழுதையில.. கோதை... என்னதான்.. நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைச்சாலும் அது ளொள்.. ளொள்ளுன்னு தானே

குரைக்கும்..? விளக்கு மாத்துக்குப் பட்டுக் குஞ்சலம் கட்டி விட்டாலும்.. அது வீதியைக் கூட்டத்தானே போகும்.."

"இது எல்லாம் சரிதான் அத்தை.. எதுக்கு இதை இப்பப் போய் சொல்கிறீங்க.. அதைச் சொல்லுங்க முதலில்.."

"அற்பனுக்கு வாழ்க்கை வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்ங்கிறது சரிதான்.. அதுக்காக.. எந்த நேரத்தில் எங்கே போய் வருகிறதுங்கிற புத்தியில்லாமலா போய் வருவான்...?"

மாமியாரின் பேச்சில் சுவாரஸ்யமாகி விட்ட கோதை நாச்சியார் ரகசியக்குரலில் அவளுடன் பேசிக் கொண்டே.. பின் பக்க முற்றத்திற்குச் சென்று விட்டாள்..

அவசரமாய்ச் சமையலறையை விட்டு வெளியேறி ஹாலுக்குள் வந்து அமர்ந்து கொண்டார் லிங்கய்யன்.. மாடிப்படிகளில் கொலுசுச் சத்தம் கேட்டது.. மகளின் வரவை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தார்..

"அம்மாவும்.. பாட்டியும் எங்கேப்பா...?"

"அதை ஏன்டா கண்ணு கேட்கிற..."

"ஏன்ப்பா.. என்ன ஆச்சு..?"

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால.. இரண்டு பேரும்.. எம்ஜிஆரும்.. நம்பியாரும் போல முறைச்சுக்கிட்டு... இந்தியா.. பாகிஸ்தான் போல.. மோதப் பார்த்தாங்க.."

"அட.. அப்புறம்... சண்டை தூள் கிளம்பியிருக்குமே.."

"அதுதான் இல்லை.. உன் பாட்டியைக் கிளப்பி வாசல் பக்கம் அனுப்பி வைத்தேன்..."

"வாசலில் யாரிருந்தா...?"

"உன் தாத்தா இருக்கிறார்.."

"ம்ம்.. அப்புறம்..."

"கதை கேட்கிறாயா..? கேளு.. கேளு.. உன் பாட்டி உள்ளே வந்ததும் உருக்கமா மருமகளைக் கூப்பிட்டு.. ஊர்க் கதை

ஒன்றைச் சொன்னாங்க..."

"அம்மா உடனே பாட்டியோடு ஐக்கியமாகி.. கதை கேட்கப் பின் பக்கம் போய் விட்டாங்க.. அதுதானே அப்பா..?"

"இது எப்படிடா உனக்குத் தெரியும்..?"

"தினசரி இந்தக் கூத்துத்தானே இந்த வீட்டில் நடக்குது..."

பின்பக்கமிருந்து.. சிரிப்பொலி கேட்டது.. ரகசியக் குரலில் பேசியபடி ராஜலட்சுமியும்.. கோதை நாச்சியாரும் திரும்பி வந்தார்கள்.. கோதை நாச்சியார்.. அடிக்கடி வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கிச் சிரித்தாள்.. ராஜலட்சுமியின் கண்களில் குறும்பு கூத்தாட.. மீண்டும் ரகசியக் குரலில் எதையோ சொல்ல.. கோதை நாச்சியார் விழுந்து.. விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்...

"என்னப்பா பேசிக்கிறாங்க.."

"எனக்கும் தெரியலையேம்மா..."

அன்று இரவு.. அவர்களின் படுக்கையறைக்குள்.. மனைவியுடன் தனித்துப் பேசிக் கொண்டிருந்த போது லிங்கய்யனுக்கு விசயம் தெரிந்தது..

"என்னடி.. மாமியாரும்.. மருமகளும் அப்படி காதைக் கடிச்சுக்கிட்டிங்க.. எனக்குக் கொஞ்சம் சொல்லக் கூடாதா..?"

"கொஞ்சமென்ன.. நிறையவே சொல்கிறேன்.. எல்லாம் உங்ககிட்ட சொல்லச் சொல்லி.. உங்கப்பா சொல்லி அனுப்பிய சேதிதான்.."

"அப்பா சொல்லி விட்டாரா.. அப்புறமெதுக்கு.. அம்மா.. என்கிட்ட சொல்லாமல்.. உன்கிட்ட வந்து சொல்லுச்சு..."

"இதையெல்லாம்.. அப்பன் மகன்கிட்ட சொல்ல முடியுமா.. இல்லை, அம்மாதான் பிள்ளைகிட்ட சொல்ல முடியுமா..? அதனால்தான் மாமா அத்தை கிட்ட சொன்னார்.. அத்தை என்கிட்ட சொன்னாங்க.. நான் உங்க கிட்ட சொல்லப் போறேன்..."

"அதை அப்பவே சொல்றதுக்கென்ன..?"

"உங்க புத்தி இருக்கே.. வீட்டில் வயசுக்கு வந்த பொண்ணு இருக்கு.. அதை வைத்துக்கிட்டு நீங்களும்.. நானும் ரகசியம் பேசிக்கிட்டு நின்னா நல்லாத்தான் இருக்கும்.."

"அதை மாடியில் வைச்சுக்கிட்டு.. ரகசியமா குலா வலையா..?"

கணவனை முறைத்துப் பார்த்தாள் கோதை.. அவரோ தன் மீசையை முறுக்கிக் கொண்டு... காதல் பார்வை பார்த்தார்.. அவளது கோபம் பறந்துவிட்டது.

6

"அந்தப் புதுப்பணக்காரன்.. ஏன் ஏலத்திற்கு வரலைன்னு தெரியுமா...?"

"அது தெரியாமல்தானே அப்பாகிட்ட கேட்டேன்..."

"அவனுக்கு.. நம்ம ஊரு ஓடக்காரி ராக்கம்மா மேல ஒரு கண்ணாம்..."

"இதைப் பாருடா.. இது எப்படி உனக்குத் தெரியும்..?"

"எக்குத்தப்பாய் கேள்வி கேட்டால்.. எனக்கு வாயில் நல்லாத்தான் வந்திரும்.. வீட்டு வாசல் படியைத் தாண்டாதவள் கிட்டப் போயி என்ன கேள்வியைக் கேட்கறீங்க...?"

"இல்லைடி கோதை.. வாய் தவறிக் கேட்டுவிட்டேன்.."

"இது எனக்குத் தெரியாது.. உங்கப்பாவிற்குத் தெரியும்..."

"அவருக்குத் தெரியாதது எது இருக்கு.. அப்புறம்..?"

"ராக்கம்மா அவனுக்குப் பிடிகொடுக்கலையாம்.. அந்த ராக்கம்மாவின் குடும்பத்திற்கு நாம் நிறையச் செய்திருக்கிறோமில்ல..."

"ஆமாம்..."

"அதனால்.. மாமா.. அவளைக் கூப்பிட்டு.. இப்படி.. இப்படி நிலவரம்ன்னு சொல்லி.. ஏலம் நடக்கிறப்போ.. அவனை அந்தப் பக்கம் வர விடாமல் பிடித்து வைத்துக் கொள்ளச் சொல்லிக் கேட்டுக்கிட்டாராம்..."

"அடியேய்.. இது என்னடி.. புதுக்கதையாய் இருக்கு.."

"இன்னும் கேளுங்க.. ஏலம் எடுக்கறதுக்கு இவன் வெள்ளையும் சொள்ளையுமா.. பத்துப் பேரைக் கூட வச்சுக்கிட்டுப் போனானாம்..."

"ம்ம்.. சொல்லு..."

"எதுத்தாப்புல ராக்கம்மா வந்து.. ஒரு மார்க்கமா அவனைப் பார்த்து ஜாடை காட்டினாளாம்..."

"சொல்லு.. சொல்லு..."

"அம்புட்டுத்தான்.. ஐயா.. பத்துப் பேரையும்.. முன்னால நீ போனால்.. பின்னாலே.. நா வாரேன்னு பத்தி விட்டுவிட்டு.. ராக்கம்மா கிட்டப் போய் ஈன்னு பல்லைக் காட்டிக்கிட்டு நின்னானாம்..."

"அப்புறம்...?"

"ரொம்ப நாளாய் நீங்க ஆசைப்பட்டுக் கேட்டதை இன்னைக்கு நடத்திடலாமா மைனரேன்னு அவ கேட்டாளாம்."

"அதுக்கு இவன் என்ன சொன்னானாம்...?"

"ஏலத்தை விட்டுப்புட்டு.. அவ பின்னாலேயே.. அவளோட குடிசைக்குள் போய் விட்டானாம்..."

"ஆனால் கோதை.. அப்பா.. ராக்கம்மாவை அவனுக்குப் பலியாக விட்டிருக்க மாட்டாரே..."

"அதுதான் நடந்திருக்கு..."

"என்னடி நடந்தது..?"

"குடிசைக்குள்ளே போனவனை.. உட்கார வைச்சு.. செம்பில் தண்ணியைக் குடுக்கற மாதிரி.. அந்தத் தண்ணிய ஊத்திக் குடுத்துட்டாளாம்..."

"அடி சக்கை..."

"அவனும் குடித்து விட்டு.. அவள் பின்னாலேயே தள்ளாடிக் கிட்டுப் போக.. இவ குடிசைக்கு வெளியில் போய் நின்னுக்கிட்டாளாம்..."

"ம்ம்..."

"இவன் அவள் கையைத் தெருவிலேயே இறங்கிப் பிடித்து விட்டானாம்..."

"அப்புறம்..?"

"அப்புறமென்ன...? அது கூச்சல் போட.. அக்கம் பக்கம் இருக்கிறவங்க வந்து நாலு மொத்து மொத்தியிருக்காங்க.. அதுக்குள்ள இங்கே ஏலமும் முடிஞ்சு போச்சு.. அங்கே.. அவன் கதையும் கந்தலாகிப் போச்சு..."

"அதுதான் என்னைப் பார்த்து அப்படி ஒதுங்கிப் போனானா...?"

"ம்ம்.. நான்கு நாளாய் வீட்டை விட்டு வெளியில் தலையைக் காட்டலையாம்..."

"அந்த ராக்கம்மா எவ்வளவு துணிச்சலா காரியம் பண்ணியிருக்கு..?"

"செய்ய மாட்டாளா..? அப்பனும் ஆத்தாளும் .. ஆத்தோட போய் விட.. அநாதையாய் நின்னா.. அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து.. சீர் வரிசையோடு கல்யாணமும் செய்துவைத்துப் பிழைத்துக் கொள்ளச் சொல்லி.. காணி நிலமும் கொடுத்துக் காப்பாத்தினவரு உங்க அப்பா.. இதைச் செய்ய மாட்டாளா.. என்ன..?"

லிங்கய்யன்.. தகப்பனாரின் சாணக்கியத் தனத்தை வியந்தார்.. ராக்கம்மாளுக்கும் தீங்கு வந்து விடாமல்.. அதே சமயம்.. போட்டியாளனையும் வரவிடாமல் தடுத்து

நிறுத்திவிட்ட அவருடைய சாதுர்யத்தை நினைத்து ஆச்சரியத்துடன் தூங்கி விட்டார்.

அதிகாலையில்.. அரைத்தூக்கத்தில்.. வீட்டு வாசலில் கார் நிற்கும் சத்தத்தை உணர்ந்தார்.. எங்கேயோ.. யாரோ.. யாரையோ வரவேற்கும் ஓசை கேட்டது..

"என்னங்க.. எழுந்திரிங்க..." என்று அவரை உலுக்கி எழுப்பினாள் கோதை நாச்சியார்...

"ஏன்டி.. நான் எழுப்பினால் மட்டும் சண்டைக்கு வருகிறாயே.. நீ மட்டும் இப்போ எழுப்பலாமா.." என்றவரின் முதுகில் ஓங்கி ஒரு போடு போட்டாள் கோதை.

"கீழே மெட்ராஸிலிருந்து உங்க சித்தப்பா மகளும் அவளோட வீட்டுக்காரரும் வந்திருக்கிறாங்க.. அதைச் சொல்ல எழுப்பினால் தேவையில்லாத கனாக் காண்கிறீங்களா.. ஒழுங்காய் எழுந்திருச்சு முகத்தைக் கழுவி விட்டு கீழே வாங்க.. இவரைப் போய் நான் எழுப்புகிறேனாம்.. நினைப்புத்தான் பொழப்பைக் கெடுக்கும்..." கோபத்துடன் படியிறங்கிப் போய் விட்டாள் கோதை...

அவசரமாய் முகத்தைக் கழுவி விட்டுக் கீழே இறங்கிச் சென்றார் லிங்கய்யன்.. ஹாலில் அமர்ந்திருந்தவர் களுக்குக் காபி கொடுத்துக் கொண்டிருந்த கோதை கணவனை முறைத்தபடி அவருக்கும் ஒரு காபி தம்பளரைக் கையில் கொடுத்தாள்..

'தெரியாத்தனமாய் வாயை விட்டு விட்டேனே.. இன்னும் இரண்டு மூன்று நாள்களுக்கு இவள் முகம் கொடுத்துப் பேச மாட்டாளே...'

கவலையுடன் மனைவியின் கண் பார்க்க முயன்ற வரைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் கோதை நாச்சியார் சமைலறைக்கு விரைந்து விட்டாள்..

மனைவியை எப்போது வேண்டுமானாலும் சமாதானப் படுத்திக் கொள்ளலாம்.. ஆனால் வந்தவர்களை உடனடியாய் 'வா...' என்று வரவேற்க வேண்டுமே... எனவே..

"வாம்மா ஜானகி.. வாங்க மாப்பிள்ளை.. எங்கே என் மருமகளைக் காணோம்.. கூப்பிட்டுக் கொண்டு வர வில்லையா..?" என்று கேட்டபடி.. சோபாவில் அமர்ந்தார் லிங்கய்யன்..

ரங்கநாதனின் அருகில் அமர்ந்து காபி அருந்தியவாறு சோமய்யனிடம் பேசிக் கொண்டிருந்த ஜானகி...

"அவளுக்கு காலேஜ் இருக்குண்ணா.. அதுதான் கூப்பிட்டுக் கொண்டு வரவில்லை..." என்றாள்..

"இந்த மாதம் படிப்பு முடிந்து விடுதில்ல...?"

"ஆமாண்ணா.. அவளுக்கு கேம்பஸ் இன்டர்வியுவில் வேலை கிடைச்சிருக்கு.. பெங்களூர் போகணும்கிறா..."

"அட.. நம்ம ரஞ்சனுக்கும் கேம்பஸ் இன்டர்வியுவில் அதே பெங்களூர் வேலை கிடைச்சிருக்கும்மா.."

"எந்தக் கம்பெனிண்ணா...?"

"ஏதோ.. மல்ட்டி நேஷனல் கம்பெனின்னு சொன்னான்..."

"உங்கள் மாப்பிள்ளைக்குத்தான் அவளைப் பெங்களூர் அனுப்ப இஷ்டமில்லை.."

"ஏன்...?"

"நம்ம கம்பெனி பொறுப்பை எடுத்துக்கட்டும் என்கிறார்..."

"சசியிடம் இதைச் சொல்ல வேண்டியதுதானே..."

"சொல்லியாச்சுண்ணா..."

"அவள் என்ன சொல்கிறாள்...?"

"இது அவளுடைய திறமைக்குக் கிடைத்திருக்கும் பரிசாம்.. இதைச் கொஞ்ச நாள் அவள் என்ஜாய் பண்ணப் போகிறாளாம்..."

"இதைப்பாருடா.. இத்தனூண்டா இருந்த விடாசு.. இப்ப இத்தாம் பெரிய ஆளா ஆயிருச்சா.. கேட்டிங்களா அப்பா... சசி போடும் போடை..."

லிங்கய்யன் கடகடவென்று சிரிக்கவும்.. ரங்கநாதன் அச்சமுற்றார்...

"என்னடி சிரிப்பு இது.. இடி முழக்கம் போல.." என்று மனைவியின் காதோரம் கிசுகிசுத்தார்...

சோமய்யன் மகனுடன் சேர்ந்து சிரிக்கவில்லை.. அவருடைய பார்வை தம்பியின் மகளை ஆராய்ச்சியாகப் பார்த்துக் கொண்டு இருந்தது.. வயதுப் பெண்ணைத் தனியே விட்டு விட்டு.. இரவு முழுவதும் பயணம் செய்து இந்த அதிகாலையில் வந்து நிற்பவர்கள்.. இப்படிச் சும்மா ஒரு காபியைச் சாப்பிட்டு விட்டு.. அளவளாவிப் போவ தற்காக வர மாட்டார்கள் என்பது அவருடைய அனுமானம்..

அப்படி ஒரு கப் காபிக்காக.. இரண்டு நாளைச் செலவழிக்கும் அளவுக்கு ரங்கநாதனுக்கு நேரம் கிடையாது என்பதும் அவருக்குத் தெரியும்.. சென்னைக்கு அவர்கள் சென்றால்.. ஓர் ஆறு நிமிடம் அவர்களுடன் செலவழிக்கவே அவருக்கு நேரம் இருந்ததில்லை.. அதற்குள் ஆயிரம் போன் கால் வந்து விடும்..

அப்படிப்பட்டவர்.. இந்த அதிகாலையில் வந்து அமர்ந்து காபியைப் பருகியபடி.. மனைவியைப் பேச விட்டு விட்டு.. தான் மட்டும் அமைதியாக இருந்ததைக் கண்டவருக்கு... ஏதோ சரியில்லை என்று மனதிற்குள் மணியடித்தது...

"இளைத்திருக்கிறீர்களே பெரியப்பா..." என்று பரிவுடன் கூறிய ஜானகியைப் பார்த்து..

"அப்படியெல்லாமில்லையம்மா.. மாப்பிள்ளைதான் இளைத்திருக்கிறார்.. நீயும் சோர்ந்து தெரிகிறாய்.. என்ன விசயம்..?" என்று கேட்டார்..

"பெரியப்பா..." என்றபடி ஜானகி பொல.. பொல வென்று கண்ணீர்த் துளிகளைச் சிதற விட்டாள்..

சமையலறையில் காலைப் பலகாரம் செய்வதற்கு வேலையாளைப் பணிந்து விட்டு.. ஹாலுக்கு வந்து நின்ற கோதை நாச்சியார்.. சின்ன மாமனாரின் மகள் அழுவதைக் கண்டு பதறிவிட்டாள்..

"என்ன அண்ணி இது.. பச்சைப் பிள்ளையாட்டம் அழுதுகிட்டு இருக்கே.. நாங்க இருக்கும் போது நீ அழுகலாமா..?" என்று அவசரமாய் நாத்தனாரைச் சமாதானப் படுத்தினாள்..

அதுவரை அமைதியாய்க் கொழுந்தனின் மகளைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜலட்சுமி எழுந்து அவளருகே சென்று அமர்ந்தாள்..

'பாவம்... தாய் தகப்பனில்லாத பெண்..' என்று அவளின் மனம் ஜானகிக்காக உருகியது..

"இந்தா.. ஜானகி, எதுக்கு அழுகறே..? நீ அழுகப் பார்த்திருக்கவா நாங்க இருக்கோம்.. இதோ மலை போல உன் பெரியப்பா இருக்காரு.. சிங்கம் போல உன் அண்ணன் இருக்கான்.. இவங்க கிட்ட உன் பிரச்சனையைச் சொல்லு.. எந்தச் சீமையில்.. யாரு உனக்குப் பிரச்சனை பண்ணினாலும்.. இவங்க அதைப் பார்த்துக்குவாங்க. சொல்லு.. தொழிலில் ஏதும் பிரச்சனையா..?"

"இல்லை பெரியம்மா.. அது நல்லாத்தான் ஓடிக்கிட்டு இருக்கு.."

"அப்போ பிரச்சனை வீட்டுக்குள்ளதான்.."

ராஜலட்சுமி சோமய்யனைப் பார்க்க.. அவர் தாடையைத் தடவிக் கொண்டே.. தம்பி மகளைப் பார்த்தார்..

"சசி.. ஏதும் காதல் விவகாரத்தில் சிக்கியிருக்காளா ஜானகி..?"

"பெரியப்பா..."

ஜானகி அதிர்வுடன் நிமிர்ந்தாலும்.. சோமய்யன் சொன்னதை ஆட்சேபித்து எதுவும் சொல்லவில்லை என்பதைக் கண்டு கொண்ட லிங்கய்யன் தகப்பனாரின் புத்தி கூர்மையை நினைத்து வியந்தார்.. ராஜலட்சுமியும்.. கோதை நாச்சியாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்..

"இப்ப என்ன செய்யப் போகிற...?"

"அதைக் கேட்கத்தான் உங்ககிட்ட ஓடி வந்திருக்கேன்.."

"பையனைப் பத்தி விசாரிச்சயா..?"

"ம்ம்.. பெயர் டேவிட்டாம்.."

"கிறிஸ்துவப் பையன்னு பார்க்கிறாயா..? இந்தக் காலத்தில் மதம் வேறயா இருந்தால் அதைப்பத்தி கவலைப் படக்கூடாதும்மா.. சாமி ஒன்னுதான்.. நாம அதைக் கும்பிடுகிற மார்க்கம்தான் வேற.. வேற.. எல்லோரும் ஒன்னுதான்.. பையன் குணம் எப்படின்னு மட்டும் பாரு.. மத்தப்படி.. அவன் இந்துவா இருந்தால் என்ன.. முஸ்ஸீமா இருந்தால் என்ன.. கிறிஸ்துவனா இருந்தால் என்ன.. எல்லோரும் ஒன்னுதான்.."

சோமய்யன் தெளிவாய்ப் பேசினார்.. ரங்கநாதனின் மனதிற்குள் டேவிட்டைப் பற்றிய செய்திகள்.. வரி வடிவில் ஓடின..

"என்ன மாப்பிள்ளை.. நீங்க என்ன சொல்கிறீங்க.."

"அந்தப் பையனைப் பற்றி நான் கேள்விப் பட்டது அத்தனை திருப்திகரமாய் இல்லை மாமா..."

"யாருகிட்ட விசாரிச்சீங்க.. ? எவனாவது வேண்டாத பயல் கிட்ட நீங்க விசாரிச்சிருந்தா.. இல்லாததையும்.. பொல்லாததையும் போட்டுக் கொடுத்திருப்பானில்ல.. அதையும் நினைச்சுப் பார்க்கணும்..."

எல்லாக் கோணத்திலிருந்தும் விசயத்தை அலசி.. ஆராயும் அவரது அறிவுக் கூர்மையைக் கண்டு ரங்கநாதன் வியந்தே போனார்..

## 7

'இந்த மனிதர் மட்டும் சென்னையில் இருந்திருந்தால் இந்நேரம் தலைநகரையே வளைத்துப் போட்டிருப்பார்.. இந்தக் கிராமத்தில் இருந்து கொண்டு குடத்திற்குள் எரியும்

விளக்கைப் போல இவருடைய திறமையை வேஸ்ட் பண்ணிக்கொண்டு இருக்கிறார்...' என்று எப்போதும் போல.. இப்போதும் ரங்கநாதன் மனதில் நினைத்தார்..

"இல்லை மாமா.. தனிப்பட்டு.. யாருகிட்டயும் விசாரிக்கலை..."

"அப்புறம்.. அந்தப் பையன் சரியில்லைன்னு எப்படிச் சொல்கிறீங்க..?"

"ஒரு தனியார் துப்பறியும் நிறுவனத்தின் மூலமா விசாரிச்சேன்..."

"ஓ..."

"இதோ பாருங்க.. அந்த ரிப்போர்ட்டை..."

ரங்கநாதன் கொடுத்த ரிப்போர்ட்டைப் புரட்டிப் பார்த்த சோமய்யனின் நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன..

"ம்ம்.. அப்போ.. இதைக் காட்டி சசிகிட்ட உட்கார்ந்து பேசலாமே.." மீண்டும் அவரின் புத்தி கூர்மையை வியந்தபடி..

"அது சரி வராது மாமா..." என்றார் ரங்கநாதன்..

"ஏன் மாப்பிள்ளை..."

"நாம் பொய் சொல்கிறோம்.. வேறு மதம் என்பதால் அவளுடைய காதலைப் பிரிக்கப் பார்க்கிறோம்ன்னு அவள் நினைப்பாள்.."

"அதுவும் வாஸ்தவம்தான்..."

"முதலில் நானும் ஜானகியும் அப்படித்தான் நினைத்தோம்..."

"அது சரி.. அப்புறம் உட்கார்ந்து யோசிச்சிருப்பீங்க.."

"ஆமாம்.. எங்களுக்கு இருப்பதோ ஒற்றைப் பெண்.. அவள் மனது பிரகாரம் மாப்பிள்ளையை செலக்ட் பண்ணிக்கிடட்டுமேன்னுதான் முடிவு செய்தோம்.. பையனும் பார்வைக்கு நன்றாக இருந்தான்..

மெக்கானிக்கல் என்ஜினியர்.. என் தொழிலைக் கவனித்துக் கொள்ளப் பொருத்தமான படிப்பு.. மதம் வேறாக இருப்பதை நாங்கள் பெரிதாக நினைக்கக் கூடாதுன்னு உங்களை மாதிரியே.. எம்மதமும் சம்மதம் என்ற முடிவுக்கு வநதேன்.."

"ரொம்ப நல்ல முடிவைத்தான் எடுத்தீங்க..."

"அதன் பின்னால்தான் அவனைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன்.. பிரைவேட் டிடெக்டிவ் ஏஜன்ஸியிடம் பொறுப்பை ஒப்படைத்தேன்.. அவர்கள்.. ஏற்கெனவே நிறையத் தொழில் விசயங்களில்.. எனக்கு நான் கேட்ட ரிப்போர்ட்டை விசாரித்துக் கொடுத்திருக்கிறார்கள்.. மிகவும் நம்பிக்கையான.. நம்பர் ஒன் ஏஜன்ஸி அது..."

"அவர்களின் ரிப்போர்ட் இதுதான்னா.. விசயம் சிக்கல்தான்..."

"இப்போ.. நாங்க என்ன செய்வது என்று தெரியாமல் உங்களை நம்பிக் கிளம்பி வந்து விட்டோம்.."

சோமய்யன் யோசனையுடன் தம்பி மருமகனின் முகத்தைப் பார்த்தார்.. அவரது கூரிய அறிவு மருமகனின் நோக்கத்தைக் கண்டு கொண்டு விட்டது..

"இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்னு நீங்க நினைக்கறீங்க மாப்பிள்ளை...?"

கேள்வியை நேரடியாய் அவர் கேட்டார்.. ரங்கநாதன் தயங்கிப் பேசினார்.. அவருக்கு அந்தக் குடும்பத்தின் மதிப்புத் தெரியும்.. அவரிடமிருக்கும் கோடிக் கணக்கான பணத்தை அவர்கள் பெரிதாக நினைக்க மாட்டார்கள்.. இது வேறு உலகம்.. இவர்கள் வேறு வகையான மனிதர்கள்..

"மாமா.. சசி உங்களின் பேத்தி..."

"ஆமாம், மாப்பிள்ளை..."

"அவளுடைய குணத்தில் ஓர் குறைவுமில்லை..."

"அதுக்கென்ன.. அது பத்தரை மாத்து தங்கமாச்சே.."

"காதல்ன்னு மனதில் நினைத்ததுதான்.. நடத்தையில் பழுதில்லை.. அதையும் இந்த ஏஜன்ஸியின் ரிப்போர்ட்டே உங்களுக்குச் சொல்லும்..."

"காகிதத்தில் இருப்பதை வைத்து வீட்டுப் பெண்களின் குணத்தைத் தீர்மானிக்கும் பழக்கம் இந்தக் குடும்பத்தில் இல்லை மாப்பிள்ளை.. நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்க..."

"எங்களுக்கு ஒன்று என்றால்.. நாங்கள் உங்களிடம் தான் வர வேண்டும்..."

"ஆமா.. அதிலென்ன சந்தேகம்.. என் தம்பிமகள்.. என் மகள் மாப்பிள்ளை.. அவளை ஆதரிக்காமல் யாரை நான் ஆதரிக்கப் போகிறேன்..?"

"அந்த நம்பிக்கையில்தான் உங்களைத் தேடி வந்திருக்கிறேன்.."

"எதற்குச் சுற்றி வளைக்கிறீங்க மாப்பிள்ளை.. தைரியமா நீங்க கேட்க வந்ததைக் கேளுங்க..."

"சசியை... உங்கள் பேரனுக்குக் கல்யாணம் செய்து கொள்வீங்களா மாமா.."

ரங்கநாதன் தான் கேட்க வந்ததைக் கேட்டு விட்டார்.. கோதை நாச்சியாரின் முகம் மாறிவிட்டது.. அவள் இதைச் சுத்தமாக விரும்பவில்லை.. ராஜலட்சுமியும் மௌனித்து விட்டாள்.. லிங்கய்யன் தகப்பன் கிழித்த கோட்டைத் தாண்டாதவர்.. எனவே இரும்பு போல முகத்தை உணர்ச்சிகளைக் காட்டாமல் வைத்துக் கொண்டு சோமய்யனின் முகத்தைப் பார்த்தார்..

சோமய்யன் மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் மகனைப் பார்த்தார்..

"மாப்பிள்ளை!... நீங்க கேட்க நினைத்ததைக் கேட்டு விட்டிங்க.. அதனால் ஒன்றும் தப்பில்லை.. உரிமைப் பட்டவங்க கிட்ட.. உடந்தையும் பட்டவங்க கேட்கிறீங்க.. என் கிட்டத்தான் நீங்க கேட்க முடியும்.. நான் உங்களைத் தாங்கி

நிற்கக் கடமைப்பட்டவன்.. இப்போதைக்கு இதைப்பற்றிப் பேச வேண்டாம்.. நீங்க குளித்து முடித்து விட்டு வாங்க.. சாப்பிடலாம்.. மற்றதை அப்புறம் பேசிக் கொள்ளலாம்.."

ரங்கநாதன் ஜானகியின் முகத்தைப் பார்த்தார்.. அவள் கண் கலங்கினாள்..

"பெரியப்பா..."

"பெரியப்பன் இருக்கேன் தாயி.. உன்னைக் கண் கலங்க விட மாட்டேன்.. கவலையில்லாமல் போய்க் குளிச்சுட்டு வா.."

ஜானகி அரை மனதாய் எழுந்து மாடியேறினாள்.. ரங்கநாதனின் மனதில் புயலடித்துக் கொண்டிருந்தது.. இப்படியொரு நிலையில் சிக்க வைத்து விட்ட மகளை மனதில் திட்டித் தீர்த்தார்..

கோதை நாச்சியார்.. குமையும் மனதோடு சமையலறைப் பக்கம் போகத் திரும்பினாள்.. ராஜலட்சுமி டிவியைச் சட்டையே பண்ணாமல்.. வாய்க்குள் முணுமுணுத்தாள்..

"என்னடி முணுமுணுக்கிற..?"

"சொல்லிட்டா மட்டும்... தீர்த்துருவீங்களா..?"

"ஏன், தீர்க்க மாட்டேனா..?"

"நானென்ன உங்க தம்பி மகளா.. என் மனக் குறையைத் தீர்க்க..?"

"ஓ... நீ அப்படி வருகிறாயா.. வா.. வா.."

"நான் எங்கேயும் வரவில்லை.."

"அப்படிச் சொன்னால் எப்படி.. நீ வந்துதானே ஆக வேண்டும்..? எழுந்திரு.. லிங்கய்யா.. கோதையைக் கூப்பிடுடா.."

"எங்கேப்பா..."

"எல்லோரும் என் ரூமுக்கு வாங்க.."

அறைக்கதவை அடைத்து விட்டுக் குறுக்கும்.. நெடுக்கும் நடந்த சோமய்யன்.. நின்று.. தன் குடும்பத்தினரின் முகத்தை ஊன்றிக் கவனித்தார்..

கட்டிலில் தோரணையாக அமர்ந்திருந்த ராஜலட்சுமியின் முகத்தில் எரிச்சல் மண்டியிருந்தது.. மாமனாரின் முன்னால் உட்காராமல் மரியாதையாய்.. மாமியாரின் அருகில் கட்டிலைப் பிடித்தபடி நின்றிருந்த கோதையின் முகத்தில் அதிருப்தி வெளிப்படையாய்த் தெரிந்தது.. தகப்பனார் என்னவோ சொல்லப் போகிறார்.. என்று எதிர்பார்த்துக் காத்திருந்த.. லிங்கய்யனின் முகத்தில்.. ஓர் சிறு துடிப்பு மட்டுமே தெரிந்தது..

"லிங்கய்யா.. என் மருமகளுக்கு என் மேல் கோபம் போல் தெரியுதேடா..."

"அப்படியெல்லாம் இல்லைப்பா.. அவள் என்னவோ.. மனதில் போட்டு உழட்டிக் கொண்டு இருப்பாள்.. நீங்கள் அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள்.."

தகப்பனாரின் வார்த்தைக்கு மறுமொழி கூறிய மகனை.. கோபத்துடன் பார்த்தாள் ராஜலட்சுமி..

"ஏன்டா.. வீட்டுப் பொம்பளைக விசனப்பட்டு நின்னா.. கண்டு கொள்ளாமப் போகச் சொல்லி.. உன் அப்பாகிட்ட சொல்கிறாயே.. நீதான் இந்த ஊருக்கு நியாயம் பிளக்கிற நியாயவாதியா..? பெரிசாய் ஊர் பஞ்சாயத்தைத் தீர்த்து வைக்கிற.. அங்கே ஒவ்வொருத்தரு கிட்டயும்.. அவங்க பக்க நியாயம் என்னன்னு கேட்டு.. அவங்களையும் மனசில இருக்கிறதைச் சொல்ல விட்டு அதுக்கப்புறம்தானே நியாயம் சொல்றே.. வீட்லே மட்டும் உன் பெண்டாட்டி வாயைத் திறக்கக் கூடாது.. நீங்கள்.. அப்பனும் மகனும் சேர்ந்து.. அட்டூழியமாய் எதையாவது முடிவு பண்ணுவீங்க.. நாங்க வாயை மூடிக்கிட்டு கேட்டுக்கணும்.. அப்படித்தானே.."

ராஜலட்சுமி பேசுவதைத் தடுக்காமல்.. கோதை நாச்சியார் மௌனமாய் நிற்பதைத் கவனத்தில் வைத்துக் கொண்டார்

சோமய்யன்.. மருமகளின் மனக் கொதிப்பு அவருக்கு நன்றாகவே புரிந்தது.

"ராஜி... இப்போ.. என்ன நடந்து போச்சுன்னு இப்படி சத்தம் போடுற..?"

"இன்னும் என்ன நடக்கணும்..? உங்க தம்பி மகள் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீரைக் கண்டதும் வாக்குக் கொடுத்திட்டிங்களே.. பெத்தவளை ஒரு வார்த்தை கேட்டிங்களா..?"

"கேட்கத்தானே இங்கே வர வைத்திருக்கிறேன்.. ஏம்மா கோதை.. நீயே சொல்லு.. ஜானகியின் மகளை உன் மகனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள உனக்குச் சம்மதமா..?"

"அப்பா.. அவளுக்கென்ன தெரியும்..? நீங்கள் முடிவு பண்ணினால் சரிதான்.. அதை மறுத்து இந்த வீட்டில் யாரும் பேச மாட்டார்கள்.."

"லிங்கா.. நீ பேசாதே.. நான் மருமகளிடம் கேட்கிறேன்.. அது வாயைத் திறந்து சம்மதம்ன்னு சொன்னால்தான்.. நான் ஜானகிக்குச் சம்மதம் கொடுப்பேன்.."

கோதை நாச்சியார்.. தரை மேல் பார்வையைப் பதித்தபடி தீர்மானமான குரலில் கூறினாள்..

"இல்லை.. மாமா.. எனக்குச் சம்மதமில்லை.."

"கோதை.. அப்பாவையா எதிர்த்துப் பேசுற.."

"லிங்கயா.. குரலை உயர்த்தாதே.. பேசாமல் இரு.. ஏம்மா கோதை.. எதனால் உனக்குச் சம்மதமில்லை...?"

"மாமா.. சசியின் குணத்தில் நான் பழுது சொல்லவில்லை.. ஜானகிக்கு நாம் உதவி செய்யத்தான் வேண்டும்.. அந்தக் கடமை நமக்கிருக்கு.. ஆனால்.. அதற்காக.. என் மகனின் வாழ்வை நான் பணையம் வைக்க மாட்டேன்.. இந்தக் கல்யாணப் பேச்சில் எனக்கு கொஞ்சம் கூட இஷ்டமில்லை.."

"கோதை.. வாயை மூடு..."

"லிங்கா.. நீ குறுக்கே பேசாதே.. அம்மா கோதை... உன் மகன் எனக்கு யாரோ இல்லை.. என் பேரன்.. என் ரத்தம்.. அவன் வாழ்வை நான் பணையம் வைப்பேனா..? எதனால் இப்படி ஒரு வார்த்தையை நீ சொல்கிறாய்..?"

"மாமா.. சசி வேறு ஒரு பையனை மனதில் நினைத்துக் கொண்டு இருக்கிறாள்.. இஷ்டமில்லாமல் என் மகனை அவள் கல்யாணம் பண்ணிக் கொண்டால்... என் மகன் வாழ்க்கையில் சுகப்படுவானா..? அத்தை உங்களைப் பிடிக்காமல் உங்களுடன் வாழ்க்கை நடத்தினால் நீங்கள் அதைச் சகித்துக் கொள்வீங்களா..? இல்லை.. உங்கள் மகன் கூட.. நான் பிடித்தமில்லாமல் குடித்தனம் நடத்தினால்.. அவர் அதைப் பொறுத்துக் கொள்வாரா.. என் மகனும் உங்களைப் போல் ஒரு ஆம்பளைதானே.. உங்களுக்கு ஒரு நியாயம்.. என் மகனுக்கு ஒரு நியாயமா..?"

மனைவியைப் பேசவிடாமல் அதட்டிக் கொண்டிருந்த லிங்கய்யன் இப்போது பேச்சிழந்தார்.. மனைவியின் கேள்வியில் இருந்த உண்மை அவரைச் சுட்டது.. எத்தனையோ அலுவல்களின் சுமையிருந்தாலும்.. மனைவியின் மையல் பார்வைக்காக வீட்டை நோக்கி ஓடி வந்த காலங்கள் நினைவில் வந்தன..

'என் ஒரு பார்வையில் சொக்கிப் போவாளே.. அந்தப் பெருமையை.. என் மகன் அனுபவிக்காமல் போவதா...?'

சோமய்யன்.. மகனின் மனமாற்றத்தை.. அவரது முகமாற்றத்தின் மூலம் உணர்ந்து கொண்டார்..

"ஆக.. கோதை இந்தக் கல்யாணத்தை எதிர்ப்பதற்குக் காரணம்.. சசியின் மனதில் வேறொருவனின் மீது விருப்பம் இருப்பதுதான்.. இல்லையா.."

அவர் ஏற்ற இறக்கத்துடன் பேசவும் ராஜலட்சுமிக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

"ஏன்டா லிங்கா.. விடிய விடிய ராமாயணம் கேட்டு விட்டு விடிந்த பின் சீதைக்கு ராமன்.. சித்தப்பன் மகனான்னு

கேட்ட கதையாய் இல்ல.. உங்கப்பா கேள்வி கேட்கும் கதையிருக்கு..."

ராஜலட்சுமியின் கோபத்தில் உண்மை இருந்ததால்.. லிங்கய்யனும் கோதை நாச்சியாரும் மௌனம் சாதித்தார்கள்..

8

சோமய்யன் நிதானமாய் மனைவியைப் பார்த்தார்.. பின் மெதுவாக.. ஓர் அணு குண்டைத் தூக்கிப் போட்டார்.. அந்த அணுகுண்டு வெடித்ததில் அங்கிருந்த அத்தனை பேரும் ஆடிப்போனார்கள்..

"ராஜி.. உன் மருமகள் கேட்டுச்சு பாரு, ஒரு கேள்வி.."

"அவள் எனக்கு மட்டும் மருமகளா எப்போதிருந்து ஆனாள்..? அதோட அவ ஒரு கேள்வியை மட்டுமா கேட்டாள்.. ஒன்பத்திரண்டு கேள்வி கேட்டாள்.. பதில் சொல்ல முடியலை.. வக்கணையாய் வரிஞ்சு கட்டிக்கிட்டு என்கிட்ட வியாக்கியானம் பேச வந்துட்டிங்க.."

"சரி... நம்ம மருமகள்.. ஒன்பத்திரண்டு கேள்வி கேட்டாலும்... அதில ஒரு விசயத்தை மட்டும்தானே கேட்டாள்.."

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னங்கிறீங்க.."

"அட யாருடி.. இவ.. சுத்த விவரம் கெட்டவளா இருக்கா..."

"நான் விவரமா இருந்தால்.. ஏன் உங்களைக் கட்டிக்கப் போறேன்..?"

"அதைப் பத்தி இப்ப ஏன்டி கவலைப்படறே.. இப்பத்தானே பேரன் பேத்தி கல்யாண வயசுக்கு வந்திருக்காங்க.. கௌ்ளுப் பேரன்.. பேத்தி எடுத்த பின்னால்..

கவலைப்பட்டிருக்க வேண்டியதுதானே.. என்னவோ.. நேற்றைக்குத்தான் சமைந்து.. குச்சு வீட்டில் இருக்கற.. குமரி மாதிரிதான்.. வக்கணைப் பேச்சை.. வாய் கிழியப் பேசுற..."

அந்த நிலமையிலும்.. மாமனார்... மாமியாரின் பேச்சைக் கேட்டுக் கோதை நாச்சியாருக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.. அடக்கிக் கொண்டு நின்றிருந்தாள்..

"ஆமாம்.. நான் மட்டும் குமரியில்லாம.. கிழவியாகி விட்டேன்.. இவருக்கு இப்பத்தான் வயசு திரும்பியிருக்கு.. மருமக கேட்டதுக்குப் பதில் சொல்ல முடியலை.. என்னிடம் வாய்ச் சவடாலுக்கு வந்து விட்டாரு.."

"ம்ஹும்.. என்னதான் ஊராளும் ராஜாவாக இருந்தாலும்.. கட்டிக் கொண்டவளுக்கு.. அவன் கடுகு போலதான்.." என்று நினைத்துக் கொண்ட லிங்கய்யனுக்கு.. தகப்பனைக் கண்டு பாவமாக இருந்தது..

'இப்படிப் போய்ப் பெண்களிடம் மாட்டிக் கொண்டு விழிக்கிறாரே!'

மனைவியின் பேச்சை ரசித்துச் சிரித்தார் சோமய்யன்..

"இதைப் பாருடி.. உன் மருமகள் கேட்டது இருக்கட்டும்.. இப்ப.. நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன்.. அதுக்கு முதலில் நீ பதில் சொல்லு..."

"என்னத்தைக் கேட்கப் போறீங்க..?"

"நான் என் மனதில் வேறு ஒருத்தியை நினைத்துக் கொண்டு உன் கூடக் குடும்பம் நடத்தினால் நீ தாங்கிக்குவியா...?"

"இது என்னங்க.. எடுபட்ட தனமா கேட்கறீங்க.."

"இல்லை.. என் மகன்தான்.. இன்னொருத்தியை நினைச்சுட்டு நம்ம மருமககூட வாழ்க்கை நடத்தினால்.. அது பொறுத்துக் கிட்டுப் போகுமா...?"

"வேணும்னே வம்புக்கு இழுக்கறீங்களா...?"

"உள்ளதைச் சொன்னேன்டி.. நானும் உன்னைத்தவிர வேறு பொம்பளைய நினைச்சதில்லை.. என்மகனும்.. ராமன்தான்..."

"இதை ஏன்.. எங்ககிட்டச் சொல்கிறீங்க...."

"நம்ம மருமகள் கேட்டுச்சே.. உங்களைப் போலத் தானே.. என் மகனுக்கும்.. அவனை விரும்புகிற பெண்தான்.. பெண்டாட்டியா வரணும்னு இருக்கும்ன்னு.. அவன் மனசில் வேறு யாரையும் நினைக்கலைன்னு உங்களுக்குத் தெரியுமா...?"

கோதை நாச்சியார் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள்..

"மாமா.. இது அடுக்காது.. என் மகன் அப்படிப்பட்டவனில்லை.."

"இதைப் பார்த்துட்டுச் சொல்லும்மா..."

சோமய்யன் பீரோவைத் திறந்து.. சில போட்டோக்களை எடுத்து அவளிடம் கொடுத்தார்.. லிங்கய்யனும்.. ராஜலட்சுமியும் கூடவே எட்டிப் பார்த்தார்கள்...

திருச்சியின் பல்வேறு இடங்களில்.. பல்வேறு உடைகளில் மணிஷா.. ரஞ்சனின் தோள் தடவிக் கட்டிக் கொண்டு இருந்தாள்..

"ஐயையோ.. என்னடி கோதை.. எவளோ ஒருத்தி.. அரையும் குறையுமாய் உடுத்திக்கிட்டு.. நாடகத்தில் வேசம்கட்டி ஆடுகிறவளைப் போல உதட்டில் சாயத்தை அப்பிக்கிட்டு... என் பேரனைக் கட்டிக்கிட்டு நிற்கிறா.. இது எத்தனை நாளாய் நடக்குது...?"

"ரொம்ப நாளாவே நடக்குது..." என்றார் சோமய்யன்..

"இதை ஏன் எங்களிடம் முன்னாடியே சொல்லவில்லை...?"

"சொல்லியிருந்தால் மட்டும்.. உங்களால் என்ன செய்திருக்க முடியும்...?"

"ஆனாலும் அப்பா..."

"லிங்கா.. வேண்டுமென்றே மறைக்கவில்லையடா.. எனக்குத் தகவல் தெரிந்ததும்.. நம்ம மாப்பிள்ளை போலவே.. பையனையும்.. அந்தப் பெண்ணையும் கண்காணிக்கச் சொன்னேன்.. இந்தப் போட்டோக்களோடு விவரம் வந்தது.."

"இந்தப் பொண்ணு யாருப்பா..?"

"மணிஷான்னு பேரு.. வட இந்தியக்காரி.. வேறு பாஷை பேசுற பொண்ணு.. இருந்தாலும் குத்தமில்ல.. நம்ம பிள்ளை விரும்பிட்டானேன்னுதான் விசாரிக்கச் சொன்னேன்.. விசாரிச்சா.. பூதம் கிளம்புதுடா.."

"என்னப்பா சொல்றீங்க..?"

"இந்தப் பொண்ணோட பூர்விகம் சரியில்லைடா.. அது கூடப் பரவாயில்லை.. சேற்றில் பிறந்த செந்தாமரைன்னு ஏத்துக்கலாம்ன்னு பார்த்தால்.. இந்தப் பெண்ணே சரியில்லைடா.. பலபேர் கைமாறி.. நம்ம பிள்ளையைப் பார்த்ததும்.. வசதியானவன்னு தெரிஞ்சுக்கிட்டு இறுக்கிப் பிடிச்சிருக்கு.. காசு பணத்திற்குக் கடைசிவரை குறைவில்லை.. செட்டிலாகி விடலாம்கிற கணக்குத்தான்.."

கோதை நாச்சியார்.. இடிந்து போய்.. சுவரோடு சரிந்து தரையில் அமர்ந்து விட்டாள்.. சோமய்யன் மகனைப் பார்த்தார்.. அதற்குள் ராஜலட்சுமி.. மருமகளின் அருகில் அமர்ந்து அவளைச் சமாதானப்படுத்த முனைந்தாள்..

"கோதை.. இங்கே பாரு.. எல்லாம் சரியாகிவிடும்.."

"எப்படியத்தை.. இப்படிப் போய் மாட்டியிருக்கிறானே..."

"நம்ம வீட்டு ஆம்பளைங்க எதுக்கு இருக்காங்க.. ஊரு நாட்டாமையை ஏறக்கட்டிவிட்டு... வீட்டுப் பஞ்சாயத்தைத் தீர்த்து வைக்காம.. வேறு வேலை பார்க்க நான் விட்டுவிடுவேனா.. நீ எழுந்திரு தாயி.."

"எனக்கு பயமாயிருக்கு அத்தை..."

சோமய்யன் கட்டிலில் அமர்ந்து.. தன் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டார்.

"பயப்படாதேம்மா.. நான் இதற்காகத்தான்.. ஜானகியிடம் முறித்துப் பேசவில்லை.."

"ஆனால்.. அந்தப் பெண் சசியும்.. இப்படி இருக்கிறாளே மாமா.."

"அவளால்தானே.. இவனது ஒதுக்கத்தைக் கண்டு கொள்ளாமல் இருக்க முடியும்...?"

"அப்படியே இரண்டு பேரும் ஒதுங்கி வாழ்ந்து விட்டால் என்ன மாமா செய்வது...?"

"தாயி.. தண்ணிக்குள் நாம தள்ளி விடுவோம்.. நீந்திக் கரையேறுவது அவங்க பாடு.."

"இப்படிச் சொன்னால் எப்படி மாமா...?"

"கோதை.. இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு நல்லது கெட்டது தெரியும்.. நாமளே கையைப் பிடித்துக் கடைசி வரைக்கும் அழைத்துக்கிட்டுப் போக முடியுமா..?"

"இதுக ரெண்டுக்கும்தான்.. நல்லது.. கெட்டது தெரியாமல் போச்சே..."

"அப்படியும் ஒரேயடியாய்ச் சொல்லி விட முடியாதும்மா.. இந்தச் சசி இருக்கிறாளே.. அவள் அந்தப் பயலிடம் இடைவெளிவிட்டுத்தான் பழகியிருக்கிறாள்ன்னு அந்த ஏஜன்ஸி ரிப்போர்ட் சொல்லுது. நம்ம பயலும் தள்ளித் தள்ளித்தான் போயிருக்கிறான்.. இந்தக் கழுதைதான் புளியங்கொம்பை விட்டு விடக் கூடாதுன்னு வளைக்கப் பார்த்திருக்கிறாள்.."

"எனக்கு மனமே சரியில்லை மாமா.."

"எல்லாம் சரியாகிப் போகும்.. கவலைப்படாமல் போய் கடவுள் மேல் பாரத்தைப் போட்டு விட்டு வேலையைப் பாரு.. எல்லாம் நல்லபடியாகத்தான் நடக்கும்.."

அவர் சொன்னது போலவே எல்லாம் நல்லபடியாகத்தான் நடந்தது.. ஜானகி.. ரங்கநாதனுடன்.. எல்லோரும் கலந்து பேசித் திருமணத்திற்கு நாளைக் குறித்து விட்டார்கள்..

பெங்களூர் செல்லும் கனவில் சென்னையில் சசிரேகா.. தன் படிப்பை முடிக்க.. திருச்சியில் படிப்பை முடித்து விட்டு ரஞ்சன்... தோப்பூர் வந்தான்.. அவன் வரும்போது வீடு விழாக்கோலம் பூண்டிருந்தது.. இது தான் வீடா.. என்ற சந்தேகம் அவனுக்கு வந்துவிட்டது..

சுற்றுப்புற இடங்களைச் சுற்றி வளைத்து.. தெரு முழுக்க அடைத்துப் பந்தல் போட்டிருந்தார்கள்.. நூற்றுக் கணக்கான பிளாஸ்டிக் கூடை நாற்காலிகள்.. இரு தெருமுனை பந்தல்களில் இருந்தும் ஆரம்பித்து ஊர்க்காரர்களும்.. உறவுக்காரர்களும் அமர்ந்திருந்தார்கள்..

'வீடு மாறி வந்து விட்டோமோ...' என்று ஓர் கணம் யோசித்தவன் மறுகணம்.. தன்னைத் தானே மனதிற்குள் குட்டிக் கொண்டான்...

அந்த ஊரிலேயே மிகப் பெரிய வீடு.. அவர்களுடைய வீடுதான்.. அந்த வீட்டின் முகப்புத் தோற்றம் ஓர் அரண்மனையைப் போலிருக்கும்..

எனவே வீடு மாறி வந்திருக்க வாய்ப்பில்லை.. வீட்டின் தோற்றம் இப்படி மாறியிருக்க வாய்ப்பிருக்கிறது.. குழப்பத்துடன் வீட்டுப்படியேறினான்.. கழுத்து.. கைகளில் வைரங்கள் ஒளிர்விட.. உயர்ரகப் பட்டுச் சேலையை இழுத்துச் செருகிக்கொண்டு கோதை நாச்சியார் எதிரே வந்தாள்..

"என்னம்மா இது.. வீட்டில் விசேசமா...?"

"ஆமாண்டா.. நீ உள்ளே வா..."

"என்ன விசேசம்...?"

"எல்லாத்தையும் வாசலில் நின்னுக்கிட்டுதான் சொல்லணுமா...?"

"ஏம்மா.. தெரு முனையிலேயே பந்தலும்.. நாற்காலியும் ஆரம்பித்து விட்டது.. நான் வாசலில் வந்துதானே கேட்கிறேன்.. விளக்கம் சொல்லுங்க..."

"அதை உன் தாத்தாவும்.. அப்பாவும் சொல்வாங்க.. நீ முதலில் மாடிக்குப் போ..."

'என்னடா இது, பெரிய சஸ்பென்ஸாக இருக்கிறது..' என்ற ஆச்சரியத்துடன் அவன் மாடியேறினான்.

'அம்மாவா... என் சந்தேகத்திற்குப் பதில் சொல்லாமல் அப்பா.. தாத்தாகிட்ட கேட்கச் சொல்லுகிறாங்க...?'

கோதை நாச்சியார்.. மகன் எதைக் கேட்டாலும் உடனே சொல்லி விடுவாள்.. எந்தத் தாய்க்கும் முதல் பிள்ளையின் மேல் பற்றுதலும்.. பாசமும்.. அதிகமாக இருக்கும்.. அது கோதை நாச்சியாரிடமும் இருந்தது.. வீட்டில் சோமய்யனுக்கும்.. லிங்கய்யனுக்கும் பேத்தி செல்லப் பெண் என்றால்.. ராஜலட்சுமிக்கும்.. கோதை நாச்சியாருக்கும்.. ரஞ்சன்தான் என்றுமே செல்லம்..

மாடியறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான் ரஞ்சன்.. உள்ளே அமர்ந்து ஏதோ மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்த சோமய்யனும்.. லிங்கய்யனும் தலை நிமிர்ந்தனர்..

"தாத்தா.. வீட்டில் என்ன விசேசம்.. தெருப்பூராவும் பந்தல் போட்டு ஒரே அமர்க்களமாயிருக்கு..."

"லிங்கா.. கதவைப் பூட்டு..."

தன் கேள்விக்குப் பதிலளிக்காமல் தகப்பனாருக்கு ஆணையிடும் தாத்தாவை ஆச்சரியமாகப் பார்த்தான் ரஞ்சன்..

"தாத்தா.. வாட் இஸ் திஸ்...?"

"இப்படி உட்காரு..."

"உட்கார்ந்து விட்டேன்.. சொல்லுங்க..."

"விடிந்தால் உனக்குக் கல்யாணம்..."

என்னவோ.. விடிந்தால் உனக்குச் சட்டை வாங்கப் போகிறோம் என்ற தொனியில் சோமய்யன் பேசவும் ரஞ்சனுக்குள் கோபம் சுர்ரென்று வந்து விட்டது...

"இது என்ன விளையாட்டு தாத்தா...?"

"விளையாட்டில்லைடா பேராண்டி.. நிஜம்.. சுத்துப்பட்டி உறவுக்கார ஜனங்களுக்கெல்லாம் பத்திரிகை கொடுத்தாகி விட்டது.. சென்னை.. மும்பை.. டில்லியிலிருந்து மற்ற உறவுக்காரங்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்னாலேயே பத்திரிகை போய் விட்டது.. அமெரிக்கா.. லண்டனில் இருக்கிறவங்களுக்கும் பத்திரிகை பறந்து விட்டது..."

"அமெரிக்காவில் இருக்கிறவனுக்கு என் கல்யாணத்தைப் பத்தித் தெரியுது.. இதோ இருக்கிற திருச்சியில் இருக்கிற எனக்கு என் கல்யாணத்தைப் பத்திச் சொல்லாமல் மறைத்து விட்டிங்க..."

"ஏன்.. நீ எங்களிடம் மறைக்கவில்லையா...?"

சோமய்யன் நிதானமாகக் கேட்டார்.. லிங்கய்யன் விழி சிவக்கத் தன் மகனை முறைத்துக் கொண்டிருந்தார்..

9

"தாத்தா..." ரஞ்சன் அதிர்ச்சியுடன் பார்த்தான்..

இவர்களுக்கு விசயம் தெரிந்து விட்டதா...?

"என்னடா முழிக்கிற..? பட்டிக்காட்டில் இருக்கிற பயலுகளுக்கு எப்படி விசயம் தெரிஞ்சுச்சுன்னு யோசிக்கிறயா..? நீ எட்டுச் சீமை தள்ளியிருந்தாலும்.. அங்கேயும் உன்னைக் கவனிக்க என் ஆளிருக்கும்.. உன் அப்பனையும்.. தாத்தாவையும் கேணப்பயலுகன்னு நினைச்சுட்டியாடா...?"

"தாத்தா.. நான் அவளைக் காதலிக்கிறேன்..."

ரஞ்சன் நிமிர்வாய்ப் பதில் கூறவும் லிங்கய்யனுக்கும் கோபம் தலைக்கு ஏறியது...

"தூ.. அதுக்குப் பெயர் காதலாடா...?"

"அப்பா.. வேண்டாம்.. ஆத்திரத்தில் யோசிக்காமல் பேசிவிடாதீங்க..."

"நீதான் காதல் உன் கண்ணை மறைக்க.. யோசிக்காமல் சேற்றில் விழப் பார்க்கிறாய்.. சேற்றில் புரள வேண்டியது.. வேறு ஜென்மங்கள்டா.. உனக்கு எதற்கு அந்தத் தலையெழுத்து..."

"அப்பா.. அபாண்டமாய் அவளைப் பேசாதீங்க..."

"இப்ப என்னதான்டா.. நீ சொல்ல வர்றே..."

லிங்கய்யன் கோபத்தில் உடல் நடுங்க ஆரம்பிக்க, சோமய்யன் இடையிட்டு மகனை அடக்கினார்..

"தா.. லிங்கா... நீ பேசாமல் இரு.. அவனுக்கென்ன தெரியும்.. வயசுப் பையன்.. கொஞ்சம் அப்படி.. இப்படின்னு இருக்கிறான்.. அதுக்குப் போயி.. அவனைக் கலங்கடிக்கிறாயே..."

தகப்பனுக்குக் குறையாத ஆத்திரத்துடன்.. முறைத்துக் கொண்டு கண்கள் சிவக்க நின்றிருந்த பேரனின் பக்கம் முகம் திருப்பினார்..

"ரஞ்சா.. உன் அப்பனின் கோபத்திலும் நியாயம் இருக்கு..."

"இப்போது நீங்கள் செய்வது கொஞ்சம் கூட நியாயமில்லை..."

"நாங்கள் செய்வது உன் நல்லதிற்காகத்தான்..."

"என் நல்லது.. கெட்டதை நான் பார்த்துக் கொள்வேன்..."

"ஓ.. அந்த அளவுக்கு நீ பெரியவன் ஆகிவிட்டாயில்லையா..? மறந்து விட்டேன்.. அப்போச் சரிப்பா.. நீ போய்க் கல்யாணத்தை நிறுத்து.. லிங்கா..! நீ போய் உன் பொண்டாட்டியையும்.. என் பொண்டாட்டியையும் கூப்பிட்டுக்

கொண்டு வா.. மறக்காமல் உன் மகளையும் கையோடு கூப்பிட்டுக் கொண்டு வந்து விடு.. இவனே இந்திக்காரி பின்னால் போகப் போகிறான்.. இவனை நம்பி.. அந்தப் பச்சிளம் குருத்தை நான் விட்டு விட்டுப் போக முடியாது..."

லிங்கய்யன் கதவுப் பக்கம் போகப் போக.. அவசரமாய் ரஞ்சன் தடுத்தான்..

"அப்பா..! பொறுங்க.. தாத்தா.. எதுக்கு எல்லோரையும் கூப்பிடுறீங்க.."

"வேறு எதுக்கு, இதைப் பகிர்ந்து குடிக்கத்தான்..."

கையில் வைத்திருந்த விசபாட்டிலை எடுத்துக் காட்டினார் சோமய்யன்.. ரஞ்சன் பதறிவிட்டான்.. சோமய்யன் வெறும் பேச்சுப் பேசுகிறவர் அல்ல..

"தாத்தா.. என்ன இது...?"

"ம்ம்.. விசம்.. நீ பார்த்தாயில்லையா..?"

"இதையா எல்லோருக்கும் கொடுக்கப் போகிறீர்கள்..?"

"எல்லோருக்கும்ன்னு.. உன்னையும் ஏன் கூட்டுச் சேர்த்துக்கிற..? நீ போய் அந்த மணிஷாவுடன் மகிழ்ச்சியாய்க் குடும்பம் நடத்து.. நாங்கள் போகிறோம்..."

"என்ன தாத்தா.. மிரட்டுகிறீர்களா...?"

"ஆமாம்.. இப்ப அதுக்கு என்னங்கிற...?"

"நான்.. இதற்கெல்லாம் பயப்பட மாட்டேன்.."

"என் ரத்தம்.. பெத்த ரத்தம்.. பயப்படாதுடா.. நீ போ.."

"தாத்தா.. நீங்கள் என்னைக் கார்னர் பண்ணுகிறீங்க.."

"உன்னை யார் இதில் அகப்படச் சொன்னது..? உதறிவிட்டுப் போ..."

"சொன்னால் கேளுங்க தாத்தா..."

"நீ சொல்லி நான் கேட்குமளவிற்கு உன்னைப் பெரிய மனிதனாகத்தான் நினைத்தேன்.. இப்படி நாங்கள்

சொல்லி.. நீ கேட்கும் அளவிற்கு நீதான் கொண்டு வந்து விட்டாய்.."

"தாத்தா.. காதலிப்பது தவறா...?"

"தவறேயில்லை.. நீ காதலித்தது தவறு இல்லை.. அந்தப் பெண் வேற்று மாநிலமென்பதிலும் தவறு இல்லை.. வேறு பாஷை பேசுகிற பெண் என்பதிலும் தவறு இல்லை.. தவறு வேறு ஒரு விதத்தில் இருக்கிறது.. அது இப்போது உனக்குப் புரியாது ரஞ்சா.. அது ஒருநாள் உனக்குப் புரியும்.. அப்படிப் புரியும் போது நீ மீள முடியாத புதைகுழியில் மாட்டிக் கொள்ளாமலிருக்க உன்னைப் பாதுகாக்கும் ஏற்பாடுதான் இந்தக் கல்யாணம்..."

"நான் என்ன சின்னக் குழந்தையா...?"

"சின்னக் குழந்தையாய் நீ இருந்திருந்தால்தான் பிரச்சனையே இல்லையே.. ஆனால் நீதான் வளர்ந்தவன் ஆகி விட்டாயே.."

"இப்படிப் பேசினால் எப்படி தாத்தா..."

"ரஞ்சா.. எனக்கு அதிகம் பேசிப் பழக்கமில்லை.. வெட்டு ஒன்று.. துண்டு இரண்டுதான்.. ஒன்று நீ காலையில் மணமேடையில் ஏறி.. உன் அத்தை மகள் சசியின் கழுத்தில் தாலியைக் கட்ட வேண்டும்.. இல்லையென்றால்.. நாங்கள் குடும்பத்தோடு போய்ச் சேர வேண்டும்..."

"தாத்தா.. என்னைக் கட்டுப்படுத்துவது கஷ்டம்.."

"எனக்கும் அது தெரியும்.. கடலைக் கைக்குள் அடக்க முடியுமா..? அது போலதான்.. உன்னை அடக்க நினைப்பதும்.. நாங்க யாரும் உன்னைக் கண்காணிக்க மாட்டோம்.. கட்டுப்படுத்த மாட்டோம்.. உன் இஷ்டப்படி நீ எங்கே வேணும்னாலும் போகலாம்.. ஆனால் ஊரே கூடியிருக்கும் இந்தச் சபையில் காலையில் குறித்த முகூர்த்தத்தில் நீ சசிரேகாவின் கழுத்தில் தாலியைக் கட்டலேன்னு வை.. அதற்கு அப்புறம் நடப்பதற்கு.. நீதான் பொறுப்பு.. போ..."

சோமய்யன் கதவைத் திறந்து கொண்டு.. படபட வென்று படியில் இறங்கிப் போய்விட்டார்.. லிங்கய்யன் மகனின் முகத்தையே இமைக்காமல் பார்த்தார்.. ரஞ்சன்.. தகப்பனாரின் பார்வையைத் தவிர்த்தான்.. லிங்கய்யன் ஒரு பெருமூச்சை வெளியேற்றினார்...

"என் அப்பா என்னை வளர்த்தது போலத்தானே.. உன்னையும் நான் வளர்த்தேன்.. நீ மட்டும்.. ஏன்.. எனக்கு இப்படியொரு தலை குனிவை உண்டாக்கி விட்டாய்..."

"அப்பா..."

"நான் அப்படியென்ன செய்து விட்டேன்னு நீ கேட்கப் போகிறாய்.. ரஞ்சா.. காதலிப்பது தவறில்லை.. காதலிக்கும் நபர் சரியான ஆளாக இருக்க வேண்டாமா...?"

"அவள் நல்லவள் அப்பா..."

"அதை நீ சொன்னால் மட்டும் போதாதுப்பா.."

"எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லைப்பா.."

"எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை.. ரஞ்சா..."

"நான் இந்தக் கல்யாணத்தைச் செய்து கொள்ள மாட்டேன்..."

"நாங்கள் செய்ய வேண்டியதைச் செய்து கொள்வோம்..."

லிங்கய்யன் ஆழ்ந்த பார்வையோடு ரஞ்சனின் அருகே வந்தார்.. அவனது முடி கோதினார்.. மீண்டும் பெருமூச்சு விட்டுவிட்டு அறையை விட்டு வெளியேறினார்...

ரஞ்சன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.. அறைக் கதவு திறக்கும் ஒலி கேட்டது.. நிமிர்ந்து பார்த்தான்.. கோதை நாச்சியார் கையில் காபித் தம்ளரோடு நின்றிருந்தாள்..

"அம்மா..."

"நான் உன் அம்மாங்கிறது கூட உனக்கு நினைவிருக்காடா...?"

"ஏம்மா இப்படிப் பேசறீங்க...?"

"வேறு எப்படிப் பேசுவது..? காபி குடி..."

"எனக்கு வேண்டாம்.."

"அப்போச்சரி... நாங்கள் எல்லோரும் சேர்ந்தே இப்போதிருந்து உண்ணா விரதத்தை ஆரம்பித்து விடுகிறோம்.. ஆக்கி வைத்த விருந்தை.. ஊர்க்காரங்களும்.. உறவுக்காரங்களும் சாப்பிடட்டும்.."

"காபியைக் குடுங்க.."

மகனின் சோர்ந்த தோற்றத்தைக் கண்டு பெற்ற வயிறு கலங்கியது.. கோதை நாச்சியாரின் மனம் துடித்தது.. பொங்கி வந்த விம்மல் வெடித்தது.. அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட கேவல் ஒலியைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் வெடித்து அழுதாள்.. ரஞ்சன் அவசரமாய் எழுந்து அறைக்கதவை மூடிவிட்டுத் தாயை நெருங்கினான்.. அவள் தரையில் சரிந்து அமர்ந்து அழுதாள்...

"அம்மா.. ப்ளீஸ் அழுகாதீங்க..."

"இப்படிச் செய்துட்டியேடா.. என் பிள்ளை எனக்குத் தெரியாமல் எந்தக் காரியமும் செய்ய மாட்டான்னு நம்பிக்கிட்டு இருந்தேனே.. அந்த நம்பிக்கையில் மண்ணள்ளிப் போட்டு விட்டாயே.."

"நான் வேண்டுமென்றே செய்யவில்லைம்மா..."

"எவளோ ஒருத்தியைப் பிடித்திருச்சுன்னா நீ என்ன செய்திருக்கணும்..? உன் அப்பா... தாத்தாகிட்ட பயமாய் இருந்தாலும்.. என்கிட்ட வந்து சொல்லியிருக்கணுமா.. இல்லையா..? அதை விட்டுவிட்டு அவளை இழுத்துக் கிட்டு திருச்சியை ரவுண்டு கட்டிச் சுற்றியிருக்கே.. இதை உன் தாத்தா சொல்லி போட்டோக்களைக் காட்டிய போது என் உயிர் தவிச்ச தவிப்பு உனக்குத் தெரியுமாடா...?"

"போட்டோக்களா...?"

"ஆமாம்.. மத்தவங்களுக்குத்தான் நீ யார் வீட்டு ஆம்பளைன்னு தெரியாது.. உனக்குக் கூடவா தெரியாமல் போச்சு...? நீ விடும் மூச்சுக்காற்றைக் கூட இந்த வீட்டுப் பெரிய ஆம்பளைகள் எண்ணி விடுவாங்களேடா..."

"அவள் வேற்று பாஷை பேசினாலும் நல்லவள்ம்மா.."

"வேண்டாம் ரஞ்சா.. மத்தப் பெண்களைப் பத்தி நான் எப்பவுமே அவதூறாய்ப் பேசினதில்லை.. இப்போது என்னைப் பேச வைச்சிராதே.. நான் உன்னைப் பெத்தவடா.. உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கிறேன்.. இந்தக் கல்யாணம் உன் நல்லதிற்காகத் தான்.. அதை விட்டுவிட்டு.. என்னையும்.. உன் தங்கையையும் கைவிட்டு விடாதேடா.. உன் தாத்தா குடுக்கும் விசத்தை வாங்கி எங்களைக் குடிக்க வச்சிராதேடா..."

ரஞ்சன் தன் தாயின் மடியில் முகம் புதைத்தான்.. கோதை நாச்சியாரின் மனம் பொங்கியது...

இந்த மகனின் துன்பம் கண்டும்.. வாளாவிருக்கும் நிலை தனக்கு வந்து விட்டதை எண்ணித் துக்கப்பட்டாள்..

அறைக் கதவை யாரோ திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள்.. இருவரும் நிமிர்ந்து பார்த்தனர்.. ராஜலட்சுமி நின்று கொண்டிருந்தாள்..

"பாட்டி..."

"கோதை.. இந்தப் பயல் என்கிட்ட ஒன்னும் பேச வேணாம்னு சொல்லு.. நீயேன் இப்படி இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்கிற..? எழுந்திரு.. கீழே எல்லாத் திக்கிலிருந்தும் உறவுக்கார ஜனங்கள் வந்து குமிஞ்சுக்கிட்டு இருக்காங்க.. ஊரு.. உலகத்துக்கே.. இந்தக் குடும்பத்தின் மதிப்பு தெரிஞ்சிருக்கு.. உன் மகனுக்குத் தெரியல..."

"பாட்டி..."

"இந்த வீடு எப்படியிருந்த வீடு.. ஒருத்தருக்கொருத்தர்.. ஆதரவா.. அனுசரணையா.. ஒத்துமையா இருந்த வீடு..

இத்தனை நாளும் இவன் எங்கே போகிறான்.. எங்கே வருகிறான்.. நாம ஒருவார்த்தையாவது கேட்டிருப்போமா.. இந்தப் பயல் நம்ம நம்பிக்கையைக் குழி தோண்டிப் புதைச்சு விட்டான்.. இவன்கிட்ட நமக்கென்ன பேச்சு.. நீ எழுந்துவா.. நமக்கு ஆயிரம் சோலி இருக்கு..."

"பாட்டி..."

"போடா.. போ.. பாட்டியாம் பாட்டி.. உங்க தாத்தன் இது வரைக்கும் எனக்குச் சேலை வாங்கிக் குடுத்திருக்காரு.. நகை வாங்கிக் குடுத்திருக்காரு.. ஏன்.. யாருக்கும் தெரியாமல் அல்வாவும்.. மல்லிகைப்பூவும் வாங்கிக்கிட்டு வந்து குடுத்திருக்காரு.. ஆனால்.. இப்போது.. விசத்தை வாங்கிக்கிட்டு வந்து குடுத்திருக்காருடா.. இந்தக் கொடுமையை நான் எங்கே போய்ச் சொல்ல...?"

"பாட்டி..."

"விடிஞ்சு நீ அந்தப் பொண்ணு கழுத்தில் தாலி கட்டிய பின்னால என்னைப் பாட்டின்னு கூப்பிடு.. நானும் பதில் சொல்றேன்.. அதுவரை.. என்கிட்ட பேசாதே.. பிழைத்துக் கிடக்கும் வரத்தை.. இந்தக் குடும்பத்தில் இருக்கிறவங்களுக்கு குடுக்க மனமிருந்தால் கொடு.. இல்லைன்னா விட்டுத் தள்ளு..."

ராஜலட்சுமி கோதை நாச்சியாரை இழுத்துக் கொண்டு போய்விட்டாள்.. வெகு நேரம்.. அறைக்குள் அடைபட்டுக் கிடந்த ரஞ்சன்.. அறையை விட்டு வெளியே வந்தான்.. இருள் சூழ ஆரம்பித்திருந்தது.. வீடு பூராவும் ஒளி வெள்ளத்தில் நிரம்பியிருந்தது..

தோட்டத்தின் முன்புறம்.. வந்து நின்றான்.. வரிசையாய்க் கார்கள் வந்து நின்றன.. அதிலிருந்து சொந்தக்காரர்கள் இறங்குவதையும்.. மகிழ்வாய்ப் பேசியபடி வீட்டுக்குள் போவதையும் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றான்..

'நாங்க உன்னைக் கண்காணிக்க மாட்டோம்.. கட்டுப்படுத்த மாட்டோம்.. உன் இஷ்டப்படி நீ எங்கே வேணும்னாலும் போகலாம்..'

சோமய்யனின் குரல் காதுகளில் ஒலித்தது.. எங்கே போவது..? இந்த வீட்டை விட்டு.. எப்படிப்போவது...? இப்படிப்பட்ட சூழ்நிலையில் உறவுக்காரர்கள் மத்தியில் பெற்றவர்களை எப்படித் தலைகுனிய வைப்பது...?

ரஞ்சன் பெருமூச்சோடு வீட்டுக்குள் திரும்பி நடந்தான்..

10

"கொஞ்சம் முகத்தை இப்படித் திருப்புங்க மேடம்.."

ஒப்பனை செய்து கொண்டிருந்த பெண் சொல்லவும்.. உணர்ச்சியில்லாத தன் முகத்தைத் திருப்பிக் காட்டினாள் சசிரேகா..

திருமணப் பெண்ணிற்கான அலங்காரம் நடந்து கொண்டிருந்தது.. சசிரேகாவின் விழிகளில் உயிரில்லை.. மனம் அலைகடலாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தது.. இப்படியோர் நிகழ்வைத் தான் எதிர்கொள்ள நேரிடும் என்று அவள் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை...

முதல் நாள் நள்ளிரவிற்கு மேல்.. அவளுடைய அறைக்கதவின் அழைப்பு மணி எதிரொலித்தது.. எழுந்து கதவைத் திறந்தாள்.. ஜானகி பதற்றமான முகத்துடன் நின்றிருந்தாள்..

"சசி...கிளம்பு.. நாம் தோப்பூர் போக வேண்டும்.."

"என்ன விசயம்.. மம்மி...?"

"அவசரம்.. பேச நேரமில்லை.. கிளம்பு.. உன் பீரோ சாவியைக் கொடு.. நான் துணிகளை அடுக்குகிறேன்.. நீ குளிக்கப் போ.."

அதிகாலையில் அவர்கள் கிளம்பிய கார்.. மதிய உணவு வேளையில் தோப்பூருக்குள் நுழைந்து ஜானகியின் பிறந்த வீட்டின் முன்னால் போய் நின்றது...

"இது உங்களுடைய அப்பாவின் வீடு.. இல்லையா மம்மி...?"

அதுவரை அங்கே அதிகம் வந்திராத சசிரேகா.. வினவியபடி காரை விட்டு இறங்கினாள்.. அவளது கேள்விக்கு ஜானகியிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.. ரங்கநாதனின் முகமும் இறுகியிருந்தது..

"வீட்டு வாசலில் பந்தல் போட்டிருக்கே.. இங்கே என்ன விசேசம் மம்மி.."

"இறங்கு சசி..."

"நீங்கள் உங்கள் அப்பாவுக்கு ஒரே பெண்ணாயிற்றே.."

"அதற்கென்ன இப்போது.."

"அப்படியிருக்க நம் வீட்டு வாசலில் பந்தல் போட்டிருக்கிறாங்களே.. ஏன் மம்மி..?"

"அதை உள்ளே போய்ச் சொல்கிறேன்..."

சசிரேகா குழப்பத்துடன் வீட்டைப் பார்த்தாள்.. வாசல் பந்தலில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.. வீடு முழுக்கச் சுத்தமாக.. அழகாக.. விழாச் சூழலுடன் இருந்தது.. ஜானகியின் தாய்வழி உறவுக்காரர்களும்.. ரங்கநாதனின் உறவுக்காரர்களும் வீட்டில் குழுமியிருந்தனர்..

'பூட்டிக் கிடந்த வீடா... இது..?' சசிரேகாவின் மனதில் இனம் புரியாத ஓர் எச்சரிக்கை உணர்வு எழுந்தது.

இந்த வீட்டில் விழாச் சூழல் இருந்தால்.. அது நிச்சயம் அவள் சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும்.. என்று சசிரேகாவின் மனம் கூறியது...

"ஏம்மா ஜானகி.. பெண்ணைப் பெற்ற நீயே இப்படி ஆடி.. அசைஞ்சக்கிட்டு வந்தால்.. எப்படிம்மா..? என்னதான் உன் பெரியப்பா பேரனுக்கே பெண்ணைக் கொடுத்தாலும்.. அம்புட்டுக் காரியத்தையும் அவங்களே.. பார்க்கட்டும்ன்னு விட்டு விட்டு.. நீ காலை ஆட்டிக்கிட்டு உட்கார நினைச்சால்.. அது நல்லவா இருக்கும்...?"

சசிரேகா அதிர்ந்து போய் ஜானகியைப் பார்த்தாள்.. ஜானகியின் விழிகளில் ஓர் அதட்டல் சமிக்ஞை தென்பட்டது..

"என்னங்க.. சசியை மாடி ரூமில் விட்டு விட்டு வாங்க.."

ஜானகி பொறுப்பைக் கணவனிடம் ஒப்படைத்து விட்டு.. தன் உறவினர்களுடன் பேசியபடி நடந்தாள்.. ரங்கநாதனின் முகம் இவ்வளவு கடுமையாகவும்.. கடினமாகவும் இருக்கக்கூடும் என்பதை அன்றுதான் சசிரேகா முதன் முதலில் உணர்ந்தாள்..

"டாடி..."

"பேசாமல் வா..."

ரங்கநாதன் மடமடவென்று மாடியேறினார்.. அறைக் கதவைத் திறந்து அவள் உள்ளே செல்லும்வரை.. காத்திருந்து.. பின் உள்ளே வந்து கதவைப் பூட்டினார்..

"இதெல்லாம் என்ன டாடி...?"

"உனக்குக் கல்யாணம்..."

"யாருடன்...?"

"உன் பெரிய தாத்தாவின் பேரன் ரஞ்சனுடன்.."

"அவனை நான் சரியகப் பார்த்தது கூட இல்லையே.."

"அவன்.. இவனென்று இனியும் பேசாதே..."

"எனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதமில்லை.."

"ஏன்...?"

"ஏன்..? எப்படி.. இப்படி ஒரு ஏனென்ற கேள்வியை என்னிடம் கேட்கிறீங்க..? எனக்குத் தெரியாமல்.. என் சம்மதமில்லாமல்.. எப்படி நீங்கள் என் கல்யாணத்தை முடிவு பண்ணலாம்...?"

"எனக்கு அந்த உரிமை இல்லையா...?"

"ஓ டாட்.. இது என் லைப் சம்பந்தப்பட்ட விசயம்..."

"அதில் எங்களுக்கு அக்கறை இல்லையா...?"

"இல்லையென்று நான் சொல்லவில்லையே.. ஆனால்.. வாழப்போகிறவள் நான்.. எனக்கு என் கல்யாணத்தைத் தீர்மானிக்கும் உரிமை வேண்டாமா...?"

"நீ தீர்மானிக்கும் முடிவுகள் என்றுமே சரியாக இருக்கும் என்று நம்பிக்கை வைத்திருந்தவன் நான்.. என் நம்பிக்கையை நீ குலைத்து விட்டாயே.."

"டாடி.. உங்களுக்கு டேவிட்டைப் பற்றித் தெரிந்து விட்டது.. இல்லையா...?"

"கரெக்ட்டாகக் கண்டுபிடித்து விட்டாய்.. நீ புத்திசாலிதான்.."

"ஓ.. காட்.. அதற்காக.. இப்படி ஒரு காரியத்தை நீங்கள் எனக்குச் செய்வீர்களா...?"

"நாங்கள் அப்படி என்ன செய்துவிட்டோம்..? பெற்ற பெண்ணிற்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்க நினைப்பது எங்கள் தவறா...?"

"டாட்.. நான் கிளம்புகிறேன்..."

"எங்கே...?"

"சென்னைக்கு..."

"நீ போக முடியாது..."

"நான் போவேன்.."

"விடிந்தால் உனக்குக் கல்யாணம்.."

"என் கல்யாணம் டேவிட்டோடுதான் நடக்கும்.."

அறைக்கதவு தட்டப்பட்டது.. திறந்தார்.. ரங்கநாதனைப் பார்த்தபடி உள்ளே வந்து கதவைத் தாழிட்டாள் ஜானகி..

"என்ன சொல்கிறாள்..?"

"சென்னைக்குக் கிளம்பப் போகிறாளாம்..."

"ஓஹோ.. அங்கே போய்.. என்ன செய்வாளாம்..?"

"அந்த டேவிட்டைக் கல்யாணம் பண்ணிக் கொள்வாளாம்.."

"குட்.. நான் பெற்று வளர்த்த பெண்.. நமக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கப் பார்க்கிறாள்.. இதைக்கேட்க என் காது குளிர்கிறது.."

"மம்மி.. நீங்கள் எனக்கு அநியாயம் செய்துவிட்டு.. நான் உங்களுக்கு அநியாயம் செய்வது போல் பேசுகிறீங்களே.. இதுதான் அநியாயங்களிலேயே பெரிய அநியாயம்..."

"நீ என்னிடம் பேசாதே..."

"ஏன்.. நான் என்ன தவறு செய்தேன்..?"

"செய்வதையும் செய்துவிட்டுக் கேள்வியா கேட்கிறாய்...?"

"டேவிட் நல்லவன்.. படித்தவன்.. எனக்கும்.. அவனுக்கும் ஒரே கம்பெனியில்தான் வேலை கிடைத்திருக்கிறது.. எங்களுக்கு உங்கள் சொத்தும்.. சுகமும் வேண்டாம்.. எங்கள் வாழ்க்கையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.. குட்பை.. மாம்.. குட்பை டாட்..."

சசிரேகா கோபத்துடன் அறைக் கதவில் கைவைத்த அதே நொடியில்.. ஜானகி.. தன் கையால் சிறு கத்தியை வைத்துக் கிழித்துக் கொண்டாள்..

"ஜானகி.." ரங்கநாதன் பதறிப் போய் அவளது கையைப் பிடித்துக் கொள்ள.. சசிரேகா ஸ்தம்பித்துப் போய் நின்றாள்..

"மம்மி..."

"ச்சீ.. என்னை அப்படிக் கூப்பிடாதே.. நீங்க என்னை விடுங்க.. இவள் கொடுக்கிற டார்ச்சருக்கு எனக்குச் சாவு தான் நிம்மதியைக் கொடுக்கும்.."

ஜானகியின் கையில் மிக லேசான கீறல் விழுந்திருந்தது.. அதைத் தன் ¡க்குட்டையால் துடைத்து விட்ட ரங்கநாதனின் முகம் வேதனையில் சுழித்திருந்தது.

சசிரேகா பதற்றத்துடன் தாயின் கையைப் பிடிக்க முயல.. ஜானகி தன் கையை உதறினாள்..

"என்னைத் தொடாதே.. ஏங்க, இவளுக்குக் கதவைத் திறந்து விடுங்க.. இவள் போகட்டும்.. என்னை நான் பிறந்த மண்ணிலேயே புதைத்துவிட்டு நீங்களும் உங்கள் வேலையைப் பார்க்க போங்க..."

"நீ போன பின்னால் எனக்கு மட்டும் இந்த உலகத்தில் என்ன வேலை ஜானு.. போவதாக இருந்தால் நாம் இரண்டு பேருமே சேர்ந்து போவோம்.. இனி உனக்கு நானும்.. எனக்கு நீயும் தான் ஆதரவு.. வா.. சாவதாக இருந்தால் சேர்ந்தே சாகலாம்..."

ரங்கநாதன் பெட்டியிலிருந்து தூக்க மாத்திரை பாட்டிலை எடுத்துக் காண்பித்தார்...

"அவளைப் போகச் சொல் ஜானகி.. இனி அவளுக்கும்.. நமக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை.. நாம் சாவோம்.. வலியில்லாமல் நிம்மதியாக உறங்கி விடலாம்.. மீளாத உறக்கம்.. நீ வா.."

சசிரேகா தகப்பனாரின் கையிலிருந்த தூக்க மாத்திரைப் பாட்டிலைப் பிடுங்கப் பார்த்தாள்.. அவர் வெறுப்புடன் அவளது கையைத் தட்டிவிட்டார்..

"டாடி..."

"என்னுடன் பேசாதே..."

"டாட்.. ஐ லவ் டேவிட்.. டாட்.. ப்ளீஸ் டிரை டு அன்டர்ஸ்டான்ட் மீ..."

"ஐ அன்டர்ஸ்டன்ட் யு.. யு ஆர் எ மோஸ்ட் செல்பிஷ் கேர்ள்.."

"யார் நானா...?"

"யெஸ்.. நீயேதான்.. நீ சுயநலம் பிடித்தவள்.. பெற்றவர்கள் கல்யாண ஏற்பாடுகளைச் செய்து ஊரையே கூட்டி.. விடிந்தால் கல்யாணம் என்ற நிலைமையில் நிற்கும்போது.. உன் காதல் பெரிது என்று ஓடப் பார்க்கும் சுயநலப் பிறவி நீ.."

"டாட்.. தயவு செய்து இப்படிப் பேசாதீர்கள்..."

"வேறு எப்படிப் பேசுவது..? போதும் சசி.. எனக்கு அலுத்துவிட்டது.. உன்னை நினைத்துக் கவலைப்பட்டு எங்கள் உயிர்தான் குறைகின்றது.. போதும் இந்த வேதனை.. நீ போய் விடு.."

"போ.. போ.. என்று சொல்கிறீர்களே.. இந்த நிலையில் உங்களை விட்டுவிட்டு நான் எப்படி டாடி போவேன்..?"

"ஹ.. போதும்.. வேசம் போடாதே.. உனக்கு உண்மையிலேயே எங்கள் மேல் பாசம் கிடையாது.. சும்மா பாவலா காட்டாதே.. நிறையப் பார்த்து விட்டோம்.. இனி உன் நடிப்பில் நாங்கள் ஏமாற மாட்டோம்.."

"டாடி.. டேவிட் வேறு மதம்.. இதற்காகவா.. எனக்கு இவ்வளவு கொடிய தண்டனையைக் கொடுக்கிறீர்கள்..?"

"இதோபார்.. நமது கிருஷ்ணன் பிறந்ததும் மாடுகள் மேய்க்கும் யாதவ குலத்தில்.. யேசு பிறந்ததும்.. மாட்டுக் கொட்டிலில்.. தெய்வம் ஒன்றுதான்.. நாம் கும்பிடும் முறைதான் வேறு என்று நினைப்பவன் நான்.. உன் காதலன் வேற்று மதமாக இருப்பதில் எனக்குப் பிரச்னையில்லை..."

"வேறு எதுதான் பிரச்னை...?"

"அதை நான் சொன்னால் நீ நம்பப் போவது இல்லை.."

"நீங்கள் என் காதலை முறிக்கப் பார்க்கறீர்கள்... உங்களுக்கு டேவிட்டைப் பிடிக்கவில்லை..."

"ஆமாம்.. ஆனால் அது அவன் வேறு மதத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக இல்லை..."

"எனக்கு அவனைத்தான் பிடித்திருக்கிறது..."

"அப்படியென்றால் எங்களை நீ மறந்து விடு.. எங்களது இறப்பிற்குப் பின் எங்கள் முகத்தில் கூட நீ விழிக்காதே..."

"டாடி..."

சசிரேகா தரையில் சரிந்து அமர்ந்து அழுதாள்.. அவள் அழுது ஓயும் வரை.. ஜானகியும்.. ரங்கநாதனும் இறுகிய

முகத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தனர்.. அவர்களது இதயங்கள் வலித்தன..

அவர்களுக்குத் தெரியும்.. இது சசிரேகாவிற்கு வேதனையைத் தரக் கூடிய நிகழ்வு என்பது.. ஆனால் அவர்களுக்கு இதை விட்டால் அவளைக் காப்பாற்ற வேறு வழி தெரியவில்லை..

அறுவைச் சிகிச்சை செய்யாமல் நோயாளியைக் காப்பாற்ற முடியாது என்ற நிலையில் அறுவைச் சிகிச்சை செய்து தானே ஆக வேண்டும்..

சசிரேகா அழுது ஓய்ந்தாள்.. தலை நிமிராமல் அமர்ந்து விட்டாள்.. ஜானகி அவளுடன் இருக்க.. ரங்கநாதன்.. உறவினரை வரவேற்க வெளியே சென்றார்..

## 11

அய்யர் மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தார்.. தன் முன்னால் ஹோமத் தீயில் தெரிந்த ஜுவாலையைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரஞ்சன்.. அவன் மனமும் தகித்தது.. கெட்டி மேளம் முழங்க.. தாலியை எடுத்துச் சசிரேகாவின் கழுத்தில் கட்டும் போது கூட அவளை அவன் சரியாகப் பார்க்கவில்லை..

அக்கினியை வலம் வர.. அவளது கையைப் பிடித்த போது.. அவளது கரங்கள் ஜில்லிட்டு இருப்பதை உணர்ந்தான்.. ஆயினும் அதைப்பற்றிய சிந்தனையோ.. அவளது தொடுகையில் ஒரு சிலிர்ப்போ... அவனுக்குள் உருவாகவில்லை...

இயந்திரம் போல்.. இருவரும் பெரியவர்களை வணங்கி எழுந்தார்கள்.. குல தெய்வத்தின் கோவிலுக்குப் போய் வணங்கி நின்றார்கள்.. வீட்டிற்கு வந்து பாலும்.. பழமும் சாப்பிட்டார்கள்.. மதிய விருந்தை உண்டார்கள்.. மாலையில்... ரிசப்சனில் பொம்மை போல் நின்றார்கள்..

இரவில் தனிமையில் விடப்பட்ட போது ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் முகம் திருப்பிக் கொண்டார்கள்..

சசிரேகா கொதிப்பில் இருந்தாள்.. இன்னும் அவன் முகத்தை நிமிர்ந்து அடையாளம் பார்த்துக் கொள்ள அவள் விரும்பவில்லை.. முகச்சுழிப்புடன்.. ஜன்னலை அணுகி.. வெளியே பார்த்துக் கொண்டு அசைவற்று நின்றாள்..

அவன் பின்னாலேயே வருவான்.. தொட முயல்வான்.. பட்டென்று, 'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை..' என்று சொல்லிவிட வேண்டும்.. என்று மனதிற்குள் வார்த்தைகளைக் கோத்துக் கொண்டு நின்றாள்..

ஆனால்... அவளுக்குப் பின்னால்.. அவனது காலடியோசை அவளை நெருங்கவில்லை.. ஆச்சரியம் மேலிட.. சற்றுப் பொறுத்து அவள் திரும்பிப் பார்த்தாள்...

கட்டிலில் தலையணைகளைச் சாய்வாகப் போட்டு அதில் சாய்ந்து அமர்ந்து கால்களை நீட்டி.. கைகளைக் கட்டியவாறு தீவிரமான யோசனையில் இருந்தான் அவன்..

அவன் அவளைப் பார்க்காமல் இருந்த அந்த நேரத்தில் அவள் அப்போதுதான் முதன் முறையாக அவனை நான்றாகப் பார்த்தாள்...

கட்டிலை அடைத்துக் கொண்டிருந்த உயரம்.. நீளமான கால்.. கைகள்.. அடர்ந்த சிகை.. மாநிறம்.. சுழித்த புருவம்.. அடர்ந்த மீசை.. ஆண்மை ததும்பும் தோற்றத்துடன் இருந்தவனைப் பார்த்து அவளது மனதிற்குள் கேள்வி எழுந்தது..

'இது பர்ஸ்ட் நைட் ரூம்.. இங்கே நான் இந்த ஆளுக்குப் புறமுதுகு காட்டி முகம் திருப்பி நிற்பதற்கு.. எனக்கொரு காரணம் உண்டு.. அதே.. தினுசில் இவனும் இருக்கிறானே.. என்ன விசயமாக இருக்கும்...?'

"க்கும்..." அவள் மெதுவாய்க் கனைத்தாள்..

அவனிடம் அசைவு தென்பட்டது.. அவளைத் திரும்பி.. புதிதாய்ப் பார்ப்பவன் போல்.. தலையிலிருந்து கால்வரை

பார்த்தான்.. ஆனால் அது அளவிடும் பார்வையாக இருந்தது.. ஆர்வம் கொண்ட பார்வையாக இருக்கவில்லை..

"நான் உங்களைச் சின்ன வயதில் பார்த்ததுதான்..." அவள் பேச்சை ஆரம்பித்தாள்..

அவன் பதில் சொல்லாமல் தலை அசைத்தான்.. அவளுக்குக் கோபம் வந்தது.. இவன் என்ன பெரிய இவனா..? இவனிடம் கொஞ்சிப் பேச இவள் ஆசைப்பட்டுப் பேச ஆரம்பித்திருக்கிறாள் என்று நினைத்து விட்டானா..?

அவனது மூக்கை உடைத்து விட வேண்டும் என்ற முடிவோடு அவள் தொடர்ந்து பேச ஆரம்பித்தாள்.. பெற்றவர்களின் மீதிருந்த கோபமும்.. காழ்ப்புணர்ச்சியும்.. அவனிடம் பாயத் துடித்தான்..

"நீங்கள் பாவம்.. எத்தனையோ கற்பனைகளோடு இந்தக் கால்யாணத்தைப் பண்ணிக் கொண்டிருப்பீர்கள்.." அவள் பீடிகை போட்ட போது..

"அப்படியெல்லாம் இல்லை.." என்று அவளது மூக்கை உடைத்தான் அவன்..

"வாட்...?"

"யெஸ்.. இதை நீ தெரிந்து கொள்ள வேண்டும்.. எனக்கு இந்தக் கல்யாணம் நடக்கப் போவதே தெரியாது.. நான் வேறு ஒரு பெண்ணைக் காதலித்தேன்.. அவள் பெயர் மணிஷா.. அழகு தேவதை.. வட இந்தியப் பெண்.. என் காதல் வீட்டுக்குத் தெரிந்து விட்டது.. எனக்குத் தெரியாமலே கல்யாண ஏற்பாடைப் பண்ணி விட்டாங்க.. நேற்றுத்தான் நான் படிப்பை முடித்து விட்டு ஊருக்கு வந்தேன்.. வீட்டிற்கு வந்து பார்த்தால்.. விடிந்தால் கல்யாணம் என்கிறார்கள்... என் காதலைச் சொன்னேன்.. குடும்பத்தோடு செத்து விடுவோம் என்று விசப் பாட்டிலைத் தூக்கிக் காண்பித்தார்கள்.. விதியே என்று உன் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டேன்.. அதனால் நீ வேறு எந்தவித எதிர்பார்ப்பும் வைத்துக் கெள்ளாதே.."

சசிரேகாவிற்கு இது அவளுக்குப் பிடிக்காத திருமணம்.. எதிரே இருப்பவனின் முகத்தைக் கூடப் பார்க்கக் கூடாது என்பதெல்லாம் சுத்தமாய் மறந்தே போய் விட்டது...

அவள் 'ஆ' வென்று வாய் பிளந்து அவன் முகத்தையே பார்த்தாள்..

'இவன் என்ன யட்சனா..? நான் சொல்ல நினைப்பதையெல்லாம் இவன் ஒரு வார்த்தை கூட விடாமல் சொல்கிறானே.. இது எப்படி..?'

திகைத்து விழித்த சசிரேகாவின் முகத்தைப் பார்த்த ரஞ்சனுக்குள் இரக்கம் பொங்கியது..

"உன் பெயர் சசிரேகாதானே..."

"ஆமாம்.. உங்கள் பெயர் ரஞ்சன்தானே..."

"ம்ம்.. நான் உன்னைக் காயப்படுத்த வேண்டுமென்று இதைச் சொல்லவில்லை.. என்னால்.. உன்னிடம்.. ம்ம்.. எப்படி நான் இதைச் சொல்வது..? ம்ம்.. இதோ பார் சசிரேகா.. நீயும் படித்தவள்.. என்னைப் புரிந்து கொள்.."

ரஞ்சன்.. தன் நிலையை விளக்க முயன்றான்.. சசிரேகாவிற்கு அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது சுத்தமாக விளங்கவில்லை..

"எதைப் புரிந்து கொள்ளச் சொல்கிறீர்கள்..?"

அவள் புரியாமல் வினவியதை.. அவள் கோபமாக வினவுகிறாள் என்று அவன் நினைத்து விட்டான்..

"எனக்கு உன் கோபம் புரிகிறது..."

'இவன் என்ன மடையனா..? எனக்கு எதற்கு இவன் மேல் கோபம் வரப் போகிறதாம்...'

"ஆனால்.. நான் இதற்குப் பொறுப்பல்ல..."

"நானும்தான் இதற்குப் பொறுப்பில்லை..."

"நீ வயதுப் பெண்..."

'பின்னே.. கிழவியென்றா சொன்னேன்...?'

"அதுவும்.. இந்த மாதிரி சமயத்தில்.. உன் எதிர்பார்ப்புகள் வேறாகத்தான் இருக்கும்.."

அப்போதுதான் அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது சசிரேகாவின் புத்திக்கு உறைத்தது.. அவளது முகம் சிவந்துவிட்டது.. அதைத் தன்னையறியாமல் ஓர் கணம் பார்த்த ரஞ்சன்.. அவசரமாய்ப் பார்வையை விலக்கிக் கொண்டான்...

"ஆனால்.. என் மனம் என்னிடம் இல்லை.. அதனால்.. என்னால்.." அதற்கு மேல் பொறுக்க மாட்டாதவளாய்..

"ப்ளீஸ்.." என்று கையமர்த்தினாள் சசிரேகா..

"நான் உன்னிடம் ப்ளீஸ் போடுகிறேன் சசிரேகா.. என்னால் உனக்கு.. ஒரு கணவன் தர வேண்டிய காதலையும்.. உறவையும் தர முடியாது.."

"நான் கேட்டேனா...?" என்று பல்லைக் கடித்தாள் சசிரேகா..

"சொல்லுங்கள்.. நான் உங்களிடம் கேட்டேனா..? உங்கள் காதலையும்.. இன்னும் ஒன்றையும் எனக்குத் தாங்க என்று உங்களிடம் கேட்டேனா..? விட்டால் பேசிக் கொண்டே போகிறீர்களே.. நீங்கள் என்னவோ மன்மதன் போலவும்.. நான் நீங்கள் விடும் காதல் கணைகளுக்காகக் காத்திருப்பது போலவும்.. என்னமாய் நினைப்பு உங்களுக்கு.. ஹலோ.. இங்கே யாரும்.. உங்கள் அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்கவில்லை.. என் கதையும் உங்கள் கதையைப் போலத்தான்..."

"நீ என்ன சொல்கிறாய்..."

"எனக்குள்ளேயும் ஒரு தோற்றுப் போன காதல் கதை இருக்கிறது என்று சொல்கிறேன்.."

"சசிரேகா..."

"ஆமாம்.. அவன் பெயர் டேவிட்.. நாங்கள் ஒன்றாகப் படித்தோம்.. காதலித்தோம்.. அப்பாம்மா கல்யாணத்திற்குச்

சம்மதிக்க மாட்டார்கள் என்பதால் எங்களுக்கு வேலை கிடைத்ததும் மேரேஜ் பண்ணிக்க நினைத்தோம்.. எங்களுக்கு கேம்பஸ் இன்டர்வியூவில் வேலையும் கிடைத்தது.. பட்.. என் பேரண்ட்ஸ் நேற்றைக்கு என்னை இங்கே கடத்தி வந்து.. தூக்க மாத்திரைகளை விழுங்கி விடுவோமென்று சொல்லிப் பயமுறுத்தி உங்களை என் தலையில் கட்டி வைத்து விட்டார்கள்..."

"என்னது.. உன்னை என் தலையில் கட்டி வைத்து விட்டார்கள்..."

"இல்லை.. உங்களை என் தலையில் கட்டி வைத்து விட்டார்கள்..."

"இதோபார்.. நான் வேறு ஒரு பெண்ணைக் காதலித்தவன்.."

"நானும் அப்படித்தான்..."

"என்னை விசத்தைக் காட்டிப் பணிய வைத்தார்கள்.."

"இங்கே தூக்க மாத்திரைப் பாட்டில்.."

இருவரும் சண்டைக் கோழிகள் போல் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டார்கள்.. காதல் தோல்வியின் சோகம் இருவருக்குமே மறந்து விட்டது..

'உனக்காக நான் ஒன்றும் ஏங்கவில்லை.. எனக்கு இது பிடிக்காத கல்யாணம்...' என்று ஒருவருக்கொருவர் உணர்த்திட அவர்கள் விரும்பினார்கள்..

"எனக்கு மட்டும் இங்கே கல்யாண ஏற்பாடு நடப்பது தெரிந்திருந்தால் நான் இந்த ஊர்ப்பக்கமே வந்திருக்க மாட்டேன்.. ம்ஹூம்.. என் விதி.. உன்னிடம் மாட்டிக் கொண்டேன்.."

"நான் மட்டும் என்ன..? தோப்பூரில் இப்படி ஒரு வில்லங்கம் காத்திருப்பது தெரிந்திருந்தால்.. இந்தத் திசைப்பக்கமே தலை வைத்துப் படுத்திருக்க மாட்டேனே.."

"எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை..."

"எனக்கும் உங்களைப் பிடிக்கவில்லை.."

"ஊருக்குத்தான் நாம் புருசன்.. பொண்டாட்டி.."

"தட்ஸ் குட்.. இந்த மூடிய ரூமிற்குள் நீங்கள் யாரோ.. நான் யாரோதான்.. இதைக் கடைசி வரை மெயின் டெயின் பண்ணுங்கள்.."

"மெயின்டெயின் பண்ணாமல் வேறு என்ன செய்து விடுவேன்னு நீ நினைத்தாய்.. என் மணிஷாவை விட நீ என்ன பேரழகியா..?"

வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லிக் கொண்டிருந்த சசிரேகாவிற்கு ஏனோ.. இதற்கு.. அவனைப் போலவே..

'என் டேவிட்டை விட நீ.. பேரழகனா...?' என்று கேட்க முடியவில்லை...

காலையில் அவன் கட்டியிருந்த தாலிச்சரடு.. இரும்பாய் அவளது கழுத்தில் கனத்தது.. பதில் சொல்லத் துடித்த உதடுகள் பிரிய மறுத்தன...

"நீங்களும் என் கண்ணிற்குப் பேரழகனாய்த் தோன்றவில்லை..." என்று மட்டும் பட்டென்று அவள் பதில் சொன்னாள்..

ரஞ்சனின் முகம் கறுத்தது.. 'எப்படிப் பேசுகிறாள்' என்ற நினைவில் பல்லைக் கடித்தான் அவன்..

"நான் உன்னிடம் என்னைப் பார்.. என் அழகைப் பாருன்னு சொல்லவில்லை.." என்றான் கோபத்துடன்..

"நான் மட்டும் உங்களிடம் அப்படிச் சொன்னேனா..?"

"உன்னைப் பற்றி நான் நினைத்தது கூட இல்லை.."

"நானும்தான்.."

"உன் மூஞ்சி எப்படியிருக்குமென்று நான் தாலிகட்டிய போது கூடப் பார்க்கத் தோன்றவில்லை.."

"எனக்கும்தான்..."

"உன்னோடு.. வேறு வழியில்லாமல்தான் இந்த ரூமிற்குள் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருக்கிறேன்.."

"நானும்தான்..."

"விட்டால் பிய்த்துக் கொண்டு எங்கேயாவது ஓடி விடத்தான் எனக்குத் தோன்றுகிறது..."

"எனக்கும்தான்..."

அவ்வளவுதான். ரஞ்சனுக்குக் கோபம் சுள்ளென்று தலைக்கு ஏறியது.. இவள் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்.. விட்டால் கூடக் கூடப் பேசிக் கொண்டே இருக்கிறாளே.. விடியும் வரை பேசினாலும் சளைக்காமல் பதில் சொல்வாள் போல இருக்கிறதே...

அவன் எரிச்சலுடன் அவளை முறைத்தான்..

12

"இதோ பார்.. எங்கள் குடும்பத்திற்கு என்று ஓர் மதிப்பும்.. மரியாதையும்.. கௌரவமும் இருக்கிறது.."

"எங்கள் குடும்பத்திற்கும் இவை இருக்கின்றன.."

"ஓஹோ.. உனக்குச் சுயமாய் எதையும் யோசிக்கும் திறன் கிடையாதா..? எல்லாமே ஈயடித்தான் காபிதானா..? இப்படித்தான் இன்ஜினியரிங் படித்து முடித்தாயா...?"

சசிரேகா கோபத்துடன் அவனை முறைத்தாள்..

"உங்களைக் காபியடிக்கும் அளவிற்கு நீங்கள் என்ன உயர்த்தி...?"

"நிச்சயம் உன்னை விடத் தாழ்வில்லை.."

"நான் ஒன்றும் உங்களை மட்டம் தட்டவில்லையே.."

"நான் மட்டம் தட்டினேனா...?"

"பின்னே..? இல்லையா...?"

"எப்போது..."

"இப்போதுதான்..."

"எல்லாவற்றிலும் என்னுடன் கூடக் கூடப் பேசுவது சரி.. அதற்காக ஓடிப் போய் விடுவேனென்று நான் சொன்னால்.. அதையே நீயும் திருப்பிச் சொல்லாமா..?"

சசிரேகாவின் முகம் கலங்கிச் சிவந்தது.. கழுத்தில் கிடந்த தாலிக் கயிறு இன்னும் அதிகமாக உறுத்தியது..

"நீங்கள் மட்டும்.. அப்படிச் சொல்லலாமா...?" என்று வாய்க்குள் முணுமுணுத்தாள்..

"நான் சொன்னால்.. நீயும் சொல்லி விடுவாயா...?"

"ஆணுக்கு ஒரு நீதி.. பெண்ணுக்கு ஒரு நீதியா..?"

"ஓ.. நீ சென்னையில் பிறந்து வளர்ந்த செந்தமிழ்ப் பெண்ணாச்சே.. சமநீதிதான் கேட்பாய்.."

"ஷட் அப்.. கொஞ்ச நேரத்திற்கு முன்னால்.. என் மணிஷாவை விட நீ பேரழகியான்னு கேட்டது யார்..? நீங்கள்தானே..."

"அதற்கும் அம்மையார் பதில் சொன்னீர்களே.."

"என்ன பதில் சொன்னேன்..? நீங்கள் பேரழகனா என்ற உண்மையைத்தானே கேட்டேன்.. யாருடனும் ஒப்பிட்டுப் பேசவில்லையே..."

ரஞ்சன் சட்டென்று அவள் முகத்தைப் பார்த்தான்.. அவள் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்..

காலையில் தாலி கட்டிய மனைவியை.. அப்போது தான் முதன் முதலில் ஊன்றிப் பார்த்தான் அவன்..

கொடி போன்ற உடல் மெலிதாய்.. உணர்ச்சிப் பெருக்கில் நடுங்கிக் கொண்டிருந்தது.. அழகான முகம் கலங்கிச் சிவந்திருந்தது.. நீள் வடிவக் கண்களில் கண்ணீர்த் துளிகள் அரும்பு கட்டியிருந்தன.. காலையில் அவன் கட்டிய

தாலிச்சரடு.. கனமான முடிச்சுடன் அவள் கழுத்தில் ஒளிர்ந்தது..

'இவள்தான்.. நீ தொட்டுத் தாலி கட்டிய உன் மனaவி...'யென்று அறிவித்துக் கொண்டிருந்தது..

அவன் மனம் ஏனோ.. லேசாகியது.. முதல் நாள் மாலையில் இருந்து அவன் அனுபவித்த மனப் பாரம் குறைவதைப் போல் அவன் உணர்ந்தான்.. முகம் மென்மையானது..

"ரேகா.." என்று மெதுவான குரலில் அவன் அழைத்தான்..

அவனது குரலின் மாறுபாட்டை உணர்ந்து அவள் விழிகளில் வினாவுடன் தலை நிமிர்ந்தாள்..

"என் பெயர் சசிரேகா.."

"அதற்கென்ன..."

"ஷார்ட்டாய்க் கூப்பிடுவதானால்.. எல்லோரும் 'சசி' யென்றுதான் கூப்பிடுவார்கள்.."

"ஸோ.. வாட்...?"

"நீங்களும் அப்படியே கூப்பிடுங்கள்.."

"ச்சு.. இதோ பார்.. எனக்கு 'ரேகா'ன்னு தான் கூப்பிட வருகிறது.. சும்மா அப்படிக் கூப்பிடு.. இப்படிக் கூப்பிடுன்னு ஆர்டர் போடாதே..."

அவள் கோபத்துடன் மௌனமானாள்.. அவன் மீண்டும் அழைத்தான்.

"ரேகா..."

"ம்ம்..."

"தெரிந்தோ.. தெரியாமலோ.. நாம் இருவரும் ஒரே வகையில் காயம்பட்டு.. ஒரே படகில்.. இந்த வாழ்க்கை நதியைக் கடக்கப் பயணம் செய்ய ஆரம்பித்திருக்கிறோம்.."

"ம்ம்.. அதற்கு என்ன.. இப்போது...?"

"நம் இருவரின் வேதனையும் ஒன்றுதான்..."

"ம்ம்..."

"நாம் ஒருவரின் காயத்திற்கு மற்றவர் மருந்தாக இருக்க முடியாமல் போனாலும்.. நம்மை நாமே.. மேலே.. மேலே.. காயப்படுத்திக் கொள்ள வேண்டாமே..."

சசிரேகா அவன் முகத்தைப் பார்த்தாள்.. அதில் நட்பு தெரிந்தது.. பரிவு தெரிந்தது.. அந்த நிமிடம்.. தன் துன்பத்தை உணர்ந்து கொண்ட ஒரு தோழமை கிடைத்த உணர்வை.. உணர்ந்தாள் சசிரேகா..

"ம்ம்..."

"நீயும் சரி.. நானும் சரி.. இந்தப் பந்தத்திலிருந்து விடுபட முடியாது..."

"ம்ம்..."

"உன்னால் என்னை உன் காதல் கணவனாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும்..."

"நீங்களும் அப்படித்தானே..."

"ஓ.. கே.. ஓகே.. நம் இருவராலும் இயல்பாய் வாழ முடியாது.. இப்போது நான் சரியாகச் சொல்லி விட்டேனா..?"

"ம்ம்..."

"பட்.. நாம்.. நம் வாழ்வில் ஒருவரையொருவர் தவிர்த்தும் வாழ முடியாது.. இல்லையா...?"

"ம்ம்..."

"ஒன்றை நீ தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் ரேகா.."

"எதை...?"

"நான் உன் எதிரியில்லை..."

"நண்பனுமில்லையே..."

"ஸோ வாட்..? எதிரியாக இல்லாமலிருப்பதே பெரிய விசயம்தானே.. இந்த கிளாஸ்மேட்.. காலேஜ்மேட்.. ரூம்

மேட்.. என்றெல்லாம் சொல்வது போல்.. என்னை உன் ஹவுஸ்மேட் அன்ட் லைப்மேட் என்று நீ நினைத்துக் கொள்ளலாமே..."

சசிரேகா அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.. சோர்வுடன் தலை அசைத்தாள்..

"தேங்க்ஸ்..."

"எதற்காக தேங்க்ஸ் சொல்கிறாய்...?"

"நான் ஓய்ந்து போயிருக்கிறேன்.. இந்த இரண்டு நாள் நிகழ்வுகள் என் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கின்றன.. எங்கே.. உங்களிடமும் நான் போராட வேண்டியிருக்குமோ என்று பயந்து போயிருந்தேன்.."

"என்னிடம் ஏன் நீ போராட வேண்டும்...?"

"நான் டேவிட்டைக் காதலித்தது உண்மை.. அதை மறைத்து வாழ எனக்கு விருப்பமில்லை.. நீங்களும் காதல் தோல்வியில் இருப்பதால் என் உணர்வுகளை மதித்து.. தள்ளி நிற்கிறீர்கள்.. இதுவே வேறு ஒருவராக இருந்திருந்தால் என் கதி என்னவாகியிருக்கும்...?"

சசிரேகாவின் கேள்வியில் இருந்த பதட்டம் ரஞ்சனுக்குப் புரிந்தது.. இது கொடுமைதான்.. காலம்.. காலமாய்ப் பெண்களின் காதலை ஒரு பொருட்டாக நினைக்காமல்.. அவளை வேறு ஒரு மாப்பிள்ளையின் தலையில் கட்டிவிடும் பெற்றவர்கள்.. திருமணத்திற்குப் பிறகு.. அந்தப் பெண் அனுபவிக்கப் போகும் மன ரணத்தை ஏன் உணராமல் போகிறார்கள்....?

கடந்த காலக் காதலைக் கணவன் அறிந்தால்.. அவன் அந்தப் பெண்ணிற்குத் 'துரோகி' யென்ற பட்டத்தைக் கொடுப்பான்.. கடந்த காலக் காதலன்.. எங்கேனும் அவளைப் பார்க்க நேர்ந்தால் அதே 'துரோகி' பட்டத்தை அவனும் கொடுப்பான்..

இப்படி.. நேர்மையாக இருந்தவள்... துரோகியென்று தூற்றப்படுவதற்கு.. யார் பொறுப்பு...?

"ஓகே ரேகா.. நீ தூங்கு..."

"நீங்கள்...?"

"நான் தரையில் படுத்துக் கொள்வேன்..."

"வேண்டாம்.. இது.. பெரிய கட்டில்.. இரண்டு பேருக்குத் தாராளமாய் இடமிருக்கிறது..."

"நீ அன் ஈஸியாய் ஃபீல் பண்ணுவாயே..."

"பண்ணுவேன்தான்.. ஆனால் இது.. இன்று ஒரு நாளோடு முடிகிற விசயமில்லையே.. கடைசிக் காலம் வரை வாழ்ந்தாக வேண்டுமே.. நான் பழகிக் கொள்கிறேன்.. நீங்கள் கட்டிலிலேயே படுத்து உறங்குங்கள்..."

சசிரேகா.. கட்டிலின் ஒரு பக்கம்.. முதுகைத் திருப்பிப் படுத்துக் கண் மூடிக் கொண்டாள்.. ரஞ்சன் கட்டிலின் மறுபக்கம் படுத்துக் கொண்டு அவளைப் பார்த்துக் கேட்டான்..

"விளக்கை அணைக்கட்டுமா...?"

"ம்ம்..."

அறையில் இருள் சூழ்ந்தது.. மெல்லிய விடி விளக்கின் ஒளி அறையில் பரவியிருக்க.. காலையில் கணவன்.. மனைவியாக வாழ்க்கைப் பந்தத்தில் இணைந்த அந்த இருவரும் கண்ணுறங்க ஆரம்பித்தார்கள்..

அதிகாலையில் அறைக் கதவு தட்டப்பட்டதும்.. ரஞ்சன் விழித்துக் கொண்டான்.. அறையில் பகல் வெளிச்சம் பரவியிருந்தது.. சசிரேகாவைப் பார்த்தான்... அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.. எழுந்து சென்று கதவைத் திறந்தான்...

கோதை நாச்சியார் காபித் தம்பளர்களை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.. ரஞ்சன் காபியை வாங்கக் கைநீட்டினான்.. அன்னையின் பார்வை மகனின் முகத்தில் ஆராய்ச்சியாய்ப் படிந்தது.. அவள் எதிர்பார்த்தது

அவனது முகத்தில் தென்படாததால் அவளது மனம் வேதனை கொண்டது..

"நீயேன்டா கதவைத் திறந்தாய்...? சசி எங்கே...?"

"அவள் பாவம்... அயர்ந்து தூங்குகிறாள்.. நீங்கள் என்னிடம் கொடுங்கம்மா.. நான் எழுப்பிக் கொடுத்துக் கொள்கிறேன்..."

'இது போதுமே...' கோதையின் மனம் மகிழ்ச்சி கொண்டது....

'இந்த அனுசரணை.. அவள் என் பொறுப்பு என்ற நினைவு இருந்தால் போதுமே...' கோதை நிம்மதியுடன் படி இறங்கினாள்...

ரஞ்சன்.. சசிரேகாவின் அருகில் அமர்ந்தான்.. எப்படி எழுப்புவது என்று புரியாமல் சுற்று முற்றும் பார்த்தான்.. டவல் இருந்தது.. எடுத்து மெதுவாய் அவள் முகத்தில் தட்டினான்.. அவள் விழித்துக் கொண்டாள்.. அருகில் அமர்ந்து டவலால் தட்டி எழுப்பிக் கொண்டிருந்த ரஞ்சனைக் கண்டதும்.. அவசரமாய் எழுந்து அமர்ந்தாள்..

"ஸாரி.. ரொம்ப நேரம் தூங்கிவிட்டேனா...?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.. காபி கொடுக்கத்தான் எழுப்பினேன்..."

"தேங்க்.. யு..."

அவள் காபியை வாங்கிப் பருக ஆரம்பித்தாள்.. ரஞ்சன் யோசனையுடன்.. ஜன்னலருகே சென்று நின்றான்..

"ரேகா.. எனக்கு கேம்பஸ் இன்டர்வியுவில் வேலை கிடைத்திருக்கிறது.."

"எங்கே...?"

"பெங்களூரில்.."

"எந்தக் கம்பெனியில்...?"

"மல்ட்டி இன்டர் நேஷனல் கம்பெனி... அது.. மோனா சாப்ட்வேர் சொலுசன்..."

ரஞ்சன் கம்பெனியின் பெயரைச் சொன்னதும் சசிரேகா மௌனமாக இருந்தாள்..

"ஏன் பேசாமல் இருக்கிறாய்...?"

"எனக்கும் பெங்களூரில் இருக்கும் அதே கம்பெனியில் வேலை கிடைத்திருக்கிறது.."

"ஈஸிட்.. இது சந்தோசமான விசயம்தானே.. இதற்கு ஏன் மௌனமாகி விட்டாய்..."

சசிரேகா சங்கடத்துடனும்.. ஒரு விதச் சோகத்துடனும் ரஞ்சனை நிமிர்ந்து பார்த்தாள்.. அவள் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று ரஞ்சனைத் தாக்கியது..

'இவளுக்குள் இத்தனை சோகமா..?' அவன் கேள்வியுடன் அவளைப் பார்த்தான்.. சசிரேகா மெதுவான குரலில் கூறினாள்...

"டேவிட்டிற்கும்.. அங்குதான் வேலை கிடைத்திருக்கிறது..."

ரஞ்சனுக்கு அவளது சோகமும்.. வேதனையும் புரிந்தன.. பின் அவளே தயக்கத்துடன் அவனைக் கேட்டாள்..

"அது.. அந்தப் பெண் மணிஷா..."

"என் கிளாஸ் மேட்தான்..."

"அவளுக்கு கேம்பஸ் இன்டர்வியுவில் வேலை கிடைக்கவில்லையா...?"

"கிடைத்திருக்கிறது.. பெங்களூர்தான்.. ஆனால் அது வேறு ஒரு கம்பெனி.."

"ஓ..."

இருவருமே.. மேலே என்ன பேசுவது என்று தெரியாமல் மௌனமானார்கள்.. அது ஒரு வகையான சோகத்தை அவர்களுக்குள் தந்தது...

'என்ன மாதிரியான கல்யாண பந்தம் இது...' ரஞ்சன் வாழ்க்கை அறிமுகப்படுத்தியிருக்கும்.. விசித்திர பந்தத்தை நினைத்துப் பெருமூச்சு விட்டான்..

13

"நாங்க போய் விட்டு வருகிறோம் பெரியப்பா...."

"பத்திரமா போய் வாம்மா..."

"சசியையும்.. மாப்பிள்ளையயும் சீக்கிரமாகவே மறுவீட்டு விருந்திற்கு அனுப்பி வையுங்க பெரியப்பா..."

"ஒரு வாரம் என் பேத்தி இங்கே தங்கிப் பழகட்டும்.. அதன் பின்னால் உன் மருமகனைத் தங்கமாய் அனுப்பி வைக்கிறேன்..."

ஜானகியும்.. ரங்கநாதனும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்கள்.. மகளை அதுவரை பிரிந்திராதவர்களுக்கு.. பிரிவுத்துயர் அதிகமாக இருந்தது.. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சிரித்த முகமாகவே கிளம்பினார்கள்...

சசிரேகா பெற்றவர்களிடம் முகம் கொடுத்துப் பேச வில்லை.. 'நீங்கள் கேட்டதைச் செய்து விட்டேன்.. இனி உங்களுக்கும்.. எனக்கும் என்ன சம்பந்தம்...?' என்பது போல் விட்டேற்றியாய் இருந்தாள்...

அதைச் சோமய்யன் நன்கு புரிந்து கொண்டு விட்டார்.. அதன் காரணமாகவே.. அவர் உடனடியாகப் பெண்ணையும்.. மாப்பிள்ளையையும்.. மறுவீட்டு விருந்திற்கு அனுப்பவில்லை...

'என் பேத்தி.. எங்களுடன் இருந்து பழகட்டும்...' என்று கூறி அவர்களை அங்கே நிறுத்திக் கொண்டார்..

ஆணின் வன்மத்தை விட.. பெண் மனம் கொள்ளும் வன்மம் தீவிரம் வாய்ந்தது.. அதனாலேயே.. ரஞ்சனின்

முகச் சுழிப்பை அவன் வீட்டாரால் தாங்கிக் கொள்ள முடிந்தது.. சசிரேகாவின் புறக்கணிப்பை ஜானகியாலும்... ரங்கநாதனாலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

"இப்ப என்ன ஆச்சு ஜானகி.. கழுத்தில் விழுந்திருக்கிற மூன்று முடிச்சு சொந்தத்தை அவள் உணரட்டும்.. அதுக்கு கொஞ்ச நாள் அவள் சென்னைக்கு வராமல் இங்கே இருப்பதுதான் நல்லது.. நீ அழுகாமல் போ.. நான் பார்த்துக் கொள்கிறேன்..."

பெரியப்பாவின் வார்த்தைகளைப் பற்றுமானமாய்ப் பற்றிக் கொண்டு ஜானகி கிளம்பிப் போய் விட்டாள்...

பிறந்ததில் இருந்து கிராமத்துப் பக்கம் வந்திராத சசிரேகா.. புரியாத கிராமத்துச் சூழலில் ஒன்ற முடியாமல் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தாள்.. ஆனால் ராகினி அவளை அப்படித் தனித்திருக்க விடவில்லை...

"அண்ணி.. வாங்க.. தென்னந் தோப்புக்குப் போகலாம்..."

"அங்கே என்ன இருக்கு...?"

"அதை அங்கே போய்ப் பார்த்தால்தானே தெரியும்..."

ராகினி அழைத்துப் போய் காட்டிய போது... சசிரேகா வின் கண்கள் அந்தப் பசுமையை ஆவலுடன் அள்ளிப் பருகின...

அகன்ற நீர் நிரம்பும் சிமிண்ட் தொட்டி.. அதில் அருவி போல மேலேயிருந்து பொழியும் நீர்.. தொட்டியின் வாயில் வழி.. வழிந்து செல்லும் வாய்க்கால் நீர்.. வரப்புகளின் இடையே தலையை ஆட்டும் நெற்கதிர்கள்.. அதன் நடு நாயகமாய் இருக்கும்.. நீர்த்தொட்டியைச் சுற்றியிருக்கும் தென்னந்தோப்பு.. அதில் கூடு கட்டியிருக்கும்... குருவிகள்.. மைனாக்கள்.. புறாக்கள்..

"ஹை.. இவ்வளவு அழகாய் ஒரு இடமா.. ராகினி.. நான் இதை எதிர்பார்க்கவே இல்லை..."

"நீங்கள் இப்படிப் பச்சைப் பசேலென்ற தோட்டம்.. துரவையெல்லாம் பார்த்திருக்க மாட்டீங்கன்னுதான்..

நான் உங்களை இங்கே கூப்பிட்டுக் கொண்டு வந்தேன்.."

ராகினி.. தோப்பிற்குள் சசிரேகாவை அழைத்துக் கொண்டு போய்ச் சுற்றிக் காண்பித்தாள்.. அங்கிருந்த ஒவ்வொரு மரத்திற்கும் ஒவ்வொரு கதையைச் சொன்னாள்..

"இந்த மாமரத்தை.. அண்ணன்தான் நட்டு வைத்தான்.. இது பெரிதாகும் வரை.. தினமும் இங்கே வந்து இதற்குத் தண்ணீர் ஊற்றுவான்..."

'இது ரஞ்சன் வைத்த செடியா...?'

வளர்ந்து நின்ற அந்த மாமரத்தை அண்ணாந்து பார்த்தாள் சசிரேகா.. அவனைப் போலவே.. ஆஜானுபாகு வாய்க் கிளை விரித்து அவளைப் பார்த்தது அந்த மாமரம்..

"இந்தக் கொய்யா மரத்தில் ஊஞ்சல் கட்டி நாங்கள் விளையாடுவோம் அண்ணி..."

"நாங்கள்ன்னா...?"

"நானும் அண்ணாவும்..."

"ஓ..."

"ஒரு முறை.. நாங்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த போது.. அண்ணன்... அவசரமாய்க் குதித்து இறங்கினான்.. அவன் கனம் தாங்காமல் கயிறு அறுந்து விட்டது.."

"அடடா.. அப்புறம்...?"

"அப்புறம்.. சப்புறம்தான்.. நான் தலைகுப்புறக் கீழே விழுந்து விட்டேன்.. அண்ணன்தான் என்னைக் கீழே தள்ளிவிட்டு விட்டான்னு ரகளை பண்ணினேன்.. ஒரு வாரம் அவனுடன் பேசவில்லை..."

கொய்யா மரத்தின் கிளைகளைத் தடவியபடி.. ராகினி.. மலரும் நினைவுகளைக் கொட்டிக் கொண்டிருந்தாள்..

கூட விளையாட உடன்பிறப்பில்லாத ஒற்றைப் பெண்ணாக வளர்ந்த சசிரேகா அவற்றை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள்...

"இந்த மரத்தில் ஒரு தடவை என் காற்றாடி மாட்டிக் கொண்டது.. அண்ணன் எடுத்துத் தர மேலே ஏறினான்.. கிளை முறிந்து விட்டது...."

"ஐயையோ.. கீழே விழுந்து விட்டாரா...?"

"அவனா கீழே விழுவான்..? அவன்தான் ஜேம்ஸ் பாண்டாச்சே.. அடிக்கிளையில் விழுந்தவன்... அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு.. திரும்பவும் மரத்தில் ஏறிவிட்டான்.."

"ம்ஹும்.. உன் அண்ணனின் பெருமையைச் சொல்வதென்றால் உனக்கு அலுக்கவே.. அலுக்காது.. இல்லையா ராகினி..."

"அதுசரி.. நான் சொல்லச் சொல்ல.. உங்கள் புருசனின் பெருமையை வாயைப் பிளந்து கேட்டு விட்டு.. இப்போது என்னைச் சொல்கிறீர்களா..? இது நல்ல கதை அண்ணி.."

ராகினி குலுங்கிச் சிரித்தாள்.. கள்ளம்.. கபடில்லாமல் அவள் சிரிப்பதைக் கண்ட சசிரேகாவின் மனம் குறுகுறுத்தது...

'இவளைப் போலவே கள்ளம் இல்லாத உள்ளம் எனக்கிருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..'

"என்ன அண்ணி.. அண்ணனின் நினைவு வந்து விட்டதா...?"

ராகினிக்கு மட்டும் தன் உண்மையான மனநிலை தெரிந்தால் என்ன ஆகும் என்று ஓர் கணம் நினைத்தாள் சசிரேகா...

அதே கணத்தில்.. ராகினி நினைப்பது போல.. தான் மனம் ஒருமித்து ரஞ்சனுடன் வாழ்கிறவளாக இருந்தால் எப்படியிருக்கும் என்ற நினைவும் அவள் மனதில் சேர்ந்தே உதித்தது...

ஏன் அப்படி ஒரு நினைவு தன் மனதில் உதித்தது என்று சசிரேகாவிற்குப் புரியவில்லை.. ரஞ்சனின் மேல் நிச்சயமாய் அவளுக்குக் காதல் இல்லை.. அது அவளுக்கு நன்றாகத் தெரியும்.. டேவிட்டின் நினைவு.. இந்த நாள்களில் வராமல் மறைந்து போன மாயமென்ன.. என்பதுதான் அவளுக்குப் பிடிபடவில்லை...

டேவிட்டின் நினைவும் மனதில் எழவில்லை.. ரஞ்சனின் மேல் எந்த வித ஈர்ப்பும் அவளுக்குள் உருவாகி விடவில்லை.. இந்த மனநிலையில்.. ரஞ்சனின் மனைவியாகத் தான் வாழ்ந்தால் எப்படியிருக்கும் என்ற சிந்தனையும் அவளுக்குள் உதயமானதுதான் மனித மனத்தின் விசித்திரம்...

சசிரேகா சிந்தனையுடன் நடந்தவள்.. கால் தவறித் தண்ணீர்த் தொட்டிக்குள் 'தொபுகடீர்...' என்று விழுந்தாள்.. விழுந்த வேகத்தில் தண்ணீரில் முழுவதுமாக நனைந்து.. எழுந்து நின்று.. முகத்தில் இருந்த தண்ணீரை வழித்து விட்டுக் கொண்டு ராகினியைப் பார்த்தாள்...

"அண்ணி.. நிஜத்தைச் சொல்லுங்க.. நீங்க வேண்டுமென்றேதானே தண்ணிக்குள் விழுந்தீங்க..." என்று வினவியபடி.. பாவாடை தாவணியில் இருந்த ராகினியும்.. தொட்டிக்குள் குதித்தாள்..

"ஹேய்... ராகினி..." சசி ரேகா சிரித்தபடி.. தள்ளி நின்றாள்.. தண்ணீர்த் தொட்டிக்குள்.. அவளது இடுப்பளவு ஆழம் இருந்தது..

"குற்றால அருவியில...

குளிப்பது போல் இருக்குதா..."

ராகினி பாடியபடி தண்ணீர்க் குழாயில் வேகமாய்க் கொட்டிக் கொண்டிருந்த நீரில்.. பின்னலை அவிழ்த்து.. தலைமுடியை விரிய விட்டு.. தலையைக் காட்டினாள்..

அவளைக் கண்ட சசிரேகாவிற்கும்.. ஆசை வந்து விட்டது.. அவளுக்கு ராகினியைப் போல் நீண்ட முடியில்லை.. குட்டை முடியை.. கிராமத்தில் இருக்கிறோம் என்பதற்காக..

இரண்டு பின்னலைப் போட்டு.. ரப்பர் பேண்டில் இறுக்கியிருந்தாள்...

அதை அவிழ்த்து விட்டு நடு முதுகு வரை விரிந்திருந்த கூந்தலுடன்... குழாய் நீரில் தலையைக் காட்டினாள்.. பொங்கி வந்த நுரைநீரில் நனைந்தபடி நேரம் போவது தெரியாமல் அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது...

"ஏய்.. வாலு.. இது உன் வேலைதானா...?" என்ற ரஞ்சனின் குரல் கேட்டது..

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. புல்லட்டை நிறுத்தி விட்டு.. ரஞ்சன் இறங்கி வந்து கொண்டிருந்தான்..

"ஏன்.. நான் என்ன வேலை செய்து விட்டேனாம்..?" ராகினி தண்ணீருக்குள் கைகளால் அளைந்தபடி கேட்டாள்..

"உன் அண்ணிக்கு.. இப்படி மோட்டார் தண்ணியில் குளித்துப் பழக்கமிருக்காதுன்னு உனக்குத் தெரிய வேண்டாமா...?"

"நீ அதைச் சொல்ல வேண்டாமா...?"

"என்னிடம் சொல்லி விட்டா.. நீ அவளைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தாய்.. சொல்லாமல் கடத்தி வந்து விட்டாயே..."

"ஓ.. இதுக்குத்தான் ஐயா.. இத்தனை பில்ட் அப் கொடுக்கிறாராக்கும்.. அண்ணி.. உங்க புருஷன்.. ஒரு நிமிசம் கூட உங்களை விட்டுப் பிரிந்திருக்க மாட்டான் போல இருக்கு.. இப்படி முந்தானையைப் பிடிச்சுக்கிட்டு தோப்பு வரைக்கும் வந்து விட்டானே.. முந்தானை முடிச்சைப் பலமாய்ப் போட்டு விட்டிங்க போல.. சூப்பர் அண்ணி..."

"ஏய்.. வாயாடி.. முதலில் மேலே ஏறு..."

"நீ கை கொடு.."

கரையேறிய ராகினி.. மூச்சு வாங்கினாள்.. ஈரப் பாவாடை தாவணியை.. நீர் வாடியப் பிழிந்து கொண்டாள்..

"அண்ணி... வாங்க போகலாம்.." என்று குரல் வேறு கொடுத்தாள். சசிரோகவிற்கு எப்படி ஏறுவது என்று தெரியவில்லை..

"அட.. மட சாம்பிராணி அண்ணா.. இப்படி ஒரு மக்காய் இருக்கிறாயே.. தங்கையைக் கரையேற்றி விட்டு பாச மலர்ன்னு பெயர் வாங்கினால் போதுமா...? கட்டின பொண்டாட்டிக்குக் கை கொடுத்துக் காதல் மன்னன்னு பெயர் வாங்க வேண்டாமா..? போ.. போய் அண்ணிக்குக் கை கொடுத்துத் தூக்கி விடு..."

வேறு வழியில்லாமல்.. சசிரேகாவிடம் சென்று கை நீட்டினான் ரஞ்சன்.. அவள் குழம்பித் தவித்தாள்..

அவன் நீட்டிய கையைப் பற்றிக் கொண்டு கரையேறவும் அவளுக்குத் தயக்கமாய் இருந்தது.. அதே சமயம் தானாய் மேலே ஏறவும் அவளுக்கு வழி தெரியவில்லை...

"அண்ணி.. இதோ.. உங்கள் பக்கம் கை கொடுக்கும் கை வந்திருக்கிறது.. விட்டு விடாதீங்க.. அப்படியே.. கப்புன்னு பிடிச்சுக்கிட்டு கரையேறி விடுங்க..." ராகினி.. கலகலவென்று நகைத்தாள்...

வேறு வழியின்றி.. அவன் நீட்டிய கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள் சசிரேகா.. அவனது வலிமையான.. வெதுவெதுப்பான கரத்தின் தொடுகை உணர்வு முதன் முதலாய் அவளைத் தாக்கியது.. அவளது உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் அவள் உணர்ந்தாள்... அவளது கைவிரல்கள் நடுங்க ஆரம்பித்தன..

தன் கையைப் பற்றியிருந்த.. அவளது மெல்லிய தளிர் விரல்களின் நடுக்கத்தை உணர்ந்த ரஞ்சன்.. அவளது விரல்கள் தன் கையிலிருந்து நழுவி விடாமலிருக்கும் பொருட்டு.. இறுக்கி அவற்றைப் பற்றிக் கொண்டான்..

முதன் முதலாய் அவன் உணர்ந்த பெண்மையின் நாணம் உணர்த்திய நடுக்கத்தை அனுபவித்தவனின் உடலில் இனம் புரியாத கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது..

மணிஷா அவனை நாணமின்றித் தொடுவாள்.. அவள் கண்களில் ஓர் வேட்கை இருக்கும்...

ஆனால் சசிரேகாவோ... அவனது சிறு தொடுகையில் நடுங்கிப் போனாள்.. அவளது கண்களில் நாணத்தின் தவிப்பு தெரிந்தது..

அவளைத் தாங்கிப் பிடித்து அவன் தூக்கி விட்ட போது.. அவள் கால் வழுக்கி.. மீண்டும் தொட்டிக்குள் விழப்போனாள்...

சட்டென்று கரம் நீட்டி அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான் ரஞ்சன்.. அந்தக் காலத்துக் கதாநாயகன்.. கதாநாயகியைக் கைகளை வளைத்து அணைத்துக் கொள்வதைப் போல அந்தக் காட்சி இருக்கவும் ராகினி வாய் மூடிப் பொங்கிச் சிரித்தாள்..

"இதை வீட்டுக்குப் போனதும்.. பாட்டிகிட்ட கட்டாயம் சொல்லணும்..." ரஞ்சனின் கைகளில் இருந்து விலகிய சசிரேகா லஜ்ஜையுடன் நின்றாள்...

## 15

உண்மையிலேயே பழைய திரைப்படத்தின் கதாநாயகி போலவே தன்னையறியாமல் விழுந்து விடப் போகிறோமென்ற பதட்டத்துடன் ரஞ்சனின் தோள் மேல் ஒரு கையைப் போட்டு.. சாய்ந்து நின்றிருந்தாள் சசிரேகா.. ராகினி நகைத்ததும் அவசரமாய் விலகி நின்றாள்... அவளை வெட்கம் சூழ்ந்து கொண்டது...

"ஐ ஆம் ஸாரி..." என்று ரஞ்சனைப் பார்த்துக் கூறினாள்...

ராகினி ஆச்சரியமாய்ப் பார்ப்பதை உணர்ந்த ரஞ்சன்...

"நமக்குள் என்ன ஸாரி வேண்டிக்கிடக்கு.. நான்தான் உன்னைத் தூக்கி விட்டுக் கொண்டிருக்கிறேனே..

உன்னைத் திரும்பவும் தண்ணீருக்குள் விழ விட்டு விடுவேனா..." என்று பரிவுடன் பேசினான்..

அவனது கண்களைப் பார்த்த சசிரேகாவுக்கு.. அவனது பார்வையின் பொருள் புரிந்து விட்டது.. ராகினியின் முன்னால் அவன் நடிப்பதை உணர்ந்து கொண்டவள்.. தானும் தன் பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்ய ஆரம்பித்தாள்..

"என்னைக் காப்பாற்றிவிடக் கை கொடுத்த உங்களையும் இழுத்துக் கொண்டு.. தண்ணீருக்குள் விழ இருந்தேனே.. அப்படி இரண்டுபேரும் தண்ணீருக்குள் விழுந்திருந்தால் என்னவாகியிருக்கும்.."

அவள் ரஞ்சனைப் போலவே மிகப்பரிவுடன் கூறிய படி பார்க்க.. ராகினி கலகலவென்று சிரித்தபடி...

"வேறு என்னவாயிருக்கும்.. இதுதான் ஆகியிருக்கும்..." என்று சொன்னவாறு அவர்கள் இருவரையும் பிடித்துத் தண்ணீருக்குள் தள்ளி விட்டு விட்டாள்..

நடப்பதை யூகிக்கும் முன்னரே தண்ணீருக்குள் விழுந்து விட்ட ரஞ்சன்.. அடுத்துத் தன் மேல் விழுந்த சசிரேகாவைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்...

சசிரேகாவின் முகத்தில் தெரிந்த பயத்தையும்.. அதிர்ச்சியையும் பார்த்த.. ரஞ்சன்.. அவளை விலக்கித் தண்ணீருக்குள் நிறுத்தி...

"ஒன்றுமில்லை.. ஒன்றுமில்லை.. பயப்படாதே..." என்று கூறினான்..

சசிரேகாவின் உடல் வெடவெடத்துக் கொண்டிருந்தது.. இப்படித் தண்ணீர்த் தொட்டிக்குள் மீண்டும் விழ நேரிடும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.. அதுவும் ரஞ்சனுடன்.. ஒன்றாக விழுவோமென்று கொஞ்சம் கூட அவள் நினைக்கவில்லை..

தண்ணீரில் விழுந்து.. மோட்டாரில் தலையைக் காட்டி விலகியிருந்ததால்.. முடி கலைந்து.. நீர்த் திவலைகள்

சொட்ட.. மிக அருகாமையில் நின்று ஆதரவாய் அணைத்துப் பிடித்துக் கொண்ட ரஞ்சனின் அண்மை உணர்த்திய ஆண்மையின் ஸ்பரிசம் அவளுக்குப் புதிது...

மிகவும் இயல்பாக.. நான் உன் கணவன்.. நீயென் மனைவி.. என்ற சொந்தத்துடன் தாங்கிப் பிடித்துக் கொண்ட அந்த அருமையும் அவளுக்குப் புதிது...

நீர் சொட்டும் முகத்தோடு.. திடகாத்திரமான உடலோடு நெருங்கி நிற்பவன்.. வேறு யாரோ ஒருவனில்லை.. அவளுடையவன்.. அவளுக்கு மட்டுமே சொந்தமானவன் என்ற உணர்வு அந்த வினாடியில் அவள் மனதில் புகுந்து கொண்டது...

"ம்ம்.. ஜலக்கிரீடை முடிந்து விட்டதா..? இரண்டு பேருக்கும் தண்ணீருக்குள்ளிருந்து வெளியே வர மன மில்லையா....?" ராகினி குறும்பாகக் கேட்டாள்..

"போக்கிரி.. இப்படியா அண்ணியை உள்ளே தள்ளி விடுவது...?"

"உன்னையும்தானே தள்ளி விட்டேன்...?"

"நானும்.. அண்ணியும் ஒன்றா...?"

"பின் வேறு.. வேறா...?"

'இல்லை..' யென்றுதான் ரஞ்சனுக்கும்.. சசிரேகா விற்கும் தோன்றியது.. அவள் நீரில் விழுந்த மறுகணம் ஏந்திப் பிடித்து அவளைத் தண்ணீருக்குள் இறக்கி

விட்டு.. ஆதரவாய் அணைத்துக் கொண்ட அவனின் செய்கை.. இதைத்தான் சசிரோகவிற்கு உணர்த்தியது...

தன் கைகளுக்குள் இருந்த வினாடிகளில்.. நாணத்துடன் சிலிர்த்துக் கொண்ட.. அவளது பெண்மையின் தன்மை.. இதைத்தான் ரஞ்சனுக்கும் உணர்த்தியது..

அவனது விழிகள் அவளைப் புதிதாகப் பார்க்க ஆரம்பித்தன.. மிக அருகாமையில் இருந்த அவளது நீர்த்

திவலைகள் படிந்த முகத்தை அள்ளிப் பருகுவது போல் பார்த்தான் ரஞ்சன்...

"அண்ணா.. நான் வேண்டுமானால் வீட்டுக்குப் போய்.. அண்ணனும் அண்ணியும்... ஜலக்கிரீடை முடிந்து வர நேரமாகும்ன்னு சொல்லி விடவா..."

ராகினி கிண்டல் செய்யவும்.. ரஞ்சனின் முகத்தில் சிரிப்பு உதயமாகிறது.. அவன் ஒரே தாவில் தொட்டியின் விளிம்பில் கை வைத்து எம்பி மேலே ஏறி நின்றான்..

"வா.." என்று மீண்டும் கை கொடுத்தான்...

இந்த முறை இயல்பாக அவனது கையை இறுகப் பற்றிக் கொண்டு மேலே ஏறி நின்றாள் சசிரேகா..

"நீங்கள் இருவரும் நனைந்தது போல.. நானும் நனைய வேண்டுமென்று உனக்கு ஆசையா ராகினி..."

"ஆமாம்.. இப்போ அதுக்கு என்னங்கிற..."

"உன்னைப் போல் ஒரு உடன்பிறப்பு கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. என்ன ஒரு நல்லெண்ணம்...!"

"அண்ணா.. சும்மா பிலிம் காட்டாதே.. இதுதான் சாக்குன்னு அண்ணியை ஹீரோ போல் கைகளில் தூக்கிக் கொண்டு அதன் பின்னால்தான் தண்ணீருக்குள் இறக்கி விட்டாய்.. உனக்கு இப்படி ஒரு சான்ஸை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு.. நீதான் எனக்கு தேங்க்ஸ் சொல்ல வேண்டும்.."

"ஏய்.. உன்னை.. சும்மாயிரு.. உன் அண்ணி பாவம்.. ஏற்கெனவே பயந்து போயிருக்கிறாள்.."

"அவங்க பயத்தைத்தான் நீ கட்டியணைத்து.. காதோரம் ரகசியம் பேசிப் போக்கிவிட்டாயே.. நான் பார்க்கலைன்னா நினைத்தாய்.."

சட்டென்று ரஞ்சனின் பார்வை சசிரேகாவின் முகத்தின் மீது படிந்த போது.. அவள் வெட்க மிகுதியால் குங்குமமாய்ச்

சிவந்திருந்த முகத்தோடு.. அவள் கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவனின் மனதில்... முதன் முதலாய் ஆண்மைக்குரிய கர்வம் தோன்றியது...

16

ரஞ்சனின் வீட்டுப் பெரியவர்களுக்குத்தான் அவனின் காதல் கதை தெரியும்.. ராகினிக்குத் தெரியாது என்பது ரஞ்சனின் மூளையில் பதிவாகியிருந்தது... அவளைப் பொறுத்தவரை அவளுடைய அண்ணன் சசிரேகாவை விரும்பிக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறான்..

அதனால்.. மற்றப் புதுமணத் தம்பதியினரைக் கேலி செய்வது போலவே அவளும்.. ரஞ்சனையும்.. சசிரேகாவையும்.. கேலி செய்து கொண்டிருந்தாள்.. ஆரம்பத்தில் அதைச் சங்கடமாய் உணர்ந்த ரஞ்சனும்.. சசிரேகாவும்.. போகப் போக.. ராகினியின் கேலியை விரும்பி ரசிக்க ஆரம்பித்தார்கள்..

இந்தப் புது வகையான உணர்வும்.. சொந்தமும் ஏற்படுத்திய கிளர்ச்சியைச் சசிரேகாவின் மென்மனத்தால் தாங்க முடியவில்லை.. அவள் ரஞ்சனை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் தடுமாறிப் போனாள்.

அவளது வெட்கத்தையும்... முகச்சிவப்பையும் ரசித்தவனுக்கு மனதில் மெல்லிய சாரல் அடித்தது.. இந்த இதத்தையும்.. இனிமையையும்.. மணிஷா அவனுக்குக் கொடுத்ததில்லை...

சசிரேகாவின் விழிகள் அலைபாய்வதையும்.. அவளது உதடுகள் துடித்து.. பார்வை தாழ்வதையும்.. வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன்..

'இது புதிய அனுபவம்...' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.. அவனுக்கு இந்த உணர்வு தனக்குள் வேர்

விடுவதை உணர்ந்து கொள்ள முடிந்தது.. அது அவனுக்கு ஆச்சரியத்தையும் அளித்தது..

எதிரே அவனது பார்வையின் வேகத்தைத் தாங்க முடியாமல் தலை கவிழ்ந்த தாமரை போல் நின்று கொண்டிருப்பவளிடம்தான் அவன் தான் வேறு ஒரு பெண்ணைக் காதலிப்பதாகக் கூறினான்..

அவளும்.. அதே கதையை அவனிடம் கூறினாள்.. இருவரும் மகா கண்ணியமான ஜீவன்கள் போல்.. தங்களது காதல் தோல்வியைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள்.. நட்புடன் இருந்து கொள்ளலாம் என்ற முடிவும் எடுத்தார்கள்..

இன்றோ.. அந்தக் கண்ணியவான்.. அவளை விழுங்கி விடுவதைப் போல் பார்க்க ஆரம்பித்து விட்டான்.

காதலிலே தோல்வியுற்று நின்ற அந்தக் காரிகையோ.. முகம் சிவந்து.. அவன் முன் தலை நிமிர முடியாமல் வேறு பக்கம் பார்க்க ஆரம்பித்து விட்டாள்..

"ஏன் அண்ணா.. இவங்க... நீ தாலி கட்டிய மனைவி தானே..?" ராகினி கிண்டலாகக் கேட்டாள்..

"அடிப்பாவி.. இப்படியொரு சந்தேகம் உனக்கு எப்படி வந்தது..? உன் அண்ணியின் கழுத்தைப் பார்.. தடிமனான மஞ்சள் தாலிச்சரடு.. மூன்று பெரிய முடிச்சுக்களோடு இருக்கிறதே.. அதை.. நீயும்.. இந்த ஊரும் பார்க்க.. நான்தானே கட்டினேன்..?"

"அடேங்கப்பா.. இவர்தான் மூன்று முடிச்சுப் போடுகிறாராம்.. மத்தவங்க எல்லாம் இரண்டு முடிச்சில் எழுந்து கொள்கிறாங்களாம்.. போதும்.. உன் தாலி கட்டிய பெருமை..."

"நீதானே சந்தேகம் கேட்டாய்...?"

"அண்ணியை இப்படி சைட் அடித்துக்கொண்டு நிற்கிறாயே.. அதனால்தான் கேட்டேன்.."

"ஏய்ய்..."

ரஞ்சன் ரசித்துப் பலமாய்ச் சிரித்தபடி.. மீண்டும் சசிரேகாவைப் பார்த்தான்.. அவள் முகம் ரத்தமென மாறி விட்டது.. ரஞ்சனுக்கு இந்தச் சீண்டல் மிகவும் பிடித்துப் போய்விட்டது..

சசிரேகாவைப் பார்ப்பதில் அவனுக்குள் இதமான சுகம் தோன்ற ஆரம்பித்திருந்தது.. ராகினியுடன் பேசியபடி.. சசிரேகாவையே அவன் பார்க்க ஆரம்பித்தான்..

பனியில் நனைந்த மலர் போல்.. உடலெங்கும் ஈரத்துளிகளுடன் நின்று கொண்டிருந்தவளைப் பார்த்தபடி.. தன் புல்லட்டின் முன்புறமிருந்த ஜிப்பைத் திறந்து ஒரு டவலை எடுத்து அவளிடம் கொடுத்தான்...

"துவட்டிக் கொள்.. ஜலதோசம் வந்து விடக்கூடாது.."

"ஆஹா.. என்ன அக்கறை.. அண்ணா.. நானும் தான் நனைந்திருக்கிறேன்.. என் மேல் இப்படி ஒரு கரிசனத்தை நீ காட்ட மாட்டேன் என்கிறாயே..."

"நீ இரண்டு முறை தண்ணீரில் விழுந்தாயா..."

"ம்ம்.. இது உனக்கு ஒரு சாக்கு.. புதுப் பொண்டாட்டி வந்தவுடன் தங்கச்சி பாசம் காணாமல் போய் விட்டது..."

சசிரேகா வெட்கத்துடன் ரஞ்சன் நீட்டிய டவலை வாங்கி முகம்.. கை.. கால்களைத் துடைத்து.. தலை துவட்டிக் கொண்டு.. ராகினியிடம் அதை நீட்டினாள்.. ராகினி அதை வாங்கி.. துடைத்துக் கொண்டே..

"இப்போது எப்படி நாம் வீட்டிற்குப் போவது.." என்று கேட்டாள்..

"ஏன் ராகினி.. நாம் நடந்துதானே வந்தோம்.. அதைப் போலவே போக வேண்டியதுதானே..?" என்று சசிரேகா பதில் கூறினாள்.

"போங்க அண்ணி.. நாம் வரும் போது வெயிலே இல்லை.. இப்ப வெயில் உச்சிக்கு வந்து விட்டது.. இனி எப்படி நடந்து போவதாம்.." ராகினி.. மோட்டார் ரூமின் படியில் அமர்ந்து விட்டாள்..

"யாரும் நடக்க வேண்டாம்.. என் புல்லட்டிலேயே போய் விடலாம்..." என்றான் ரஞ்சன்..

"மூன்று பேர் எப்படி உட்காருவதாம்...?"

"ஆமாம்.. உன் அண்ணி முருங்கைக்காய் போல்.. ஒல்லிக் குச்சி உடம்புக்காரியாய்.. இருக்கிறாள்.. இவளெல்லாம் ஓர் ஆள் கணக்கா..? அதற்கு உன்னைச் சொல்லு.. பூசணிக்காய் போல்.. பொதுபொதுவென்று இருக்கிறாய்.. உன்னைப் போல் இவளுடைய உடல்வாகும் இருந்தால் நான் யோசிக்க வேண்டும்..."

ராகினி அப்படி ஒன்றும் குண்டு இல்லை.. அதே சமயம் சசிரேகாவைப் போல் மிகவும் ஒல்லியாகவும் அவள் இருக்க மாட்டாள்.. சற்றுப் பூசினாற்போல் இருப்பாள்...

அதனால் அவளுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது..

"நீ ஒன்றும் என்னை உன் வண்டியில் கூப்பிட்டுக் கொண்டு போக வேண்டாம்.. நான் ஒரு போன் போட்டால் அப்பா எனக்கு கார் அனுப்புவார்.. நீ அண்ணியை மட்டும் கூப்பிட்டுக் கொண்டு போ.."

அவளது கோபத்தைக் கண்ட சசிரோகவிற்கு வேடிக்கையாக இருந்தது.. அந்தக் குடும்ப உறவுகளில் தெரிந்த உயிர்ப்பு அவளை அலை போல் உள்ளிழுத்து ஆகர்ஷித்தது..

17

சசிரேகா அன்புடன் ராகினியை அணைத்துக் கொண்டாள்.. அவளது முகத்தைத் தன்புறம் திருப்பி.. சமாதானமாய்ப் பேசினாள்..

"இதுக்குப் போய்க் கோவித்துக் கொள்வாயா..? உன் அண்ணன் உன்னைக் குண்டு என்று சொன்னால் அதை உடன் நம்பி விடுவதா..? இங்கே பார்.. குண்டான

பெண்களைத்தான்.. தமிழ் நாட்டில் கொண்டாடுவார்கள்.. குஷ்புவிற்குக் கோவில் கட்டிய ஊர்.. நம்ம ஊர்.. அதனால் கோப்ததை விடு.. போகலாம் வா..."

"போங்க அண்ணி.. உங்களை அண்ணா இப்படிச் சொல்லியிருந்தால் உங்களுக்கு எப்படியிருந்திருக்கும்..?"

"சந்தோஷமாக இருந்திருக்கும்..."

"பொய்..."

"மெய்.. என்னைக் கூடத்தான் அவர் ஒல்லிக்குச்சி உடம்புக்காரியென்றார்.. நான் என்ன கோவித்துக் கொண்டேனா...?"

அதைச் சொல்லும்போதே.. ஏன் தனக்குக் கோபம் வரவில்லையென்று யோசித்தாள் சசிரேகா..

ரஞ்சனைத் தற்செயலாய்ப் பார்த்த போது அவனது விழிகளும் அதே கேள்வியை வினவுவதை உணர்ந்தவள்.. அவசரமாய்ப் பார்வையை விலக்கிக் கொண்டாள்..

"நான் ஒன்னும் குண்டில்லை அண்ணி..."

"அது எனக்குத் தெரியாதா...?"

"நான் அண்ணனின் பின்னால் உட்காரமாட்டேன்.."

ராகினி வழக்கடித்துக் கொண்டிருக்கும் போதே.. ரஞ்சன் புல்லட்டைக் கிளப்பி விட்டான்..

"உன்னை யார் என் பின்னால் உட்கார்ந்து கொண்டு வரச் சொன்னது..? உன் அண்ணியின் பின்னால் உட்கார்ந்து கொள்.." என்று அவன் இலகுவாகக் கூறியதும் சசிரேகாவிற்குத் தூக்கி வாரிப்போட்டது..

"அது எப்படி..?" என்று அவள் மறுத்துக் கொண்டிருக்கும் போதே...

"ம்ம்.. அண்ணனின் பின்னால் ஏறுங்க அண்ணி.. நான் உங்களுக்குப் பின்னால் உட்கார்ந்து கொள்கிறேன்.." என்று அவசரப்படுத்தினாள் ராகினி..

வேறு வழியின்றி ரஞ்சனின் பின்னால் ஏறி அமர்ந்து கொண்டாள் சசிரேகா.. ராகினி அவளுக்குப் பின்னால் அமர்ந்து கொள்ள இடமில்லை..

"நகர்ந்து உட்காருங்க அண்ணி..." என்று அவள் கூறவும்.. சசிரேகா.. முன்னால் நகர்ந்தாள்.. ராகினி ஏறிக் கொள்ளவும்.. ரஞ்சன் வண்டியைக் கிளப்பினான்...

கிராமத்து ஒற்றையடிப் பாதையில் அவனது வண்டி.. ஒரு மேட்டில் ஏறி இறங்கிய போது.. சசிரேகா வண்டியின் குலுங்கலில் முன்னே நகர்ந்து கொள்ள.. ராகினி அதிக இடத்தை ஆக்ரமிப்பு செய்து விட்டாள்..

சசிரேகாவின் உடல் முழுவதும்.. ரஞ்சனின் முதுகுப் பகுதியில் படிந்து விட்டது.. பின்புறம் நகரவும் வழியில்லாமல்.. முன்புறம் விலகவும் முடியாமல்.. ஓர்வித இன்ப அவஸ்தைக்கு ஆளானாள் சசிரேகா.. பக்கவாட்டில் பிடிமானமாய்ப் பிடிக்கும் கம்பியை ராகினி பிடித்து இருந்ததால்.. பிடிமானமில்லாமல் அவள் தவித்தாள்..

"ரேகா.. கீழே விழுந்து விடுவாய்... என்னைப் பிடித்துக் கொள்..." என்றான் ரஞ்சன்..

வேறுவழியின்றி.. ரஞ்சனின் இடையைத் தன் கரத்தால் வளைத்துப் பிடித்துக் கொண்டாள் சசிரேகா..

இப்படியொரு பயணத்தை.. அவளுடைய வெளிநாட்டுக் கார்கூட அவளுக்கு வழங்கியதில்லை யென்று அவளது ஆழ்மனம் அவளிடம் கூறியது..

வீட்டு வாசலில் இறங்கும்போது.. ரஞ்சனை விட்டு விலக நேர்வதில்.. ஏன் தன் மனதில் இப்படியொரு ஏமாற்றம் தோன்றுகிறது.. என்ற கேள்வியுடன் அவள் வீட்டுக்குள் சென்றாள்..

ராகினி.. தன்னைக் 'குண்டு' என்று தமையன் சொல்லி விட்டதை வீட்டுப் பெரியவர்களிடம் பஞ்சாயத்து வைத்துக் கொண்டிருக்கும் போது.. ஈர உடையை மாற்று வதற்காக.. அங்கே நிற்காமல் மாடியேறி விட்டாள் சசிரேகா..

அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவள்.. தன் பெட்டியைத் திறந்து.. மாற்றுடையை எடுத்துக் கொண்டு மாற்ற ஆரம்பித்தாள்.. சேலையை அவள் பிரித்துக் கொண்டு இருந்த போது.. அறைக் கதவைத் திறந்து கொண்டு.. ரஞ்சன் உள்ளே வந்து விட்டான்.. அதிர்ச்சியில் நிமிர்ந்து பார்த்த சசிரேகாவின் கையில் இருந்த சேலை நழுவிக் கீழே விழுந்து விட்டது..

"ஐ ஆம் ஸாரி.." ரஞ்சன்.. அவசரமாய் வெளியே போய்விட்டான்.. அவசரமாய்ச் சேலையைக் கட்டிக் கொண்டு.. தலையைப் பின்னி.. முகத்திற்கு லேசாக ஒப்பனை செய்து கொண்டிருந்த போது.. அறைக்கதவை லேசாய் அவன் தட்டினான்..

"உள்ளே வாங்க.." என்ற சசிரேகா.. அவனது முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்..

உள்ளே வந்தவன்.. அவளை ஊன்றிப் பார்த்தான்.. சற்று முன் அவள் நின்ற தோற்றம் அவன் கண்ணுக்குள் தோன்றியது..

"நீ கதவை லாக் பண்ணவில்லை..."

"மறந்து விட்டேன்.."

"நான் தெரியாமல் உள்ளே வந்து விட்டேன்.."

"இட்ஸ் ஆல் ரைட்..."

'அப்படியா சொல்கிறாய்..? இது சரிதானா..? நான் உன்னை அந்தரங்கமாய்ப் பார்க்கும் உரிமையுள்ளவன் என்பதை நீ புரிந்து கொண்டு விட்டாயா..?'

ரஞ்சன் அவளைப் பார்த்தபடி தன் சட்டையைக் கழட்டினான்.. மாற்று உடையை எடுத்துக் கொண்டு அறைக்குள் இருந்த அட்டாச்சுடு பாத்ரூமுக்குள் நுழைந்தான்..

அவனது வெற்று முதுகைப் பார்த்தவளுக்கு என்னவோ போல் இருந்தது.. இது போன்ற ஓர் ஆணின் அண்மையை அவள் இதற்கு முன் உணர்ந்தது இல்லையே..

டேவிட்டோடு பழகியதில்.. அவன் மேல் காதல் வசப்பட்டாள்.. எனினும்.. அவனைப் பார்க்கும் போது இப்படி ஒரு கிளர்ச்சி அவளுக்குள் தோன்றியது இல்லையே..

தள்ளி நின்று தானே அவனிடம் பழகினாள்.. இன்று தள்ளி நிற்க முடியாமல்.. காந்தம் போல் ரஞ்சனின் ஆண்மை அவளை ஈர்க்கிறதே.. இது எப்படிச் சாத்தியமானது...?

18

"சசி.. சசி.." என்று கோதை நாச்சியார் அழைக்கும் குரல் கேட்டு.. அவசரமாய்ச் சென்று கதவைத் திறந்தாள் சசிரேகா...

"ரஞ்சன் எங்கேம்மா...?"

"டிரஸ் சேன்ஜ் பண்ணிக்கிட்டு இருக்கார்..."

"சாப்பிட வாங்க.. பசிக்கவில்லையா...?"

"இதோ வருகிறேன் அத்தை..."

"பொறும்மா.. ரஞ்சனை அழைத்துக் கொண்டு.. சேர்ந்துவா..." கோதை நாச்சியார் கண்டிப்புடன் கூறி விட்டுச் சென்று விட்டாள்...

"யார் வந்தது..." தலையைத் துவட்டியபடி வெளியே வந்த ரஞ்சன் கேட்டான்..

"அத்தை.."

"என்னவாம்..."

"நம்மைச் சாப்பிடக் கூப்பிட்டாங்க.."

இந்த மூன்று நாள்களில்.. 'நான்' என்பது மறந்து 'நாம்' என்று இயல்பாகச் சொல்லி விடும் தன்மைக்கு அவள் வந்திருப்பதைக் கண்ட ரஞ்சன்.. ஓர் கணம் கண்ணிமைக்காமல் அவளைப் பார்த்தான்..

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?'

சசிரேகாவின் மனதில் வெட்கம் சூழ்ந்தது..

"வா... போகலாம்..."

"எங்கே..."

"சாப்பிடத்தான்.. நானே.. தனியாகப் போனால் இந்த வீட்டில் சாப்பாடு கிடைக்காது.. சேர்ந்து போனால் தான் சாப்பாடு போடுவார்கள்..."

ரஞ்சன் வேடிக்கையாய்க் கூறிக்கொண்டே படியிறங்க.. சசிரேகா பின் தொடர்ந்தாள்.. சாப்பாட்டு மேஜையில் ராகினி பேசிக் கொண்டிருந்தது.. மாடிப்படிவரை தெளிவாகக் கேட்டது..

"அதையேன் கேட்கறீங்க பாட்டி.. நேற்று ஒரு பழைய பாட்டு பார்த்தோமே..."

"எந்தப் பாட்டுடி..."

"அதுதான்.. டொக் டொக் டொக்ன்னு.. குதிரை வண்டியில் ராஜா.. ராணி போல எம்ஜிஆரும்.. சரோஜா தேவியும் வருவாங்களே..."

"அன்பே வா.. பாட்டைச் சொல்கிறாயா.. எப்படிப் பட்ட பாட்டுடி அது.. எங்கள் காலத்திலே.. மாட்டு வண்டி கட்டிக்கிட்டு.. பக்கத்து ஊர் டூரிங் டாக்கீஸில் போய்ப் பத்துத் தடவை பார்த்த படம்டி அது.."

"ஆவ்வ்..."

"ஏன்டி கொட்டாவி விடறே.. சாப்பிட வந்தியா.. இல்லை, தூங்க வந்தியா..?"

"இப்படிக் கதையளந்தா தூக்கம்தானே பாட்டி வருது.."

"அடிப்போடி.. இவளே.."

"எவளே...?"

"அது அப்படித்தான்டி.. அந்தப் பாட்டு இருக்குதே பாட்டு.. அதை அடிச்சுக்க முடியாதுடி.. நான் பாடுறேன் கேளு.."

"ராஜாவின் பார்வை...

ராணியின் பக்கம்..

கண் தேடுது சொர்க்கம்...

கை மூடுது.. வெட்கம்...

பொன் மாலை.. மயக்கம்..."

"என்னமா பாடுறீங்க பாட்டி.. நீங்க மட்டும் சினிமாவுக்குப் பாடப் போயிருந்தால் பி.சுசீலா வந்திருக்க முடியுமா..?"

"அதனால்தான்... அந்தம்மா பிழைத்துப் போகட்டும்ன்னு விட்டு விட்டேன்.. அந்தப் பக்கம் போகவில்லை.."

"நீங்க சொன்ன பாட்டில் எம்.ஜி.ஆரின் கழுத்தைச் சுத்திக் கை போட்டு சரோஜா தேவி சாய்ந்து விழுந்து விடுவது போல வளைந்து நிற்பாங்களே..."

"அது ஏன்டி விழுகப் போகுது..? எம்.ஜி.ஆர்தான்.. அவரு கையைக் கொடுத்து அது இடுப்பைத் தாங்கிப் பிடிச்சுக்கிட்டாரே..."

"அதைப் போலத்தான் பாட்டி.. நம்ம அண்ணி.. அண்ணனின் கழுத்தில் கையைப் போட்டு போஸ் கொடுக்க.. அண்ணன் அவங்க இடுப்பை வளைத்துத் தாங்கிப் பிடித்து போஸ் கொடுத்தாரு.."

அவ்வளவுதான் சசிரேகா.. மாடிப்படியின் கீழ்ப்படியிலேயே நின்று விட்டாள்.. அவள் முகம் சிவந்து விட்டது.. ரஞ்சன் புருவம் உயர்த்தினான்..

"என்ன...?"

"நான் வரவில்லை.."

"ஏன்..?"

"ராகினி பேசுவதைக் கேட்டிங்கள்ள.. எனக்குப் பெரியவங்க முன்னால் வர என்னமோ போல் இருக்கிறது.."

'இவளா.. சென்னையில் பிறந்து வளர்ந்த அல்ட்ரா மாடர்ன் பெண்..? இன்ஜினியரிங் வரை படித்தவள்.. கேம்பஸ் இன்டர்வியூவில் செலக்ட் ஆகியிருப்பவள்.. இப்படி வெட்கப்படுகிறாளே..' ரஞ்சன் வியப்புடன் அவளைப் பார்த்தான்..

"இது கிராமம் ரேகா.. ராகினி சின்னப் பெண்.. புதிதாய் கல்யாணமானவர்களைக் கேலி செய்வது கிராமத்துப் பழக்கம்.. ராகினியும் அதைத்தான் செய்கிறாள்.. நீ இதற்குப் போய் வெட்கப்படலாமா...?"

"இல்லை.. அது வந்து..."

"நானிருக்கிறேன்.. வா..."

சசிரேகா முகம் சிவக்க.. ரஞ்சனைப் பின் தொடர்ந்தாள்.

"இதோ.. நம்ம வீட்டு எம்ஜிஆரும்.. சரோஜா தேவியும் வந்துட்டாங்க.." என்று ஆர்ப்பரித்தாள் ராகினி...

"சொல்றதுதான் சொல்றே.. ஏன் தாத்தா.. பாட்டி காலத்து ஹீரோ.. ஹீரோயினைச் சொல்கிற.. ஆர்யாவும்.. நயன்தாராவும் வந்துட்டாங்கன்னு சொல்லேன்.." என்றபடி தங்கையின் தலையில் சின்னதாய் ஒரு குட்டு வைத்து விட்டு அமர்ந்தான் ரஞ்சன்..

அங்கிருந்த பெரியவர்கள் நால்வரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. கோதையின் காதுகளில்..

'தண்ணிக்குள் தள்ளி விடுவோம்.. நீந்திக் கரையேறுவது அவங்க பாடு...' என்று சோமய்யனின் குரல் கேட்டது..

வாழ்க்கையைச் சரியாகக் கணித்திருக்கும் தன் மாமனாரின் புத்தி கூர்மையை என்றும் போல் அன்றும் வியந்தவளாய்க் கோதை நாச்சியார் பரிமாற ஆரம்பித்தாள்..

"ஏம்மா நிற்கிற.. ரஞ்சனின் பக்கத்தில் உட்காரு.."

கோதை நாச்சியார் பரிவாகக் கூறியதும் சசி.. உட்காரப் போனாள்..

அதே சமயம்.. ரஞ்சன் தன் நாற்காலியைத் தள்ளிப் போட்டு உட்காரவும் அவனது மடியில் உட்கார்ந்து விட்டாள்..

அவ்வளவுதான். ராகினி விழுந்து... விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்..

19

"அண்ணி.. அம்மா.. அண்ணனுக்குப் பக்கத்தில் உட்காரத்தான் சொன்னாங்க.. அவன் மடியில் உட்காரச் சொல்லவில்லை..."

கோதைநாச்சியாரும்.. ராஜலட்சுமியும்.. ராகினியுடன் சேர்ந்து சிரிக்க.. சோமய்யனின் உதடுகளிலும்.. லிங்கய்யனின் உதடுகளிலும் மெலிதான புன்முறுவல் தோன்றியது..

சசிரேகா... லஜ்ஜையுடன் எழுந்து கொண்டாள்.. ரஞ்சன் நகர்ந்து இருந்த நாற்காலியை இழுத்து அவளருகில் போட.. அவள் அதில் அமர்ந்தாள்.. அதற்கும் ராகினி கேலி செய்தாள்..

"உனக்கே நாங்கதான் சேரை இழுத்துப் போடணும்.. நீ அண்ணிக்குச் சேவகம் பண்றே.. எல்லாம் நேரம்.. பார்த்தீங்களா பாட்டி.."

ராஜலட்சுமி பேத்தியைத் தூண்டிவிட்டு.. அந்தப் பேச்சை வளர்க்க விரும்பினாள்.. அதனால் பேத்தியின் போக்கிலேயே பதில் சொன்னாள்..

"ம்ம்.. பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்டி.. இவனைப் போல எத்தனை பேரைப் பார்த்திருப்பேன்.. வீட்டில் கல்யாணமாகிற வரைக்கும் ஒரு துரும்பை எடுத்துத்

தள்ளிப் போட மாட்டாங்க.. அதுவே கல்யாணமாகியிருச்சுன்னு வை.. பெண்டாட்டிக்கு குடை பிடிப்பாங்க.."

"ஆமாம் பாட்டி.. தோப்பில் நானும் நனைந்திருக்கிறேன்.. அண்ணியும் நனைந்திருக்காங்க.. இவன் அண்ணிக்கு மட்டும் துடைத்துக் கொள்ள டவல் கொடுத்தான்.. எனக்குக் கொடுக்கவில்லை.."

"நிஜம்தானா.. ம்ஹூம்.. கூடப் பிறந்த ஒற்றைத் தங்கையை நம்ம சிவாஜிகணேசன்.. சாவித்திரியைக் கவனித்துக்கிறது போல கவனித்துக்கிறதை விட்டு விட்டு.. அப்படியா செய்தான்.."

"ஏன் பாட்டி.. என் சோகக் கதையில் பழைய படத்தைக் கலந்து போட்டுத் தாக்குறீங்க.. நான் தண்ணீ சொட்டச் சொட்ட நிற்கிறேன்.. இவன் அண்ணிகிட்டே உருகி வழியறான்.."

சசிரேகா சங்கடப்பட்டாள்.. தோப்பில் ராகினி கேலி செய்த போது அவளுக்கு அது பிடித்திருந்தது.. ஏனென்றால் ராகினிக்கு அவளது காதல் விசயம் தெரியாது.. ஆனால்.. அது இந்த வீட்டிலிருக்கும் பெரியவர்களுக்குத் தெரிந்திருந்ததால்.. அவள் எப்படி அவர்கள் முகத்தை நிமிர்ந்து பார்ப்பது..

அவளது சங்கடத்தைத் தகர்ப்பது போல் கோதை நாச்சியார் குலுங்கச் சிரித்தாள்..

"ஏன்டி.. கண்ணுக்கு முன்னால புதுப் பெண்டாட்டி நனைஞ்சுக்கிட்டு நின்னால்.. கண்ணு இந்தப் பக்கம்.. அந்தப் பக்கம்.. திரும்பிப் பார்க்குமா...?"

ராஜலட்சுமி.. மருமகளும் தன்னுடன் இணைந்து கொள்வதைப் புரிந்து கொண்டாள்.. உடனே உற்சாகமாகப் பேத்தியிடம் சொன்னாள்..

"இந்த வீட்டு ஆம்பளைகள் குணமே அப்படித்தான்டி ராகினி.. உன் அப்பன் இருக்கிறானே.. உன் அம்மாவின் கழுத்தில் தாலி கட்டுகிற வரைக்கும்.. என் முந்தானையைப்

பிடிச்சுக்கிட்டு சுற்றிக்கிட்டு இருந்தான்.. உன் அம்மாவின் கழுத்தில் தாலி கட்டின பின்னால்.. உன் அம்மாவின் முந்தானையைப் பிடித்துக்கிட்டான்..."

"எப்படியோ.. அப்பாவுக்குப் பிடிக்க.. ஒரு முந்தானை ரெடியாக இருந்திருக்கிறது.. ஏன் அண்ணி.. சேலை கட்டினால் முந்தானையில் புருசனை முடிந்துக்கலாம்.. சுடிதார் போட்டால் என்ன செய்வது...?"

சசிரேகா பதில் சொல்லத் திணறினாள்.. கோதை நாச்சியார் மருமகளுக்கு உதவிக்கு வந்தாள்..

"ஏய்ய்.. வாயாடி.. தட்டைப் பார்த்துச் சாப்பிடு.."

"என்னம்மா இது.. ஒரு சந்தேகத்தைக் கூடக் கேட்கக் கூடாதா..?"

"ஆமாம்.. பெரிதாய்ச் சந்தேகம் கேட்க வந்துவிட்டாள்.. உன் பாடப் புத்தகத்தில் சந்தேகம் கேட்கிற பாரு..."

"இதுவும் பாடம்தான்ம்மா.."

"இப்போ என்னடி.. சுடிதார் போட்டுக்கிட்டால்.. துப்பாட்டாவில் முடிச்சுப் போட்டு வைத்துக்குவாங்க.. வேலையைப்பாரு..."

"இன்னும் ஒரு சந்தேகம் அம்மா.."

"உனக்குன்னு சந்தேகம் படையெடுத்து வருமா..?"

"ஏன்ம்மா.. அண்ணி சென்னையில் பிறந்து வளர்ந்தாங்க.."

"அதுக்கென்னடி இப்ப..?"

"நான்தான் பாவம்.. தோப்பூரில் போய்ப் பிறந்து விட்டேன்.."

"ஏன்டி.. இப்படி அலுத்துக்கறே.. உனக்கு என்ன குறை..?"

"என்ன குறையா..? அண்ணி.. நீங்களே.. இந்தக் கதையைக் கேளுங்க.. நான் பிறந்தவுடன்.. எனக்குப் பட்டு கவுன் தைத்துப் போட்டு விட்டாங்களாம்.. அப்புறம் பட்டுப் பாவாடை சட்டை.. இரட்டைப்பின்னால்.. பூ.. இப்போது

பட்டுப்பாவாடை.. ஜாக்கெட்.. தாவணி.. ஒற்றைப் பின்னல்.. பூ.. எனக்கு எப்படியிருக்கும்..."

ராகினி பெருமூச்சுடன் கூற.. சசிரேகாவிற்குச் சிரிப்பு வந்தது.. புன்னகைத்தாள்..

"ம்ம்.. நீங்க சிரிக்கறீங்க.. இதுவே நீங்கள் போட்டுக் கொள்ளும் டிரஸ்கள் எப்படியிருக்கும்.. ஜீன்ஸ்.. அது இதுன்னு மாடர்னா இருக்கும் இல்லையா..."

சசிரேகா ஜீன்ஸ்.. சர்ட்டை விரும்பி அணிவாள்.. இப்போது இந்த வீட்டுப் பெரியவர்கள் முன்னிலையில் சுடிதார் கூடப் போட முடியாது என்று சேலை கட்டிக் கொண்டிருப்பவள்.. அதை எப்படிச் சொல்வாள்..?

இப்போது ரஞ்சன்.. மனைவியின் உதவிக்கு வந்தான்..

"உன் ஆசை என்ன ராகினி..? ஜீன்ஸ் போடறதா..?"

"இப்போ உனக்கு ஜீன்ஸ் போடணும்னு ஆசையா இருக்கா ராகினி.." சாப்பிட்டுக் கொண்டிருந்த சோமய்யன் விழியுயர்த்திப் பேத்தியைப் பார்க்க.. ராகினி பதறிப் போனாள்..

"ஐயையோ தாத்தா.. நான் அப்படிச் சொல்ல வில்லை.. அண்ணா.. ஏன் தாத்தாவிடம் என்னை மாட்டி விடுகிறாய்..?"

"இல்லை.. நீ ஜீன்ஸைப் பற்றி விலாவாரியாகப் பேசுகிறாயே.. அதனால் கேட்டேன்..."

"சுடிதார் போட்டுக்கிட்டால்.. துப்பட்டாவில் முடிந்து கொள்ளலாம்.. ஜீன்ஸ் போட்டுக்கிட்டால் என்ன பண்ணுவாங்க..?"

"ம்ம்.. நான் அவளுடைய ஜீன்ஸ் பாக்கெட்டில் போய் உட்கார்ந்து கொள்வேன்.. போதுமா.. இப்போது சாப்பாட்டைக் கவனி.."

சோமய்யனின் விழிகளும்.. லிங்கய்யனின் விழிகளும் சந்தித்துக் கொண்டன.. பெண்களின் உறவில் கலந்து

வாழ்ந்து முடித்த ஆண்மக்களுக்கு.. அவர்களின் வழித் தோன்றல் செல்லும் வழி புரிந்து விட்டது...

'இனிக் கவலையில்லை..' இருவரும் நினைத்துக் கொண்டார்கள்..

சசிரேகா.. உயிர்ப்புடன் கலந்து பேசிச் சாப்பிட்டு முடித்து அந்தக் குடும்பச் சூழலை ரசித்தபடி கைகழுவி எழுந்தாள்..

"ரஞ்சா.. சசியுடன் சாயந்திரம் மலைக் கோவிலுக்குப் போய் விட்டு வந்து விடு.." சோமய்யன் ஆணையிட்டார்..

"சரி தாத்தா..." மறுப்புச் சொல்லாமல் உடனே ஒத்துக் கொண்டான் பேரன்..

பெரியவரின் இதழ்களில் அர்த்த புஷ்டியுடன் கூடிய புன்னகை உதித்தது..

20

அந்தக் கிராமத்துச் சாலையில் வயல் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தவர்கள்.. புல்லட்டில் சசிரேகாவுடன் சென்ற ரஞ்சனைத் திரும்பிப் பார்த்து.. தங்களுக்குள் பேசிக் கொண்டனர்..

"அவங்க என்ன பேசிக்கிறாங்க...?" என்று கேட்டாள் சசிரேகா..

"புதுசாய் நமக்குக் கல்யாணமாகியிருக்கு இல்லையா.. அதனால் உன்னைப் பத்தி பேசிக்குவாங்க.."

"என்னன்னு...?"

"ம்ம்.. பொண்ணு ரொம்ப அழகாயிருக்கு.. அப்படி இப்படின்னு.."

'நானென்ன அவ்வளவு அழகா..?'

ஏனோ சசிரேகாவிற்கு அப்போதே கண்ணாடி பார்க்கும் ஆசை வந்தது.. வண்டியின் முன்புறக் கண்ணாடியை.. ரஞ்சனின் தோள்வழி எக்கிப் பார்த்தாள்.. வண்டி லேசாய் ஆடியது.. அவசரமாய் ஒழுங்காய் உட்கார்ந்தாள்..

"ஸாரி.. என்னால் வண்டியோட பேலன்ஸ் தப்புது.."

"எதுக்கு ஸாரி...? உனக்கு பாவம்... டூவீலரில் போய்ப் பழக்கம் இருந்திருக்காது.. காரிலேயே போய் வந்து கொண்டிருந்தவள்.."

அவள் கண்ணாடி பார்க்க எக்கியதால் வண்டி குலுங்கியது என்பதை அறியாத ரஞ்சன்.. அவளிடம் ஆதரவாய்ப் பேசினான்..

"உங்க வீட்டிலயும் கார் இருக்கே..."

"இருக்கு.. ஆனால் எனக்குன்னு தனிக் கார் கிடையாது.."

சசிரேகா கல்லூரியில் கால் வைத்த முதல் நாளிலேயே அவளுக்கென்று புதுக்கார் வாங்கிக் கொடுத்து விட்டார் ரங்கநாதன்.. அவள் மூன்றாம் வருடம் படிக்கும் போது.. அந்தக் காரையும் மாற்றி வெளிநாட்டுக் கார் ஒன்றைக் பரிசளித்தார்...

'ம்... கேட்காமலே எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தவர்.. நான் கேட்டும்.. ஏன் டேவிட்டிடமிருந்து என்னைப் பிரித்தார்...'

சசிரேகா மௌனமாகிப் போனாள்.. மலையடிவாரத்தில் புல்லட்டை நிறுத்திப் பூட்டி விட்டு இறங்கினான் ரஞ்சன்..

"சின்னய்யா.. புதுப் பெண்டாட்டியோட மலைக் கோயிலுக்குச் சாமி கும்பிட வந்திருக்காருடி.. அந்தத் தேங்காய் பழத்தட்டை இங்கிட்டு எடு..."

மலையடிவாரத்தில் அபிஷேகப் பொருள்கள் விற்கும் கடை போட்டிருந்தவன் பரபரத்தான்...

"வா.. ரேகா..." என்றபடி அந்தக் கடையருகே போன ரஞ்சன்...

"என்ன.. சின்னச்சாமியண்ணே.. சௌக்கியமா..?" என்று விசாரித்தான்.

"என் சௌக்கியத்துக்கென்ன சின்னய்யா குறைச்சல்.. இந்த ஊரையே காவல் காக்கும் அய்யனார் சாமிகள் போல... உங்க அப்பாரும்.. தாத்தாவும் இருக்கிறப்போ.. எனக்குச் சௌகரியக் குறைச்சல் கூட வந்துருமா..?" என்ற படி தயாராக வைத்திருந்த தேங்காய் பழக்கூடையை எடுத்து ரஞ்சனிடம் கொடுத்தான் சின்னச்சாமி..

"இந்தா..." என்று ரஞ்சன் நீட்டிய பணத்தை அவன் பெற்றுக் கொள்ள மறுத்தான்..

"இலவசமா அபிஷேகச் சாமான்களை நான் வாங்கிக் கிட்டுப் போனால் புண்ணியமெல்லாம் எங்களுக்கு வராது.. உங்களுக்குத்தான் வரும்.. இது தேவையா..?" என்று ரஞ்சன் மடக்கிப் பணத்தை அவன் கையில் திணித்தான்...

"வண்டியைப் பார்த்துக்கங்க அண்ணே...?"

"இதை நீங்க சொல்லணுமா சின்னய்யா..."

அந்தச் சிற்றூரில் ரஞ்சனுக்கும்.. அவனுடைய குடும்பத்திற்கும் கிடைக்கும் மரியாதையை வேடிக்கை பார்த்த வண்ணம் மலையேறினாள் சசிரேகா..

"இந்த ஊரில் உங்க குடும்பத்தை இப்படிப் போற்றுகிறார்களே..."

"ஆமாம்.. அதற்குத் தகுதியாகத்தான் தாத்தாவும்.. அப்பாவும் இதுவரைக்கும் நடந்துகிட்டு வந்திருக்காங்க.."

"ஐ ஸீ.. அம்மா என்னைச் சிறு வயதில் இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்காங்க.."

"அதற்குப் பின்னால்.. அத்தை அடிக்கடி இங்கே வருவாங்க.. நீதான் வருவது இல்லையே.."

"எனக்குக் கிராமமென்றால் அலர்ஜி..."

இதைக் கேட்ட ரஞ்சன் வாய்விட்டுச் சிரித்தான்.. சசிரேகா குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்..

"ஏன் சிரிக்கறீங்க..."

"எது உனக்கு அலர்ஜின்னு நினைச்சு ஒதுங்கிப் போனாயோ.. அதுவே உனக்கு நிரந்தரமாய் வந்த வாய்த்து விட்டது.. பார்த்தாயா...?"

"எனக்கு மட்டும்தான் இந்த நிலையா..? உங்களுக்கும்தான்.. உங்களுக்கும் நான் அலர்ஜிதானே.. நான் நிரந்தரமாய் வந்து உங்களுக்கு வாய்த்து விட்டேனே.."

இதைச் சொன்னவாறு படியnறிக் கொண்டிருந் தவளை ஊன்றிக் கவனித்தான் ரஞ்சன்.. வெந்தயத்தின் கலரில்.. ஜரிகைக் கரையிட்ட பட்டுச் சேலை.. அதே சேலையில் வெட்டித் தைக்கப்பட்ட ஜாக்கெட்.. முதுகு வரை இருந்த முடியை இறுகப் பின்னியும்.. இரண்டு பக்கத் காதோரமும்.. சேர மாட்டேனென்று பிடிவாதமாய் விலகி நின்ற முடி.. கோதை நாச்சியார் தானே தொடுத்து.. பிரியமாய் மருமகளின் தலையில் வைத்து விட்டிருந்த முல்லைச்சரம்.. நெற்றியில் அரக்கு நிறத்தில் கண்ணாடி பதித்த ஸ்டிக்கர் பொட்டு.. அளவாய்ப் போட்டிருந்த நகைகள்.. இவை அத்தனைக்கும் மேலாக.. அவளிடம் பொங்கித் ததும்பிய மாசு.. மருவில்லாத அழகு..

'இவள் எனக்கு அலர்ஜியா...'

மெலிதாய்ச் சிரித்தான் ரஞ்சன்.. சசிரேகா.. 'ஏன்' என்ற பாவனையில் முகத்தை அசைத்தாள்..

"ரேகா.. நான் மணிஷாவைக் காதலித்தேன்தான்.. ஆனால்.. நீ எனக்கு என்றுமே அலர்ஜியானவளில்லை..."

சசிரேகாவின் மேல் யாரோ.. கூடை மலர்களைக் கொட்டுவது போல உணர்ந்தாள்.. ரஞ்சன் தொடர்ந்தான்..

"சில பந்தங்கள் பிரிக்க முடியாதவை.. உடைக்க முடியாதவை.. நம்மிருவருக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் பந்தமும் அது போலத்தான்.. அதனால் தேவையில்லாமல் எதையும் நினைத்துக் குழப்பிக் கொள்ளாதே.. அப்புறம் இன்னொரு விசயம்.."

"என்ன...?"

"நீ யதார்த்தமாக உங்கள் வீடு.. உங்கள் குடும்பமென்று சொல்கிறாய்.. அதில் தவறு இல்லை.. ஆனால் இது கிராமம் பார்.. கல்யாணம் ஆன மறுநொடியில் இருந்து உன்னை என் வீட்டுப் பெண்ணாகத்தான் பார்ப்பவர்கள்.. நினைப்பார்கள்.. சோனியாகாந்தியை இத்தாலி நாட்டுப் பெண்ணென்று யாராவது சொல்வார்களா..? அவங்க.. நம் நாட்டு மருமகள்.. நம் வீட்டுப் பெண்ணுன்னு தான் சொல்வாங்க.. அதனால்.. நீ பேசும் போது கவனமாய்ப் பேசு.. இனி.. இது உன் ஊர்.. என் வீடு தான் உன் வீடு.. என் குடும்பம் தான் உன் குடும்பம்.. இதை நினைவில் வை..."

"ம்ம்..."

'இத்தனையும் சொன்ன நீ.. நான்தான் உன் கணவன்.. என்பதை ஏன் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லாமல் விட்டாய்...' சசிரேகா உதட்டைக் கடித்தாள்..

21

'கணகண'வென்று மணியோசை முழங்க.. தீபாராதனை காட்டப்பட்டது.. தீபாராதனை ஒளியில் தெரிந்த.. பெருமாளையும்.. அவரது தேவிகளையும் கண்மூடிச் சேவித்தனர் ரஞ்சனும்.. சசிரேகாவும்.. பின்.. கோவிலை வலம் வந்தனர்...

மலைக்கோயிலின் மீதிருந்து.. அந்த ஊரும்.. வயல் வெளிகளும் தோப்புகளும் அழகாகத் தெரிந்தன.. ஊரை ஒட்டி ஓடிக் கொண்டிருந்த காவேரி நதியின் கிளை நதி ஒன்று வெள்ளி ஜரிகைக் கரைபோல் தெரிந்தது...

கோவிலின் முன்புற மண்டபத்தின் பெரிய தூண்களில் ஒன்றின் மீது சாய்ந்து அமர்ந்து கொண்ட ரஞ்சன்..

"இப்படி உட்கார்..." என்று பக்கத்தில் கை காட்டினான்..

"ம்ம்..." சசிரேகா அமர்ந்தாள்..

மாலை நேரக்காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது.. இரை தேடிச் சென்ற பறவைகள் கூட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தன.. வெயிலும் இல்லாத இருளும் இல்லாத வெளிச்சம் மங்கிய தோற்றம்.. கண்களுக்குக் குளுமையைத் தந்தது..

"ரேகா.. நான் மணிஷாவைக் காதலித்தது உனக்குத் தெரியும்.."

"ம்ம்ம்.. நீங்கள்தான் அவங்களிடம் புரபோஸ் பண்ணீங்களா...?"

"இல்லை.. அவள் தான் என்னைப் பிடித்திருக்கிற துன்னு என்னிடம் வந்து சொன்னாள்.. அதுவரை நான் பெண்களிடம் இயல்பாகப் பேசிப் பழகியதில்லை.. என் தாத்தாவும்.. அப்பாவும்.. ரொம்பக் கண்டிப்பானவர்கள்.."

"அதுதான் எனக்குத் தெரியுமே..."

"அவள் என்னைக் காதலிப்பதாய்ச் சொன்னாள்.. எனக்கு அது ஒரு விதமான மயக்கத்தைக் கொடுத்தது.. அப்போது நான் மூன்றாம் வருடம் இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்தேன்.."

"எனக்கும்.. அப்படித்தான்.. என் தேர்ட் இயரின் போது தான் டேவிட் என்னைக் காதலிப்பதாய்க் கூறினான்.."

"அதற்கப்புறம்.. இந்த ஒன்றரை வருடங்களாய்.. நாங்கள் தீவிரமாகக் காதலித்தோம்.. திருச்சியில் நாங்கள் சேர்ந்து சுற்றாத இடமில்லை..."

"யெஸ்.. இந்த ஒன் அன்ட் ஹாஃப் இயர்ஸ்.. நாங்ககளும் தீவிரமாய்க் காதலித்தோம்.. சென்னையி லிருக்கும் எல்லா இடங்களிலும் சந்தித்துக் கொண்டோம்..."

"அவள் அழகால் நான் கவரப்பட்டேனான்னு எனக்குத் தெரியாது.. ஆனால்.. மணிஷா.. என்னையே சுற்றிச் சுற்றி வந்தாள்.. அவளுக்கு நான் என்றால் உயிர்..."

ஏனோ.. இதைக் கேட்டதும் சசிரேகாவிற்கு மனம் வலித்தது.. அவள் கீழே தெரிந்த ஊரை வெறித்துப் பார்த்தாள்.. அவளது மனநிலையை உணராமல் ரஞ்சன்.. தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தான்..

"என்னுடன் வாழும் வாழ்க்கையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.. சில சமயம்.. என்னை அளவுக்கு மீறிக் கொஞ்சுவாள்.. எல்லை மீறிப் பழகுவாள்.. எனக்கு அது மட்டும் உடன்பாடாய் இருக்காது.. விலகிவிடுவேன்.."

எப்படி.. தன்னைப் போலவே.. இவனும் இருந்திருக்கிறான் என்று சசிரேகாவிற்கு ஆச்சரியமாக இருந்தது..

"அது.. நம் குடும்பத்தின் வளர்ப்பு முறையாக இருக்கலாம்..."

"ஏன்.. அப்படிச் சொல்கிறாய்..?"

"இல்லை.. டேவிட்டும்.. என்னிடம் எல்லை மீற முயல்வான்.. எனக்கு அது பிடிக்காது.. அதில் அவனுக்குக் கோபம் உண்டு..."

இயல்பாகச் சசிரேகா இதைக் கூறிவிட்டாள்.. ரஞ்சனுக்கு முகம் கறுத்து விட்டது.. அவன் மனதிற்குள் கோபப்பட்டான்..

'எல்லை மீற முயன்றானா...? எதுவரை எல்லையாக நீ அவனை அனுமதித்தாய்...'

அவனது மனதிற்குள் அந்த முகம் அறியாத டேவிட்டின் மேல் ஒரு காழ்ப்புணர்ச்சியும்.. கோபமும் உருவாகின..

"ம்ம்.. அவனை உனக்கு ரொம்ப பிடிக்குமா..?" ரஞ்சன் பட்டென்று இதைக் கேட்டு விட்டான்..

சசிரேகாவின் புருவம் உயர்ந்தது.. இயல்பான கோபம் அவளுள் எழுந்தது.. ரஞ்சனின் முக வேறுபாட்டை மனதிற்குள் குறித்துக் கொண்டாள்..

"உங்களுக்கு மணிஷாவைப் பிடிக்காதா..?" அவள் நிதானமாய்ப் பதில் கேள்வி கேட்டாள்...

"நான் கேட்டதற்குப் பதில் சொல்லு..."

"இதுவும் ஒரு வகையில் பதில்தான்.."

"ரேகா.. மணிஷா என்னிடம் நெருக்கமாகப் பழக முயல்வாள்.."

"நான் அப்படி டேவிட்டிடம் பழக முயன்றேனான்னு கேட்கிறீர்களா..?"

'இவள் மிகவும் புத்திசாலி...' என்று நினைத்துக் கொண்டான் ரஞ்சன்..

"இதோ பார்.. நானும் மனிதன்தான்.. எனக்கும் உணர்வுகள் உண்டு..."

"நான் இல்லையென்று சொன்னேனா...?"

"மணிஷாவிற்கு நான் இடம் கொடுத்தது இல்லை.."

"ரஞ்சன் ப்ளீஸ்.. நான் எதையும் உங்களிடம் மறைக்கவில்லை.. நீங்கள் கேட்டு.. நான் டேவிட்டைக் காதலித்ததைப் பற்றிச் சொல்லவில்லை.. அவன் இன்டலிஜென்ட் ஸ்டூடன்ட்.. ஸ்மார்ட்டாக இருப்பான்..

காலேஜில் புட்பால் சேம்பியன்.. என்னிடம் காதல் சொன்னான்.. காலேஜில் அவன் மேல் ஒரு ஹீரோ இமேஜ் இருந்தது.. நானும் ஓகே சொன்னேன்.. நாங்கள் மேரேஜ் பண்ணிக் கொள்ள முடிவெடுத்தோம்.. அவ்வளவு தான்.. மற்றபடி... அவன்.. காதலி என்பதால் தொட்டுப் பேச ஆசைப்படுவான்.. எனக்கு அது பிடித்தது இல்லை.. அவாய்ட் பண்ணி விடுவேன்.. இதையும் நான் இயல்பாகத்தான் உங்களிடம் சொல்கிறேன்.. தொட்டுப் பேசியிருந்தால்.. அதையும் உங்களிடம் சொல்லி யிருப்பேன்.. எனக்கு மறைத்துப் பேச வராது..."

ரஞ்சன் இப்போது கொஞ்சம் அமைதியடைந்தான்.. சசிரேகா முன் போலவே வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள்..

"என் மேல் கோபமா ரேகா..?"

"தெரியவில்லை..."

"இப்படிச் சொன்னால்.. நான் எப்படி எடுத்துக் கொள்வது...?"

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால் உங்களுக்கும் உணர்வுகள் இருக்கிறது என்று என்னிடம் சொன்னீர்களே.. என் உணர்வுகளைப் பற்றிக் கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தீர்களா...?"

"ரேகா..."

"எனக்கும் உணர்வுகள் உண்டு ரஞ்சன்.. என்னிடம் தயவு செய்து இன்னொரு முறை மணிஷாவைப் பற்றிப் பேசாதீர்கள்.. அதே போல் நீங்களும் டேவிட்டைப் பற்றி என்னைப் பேச வைக்காதீர்கள்.."

"ஐ ஆம் ஸாரி..."

"திரும்ப முடியாத ஓர்வழிப் பாதையில் நாம் பயணம் செய்து கொண்டு இருக்கிறோம்.. இதில் கடந்த காலத்தைப் பற்றிய நினைவுகள் எதற்கு..?"

"நான் இனிமேல் இதுபோல் பேச மாட்டேன்.."

"தேங்க்ஸ்.. நானும்.. இதுபோல் இனிப் பதில் சொல்ல மாட்டேன்.."

அவர்கள் இருவரும் மலையை விட்டு இறங்கும் போது.. மனம் லேசாக இருப்பதை உணர்ந்தார்கள்.. அந்தி காலம் மெதுவாய் முடிந்து நிலவு வானில் பவனியைத் தொடங்க உதித்தது..

## 22

"நம்ம காரை எடுத்துக்கிட்டுப் போடா.. இன்றைக்கு ஒரு நாள் இருந்து விட்டுக் காலையில் கிளம்பி வந்து விடுங்கள்.. பக்கம்தானே.. என்னதான் இருந்தாலும்.. உன் தாய் மாமன் வீட்டிற்கு விருந்துக்குப் போகாட்டி ஊரில் நாலுபேர்.. நாலுவிதமா பேசுவாங்கப்பா.." மகனிடம் லிங்கய்யன் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்..

"அப்பா.. நான் பரவாயில்லை.. மாமா வீடு.. ஒரு நாள் இருந்து விட்டு வருவேன்.. ரேகா.. ஏற்கெனவே.. கிராமத்தில் இருந்து பழக்கமில்லாதவள்.. அவளைப் போய்.. நம்ம வீடு இல்லாமல்.. வேறு ஒரு வீட்டில் எப்படித் தங்க வைப்பது...?" ரஞ்சன் மறுப்பாகக் கூறினான்..

கோதை நாச்சியார் பிறந்த வீட்டின் மீது பற்றுக் கொண்டவள்.. அவள் ரோசமாக நிமிர்ந்தாள்..

"இங்கே பாரு ரஞ்சா.. ஒரு பொண்ணு வாழ்க்கைப் பட்டு.. வாழ வந்திட்டா அவளுக்கு வாக்கப்பட்டு வந்த வீடுதான் சகலமும்.. உன் பெண்டாட்டி லண்டனில் பிறந்து.. அமெரிக்காவில் படித்தவளாகவே இருக்கட்டும்.. அதுக்காக.. என் பிறந்த வீட்டிற்கு விருந்துக்குப் போக நீ விருப்பம் செப்பினால் நல்லா இருக்காது.. ஆமா சொல்லிட்டேன்.."

"அம்மா.. இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு என்மீது கோவிச்சுக்கறீங்க.. நான் என்ன மாமா வீட்டிற்கு அவளைக்

கூப்பிட்டுக்கிட்டுப் போக மாட்டேன்னா சொன்னேன்..? காலையில் போய்விட்டுச் சாயந்திரம் வந்து விடுகிறேன்னுதானே சொன்னேன்..?"

"ஒரு நேரம் கை நனைக்கிற அளவுக்கு.. என் பிறந்த வீடு உனக்கு இளப்பமாகப் போய்விட்டதா..? நீ பெரிய குபேரன் வீட்டு மருமகன்.. தாய் மாமன் வீட்டை மதிச்சு.. நீ போய் ஒருநாள் அங்கே தங்கினால் உன் மாமனார் கோவிச்சுக்குவாரா...?"

"ஏம்மா.. நாம இங்கே தோப்பூரில்தானே இருக்கிறோம்.. எங்கேயோ.. சென்னையில் இருக்கிற மனுசங்களை எதுக்கு வாதுக்கு இழுக்கறீங்க.."

"ஓஹோ.. உன் மாமனார் வீட்டைச் சொன்னால் உனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறதோ.. நேத்து இந்நேரம் வந்த மாமனார் உசத்தியாப் போய் விட்டார்.. காலம்.. காலமாய் இருந்த தாய் மாமன் உனக்குத் தாழ்ச்சியாகப் போய் விட்டார்.. அப்படித்தானேடா..."

தாயும்.. மகனும் வழக்கடித்துக்கொண்டு இருந்தார்கள்.. அதில் தலையிடமுடியாத சோமய்யனும்.. லிங்கய்யனும் பேசாமல் இருந்தார்கள்.. சொற்போர் உச்ச கட்டத்தை அடைந்த போது...

"அத்தை.. நான் அங்கே ஒருநாள் தங்கி இருக்கிறேன்.. எனக்கு அதில் ஒன்றும் கஷ்டமில்லை.. இவராய் எதையோ சொல்கிறார்.. உங்கள் பிறந்த வீடு நம்வீடு போலத்தானே.. அங்கே தங்குவதில் எனக்கென்ன சங்கடம்..?" என்று சசிரேகா ஊடே தலையிட்டுக் கூறினாள்..

"ரேகா..." என்று ரஞ்சன் ஏதோ பேச முயன்ற போது..

"இல்லைங்க.. நாம் போகிறோம்..." என்று கூறிவிட்டாள் சசிரேகா..

மகனை முறைத்தவாறு கோதை நாச்சியார் உள்ளே சென்று விட.. ரஞ்சன் தாயைச் சமாதானப் படுத்தப் பின்னாலேயே சென்றான்.. சசிரேகா மாடியேறி அவர்களுடைய அறைக்குச் சென்று விட்டாள்..

கட்டிலில் அமர்ந்து.. ஒரு நாளைக்குத் தேவையான மாற்று உடைகளையும்.. மற்றவற்றையும் அவள் ஒரு தோள் பையில் அடுக்கிக் கொண்டிருந்தபோது ரஞ்சன் அறைக்குள் வந்தான்..

"ஏன் அப்படிச் சொன்னாய் ரேகா..." என்று வினவினான்..

"நீங்களேன் அப்படி மறுத்துப் பேசினீங்க.." சசி ரேகா தலையை நிமிர்த்தாமல் பதிலுக்கு வினவினாள்..

"எப்போதுமே.. கேள்விக்குப் பதிலாய்க் கேள்விதான் கேட்பாயா..?"

"வேறு என்ன செய்வது...?"

"அந்த வீட்டில் வசதி பத்தாது.."

"சமாளித்துக் கொள்கிறேன்..."

"அதுதான் எதற்காக...?"

"அத்தையின் கோபத்தைக் கவனித்தீங்க இல்லையா..? அதைப் பார்த்த பின்னாலும் இப்படிக் கேட்கறீங்க...?"

"அம்மா அப்படித்தான் பேசுவாங்க.. நாம்தானே.. நம் வசதியைப் பார்க்கணும்..."

"இல்லை ரஞ்சன்.. வொய்பிற்காக.. தாய் வீட்டுச் சொந்தத்தை நீங்கள் மதிக்கவில்லைன்னு அவங்க நினைக்கிறாங்க.. இதை வளர விடக் கூடாது..."

"ஆனாலும் ரேகா..."

"ப்ளீஸ் ரஞ்சன்.. நாம் கிளம்பலாம்..."

ரஞ்சன் வேறு வழியின்றித் தோளைக் குலுக்கிக் கொண்டு கிளம்பினான்.. அவர்கள் மாடியிலிருந்து இறங்கி வந்த போது.. கோதை நாச்சியார் முகம் மலர.. முக மலர்ச்சியுடன்.. மருமகளின் தலையில் பூவை வைத்து விட்டாள்..

"நீரும்.. நெருப்பும்.. ஒரே இடத்தில் இருக்குன்னா.. அது உங்க அம்மாகிட்டத்தான்.. பார்த்துக்க.." பேத்தியின் காதைக் கடித்தாள் ராஜலட்சுமி..

"ம்ஹூம்.. உதாரணம் சொல்லக்கூட உங்களுக்குப் பழைய படம்தான் கிடைக்குது.." என்று பெருமூச்சு விட்டாள் ராகினி..

செம்மண் சாலையில் ஓட ஆரம்பித்த காரில்.. ரஞ்சனின் அருகே அமர்ந்து.. மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தாள் சசிரேகா...

"என்ன யோசனை ரேகா...?"

"ஏன் அத்தைக்கு.. அவங்க பிறந்த வீட்டிற்கு நாம் போகாததில் கோபம் வந்தது...?"

"அதுவா.. என் தாய் மாமா வீட்டில் பெண் இருக்கு.."

"அப்படின்னா...?"

"ம்ம்.. இப்படிச் சொன்னால் உனக்குப் புரியாது இல்லையா.. உனக்குப் புரியம்படியே சொல்கிறேன்.. கேள்.. என் தாய் மாமாவிற்கு ஒரு மகள் இருக்கிறாள்.. பெயர் பூங்கொடி.. அவளை எனக்குக் கல்யாணம் பண்ணித் தரணும்னு மாமா நினைத்தார்.. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதாய்ப் போச்சு.. அதனால் அம்மாவுக்குக் கோபம்.."

"ஓ..."

சசிரேகா கொஞ்ச நேரம் பேசாமல் வந்தாள்.. பின் மெதுவான குரலில் வினவினாள்..

"அந்தப் பூங்கொடி அழகாய் இருப்பாளா...?"

ரஞ்சன் அவளது கேள்வியைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனான்.. அதன் அர்த்தம் ஒன்றாகத்தான் இருக்க முடியும்.. என்று அவனது மனது சொல்லியது.. ஆனாலும்.. இது எப்படி..? மணிஷாவும்.. டேவிட்டும்... அவளுக்கும்.. அவனுக்கும் இடையே திரை போட்ட விட்ட பின்பும்.. இது போன்ற பொறாமை உணர்வு அவளது உள்ளத்தில் எழுவது சாத்தியம் தானா...?

இந்த நினைவுகளைப் புறம் தள்ளி.. அவன் நெஞ்சம் மகிழ்ந்தது நிஜம்..

"உன்னை விட அழகில்லை..."

எதைச் சொன்னால் அவள் முகம் மலருமோ.. அதைச் சொன்னான் அவன்.. அவனது கணிப்பு பொய்க்கவில்லை.. சசிரேகாவின் முகம் மலர்ந்தது..

"நானே நானா.. யாரோதானா...

மெல்ல.. மெல்ல மாறினேனா...

தன்னைத் தானே.. மறந்தேனே...

என்னை நானே கேட்கிறேன்..."

காரில் சிடியில் பாடல் ஒலித்தது..

## 23

ரஞ்சனின் தாய்மாமா வீடு.. மிகவும் பழமையான மாடி வீடாக இருந்தது.. அவர்களுக்கு ஆரத்தி எடுத்து அவனது மாமா மகள் பூங்கொடி விட்ட பெருமூச்சில்.. அவள் கையிலிருந்த ஆரத்தி நீர் சூடானது...

"இவள் தான் பூங்கொடியா...?" என்று சசிரேகா கேட்டுக் கொண்டிருந்த போதே..

"என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்...?" என்று நொடித்தாள்.. பாவாடை.. தாவணியில் இருந்த அந்தப் பூங்கொடி...

"உன் அத்தை மகன்தான் சொன்னார்.."

"நிஜமாகவா.. கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாலும்.. என் அத்தானிற்கு என் நினைப்புத்தானா...?"

பூரித்துப் போய் விட்டாள் அந்தப் பூங்கொடி.. அவளின் மயக்கப் பார்வையைக் கண்டும்.. காணாதவன் போல்

உள்ளே சென்ற ரஞ்சன்..

"சும்மாவாச்சும் இருக்கிறாயா...? ஏன் அவளைக் கிளப்பி விடுகிறாய்..." என்று சசிரேகாவின் காதோரம் கூறினான்..

"பின்னே.. அவள் என்னை வில்லி போல் பார்த்துக் கொண்டு நிற்கிறாளே.. நான் வராமல் இருந்திருந்தால்.. இவள் உங்கரை மேரேஜ் பண்ணியிருப்பாள் என்று அவள் நினைக்கிறாள்.. நீங்கள் என்னை மேரேஜ் பண்ணிக் கொண்டதே உங்கள் வீட்டாருக்காகத்தான்.. ஆக்சுவலாய் நீங்கள் மணிஷாவைத்தான் மேரேஜ் பண்ணி இருப்பீங்கன்னு இவளுக்குத் தெரியாது... பாவம்.."

"இப்போது ஏன் மணிஷாவை இழுக்கிறாய்...?"

ரஞ்சன் கோபத்துடன் முகம் திருப்பியபோது.. பூங்கொடி அவனுக்கு எதிரே காபித் தம்பளரோடு வந்து நின்றாள்.

"ஏன் அத்தான் கோபமாக இருக்கீங்க.. வீட்டில் பெரியவங்க உங்க கல்யாணத்தை வேறு இடத்தில் முடிவு பண்ணினா நம்ம சொந்தம் விட்டுப் போகுமா அத்தான்..?" என்று வேறு அவள் பங்குக்கு அவள் உசுப்பேற்றி விட்டாள்..

"ம்ம்.. நிஜம்தான் பூங்கொடி.. உன் அத்தானின் கல்யாணத்தைப் பெரியவங்க தான் முடிவு பண்ணிட்டாங்க.. பாவம்.. உன் அத்தானுக்கு என்னை மேரேஜ் பண்ணிக்கணும்கிற எண்ணம் கொஞ்சம் கூட இல்லை, தெரியுமா...?" சசிரேகா.. எரியும் தீயில் எண்ணெயை ஊற்றினாள்..

"அச்சச்சோ.. பிடிக்காத பெண்டாட்டியோடு தான் என் அத்தான் வாழ வேண்டுமா..?" பூங்கொடி ரஞ்சனுக்காகப் பரிதாபப் படுவது போல, சசிரேகாவை முறைத்தாள்..

ரஞ்சன் கோபத்துடன் பேச வாய் திறந்த போது.. வீட்டுக்குள்ளேயிருந்து அழைக்கும் குரல் கேட்டு.. பூங்கொடி ஓடி விட்டாள்...

"ரேகா.. திஸ் இஸ் தி லிமிட்...." அடிக்குரலில் சீறினான் ரஞ்சன்..

"இட் இஸ் ஜஸ்ட் பார் ஃபன்.." சசிரேகா மெதுவாகக் கூறினாள்..

"ஓ.. என் உணர்வுகளைக் காயப்படுத்துவது உனக்கு வேடிக்கையா...?"

"அதில் ஓரளவு உண்மையும் உண்டே..."

"அப்படியென்ன உண்மையை நீ கண்டு விட்டாய்..?"

"நான் உங்களுக்குப் பிடிக்காத பெண்டாட்டிதானே.."

"ஷட் அப்.. அப்படிப் பார்த்தால்.. நானும் உனக்குப் பிடிக்காத புருஷன்தானே.. நீ என்னை என்ன இஷ்டப்பட்டா கல்யாணம் செய்து கொண்டாய்..? உன் வீட்டாரின் நிர்பந்தத்திற்காகத்தானே என்னைக் கல்யாணம் செய்து கொண்டாய்..? நீயும் அந்த டேவிட்டைத்தானே கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்பட்டாய்...?"

ரஞ்சன் சரியாகக் கேட்டு விட்டான்.. சசிரேகாவின் முகம் இருண்டு விட்டது.. அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை...

அவள் எப்படி டேவிட்டை மறந்தாள்..? ரஞ்சன் சொல்வதும் உண்மைதானே.. அவள் ரஞ்சனை மணக்காமல் இருந்திருந்தால் டேவிட்டை மணந்தி ருப்பாள் அல்லவா...?

சட்டென்று எழுந்து ஜன்னலோரம் சென்று நின்று கொண்டாள் சசிரேகா.. இப்படி ஒரு துன்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் பெற்றவர்கள் மீது அவளுக்குக் கோபம்... கோபமாய் வந்தது..

"ஏம்மா எழுந்துட்டே.. அடியே விசாலம்.. இவங்களுக்கு மாடி ரூமைக் காட்டு.. போய்த் தூங்கி எழுந்திருக்கட்டும்..." என்றார் அங்கு வந்த ரஞ்சனின் தாய் மாமன் கோதண்டராமன்..

"இதோ.. பூங்கொடி வருகிறாளுங்க.." உள்ளேயிருந்து விசாலாட்சியின் குரல் மட்டும் வந்தது.. தொடர்ந்து பூங்கொடி வந்தாள்..

"வாங்க அத்தான்.." என்று சசிரேகாவை அழைக்காமல் ரஞ்சனை மட்டும் அழைத்துக் கொண்டு மாடிப்படி ஏறினாள் பூங்கொடி..

ஏன் ரஞ்சன் இங்கே தங்க மறுத்து அவ்வளவு போராடினான் என்று அப்போதுதான் சசி ரேகாவிற்கு விளங்கியது..

பேசாமல் திரும்பி.. ஊருக்குப் போய்விடலாமா என்று ஒரு கணம் யோசித்தாள் அவள்.. ஆனால்.. கோதை நாச்சியாரின் கோபமும் நினைவில் வந்து.. அவளை நிறுத்தியது.. இருந்தாலும்.. தானாய் மாடிக்குப் போக அவளுக்கு விருப்பமில்லை..

அவளது மனதில் ஓடும் எண்ணங்களைப் படித்தவன் போல அவளை ஊடுருவிப் பார்த்த வண்ணம்.. ரஞ்சன் அவளருகே வந்தான்.. குனிந்து அவளது பையை எடுத்துக் கொண்டான்..

"வா.. போகலாம்..." என்றபடி அவளது கரம் பற்றி அழைத்தான்..

சசிரேகாவின் உடல் சிலிர்த்தது.. அவள் முகம் சிவந்தது.. அதைப் பார்த்த ரஞ்சனின் மனதில் சற்று முன் தோன்றியிருந்த கோபம் மறைய.. அவன்.. சசிரேகாவின் கையை விடாமல் இறுக்கிப் பிடித்த வண்ணம் மாடியேறினான்.. அதைத் திரும்பிப் பார்த்த பூங்கொடி வாய் மூடிக் கொண்டாள்..

"இந்த ரூம்தான் உங்களுக்காக நானே சுத்தம் பண்ணி வைத்திருப்பது அத்தான்..." என்று பூங்கொடி கூறவும்..

"தேங்க்ஸ் பூங்கொடி.. எனக்காகவும்.. ரேகாவிற் காகவும் இந்த ரூமை ரெடி பண்ணி வைத்திருக்கிறாயே.. வெரிகுட்..." என்று நன்றி கூறினான் ரஞ்சன்..

பூங்கொடியின் முகம்.. மேலும் மாறியது.. அவள் எதிரேயே சசிரேகாவின் தோள் மேல் தன் கையைப் போட்டு.. அணைத்தவாறு ரஞ்சன் அறைக்குள் நுழையவும்.. அவள் கோபமாய்க் கீழே இறங்கிச் சென்று விட்டாள்..

அவள் போன பின்னாலும் ரஞ்சனின் கரம்.. தன் தோளிலிருந்து விலகாததைக் கண்ட சசிரேகா..

"பூங்கொடி போய் விட்டாள்.." என்று கூறினாள்..

"அதனால் என்ன...?"

"இனியும் நடிக்க வேண்டியதில்லை.. கையை எடுங்கள்.."

ரஞ்சன் அப்போதும் தன் கரத்தை அவளது தோளில் இருந்து விலக்காமல் அவளது தோளை இறுகப் பற்றித் தன் புறமாய்த் திருப்பினான்.. அவளது விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தான்..

'ஏன் இப்படிப் பார்க்கிறான்...?' அவள் தடுமாறினாள்.

"நடிப்பதற்காகத்தான் உன்னை நான் தொட வேண்டுமென்பதில்லை.. உன் கணவன் என்ற உரிமையிலும் தொடலாம்..." அவன் நிதானமாய் அவளது கன்னத்தில் தட்டிவிட்டு.. குளியலறைக்குள் புகுந்து கொண்டான்...

சசிரேகா.. உடல் நடுங்க.. அப்படியே கட்டிலில் அமர்ந்து விட்டாள்...

## 24

வெளியே மழை கொட்ட ஆரம்பித்து இருந்தது.. வரும் போது மேகங்கள் இல்லாமல் நிர்மலாய் இருந்த வானில்.. எப்படித் திடீரென்று மேகங்கள் சூழ்ந்து கருமை நிறமானது.. எப்படி இப்படியொரு தொடர்மழையைப் பொழிய ஆரம்பித்துது.. என்று யாராலும் கணிக்க முடியவில்லை..

சசிரேகாவிற்குக் குளிர ஆரம்பித்தது.. ஆனால் அவள் ஸ்வெட்டரோ.. சால்வையோ கொண்டு வரவில்லை.. சேலை முந்தானையை எடுத்துப் போர்த்திக் கொண்டு.. அறையில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

வெளியே பால்கனியில் நின்று கோதை நாச்சியாரின் தகப்பனாரான சீனிவாசனிடம் பேசிக் கொண்டிருந்த ரஞ்சன்..

"சரி தாத்தா.. இதோ வருகிறேன் தாத்தா..." என்றபடி அறைக்குள் வந்தான்.. சசிரேகாவைப் பார்த்ததும் விழிகளால் வினவினான்...

சற்று முன் கன்னம் தொட்டு விலகிச் சென்றவனின் முகம் பார்ப்பதைத் தவிர்த்த சசிரேகா..

"வரும் போது மழை வரும் போலத் தெரியவில்லை.. அதனால் சால்வை எதுவும் கொண்டு வரவில்லை..." என்று முணுமுணுத்தாள்..

"ஏன் அதை என் முகம் பார்த்துச் சொல்ல மாட்டாயா..?" ரஞ்சனின் குரலில் ஓர் விதச் சிரிப்பு இருந்தது..

சசிரேகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. ஜன்னல் வழி கொட்டும் மழையின் நீர்த் தாரையை வேடிக்கை பார்த்தபடி மௌனித்தாள்..

"நீ கூடத்தான் வரும்போது கலகலவென்று சிரித்துப் பேசிக் கொண்டு வந்தாய்.. இப்போது வாயிருந்தும் ஊமையாகி விட்டாய்.. அது போல்தான்.. வானிலையும் சட்டென்று மாறிவிட்டது.." என்ற ரஞ்சன்.. கட்டிலின் மீது கிடந்த போர்வையை எடுத்து விரித்து அவளுக்குப் போர்த்தி விட்டான்..

'இது ஏன்.. எனக்கு முன்னாலேயே தோன்றாமல் போய்விட்டது..'

சசிரேகா போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.. ரஞ்சனின் கைவிரல்கள் அவளது கழுத்தில் பட்டன.. சசிரேகாவின் உடலில் ஓர் வெதுவெதுப்பான உணர்வு பாய்ந்தது.. அதை அறிந்தவன் போல் அவளது கழுத்தில் தன் விரல்களைப் படியவிட்டவன்.. கையை விலக்கவில்லை.. அத்துடன் நில்லாமல் மெல்லிய குரலில் பாட வேறு செய்தான்..

"நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை...

நீருக்குள் மூழ்கிடும் தாமரை...

சட்டென மாறுது வானிலை...

பெண்ணே உன் மேல் பிழை..

நில்லாமல் வீசிடும் பேரலை..

சசிரேகா உடல் நடுங்கச் சட்டென்று போர்வையை உதறி எழுந்தாள்.. விலகி ஜன்னலருகே சென்று நின்று கொண்டாள்.. அவள் உடலில் உணர்வுகள் பிரவாகமாய்ப் பொங்கி எழுந்தன.. ரஞ்சன் அழுத்தமான காலடியோசையுடன் அவளை நெருங்கினான்..

"பொன் வண்ணம் பூசிய காரிகை...

பெண்ணே...! நீ காஞ்சனை..

ஓ சாந்தி.. சாந்தி.. ஓ சாந்தி..

உன் விழியில்.. விழியில்.. எனை ஏந்தி

ஏன் சென்றாய்.. சென்றாய்.. எனைத்தாண்டி..

என்றும் நீயே எந்தன் அந்தாதி..."

ரஞ்சனின் குரல் அவளது காதோரம் கேட்டது.. அவனது கைகள் அவளைப் பின்புறமிருந்து.. தோள் தொட்டுத் தழுவிக் கொண்டன.. அவன் அவள் பின்னங்கழுத்தில்.. கூந்தல் கற்றைகளுக்கு மேலே இதழ் பதித்தான்.. சசிரேகா தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் மயங்கி நின்றாள்..

ரஞ்சனின் கரங்கள்.. அவளது தோள் தடவி.. அவளைத் தன் புறம் திருப்பின.. அவனது முகம் பார்க்க முடியாமல் அவளது விழிகள் மூடிக் கொண்டன.. ஒரு கரத்தால் அவளது முகத்தை நிமிர்த்தி அவளது மூடிய இமையில் இதழ் பதித்த ரஞ்சன்.. கண்மூடிக் கிறங்கி நின்று அவளது முகத்தையே பார்த்தான்..

இந்தப் பரவசத்தை ஒரு போதும் அவன் மணிஷாவிடம் கண்டதில்லை.. அதே போல.. ஒரு போதும் மணிஷாவை நெருங்க அவன் விரும்பியதும் இல்லை.. அவள் தான் அவனிடம் நெருங்கி வருவாள்.. வெறும் உடல் வேட்கையாகவே அது இருக்கும்...

ஆனால் இப்போது.. அவனது கைகள் பட்டு.. தளிர்க்கொடியாய் நடுங்கி நிற்கும் அவளது மேனி.. ஏன் அவனை அவள் பால் ஆகர்ஷிக்கிறது என்று புரியாத வனாய்.. காதலுடன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான் அவன்.. அவள் தொய்ந்தாள்.. ரஞ்சனின் இதழ்கள் அவளது இதழ் தேடிக் குனிந்தன.. தேடுதலை முடித்து விட்ட திருப்தியுடன் அவளது இதழோடு இதழ் பதித்தான்.. அதற்கு மேல் தாங்க முடியாதவள்.. அவன் மேல் சரிந்து.. அவன் மார்பில் முகம் புதைத்தாள்.. அவளது கைகள் அவனது முதுகுப் புறத்தைத் தழுவிக் கொண்டன..

அவளை ஆவேசமாய் இறுக்கிக் கொண்டவனின் மனதில் அவள் வேறு ஒருவனைக் காதலித்ததாய்த் தன்னிடமே கூறியவள் என்பது சுத்தமாய் மறந்து விட்டது..

அவனும் வேறு ஒரு பெண்ணைக் காதலித்தான் என்பதும் அவனுக்கும் மறந்து விட்டது..

அவன் நினைவில் நின்றது.. அவனும்.. அவளும்.. மட்டும்தான்.. ரஞ்சன் அவளது உச்சந் தலையில் முத்தம் பதித்தான்.. அவளது காதோரம் மெல்லிய குரலில் அழைத்தான்..

"ரேகா..."

"ம்ம்..."

"என்னைப் பாரேன்.."

"ஊஹும்..."

"ஏன்.. என்னை உனக்குப் பிடிக்கவில்லையா..?"

"ரஞ்சன், ப்ளீஸ்.."

"ஐ லவ் யு ரேகா..."

"ரஞ்சன்.."

உணர்வு மிகுதியால் சசிரேகா அழுது விட்டாள்.. அவன் கூறும் இந்த வார்த்தைகளை.. அவளால் அவன் முகம் பார்த்துக் கூற முடியுமா..? ஆண்களால் மட்டும் எப்படி.. நினைத்ததை உடனே பேசிவிட முடிகின்றது...?

"ஏன் பேசாமல் இருக்கிறாய் ரேகா..."

"ம்ம்.."

"உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா...?"

அவள் முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் தெரிந்த தவிப்பில் அவன் பேச்சிழந்தான்.. அவளது முகம் பற்றி அவளது நெற்றியில் முத்தமிட்டான்.. அவள் மீண்டும் அவன் மார்பில் முகம் புதைத்தாள்..

"இன்றைக்கு ராத்திரிக்கு இங்கேயே தங்குகிறீர்கள்னு தங்கச்சி சொல்லியிருக்கு மாப்பிள்ளை.. நீங்க கிளம்பிப் போகணும்னு அடம் பிடித்தால் எப்படி..?" கோதண்ட ராமன் மறுத்தார்..

"இல்லை மாமா.. எனக்கு ஒரு முக்கியமான வேலை தோப்பூரில் இருக்கு.." பவ்யமாய்ப் பதில் சொன்னான் ரஞ்சன்..

"அது என்ன.. அவ்வளவு முக்கியமான.. ராத்திரியில் பார்க்கிற வேலை உங்களுக்கு.. தோப்பூரில் காத்திருக்கு..?" இடக்காக மடக்கினார் கோதண்ட ராமன்..

ரஞ்சன் சசிரேகாவைப் பார்த்து மெதுவாக விழிசிமிட்ட.. அவளது முகம் சிவந்தது.. இரவினில் அவன் பார்க்க விரும்பும் முக்கிய வேலை என்னவென்பது அவளுக்குத் தெரியாதா என்ன..?

அவன் தான் சற்று முன் அவளை அணைத்து முத்தமிட்டு அவளுடைய காதோரம் சொன்னானே..

"ஊஹும்.. இனித் தாங்காது ரேகா.. நாம்.. நம் வீட்டிற்குப் போய் விடலாம்..."

அவள் 'எதற்கு..?' என்று விழிகளால் வினவிய போது இப்போது போல அப்போதும் கண் சிமிட்டினானே...

"அதுவா.. அது.. இன்றைக்கு நைட்.. நம் வீட்டில் தான் நாம் தூங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.."

"ஏன்.. இங்கே படுத்தால் தூக்கம் வராதா..?"

"ஏய்ய்.. நீ தூங்குவதிலேயே குறியாய் இரு..."

"நைட்டில் வேறு என்ன செய்வது...?"

"அது எத்தனையோ இருக்கிறது.. அதை.. சென்டி மென்டாய்.. என் வீட்டில் ஆரம்பிக்க வேண்டுமென்று தான்

இந்தப் பாடுபடுகிறேன்.. புரிந்ததா...?"

அவளுக்கு முதலில் புரியவில்லை.. புரிந்த அடுத்த கணம் கன்னம் சிவந்தாள்..

"ஏன்டி.. இப்படி வெட்கப்படுகிறாய்...?"

"என்னது.. டீயா...?"

"ஆமாண்டி.. என் பெண்டாட்டி..."

"வொய்பென்றால் 'டீ' போட வேண்டுமா...?"

"எனக்கு அது தெரியாது.. ஆனால்.. என் தாத்தா என் பாட்டியை 'டீ' போட்டுத்தான் கூப்பிடுவார்.. என் அப்பாவும்.. அம்மாவை அப்படித்தான் கூப்பிடுவார்.. நான் என் பரம்பரைப் பெருமையைக் காப்பாற்ற வேண்டாமா..? சொல்லுடி..."

அவன் உல்லாசமாய் நகைத்தான்.. அவனது உல்லாசம் அவளையும் தொற்றிக் கொண்டது.. நாணத்துடன் எழுந்து அறைக்கு வெளியே பால்கனிக்குப் போய்.. மழையை வேடிக்கை பார்ப்பவள் போல் அமர்ந்து கொண்டாள்...

ரஞ்சன் அவளது முதுகை வெற்றிப் பார்வை பார்த்தது அவளுக்குத் தெரியாது.. அவனது உணர்வுகள் அவளை அப்பொழுதே ஆண்டுவிடத்துடிக்க.. அவன் கோதண்ட ராமனைத் தேடிப் போய்க் கிளம்பப்போவதாகச் சொன்னான்..

"ஏன் மாப்பிள்ளை.. இந்தத் தாய் மாமனுடன் விளையாடிப் பார்க்கணும்னு எத்தனை நாளாய்க் காத்திருந்தீங்க..."

"என்ன மாமா.. இப்படிச் சொல்கிறீங்க...?"

"வேறு எப்படிச் சொல்வது.. இடியும் மின்னலுமா வெளியே மழை கொட்டோ.. கொட்டுன்னு கெட்டித் தீர்த்துக்கிட்டு இருக்கு.. மையிருட்டில் மனுசக் கழுதை எதிரே வருவது கூட தெரியாது.. இப்படிக் கொட்டுகிற மழையில.. நடுராத்திரியில... நீங்க தோப்பூர் போய் இறங்கினால்.. என்

தங்கச்சி மகிழ்ந்து போய் என்னைப் பாராட்டிப் பேசும்ன்னா நினைக்கிறீங்க.. என்னைத் தள்ளிவச்சிரும் மாப்பிள்ளே..."

'என்னடா.. இது இந்த மனுசன் என் நிலைமை புரியாமல் காலுக்குச் சங்கிலி கட்டுகிறாரே...'

ரஞ்சன் பல்லைக் கடித்தபடி வெளியே பார்த்தான்.. கன்னங் கரேலென்று கும்மிருட்டு அச்சுறுத்தியது.. இடியும்.. மின்னலும் வானத்தைத் தடதடக்க வைக்க.. நிற்காமல் மழை கொட்டிக் கொண்டிருந்தது..

"கரண்டு போனாலும் போயிரும் மாப்பிள்ளை.. காலாகாலத்தில் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு எல்லோரும் படுக்கப் போங்க..."

'அடப்போய்யா.. இந்தச் சாப்பாட்டை என் வீட்டில் நான் சாப்பிட்டுக் கொள்ள மாட்டேனா...? மனுசனுடைய நிலைமை புரியாம உபத்திரவம் பண்ணுகிறீயே...'

எரிச்சலுடன் ஏனோ.. தானோவென்று சாப்பிட்டு முடித்தான் ரஞ்சன்.. அவனும்.. சசிரேகாவும் கை கழுவி முடிக்கவும்.. கரண்ட் போகவும் சரியாக இருந்தது.. இருட்டில் பயந்து நின்றவளை.. அணைத்துக் கொண்டான் ரஞ்சன்..

"பயப்படாதே.. நான் பக்கத்தில்தான் இருக்கிறேன்.."

"இங்கே ஜெனரேட்டரெல்லாம் இல்லையா...?"

"உஷ்.. சத்தமாய்க் கேட்டுவிடாதே.. இது அம்மாவின் பிறந்த வீடு.. அவங்க சண்டைக்கு வந்து விடுவாங்க..."

சசிரேகா வாய் மூடிக் கொண்டாள்.. அதற்குள் பூங்கொடி கையில் பெரிய மெழுகுவத்தியுடன் வந்து விட்டாள்..

மெழுகுவத்தியின் வெளிச்சத்தில்.. ரஞ்சனின் அணைப்பில் சசிரேகா இருப்பதைப் பார்த்தவளுக்கு உடல் எரிந்தது..

"அத்தான்..! வாங்க போகலாம்..."

"எங்கே..."

"ரூமிற்குத்தான்..."

"அதற்குப் போக எங்களுக்கு வழி தெரியும்.. நாங்கள் போய்க் கொள்ளுகிறோம்.. நீ மெழுகுவத்தியைக் கொடுத்துவிட்டு.. தூங்கப்போகும் வழியைப் பாரு..."

ரஞ்சன் மெழுகுவத்தியை வாங்கிக் கொண்டான்.. சசிரேகா இருட்டில் கால் தடுமாறி விழாமலிருக்க.. கை கொடுத்து அழைத்துக் கொண்டு போனவனை.. உறுத்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் பூங்கொடி... அவள் மனதில் புயல் அடித்தது...

அதை உணராத ரஞ்சன்.. சசிரேகா வந்தவுடன் அறைக் கதவைச் சாத்தி.. தாழிட்டான்.. மெழுகுவத்தியின் வெளிச்சத்தில்.. தேவதை போல் நின்று கொண்டிருந்தவளின் தோற்றத்தை ஆசையுடன் பார்த்தான்..

அதை உணராத சசிரேகா.. தோள்பையைத் திறந்து.. நைட்டியை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தாள்.. சற்று நேரத்தில் வெண்மை நிற நைட்டியுடன் திரும்பி வந்து.. கட்டிலில் அமர்ந்தாள்.. ரஞ்சன் அவளை நெருங்கினான்..

# 26

"ஸ்ஸ்... கரண்ட் இல்லையே..."

"அதனால் என்ன கண்ணம்மா.. மெழுகுவத்தியின் வெளிச்சமே நமக்குப் போதுமே..."

'இவன் எதற்குத் திடீரென்று கண்ணம்மா போடுகிறான்..' என்று நினைத்துக் கொண்டாள் சசிரேகா..

"இங்கே ஏஸி கூட இல்லை.."

"இந்த மழை நேரத்துக் குளிர் காற்றில் ஏஸி வேறு வேண்டுமா...?"

ரஞ்சன் அவளை அருகே இழுத்தான்.. சசிரேகாவிற்கு... அவனது அழைப்பின் நோக்கம் புரிந்தது.. அவளது உடல் நடுங்கியது..

'இப்போதே.. இது வேண்டுமா...?' என்று அறிவு கேட்டது.. ஆனால் அவன் வேண்டுமென்று அவளது உள்ளமும்.. உடலும்.. ஒரு சேரக் கேட்டபோது.. அறிவின் குரல் அடங்கி விட்டது.

மழை நேரத்துக் குளிர் காற்றும், பழங்காலத்து மாடியின் சுவர்களில் இருந்த ஈரப் பசை உருவாக்கிய குளிரும் சேர்ந்து சில்லிட்டுப் போயிருந்த அவளது உடல்.. அவனது அண்மையை வேண்டியது.. அதை அவனது ஆண்மையும் உணர்ந்து கொண்டது..

அவள் இசைந்து தழுவலில் அடங்கிய போது ரஞ்சன் அவளை வேட்கையுடன் ஆளத் துடித்து முத்தமிட்டான்.. அவளை அவன் இறுக்கிக் கொண்டபோது அவனுள் எதுவோ துடித்து எழுந்தது..

"ரேகா..."

"ம்ம்ம்..."

"எனக்கு நீ வேண்டும்..."

"ம்ம்ம்..."

"ஆனால்.. இது என் வீடில்லையே கண்ணம்மா.."

"ம்ம்ம்..."

"அதனால்.. அதனால்.. இதேபோல்.. நாளைக்கு இரவும்.. நீ.. என்னிடம் வர வேண்டும்..."

சசிரேகா பதிலளிக்காமல் அவனது தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.. அவளது குளிர் நீக்கும் போர்வையாக அரவணைத்துக் கொண்டவன்.. அவளது எலும்புகள் நொறுங்குமாறு இறுக்கி.. அணைத்துக் கொணடாள்..

அவள் காதில் வெகு நேரம் கிசுகிசுப்பாய்க் கதை பேசினான்..

சிலவற்றை ரசித்துக் கேட்டாள்.. சிலவற்றிற்குச் செல்லமாய்ச் சிணுங்கி.. "ச்சீ.." என்று அவன் மார்பினில் குத்தினாள்.. அவன் "ஹா.. ஹா..."வென்று சிரித்துக் கொண்டே அவளது கன்னத்தில் தன் கன்னத்தைப் பதித்துக் கொண்டான்..

"ரேகா.. என் பாட்டிக்குப் பழைய பாட்டென்றால் ரொம்ப பிடிக்கும்.."

"எனக்கும் அது தெரியுமே..."

"அதில ஒரு பாட்டு.. எனக்கு ரொம்பவும் பிடிக்கும்.."

"என்ன பாட்டு...?"

"உன் மேல ஆசை வைச்சேன்..

உத்தமியே மெத்தை யுண்டு...

சத்தியமா சொல்லுறேன்டி தங்க ரத்தினமே...

தாள முடியாது கண்ணே பொன்னு ரத்தினமே..."

அவளது காதோரம் அவனது மீசை குறுகுறுக்க.. அவனது கனத்த குரலில் இந்தப் பாடலைக் கேட்ட போது அவள் பேச்சிழந்தாள்...

"ஏதோ ஒருவகையில் என்னை இந்தப் பாட்டு பாதிக்கும் ரேகா.. எந்த வகையில் என்பது.. இப்போதுதான் எனக்குப் புரிகிறது..." என்று அவன் சொன்ன போது... சசிரேகாவின் உடல் குழைந்தது...

"இதைப் போல் இன்னொரு பாட்டு ஒன்றும் உண்டு.. கேளேன்...

உன்னை நான் பார்த்தது...

வெண்ணிலா மேடையில்...

அப்படின்னு ஆரம்பிக்கும்..."

ரஞ்சன் தொடர்ந்து பாடினான்..

"அன்று ஒருபாதி முகம்தானே கண்டேன்..

இன்று மறுபாதி எதிர்பார்த்து நின்றேன்.."

சசிரேகாவிற்கு அவன் சொல்ல வருவது புரிந்தது.. இது என்ன மாதிரியான இரவு.. என்று அவளுக்குச் சிலிர்ப்பாக இருந்தது..

எத்தனை இரவுகள் வந்தாலும் இந்த இரவை மறக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது..

உறவேயில்லாத இரவு.. ஆனால் உறவை உணர்த்தும் இரவு.. இந்த இரவு விடியக் கூடாது என்று அவள் ஏங்கினாள்.. கூடலில்லாத.. கூடல் கொண்ட இந்த இரவுக்கு நிகரேதும் இல்லையென்று மனம் தளும்பினாள்..

அவளைத் தன் மார்பினில் அள்ளிப் போட்டுக் கொண்டு அவளது கை விரல்களுடன்.. தன் கைவிரல்களைக் கோத்துக் கதை பேசிய ரஞ்சன்..

"உன் கைதான் எவ்வளவு மென்மையாக இருக்கிறது ரேகா.. பஞ்சு என்hறல்.. இதுதான் இலவம் பஞ்சு..." என்று வியந்தான்..

அவனது வலிமையான கை விரல்களின் மத்தியில் தன் விரல்களை விட்டு வைத்த சசிரேகா.. அவனது மார்பில் தலைசாய்த்து.. இனம் புரியாத அமைதி கொண்டாள்..

"ரஞ்சன்.. நான்..." அவள் தந்நிலை விளக்கம் சொல்ல முயன்ற போது...

"உஷ்..." என்று அவளது இதழ் மீது விரல் வைத்துத் தடுத்தான் ரஞ்சன்...

"இல்லை ரஞ்சன்.. நான் சிலவற்றைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.."

"எதற்காக ரேகா.. நமக்குள் இப்போது அந்தப் பழங்கதை எதற்கு...?"

"ஆனாலும்..."

"வேண்டாம் ரேகா.. இப்போது.. இந்த நொடியில்.. நீ என் மீது சரிந்து கிடக்கிறாயே.. இது மட்டும்தான் நிஜம்.. மற்றவையெல்லாம் பொய்.."

"இருந்தாலும்.. கடந்த காலம் என்பது.."

"எனக்கு வேண்டாம்.. எனக்கு நீ மட்டும்தான் வேண்டும்.."

அவன் வெறியோடு அவளைத் தன்னுடன் பிணைத்துக் கொண்டான்.. அவள் மேலிருந்து வந்த இதமான நறுமணம்.. அவனை எங்கோ அழைத்துச் சென்றது.. அவளது உடலில் தெரிந்த மென்மை.. அவனைக் காந்தமாய் இழுத்தது.. அவளது அண்மையை அவனது ஆண்மை வேண்டியது..

"ரேகா.. ஐ லவ் யு..." அவன் மீண்டும் சொன்னான்..

இதைச் சொல்ல வேண்டும் போல் அவளுக்கும் ஆசையாக இருந்தது.. ஆனால்.. எதுவோ ஒன்று அவளை அதைச் சொல்ல விடாமல் தடுத்தது.. ஒருவேளை.. அந்த மூன்று வார்த்தைகளை அவள் சொல்லியிருந்தால்.. ரஞ்சனின் மனம்.. அவளிடம் மயங்கிக் கிடந்த அந்த வேளையில் அவனது முடிகோதி.. அவனது காதோரம் இந்த வார்த்தைகளை அவள் உச்சரித்து இருந்தால் வேண்டாத பல விளைவுகளை அவள் தடுத்திருக்கலாமோ என்னவோ.. அவள் சொல்லாமல் விட்டுவிட்டாள்..

## 27

அதிகாலையில் சூரியன் உதித்த போது வானம் மேகங்கள் இல்லாமல்.. நிர்மலமாய்க் காட்சி தந்தது... கொட்டிய மழை நின்று.. பூமியில் தேங்கியிருந்த தண்ணீர்த் திட்டுக்கள் வடிய ஆரம்பித்திருந்தன.. அறையின் ஜன்னல் வழி வந்த வெளிச்சத்தில் கண் விழித்தான் ரஞ்சன்..

அவன் மார்பில் தலை சாய்த்து.. தோள் மேல் கை போட்டு.. அவன் கால் மேல் கால் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்த சசிரேகாவின் முகம் பார்த்தான்.. அவள் இதழ்களில் ஓர் புன்னகை உறைந்திருந்தது...

'வெட்கப் புன்னகை...' அவன் கள்ளச் சிரிப்புச் சிரித்தான்..

அவளை விலக்கி எழ மனமில்லாமல்.. அவளது உச்சந் தலையில் முத்தமொன்றைப் பதித்து விட்டு.. ஆசையுடன் அவளது கூந்தலைக் கோதினான்.. அவனது கைவிரல்கள் அவளது கன்னத்தில் பட.. அந்த ஸ்பரிசத்தில் விழித்துக் கொண்டாள் சசிரேகா.. கண் விழிக்காமல் அசைவை உணர்த்தி..

..... அவனிடமிருந்து விலகாமலே.. லேசாய் முணுமுணுத்தபடி அவனைக் கட்டிக் கொண்டாள் அவள்..

"என்னடா..." என்றான் அவன் காதலுடன்..

"ம்ம்ம்.. ரஞ்சன்.."

"சொல்லுடா..."

"நம் வீட்டிற்குப் போகலாம்..."

"நானும் அதற்குத்தானே துடித்துக் கொண்டிருக்கிறேன்.."

"எப்போதுதான் விடியும்...?"

"அப்போதே விடிந்து விட்டது..."

"நிஜமாகவா..."

அவள் அவசரமாகப் புரண்டு படுத்து.. கண்விழித்துப் பார்த்தாள்.. அறைக்குள் பரவியிருந்த வெளிச்சம் அவளுக்குக் குதூகலைத்தைத் தந்தது.. எழுந்து ஜன்னரோரம் போய் நின்றாள்.. அவள் பின்னால் வந்து ரஞ்சன் நிற்பதை உணர்ந்து கொண்டவளின் மனம் எதிர்பார்ப்பில் படபடத்தது..

ரஞ்சன் அவளது எதிர் பார்ப்பைப் பொய்த்துப் போக விடவில்லை.. அவளை நெருங்கி நின்று.. இருகரங்களால்

அவளது இடையை வளைத்தான்.. முதல் நாள் மாலை போல் அவளது பின்கழுத்தில் முத்தம் ஒன்றையும் பதித்தான்.. சசிரேகா கண்மூடி.. கிறங்கி நின்றாள்..

"மழை விட்டு விட்டது.." அவளது இதழ்கள் முணு முணுத்தன..

"ஆமாம்..." அவன் ஒற்றைச் சொல்லாய்ப் பதில் சொன்னான்..

"நாம் கிளம்பலாமா..?" அவள் விடுபட மனமில்லாமல் வினவினாள்..

"கிளம்பலாமே..." அவன் தன்னோடு அவளை இன்னும் இறுக்கிக் கொண்டான்..

"விட்டால்தானே கிளம்ப முடியும்..?"

"ச்சு.. விடுபடுவதில் அவ்வளவு ஆசையா உனக்கு..?"

அவள் சட்டென்று திரும்பி அவன் முகம் பார்த்தாள்.. அவளது விழிகள் கலங்கியிருந்தன.. அவன் ஆச்சரியமாய் அவளைப் பார்த்தான்..

ஒரு கோடீஸ்வரனின் மகள்.. இன்ஜினியரிங் படித்திருப்பவள்.. சென்னையில் பிறந்து வளர்ந்த நவநாகரிகப் பெண்.. வார்த்தைகளைத் தாங்க முடியாமல் கண் கலங்குகிறாளா...?

"ஏய்.. ஏன்டி...?"

"இப்படிச் சொல்லாதீங்க.."

"அதுக்காக...? இப்படியா கண் கலங்குவாய்...?"

"எனக்கு ஏனோ பயமாய் இருக்கிறது..."

"எதற்குப் பயம்...? நான்தான் உன் பக்கத்திலேயே இருப்பேனே.."

பக்கத்திலேயே இருப்பானா..? எப்போதும் இணை பிரியாமல் அவளுடன் வருவானா...? ஏனோ அவள் மனம் தவித்தது..

அதை உணர்ந்தவன் போல் அவன் அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான்.. அவன் மார்பில் முகம் புதைத்து.. அவனது முதுகைக் கரங்களால் வளைத்துக் கொண்டு.. கண் மூடி நின்றாள் சசிரேகா..

"ரேகா..."

"ம்ம்ம்..."

"ஐ ஆம் யுவர்ஸ்..."

'என்னுடையவனா...? நீ என்னுடையவனா...? அந்த மணிஷா வந்து கூப்பிட்டால் நீ போய் விடமாட்டாயா..?' அவள் மனம் கலங்கியது...

அந்த வினாடியில் அவள் டேவிட்டை மறந்தாள்.. அவனுடன் காதலில் இணைந்து நின்ற நாள்களை மறந்தாள்.. மனம் பூராவும் ரஞ்சன் நிரம்பி விட்ட மாயத்தில் மூழ்கியவளாய்.. சற்றே விட்டு விலகினாலும்.. அவன் எட்டாத தொலைவிற்குப் போய் விடுவானோ என்ற பயத்துடன்.. கடலில் மூழ்குபவன்.. கைக்குக் கிடைக்கும் மரத்துண்டை இறுகப் பற்றிக் கொள்வது போல.. அவனை இறுகப் பற்றி கொண்டாள்...

ரஞ்சனுக்கு அவள் பயப்படுகிறாள் என்பது புரிந்தது.. எதற்காகப் பயப்படுகிறாள்.. என்பது புரியவில்லை.. அவளது பயத்தைப் போக்க வேண்டும் என்ற நினைவுடன் மெதுவான குரலில் பேசி அவளை அமைதிப்படுத்த முயன்றான்..

"ஏன் ரேகா.. உனக்கேன் இந்தத் தவிப்பு...?"

"தெரியவில்லையே..."

அவள் குழந்தையாய்க் கூறினாள்.. அவன் அவளது நெற்றியில் இதழ் பதித்ததும்.. அவளது முகம் அதை உணர்ந்து.. இறங்கியது.. அந்த முகமாறுதல் அவனுக்குள் சொல்லவொண்ணாத காதலையும்.. ஆசையையும் உண்டு பண்ணின...

"உனக்கு இந்த வீடு பிடிக்கவில்லையா...?"

"ரொம்ப பிடித்திருக்கிறது..."

"என்னது.. இந்த வீட்டைப் போய் உனக்கு ரொம்ப பிடித்திருக்கிறதா...?"

"ம்ம்ம்..."

"என்னடி இது.. ஆச்சரியமாய் இருக்கிறது.. எதனால் பிடித்திருக்கிறது..."

"ரஞ்சன்.. நேற்று இரவு.. நீங்கள்..."

அதற்கு மேல் சொல்ல மாட்டாமல் அவள் நாணி முகம் சிவந்தாள்.. ரஞ்சனின் புன்னகை அகலமாகியது..

"ஐ லவ் யு ரேகா..."

அவன் இரவில் அவளது காதோரம் ஜெபித்ததை மீண்டும் கூறினான்.. அப்போதும் வாய் திறக்காமல் அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள் அவள்...

"யு ஆர் மை லைப் ரேகா..."

'எனது வாழ்க்கையே நீதான்..' எங்னறு அவன் வாயாலேயே சொல்லக் கேட்ட பின் அவளது மனக்கலக்கம் பறந்தது.. அவனிடம் பதிலுக்கு 'ஐ லவ் யு..' சொல்ல அவள் மனம் துடித்தது.. அதைச் சொல்ல அவள் வாய் திறந்த போது.. கதவு படபடவென்று தட்டப்பட்டது.. எரிச்சலுடன் சசிரேகாவை விட்டு விலக மனமில்லாமல் விலகிச் சென்று அறைக் கதவைத் திறந்தான் ரஞ்சன்..

"காபி அத்தான்.. கதவு திறக்க இவ்வளவு நேரமா...?"

பூங்கொடியின் விழிகள் ரஞ்சனின் மேல் ஆசையுடன் படிந்தன.. அதைப் பார்த்த சசிரேகாவின் முகம் மாறியது...

பூங்கொடி.. சசிரேகாவின் முகச் சிகப்பைக் கவனித்த வண்ணம் உள்ளே வந்தாள்.. ரஞ்சனின் பார்வை பூங்கொடி இருப்பதையும் மறந்து சசிரேகாவின் மீது படிவதையும்.. அவன் பார்வையைச் சந்தித்த சசிரேகாவின் முகம் மலர்ந்து.. கண்கள் கள்ளச் சிரிப்பைச் சிரிப்பதையும் பார்த்த பூங்கொடியின் மேனியில் யாரோ மிளகாயை அரைத்துப் பூசியது போல் இருந்தது..

"என்ன.. அத்தான்.. ராத்திரியில் சரியான தூக்கம் இல்லையா..?"

"ஆமாம்.. அதை எப்படி நீ கண்டு பிடித்தாய்...?"

ரஞ்சன் ரகசியமாய்ச் சசிரேகாவைப் பார்த்து மின் வெட்டும் நேரத்திற்குள் கண் சிமிட்டினான்.. பூங்கொடி எரிமலையானாள்..

"ஏன் அத்தான்...?"

"ம்ம்.. உங்கள் ஹைதர் அலி காலத்து வீட்டுச்சுவர் பூராவும் மழை நீர் இறங்கிக் குளிர்ந்தால் எப்படித் தூக்கம் வரும்...?"

இதைக் கேட்ட சசிரேகா களுக்கென்று சிரித்தாள்.. பூங்கொடி அவளை முறைத்தாள்..

"அத்தான்.. மூன்றாம் மனிதர்களின் முன்னால் நம் வீட்டை மட்டம் தட்டிப் பேசாதீங்க.."

சசிரேகாவின் முகம் உடனே சுருங்குவதைத் திருப்தியுடன் பார்த்தாள் பூங்கொடி.. ரஞ்சனின் முகம் மாறி விட்டது..

"மூன்றாம் மனிதரா..? யாரைச் சொல்கிறாய்...? ரேகாவைiயா சொல்கிறாய்..? இதோ பார் பூங்கொடி.. எனக்கு நீதான் மூன்றாம் மனுஷி.. சசிரேகா இல்லை.. அவளும்.. நானும் ஒன்று.. அப்புறம்.. இது நம் வீடில்லை.. உனக்கு பிறந்த வீடு.. எனக்குத் தாய்மாமன் வீடு.. எனக்கும்.. ரேகாவிற்கும் சொந்தமான எங்கள் வீடு தோப்பூரில் இருக்கிறது.. புரிகிறதா.. போ.. நாங்கள் காபியைக் குடித்துக் கொள்கிறோம்.. நீ போய் உன் வேலைகளைக் கவனி.."

"நீங்கள் இன்னும் குளிக்கவில்லையே அத்தான்.."

"என்னைக் கவனித்துக் கொள்ள ரேகா வந்து விட்டாள்.. நீ போ..."

பூங்கொடி முகத்தில் அறை வாங்கியது போல உணர்ந்தாள்.. அவளது முகம் விகாரமாகி விட்டது.. விர்ரென்று அறையை விட்டு வெளியே போய் விட்டாள்..

"ஏன் ரஞ்சன் அவளிடம் அவ்வளவு கடுமையாய்ப் பேசினீர்கள்..? இப்போது பார்த்தீங்களா.. அவள் கோபித்துக் கொண்டு போகிறாள்.."

"கோபித்துக் கொண்டு போனால் போகட்டுமே.. அதனால் யாருக்கு என்ன நஷ்டம்..? நீ வா.. காபியைக் குடி.."

"ரஞ்சன்.. நாம் இவங்க வீட்டுக்கு விருந்துக்கு வந்திருக்கிறோம்.."

"அது அவளுக்குத் தெரிய வேண்டாமா..? அதனால் தான் உறைக்கும்படி சொன்னேன்.. நீ இப்போது காபியைக் குடிக்கப் போகிறாயா இல்லையா...?"

"இருந்தாலும் ரஞ்சன்..."

"ரேகா.. இதற்கு மேல் இந்த விசயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காதே.. உனக்குப் பூங்கொடியைத் தெரியாது.. அவள் அபாயகரமானவள்..."

அந்த அபாயகரமானவள்.. அப்போது வீட்டின் பின்புற வாசலைத் திறந்து டேவிட்டை உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தாள்..

பூங்கொடிக்கு டேவிட்டைத் தெரிய வந்ததும்.. டேவிட்டிற்குப் பூங்கொடியின் உதவி கிடைத்ததும் விதியின் விளையாட்டு..

தினமும் தன்னைச் சந்திக்க வரும் சசிரேகா தொடர்ந்து.. பதினைந்து நாளாகத் தன்னைப் பார்க்க வரவில்லை.. அவளிடமிருந்து போன் அழைப்பும்

வரவில்லையென்றதும்.. டேவிட்டின் தலைக்குள் எச்சரிக்கை மணி ஒலித்து விட்டது...

'என்ன ஆனது...? கழன்று கொள்ளப் பார்க்கிறாளா..?' என்ற கோபம்.. நமநமவென்று அவனுள் எழுந்தது..

எத்தனை நாளாகத் திட்டம் போட்டு அவளைக் காதல் வலையில் விழ வைத்தான்.. அந்தக் கல்லூரியில் படிக்கும் பெண்களிலேயே சசிரேகா ஒருத்திதான்.. அழகோடு.. கொள்ளை.. கொள்ளையாய்ப் பணத்தையும் வைத்திருந்தாள்..

அவளைப் பற்றி விசாரித்தான்.. கோடீஸ்வர அப்பாவின் ஒரே வாரிசு என்று தெரிந்ததும்.. திட்டம் போட்டு அவளைக் காதலிக்க வைத்து விட்டான்..

டேவிட் பார்க்கச் சிவந்த தோற்றத்துடன் கவர்ச்சிகரமாக இருப்பான்.. நன்றாகப் படிப்பான்.. கல்லூரியின் ஃபுட்பால் சேம்பியன்..

அவனைச் சுற்றிப் பெண்கள் கூட்டம் மொய்த்தது.. அதில் அவனுக்கு மிகுந்த கர்வமும்.. ஈடுபாடும் உண்டு.. சில பணக்காரப் பெண்களுடன் காதல் நாடகமும் ஆடினான்.. ஆனால் என்று சசிரேகாவின் மேல் அவனுடைய பார்வை விழுந்ததோ.. அன்றே அந்தப் பெண்களுடனான பழக்கத்தை விட்டு விட்டான்.. இருந்தும் சில ரகசியத் தொடர்புகள்.. தொடர்ந்து கொண்டேதான் இருந்தன.. அவற்றைச் சசிரேகா அறிந்து விடாமல் வைத்துக் கொண்டான்..

சசிரேகாவின் முன்னால் ஏகபத்தினி விரத வேடம் போட்டான்.. அவனைப் பொறுத்தவரை பெண்களுக்கு.. அழகும் பணமும் இருந்தால் மட்டுமே போதும்.. ஆனால் சசிரேகா கூடுதலான அறிவுடன் வேறு இருந்து தொலைத்தாள்.. அதனால் அவள் முன்னால் ஜாக்கிரதையாய்.. தனது ஹீரோ வேடத்தைப் போட்டு வந்தான்..

பார்வைக்கு நாகரிகமாய் இருந்தாலும்.. பழக்க வழக்கங்களில் பழமையைப் பின்பற்றிய சசிரேகா.. டேவிட்டை அவளுடைய விரலைத் தொடக் கூட அனுமதிக்கவில்லை...

அதுவும் அவனுக்கு எரிச்சலைக் கிளப்பி விட்டது.. அவளுடனான உறவைப் பலப்படுத்த அவளைத் தொட்டு ஆள்வதே சிறந்த வழியென்று நினைத்தவனுக்கு.. அந்த வழி அடைபட்டுப் போனது..

வேறு வழியில்லாமல்.. தன் தெய்வீகக் காதலின் வேடத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தவனுக்கு.. பதினைந்து நாளாக அவள் மாயமாய் மறைந்து விட்ட மர்மம் பயத்தைக் கொடுத்தது..

சசிரேகாவைக் கைப்பிடிப்பதன் மூலம் அவளுடைய கோடிக்கணக்கான சொத்துகளுக்கு அதிபதி ஆகவேண்டும் என்று அவன் கண்டு வந்த கனவு.. பகல் கனவாக முடிந்து விடுமோ என்ற அச்சம் அவனைச் சூழ்ந்தது..

அவன் விசாரணையை ஆரம்பித்தான்.. அதன் நுனி தோப்பூரில் போய் முடிந்தது.. அதிர்ந்து விட்டான்.. அவனால் தோல்வியை ஒப்புக் கொள்ள முடியவில்லை..

காத்திருந்தவன் காதலியை நேற்று வந்தவன் அபகரித்துச் செல்வதா..? சசிரேகாவிற்காக அவன் புறக்கணித்த பணக்காரக் காதலிகளின் எண்ணிக்கையை நினைத்து... நினைத்து அவனது வயிறு எரிந்தது..

நேரில் போய்ச் சசிரேகாவிடமே நியாயத்தைக் கேட்டு விட நினைத்துக் கிளம்பியவன்.. ஊரைவிட்டு வெளியேறிய காரில் சசிரேகாவின் தலையைக் கண்டான்.. காரைப் பின் தொடர்ந்தான்.. பூங்கொடியின் வீட்டிற்கு இரண்டு வீடுகள் தள்ளிக் காரை நிறுத்திக் கொண்டான்..

ரஞ்சனுக்கும் சசிரேகாவிற்கும் ஆரத்தி எடுத்த நீரைத் தெருவில் கொட்டச் சென்ற பூங்கொடி.. டேவிட்டையும்.. அவனது காரையும் கண்டு விட்டாள். அவள் புருவங்கள் யோசனையுடன் முடிச்சிட்டன. சற்று நேரத்தில்.. சசிரேகாவின் தோள் மேல் கை போட்டு ரஞ்சன் மாடியேறியதும்.. கொதித்துப் போனவளாக.. அவள்.. வீட்டின் பின் பக்கக் கதவைத் திறந்து கொண்டு.. பின் பக்கத் தெருவில் இறங்கினாள். தெருவில் சுற்றி வளைத்துக் கொண்டு போய்.. டேவிட்டின் பின்னால் போய் நின்றாள்..

பூங்கொடியின் வீட்டையே எட்டி.. எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவன் தற்செயலாய்த் திரும்பியபோது.. அவன் பின்னால் கைகட்டிக் கொண்டு நின்ற பூங்கொடியைப் பார்த்துத் திகைத்து விழித்தான்.

அவனை ஏற இறங்கப் பார்த்த பூங்கொடி.. நிச்சயம் அவனுடைய கவர்ச்சியான தோற்றத்தில் மயங்கிப் பார்க்கவில்லை என்பதை உடனே உணர்ந்து கொண்டான் அவன்.

"யார்.. நீ..? ஏன்.. எங்கள் வீட்டை ஒளிந்திருந்து பார்க்கிறாய்..?" பூங்கொடி நேரடியாகக் கேட்டாள்.

"நான் உங்கள் வீட்டைப் பார்க்க வரவில்லை..!" என்றான் டேவிட்.

"எனக்கும் அது தெரியும். நீ என் ரஞ்சன் அத்தானின் காரைத் தொடர்ந்து கொண்டு வந்ததை நானும் பார்த்தேன்.."

"ரஞ்சன் அத்தானா..? யார் அவன்..?"

டேவிட்டின் கேள்வியில் பூங்கொடியின் அறிவு விழித்துக் கொண்டது.

'இவன் அத்தானைத் தேடி வரவில்லையா..? அப்படி யென்றால்...' அவளது மூளையில் மின்னலடித்தது.

இதற்கு விடை ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அவளது பார்வையை உணர்ந்த டேவிட் 'ஆம்...' என்று தலையசைத்தான்.

"நீ நினைப்பது சரிதான்.. நான்.. என் சசியைத் தேடி வந்தேன்.."

'இவனுடைய சசியா...?'

சற்றுமுன்.. தன் புது மனைவியின் தோள்களில் பூங்கொடி பார்க்கக் கை போட்டுக் கொண்ட ரஞ்சனின் உருவம் மனதில் எழப் பூங்கொடியின் இதழ்களில் இகழ்ச்சிப் புன்னகை உதித்தது.

'அத்தான்.. அவளொன்றும் உங்களுடைய ரேகா இல்லை.. இவனுடைய சசியாம்..'

இதைக் கூறினால் ரஞ்சனின் முகம் எப்படி மாறும்.. என்று பார்க்கும் ஆசை பூங்கொடியின் மனதில் எழுந்தது.

அவள் டேவிட்டிடம் பேசினாள்.. நடந்தவைகளை அறிந்து கொண்டாள்.

"இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்..? அவளுக்கும் என் அத்தானுக்கும் கல்யாணம் நடந்து விட்டது.. இனி உன்னால் என்ன செய்ய முடியும்...?"

"இருக்காது.. அவள் என்னை உயிருக்குயிராய்க் காதலித்தாள்.."

"நீ வேற.. அவர்கள் இருவரும் கொஞ்சிக் கொள்வதைப் பார்த்தால்.. சூர்யாவும்.. ஜோதிகாவும் போலக் காதல் ஜோடிகள் கொஞ்சிக் கொள்வதைப் போல் இருக்கிறது.."

"உண்மையாகவா சொல்கிறாய்..."

டேவிட்டிற்கு ரத்தம் கொதித்து விட்டது.. அவனுடன் பேசும்போது தள்ளி நின்று பேசுபவள் இன்று ஆசைக் கணவனுடன் கொஞ்சிக் குலாவுகிறாளா..? இந்த டேவிட்டை ஏமாளி என்று நினைத்து விட்டாளா.. அவளால் வேறு பல பணக்காரப் பெண்களின் சகவாசமும் போய்.. இன்று

டேவிட் தனியனாய் நிற்க.. அவள் மட்டும் மகிழ்ச்சியாய் வாழ்வதா...?

"நான் அவளைப் பார்க்க வேண்டும்.." என்றான் டேவிட்.

"எதற்காக...?"

"நாக்கைப் பிடுங்கிக் கொள்கிறது போல நான்கு கேள்விகள் அவளைப் பார்த்துக் கேட்க வேண்டும்.."

ரஞ்சனைப் பூங்கொடியிடம் இருந்து பிடுங்கிக் கொண்டவளாயிற்றே அந்தச் சசிரேகா.. அவள் நாக்கைப் பிடுங்கிக் கொள்ள டேவிட் காரணமாக இருப்பா னென்றால்.. அவனை இருகரம் நீட்டிப் பூங்கொடி வரவேற்க வேண்டாமா...?

"ம்ம்.. நான் உனக்கு உதவி செய்கிறேன்.. ஆனால் அவளை உடனே நீ பார்க்க முடியாது.."

"எப்போதென்றாலும்.. காத்திருந்து பார்க்க நான் தயார்.."

"நீ எங்கே காத்திருக்கப் போகிறாய்..?"

"ஏன்.. இந்தக் காரில் உட்கார்ந்து காத்திருப்பேன்.."

"முட்டாள்.."

பூங்கொடி இப்படித் திட்டியதும் டேவிட் பல்லைக் கடித்தான். வருடா வருடம்.. யுனிவர்சிட்டி பரிட்சையில் கோல்டு மெடல் வாங்குபவனிடம் இப்படிப் பேச.. அவளுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்.

ஆனால் காரியம் ஆக வேண்டுமென்றால் வீரியத்தைப் பார்த்தால் முடியுமா..? அதனால் பொறுமை காத்தான்.. இந்த ஊருக்குள் இவளை விட்டால்.. அவனுக்கு உதவ வேறு நாதியில்லை..

"என்ன ஆச்சு.. எதற்காகக் கோபப்படுகிறாய்..?"

"இது ஒன்றும் உங்கள் பட்டணமில்லை.. பட்டிக்காடு. இங்கே சைக்கிளைப் பார்த்தாலே வாய் பிளப்பார்கள். நீ காரைக் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு காத்திருந்தால்..

உன்னை யாரு.. எவருன்னு விசாரிச்சு லாடம் கட்டிவிடுவார்கள்.."

லாடம் கட்டுவது என்றால் என்னவென்று டேவிட்டுக்குப் புரியவில்லை. அதற்காகப் பூங்கொடியிடம் விளக்கம் கேட்கவும் அவன் விரும்பவில்லை..

'இவள் பெரிய இவள் போல் பாடம் எடுக்க ஆரம்பித்து விடுவாள். எனக்கு அது தேவையா...?'

"வேறு என்ன செய்வது..?"

"ம்ம்.. காரை எடுத்துக் கொண்டு நீ முன்னால் போ.. நான் எங்கள் தோட்ட வீட்டின் சாவியைக் கொண்டு வருகிறேன்.. ஆமாம்.. நீ ஏதாவது சாப்பிட்டாயா..?"

எதிரியை ஒரு வழி பண்ண வந்தவனின் வயிறு காயக்கூடாது என்ற அக்கறையில் அவள் கேட்டாள்.

'ஆஹா.. கிராமத்து மக்களின் விருந்தோம்பலே தனி தான்..' என்று டேவிட் மகிழ்ந்து போனான்.

"இல்லை..."

"சாவியோடு சேர்த்து உனக்குச் சாப்பாடும் கொண்டு வருகிறேன்.. போ.."

பூங்கொடியின் வயதுக்கும்.. அவள் வளர்ந்த விதத்திற்கும்.. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக் கூடயவள் என்று யாரிடம் சொன்னாலும் அவர்கள் நம்ப மாட்டார்கள். ஆனால் அவற்றை அவள் தயங்காமல் செய்தாள்.

டேவிட்.. அவன் வந்த மண் சாலையில் காரைத் திருப்பிச் செலுத்தி ஒரு மரத்தினடியில் மறைவாக நிறுத்திவிட்டுக் காத்திருந்தான்.. சற்று நேரத்தில் பூங்கொடி.. கையில் பெரிய டிபன் கேரியருடன் வந்து சேர்ந்தாள்.

"சீக்கிரமாய் கார் கதவைத் திற.. யாராவது பார்த்து விடப் போகிறாங்க.."

டேவிட் அவசரமாய் கார் கதவைத் திறந்துவிட.. அவள் ஏறி அமர்ந்து குனிந்து கொண்டு.. வழி சொல்ல ஆரம்பித்தாள். தென்னந் தோப்பின் நடுவிலிருந்த தோட்ட வீட்டிற்குக் கார் போனது.

அடர்ந்த மரங்களின் இடையே காரை நிறுத்தி விட்டு இறங்கிய டேவிட்டிற்குப் பூங்கொடியின் புத்திசாலித்தனத்தை நினைத்து ஆச்சரியம் மேலிட்டது.

'ரியலி திஸ் வில்லேஜ் கேர்ள் இஸ் எ கிளவர் கேர்ள்..' என்று மெச்சுதலாய் மனதில் நினைத்துக் கொண்டான்..

அந்த மரங்களின் அடர்த்தியில் கார் அங்கே மறைவாக நின்றிருப்பது யாருக்கும் தெரியாது. ஓடு போட்ட தோட்ட வீட்டின் கதவைத் திறந்தாள் பூங்கொடி.. உள்ளே கயிற்றுக் கட்டிலும்.. போர்வையும் தலையணையும் கிடந்தன.. மோட்டாரைப் போட்டு விட்டு அங்கிருந்த பாத்திரத்தில் தண்ணீர் பிடித்து வைத்தாள்.

"இதோ பார்.. இது குடிக்கப் பிடித்து வைத்திருக்கிறேன். தேவைப்பட்டால்.. மோட்டாரைப் போட்டு.. தண்ணீர் பிடித்துக் கொள். சாப்பாடு உனக்கு இரண்டு நேரத்திற்குப் போதும். செல்போன் இருக்கில்லையா.. நம்பர் கொடு.."

"உன்னிடம் செல்போன் கூட இருக்கிறதா...?"

"எங்கள் ஊரில் ஆடு மேய்க்கும் பையன் கூட செல்போன் இல்லாமல் இருக்கவில்லை. என்னிடம் இருப்பது உனக்கு அவ்வளவு அதிசயமாய்ப் போயிருச்சா.."

தங்க மறைவாய் இடம் கொடுத்து.. சோற்றையும் போடும் புண்ணியவதியிடம் அதிகமாய் வாயைக் கொடுத்து வம்பைக் கட்டி இருக்க வேண்டாமென்ற எண்ணத்தில் அவன் வாயை இறுக மூடிக் கொண்டான்.

பூங்கொடி அவனுடைய செல்போன் நம்பரை வாங்கிக் கொண்டு கிளம்பினாள்.

"இங்கே பார்.. எந்தக் காரணத்தைக் கொண்டும் தோப்பை விட்டு வெளியே வந்து விடாதே.."

"சரி..."

"அங்கே யிருக்கும் நிலவரத்தைப் பார்த்துவிட்டு உனக்கு நான் தகவல் கொடுக்கிறேன். அப்போது நீ கிளம்பி வந்தால் போதும்.."

ஆனால் பூங்கொடி வீடு வந்து சேர்ந்ததும் மழை பிடித்துக் கொண்டது.. அவள் செல்போனில் அவனை வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு சொல்லி விட்டாள். விடிந்தவுடன் ரஞ்சன் ஊருக்குக் கிளம்பும் உத்தேசத்துடன் இருந்தான். மழையும் விட்டிருந்தது. டேவிட்டை வரச் சொல்லி விட்டாள்.

"நீ பாட்டுக்குக் காரை எடுத்துக்கிட்டு ஊருக்குள் வந்து விடாதே. காரை நேற்றுப் போல் மரத்துக்குப் பின்னால் மறைவாய் நிறுத்தி விட்டு வா.."

பேசி முடித்த பூங்கொடி காபி தம்ளர்களுடன் மாடி யேறினாள். அங்கே ரஞ்சன் ஏறக்குறைய அவளை விரட்டியடித்தான். கோபத்துடன் கீழே இறங்கியவள். பின் கதவைத் திறந்து விட்டாள்.

"எங்கே அவள்...?"

"இங்கேயே நில்.. நான் போய் அவளை அனுப்புகிறேன்.."

பூங்கொடி மாடிக்குப் போனபோது ரஞ்சன் குளியலறைக்குள் புகுந்து விட்டான். சசிரேகா.. துணிகளைப் பைக்குள் அடைத்துக் கொண்டிருந்தாள்.

'கிளம்புகிறாயா..?' மனதிற்குள் கறுவியபடி அவள் முன்னால் போய் நின்றாள் பூங்கொடி.

"உங்களைப் பார்க்க ஒரு ஆள் வந்திருக்கிறார்.."

"என்னைப் பார்க்கவா.. இங்கேயா..? யார் அது..?"

"அந்த ஜன்னல் வழி பாருங்க.. வீட்டின் கீழ்ப்புறம் தான் நிற்கிறார்.."

சசிரேகா குழப்பத்துடன் பார்த்தாள். அதிர்ந்தாள்.

'டேவிட்.. இவன் எங்கே இங்கே வந்தான்..?'

சசிரேகாவின் முகமாறுதலைத் திருப்தியுடன் பார்த்த படி நின்றிருந்த பூங்கொடி விசமமாய்ச் சிரித்தாள்.

"நீங்கள் அவரைப் பார்க்கக் கீழே போகாவிட்டால்.. அவர் வீட்டுக்குள் வருவாராம். வந்து.. என் அப்பாவிடம் விவரம் சொல்லிவிட்டு.. மாடியேறி உங்களைப் பார்க்க வந்து விடுவாராம்.. எப்படி வசதின்னு கேட்டு விட்டு வரச் சொன்னார்.."

சசிரேகா பயந்து போனாள்.. இது ரஞ்சனின் தாய் மாமனின் வீடு.. இங்கே அவளுடைய காதல் விவகாரம் பரவுவதா...?

அவசரமாய்ப் படியிறங்கி ஓடினாள் அவள். பூங்கொடி திருப்தியுடன் புன்னகைத்தபடி ஜன்னல் வழி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

காலடியோசை கேட்ட டேவிட் திரும்பிப் பார்த்தான். வெளுத்துப் போன முகத்துடன் சசிரேகா வந்து கொண்டிருந்தாள்.

"டேவிட்.. இங்கே ஏன் வந்தாய்...?"

"முதலில் நீயேன் இங்கு வந்தாய்.. அதை எனக்குச் சொல்லு..."

"நான் உனக்கு விளக்கமாகப் பிறகு சொல்கிறேன். இப்போது நீ போய் விடு.."

"போவதென்றால் நாம் இரண்டு பேரும் சேர்ந்தே போகலாம். வா.."

"உனக்கு என்ன.. பைத்தியமா பிடித்திருக்கிறது..?"

"ஆமாம்.. எனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. நீ ஏமாற்றியதால் பிடித்த பைத்தியம்.."

"இதோ பார் டேவிட், எனக்கு மேரேஜ் ஆகி விட்டது."

"அது என்னுடன் ஆகியிருக்க வேண்டும்.."

"என் விருப்பத்தை என் வீட்டில் ஏற்றுக் கொள்ளவில்லை.."

"சும்மா கதை விடாதே.. நீ விருப்பத்துடன் உன் கணவனுடன் இசைந்து வாழ்வது எனக்குத் தெரியாதென்றா நினைத்தாய்...?"

கீழே சசிரேகா வழக்கடித்துக் கொண்டு இருந்தபோது.. ரஞ்சன் குளித்துவிட்டு.. ஈரத்தலையுடன்.. சசிரேகாவிடம் தலை துவட்டிக் கொள்ளும் ஆசையுடன் வெளியே வந்தான்.

"ரேகா.. ரேகா..."

"யாரைத் தேடுகிறீங்க அத்தான்...?"

"நீ இங்கே என்ன செய்கிறாய்...?"

"முதலில் அவங்க அங்கே என்ன செய்கிறாங்கன்னு பாருங்க.."

ரேகா கை நீட்டிய திசையில்.. ரஞ்சன் பார்த்தான். அவன் முகம் இருண்டது.

பூங்கொடி ரஞ்சனின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் முகத்தில் ஒரு வினாடிக்குள் ஆயிரம் உணர்வுகள் வந்து போயின.

"யார் அவன்...?"

"எனக்குத் தெரியவில்லையே அத்தான்.. ஆனால் உங்களுடைய ரேகாவிற்குத் தெரிந்திருக்கிறது.."

பூங்கொடியின் குரலில் இருந்த குத்தலைப் புரிந்து கொண்டான் ரஞ்சன்.

'ஏன் இவள் இப்படிப் பேசுகிறாள்...?'

"யாராவது தெரிந்தவர்களாக இருக்கும்.."

"என்ன அத்தான் இது.. எங்கள் ஊரில் எனக்கே தெரியாத ஆளை உங்கள் பெண்டாட்டிற்கு எப்படித் தெரியும்..?"

"தெரியாமலா அவள் போய்ப் பேசிக் கொண்டிருப்பாள்.."

"ம்ம்.. தெரிந்துதான் போயிருக்கா போல இருக்கு. வந்திருக்கும் ஆள் இந்த ஊர்க்காரன் இல்லை அத்தான். சென்னையிலிருந்து வந்திருக்கிறான்.."

ரஞ்சனுக்குப் பொறி தட்டியது.

"என்னது.. சென்னையிலிருந்தா...?"

"ஆமாம்.. சென்னையிலிருந்துதான் வந்திருக்கிறானாம்.. என்னவோ ஒரு பெயர் சொன்னானே.. அது.. அது.."

பூங்கொடி நினைவு வராதவள் போல் நெற்றிப் பொட்டைத் தட்டினாள். பின் பிரகாசமான முகத்துடன் கூறினாள்.

"ஆங்.. நினைப்பிற்கு வந்துருச்சு.. டேவிட்.. டேவிட்டுன்னுதான் அந்த ஆள் சொன்னான். அந்தப் பெயரை நான் சொன்னதும் உங்க பொண்டாட்டி.. என் டேவிட்டா வந்திருக்காருன்னு கேட்டுக்கிட்டே நாலு கால் பாய்ச்சலில் மாடிப் படியில் உருண்டு விழாத குறையாய் இறங்கி ஓடிப் போயிருச்சு அத்தான்.."

பூங்கொடி அந்த 'ஓடிப் போயிருச்சு...'வில் அதிக அழுத்தம் கொடுத்தாள். ரஞ்சனுக்கு உடல் அதிர்ந்தது.

"அந்த ஆள் யாராக இருக்கும் அத்தான்...?" என்று சந்தேகம் வேறு கேட்டு வைத்தாள்.

ரஞ்சன் பதில் சொல்லாமல் தடதடவென்று படியிறங்கி வீட்டின் பின் பக்கம் சென்றான். அவன் வருவதைக் கவனிக்காமல் சசிரேகா டேவிட்டுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தாள்.

"என்னை நம்பு டேவிட்.. என் விருப்பமில்லாமல் தான் இந்த மேரேஜ் நடந்தது.."

டேவிட் அதை மறுப்பது போல் தலையாட்டிப் பேச முயன்றபோது ரஞ்சனின் கர்ஜனையான குரல் வெளிப்பட்டது.

"ரேகா..."

சசிரேகா பதறிப்போய்த் திரும்பிப் பார்த்தாள். ரஞ்சன் வேகமான எட்டுக்களுடன் அவள் முன்னால் வந்து நின்று உறுமினான்.

"உள்ளே போ..."

"ரஞ்சன்.. இது.. வந்து..."

"உள்ளே போ என்கிறேனில்லை..."

சசிரேகா உள்ளே ஓடி விட்டாள். ரஞ்சன் டேவிட்டின் பக்கம் திரும்பிப் பார்த்து இறுகிய முகத்துடன் கூறினான்.

"மிஸ்டர் டேவிட்.. சசிரேகா உங்களைக் காதலித்தது எனக்குத் தெரியும்.. எங்கள் பர்ஸ்ட் நைட்டில்.. அவள் என்னிடம் நடந்ததைச் சொல்லி விட்டாள். உங்களை ஏமாற்ற அவள் நினைக்கவில்லை.. ஆக்சுவலாய் அந்தக் கல்யாணம் நடக்கப் போவதே அவளுக்குத் தெரியாது.. ஸோ.. அவள் மேல் கோபப்பட்டுத் தேடி வந்து சண்டை போட நினைப்பதை இனி விட்டு விடுங்கள்.."

"நான் பாதிக்கப்பட்டவன்.."

"அதற்காகத்தான் உங்களை நிற்க வைத்து இத்தனை விளக்கமும் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.. இல்லை யென்றால்.. நான் இந்த விசயத்தை.. டீல் பண்ணும் முறையே வேறாக இருக்கும்.."

"என்ன.. பயமுறுத்துகிறீர்களா...?"

"பின்னே..? உங்களைக் கொஞ்சுவேன்னு நினைத்தீர்களா... எங்கள் சொந்தகாரனின் வீட்டிற்குள்ளேயே நுழைந்து என் பெண்டாட்டியைக் கூப்பிட்டு வைத்துப் பேச உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்.. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. எலும்பை எண்ணி விடுவேன். ஜாக்கிரதை.."

"இந்த டேவிட் ஒன்றும் பயந்தவன் இல்லை..."

"அதுதான் தெரிகிறதே.. அடுத்தவன் பெண்டாட்டி யாகி விட்ட பெண்ணைத் தேடி வந்து டார்ச்சர் பண்ணும் உனக்கு எப்படிப் பயம் இருக்கும்.."

"வா.. போ.. என்று பேசாதே.."

"அடச்சே.. போடா.. பெரிதாய்ப் பேச வந்து விட்டான். இனியொரு முறை என் பெண்டாட்டியிடம் வந்து பேசிக் கொண்டிருப்பதை நான் பார்த்தேனென்று வை.. உன் உடம்பில் உயிர் இருக்காது.."

"அவள் என் காதலி..."

"அவள்.. இவள்ன்னு பேசினால்.. வாயிலேயே போட்டு விடுவேன்.. படவா ராஸ்கல்.. இன்றைக்கு அவள் என் பெண்டாட்டி.. சாகும்வரை அவள் என்னுடையவள்.. புரிகிறதா.. ஓடு இங்கேயிருந்து.."

டேவிட் மனதிற்குள் பயந்து போயிருந்தான். கிளம்ப முனைந்தபோது பூங்கொடி ரஞ்சனின் முதுகிற்குப் பின்னால் நின்று கொண்டு 'போகாதே..' என்று சைகை காட்டுவதைப் பார்த்து.. 'மாட்டேன்' என்பது போல் தலையாட்டி வைத்து விட்டான். சட்டெனத் திரும்பிய ரஞ்சனுக்கு விசயம் விளங்கி விட்டது.

"இங்கே வா.. இவனை உனக்கு எப்படித் தெரியும்..?"

"எனக்கு ஒன்றும் இவனைத் தெரியாது. உங்கள் பெண்டாட்டிக்குத்தான் தெரியும்.."

"அறைந்து பல்லைக் கழட்டி விடுவேன்.. ராஸ்கல்.. யாரிடம் கதை விடுகிறாய்..? முளைத்து மூணு இலை விடவில்லை. அதற்குள் கண்ட களவாணிப் பயல்களுடன் உனக்கு என்ன சகவாசம்..?"

"அத்தான்.. என்னை ஏன் திட்டுகிறீர்கள்..? போய் உங்கள் பெண்டாட்டியைத் திட்டுங்கள்."

"அவளை ஏன் நான் திட்ட வேண்டும்.. இவனை இந்த வீட்டிற்கள் கூப்பிட்டுக் கொண்டு வந்தது யார்..? நீயா.. இல்லை அவளா..?"

"நான் ஒன்றும் இவனை இந்த வீட்டில் தங்க வைக்க வில்லையே.. தோப்பு வீட்டில்தானே.. தங்க வைத்தேன்.."

தன்னையறியாமல் இதைச் சொல்லிவிட்ட பூங்கொடி நாக்கைக் கடித்துக் கொண்டு.. தன்னைத் தானே நொந்து கொண்டாள்..

'அணில் வாயால் கெட்டது..' என்பது இப்படித்தான் போல..

# 32

ரஞ்சன் அதிர்ச்சியடைந்து விட்டான்.. பூங்கொடி இத்தனை பெரிய கயமைத்தனம் செய்யும் வில்லியாக மாறுவாள் என்று கனவிலும் அவன் நினைத்துப் பார்த்தது இல்லை..

சும்மா.. மாமன் மகள் என்ற உரிமையினால் பொறாமையுடன் நடந்து கொள்கிறாள் என்றே அவன்

நினைத்தான்.

அவள் கடைசியில் இப்படியொரு காரியத்தைப் பண்ணி வைத்திருக்கிறாளே.. அவனது மீசை துடித்தது..

"பூங்கொடி..! இவனை எப்போது பார்த்தாய்...?"

"அதை உங்கள் பெண்டாட்டியிடம் போய்க் கேளுங்கள்.."

பொறுமையிழந்த ரஞ்சன் ஓங்கி அவள் கன்னத்தில் ஓர் அறை வைத்தான். பூங்கொடி துடித்துப் போய் விட்டாள்.

"இப்போதே.. உன் அப்பாவையும்.. தாத்தாவையும் கூப்பிட்டு இவனை நீ தோட்டத்து வீட்டில் இருக்க வைத்திருந்ததைச் சொன்னேனென்று வை.. உன்னை உன் அப்பா.. வெட்டிக் கொன்றே விடுவார்.."

"அத்தான்.. வேண்டாம்.. அப்பாவிடம் சொல்லாதீர்கள்.."

"சும்மா சசிரேகாவைப் பற்றியே பேசுகிறாயே.. அவள் உன்னைப் போல் இப்படி ஒரு காரியத்தைப் பண்ணி வைக்க மாட்டாள். இவன் உன் மூலமாகச் சசிரேகாவைப் பார்க்க நினைத்ததால் நீ தப்பித்தாய்.. இல்லாவிட்டால்.. வயதுப் பெண்.. உன் கதி என்னவாகியிருக்கும்.. இதை நீ ஒரு நிமிசமாவது யோசித்துப் பார்த்தாயா..?"

"சசி செய்தால் மட்டும் சரி.. நான் செய்தால் அது தப்பா...?"

"முட்டாள்.. அவளுக்குக் கல்யாணமாகி.. புருசனென்று நான் ஒருத்தன் குத்துக்கல் போல் இருக்கிறேன். அவளைப் பற்றி யார் என்ன சொன்னாலும் காது கொடுத்துக் கேட்காமல்.. பேசிய ஆளின் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து அனுப்புவேன். ஆனால்.. நீ அப்படியா..? இந்த விசயம் வெளியே தெரிந்தால்.. எந்த மடையன் உனக்குத் தாலி கட்டத் துணிந்து வருவான்..?"

பூங்கொடியின் வாய் அடைத்துப் போனது. அவள் கலவரமாய் ரஞ்சனைப் பார்த்தாள்.

"ம்ம்.. இப்போதாவது சொல்.. இவனை எங்கே.. எப்படிப் பார்த்தாய்.."

டேவிட் நழுவ முயல.. ரஞ்சன் பார்வையால் அவனை மிரட்டி நிற்க வைத்தான்.

பூங்கொடி ஆதியோடு.. அந்தம் வரை எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள்.

"இவனுக்குச் சாப்பாடு போட்டு.. ஒளிந்து கொள்ள இடத்தையும் காட்டி தங்க வைத்திருக்கிறாய்.. எதற்காக.. என் பெண்டாட்டிக்கு இவன் தீங்கு செய்யட்டும் என்பதற்காக.. ச்சே.. நீயா என் மாமனின் மகள்.. போய் என் அம்மாவிடம் உன் சின்னப் புத்தியைச் சொல்கிறேன்.. அவங்க உன்னைத் தெரிந்து கொள்ளட்டும்.."

"தயவு செய்து சொல்லாதீங்க அத்தான்.."

"மழை கொட்ட ஆரம்பித்து.. இவனோடு அந்தத் தோப்பு வீட்டில் நீயும் மாட்டிக் கொண்டிருந்தால் உன் நிலைமை என்னவாகியிருக்கும்..? இவன் ஒளிந்து கொள்ள நீயே இடத்தை ஏற்பாடு பண்ணிக் கொடுத்தாயே.. அவன் அங்கேயே சோலியை முடித்துக் கொண்டு.. யாருக்கும் தெரியாமல் பறந்திருப்பான்.."

ரஞ்சன் எடுத்துச் சொல்லிய விதத்தில்.. ஏன் அதைச் செய்யாமல் விட்டோமென்று டேவிட்டிற்குத் தோன்ற ஆரம்பித்து விட்டது.

வளமையான பூங்கொடியின் மேனியை அவனது பார்வை மொய்த்தது.. பார்க்க பார்க்க.. 'ஐயோ.. சரியான சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டோமே..' என்று அவனுக்குத் தோன்றி விட்டது..

அவனது பார்வை போன திசையைப் பார்த்த பூங்கொடியின் உடல் கூசியது.

'இவனிடம் போய்த் தனியாக அகப்பட்டுக் கொள்ள இருந்தோமே..' என்று மறுகினாள்.

"இனி இப்படிச் செய்ய மாட்டேன் அத்தான். இதைப் பற்றி நீங்கள் அப்பாவிடம் சொல்லி விடாதீங்க.."

"நீ இவன் யார் என்பதைப் பற்றி யாரிடமாவது வாய் திறந்தால்.. நான் உன்னுடைய இந்த வேலையைப் பற்றி உன் வீட்டிலும்.. இந்த ஊரிலும் சொல்லி விடுவேன். அப்புறம் உன் கதி.. என்னவாகும் என்பதை நீயே முடிவு பண்ணிக் கொள்.."

'வேறு என்ன.. அதோ கதிதான்..' என்று நினைத்துக் கொண்ட பூங்கொடிக்கு.. அந்த நிலையிலும் சசிரேகாவின் மேல் பொறாமை எழுந்தது.

இப்படி ஒரு காப்பாற்றும் கணவன் அவளுக்குக் கிடைக்க.. அவள் என்ன வரம் வாங்கி வந்தாளோ.. என்ற எரிச்சலுடன் அவள் உள்ளே போய் விட்டாள்.

டேவிட்டின் பக்கம் திரும்பிய ரஞ்சன் ஒரு புழுவைப் பார்ப்பது போல் அவனைப் பார்த்தான்.

"வெட்கமாயில்லை. ஒரு பெண்ணின் பின்னால் ஒளிந்து கொண்டு இன்னொரு கல்யாணமான பெண்ணைப் பார்க்க வந்திருக்கிறாயே.. உன்னை எந்தக் கணக்கில் எடுத்துக் கொள்வது.. உன்மேல் எனக்கிருந்த கொஞ்ச நஞ்சப் பரிதாபமும் போய் விட்டது. ஓடிவிடு. இனியொருமுறை என் பெண்டாட்டியை கிராஸ் பண்ண நினைத்தால்.. நான் உன்னைக் கொன்று விடுவேன்.."

டேவிட் விட்டால் போதுமென்று ஓடி விட்டான். இப்படி ஒரு கோபக்கார.. முரட்டு மீசைக் கணவனைச் சசிரேகா மணந்திருப்பாள் என்று அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

எனவே பின்னங் கால்கள் பிடரியில் இடிபட ஓடியே விட்டான்.

ரஞ்சனின் மனம் களைத்துப் போயிருந்தது. அவன் அமைதியாய் வீட்டிற்குள் நுழைந்து மாடியேறினான். அவனது கடுமையான முகம் கண்ட சசிரேகா அவனிடம் பேசப் பயந்தாள்.

"கிளம்பு.." என்று ஒற்றைச் சொல்லுடன்.. அவன் பைகளைத் தூக்கிக் கொண்டு கீழே சென்றான்.

அவள் அவசரமாய் அவனைப் பின் தொடர்ந்தாள். காலை உணவைக்கூடச் சாப்பிடாமல் போகும் தங்கை மகனைத் தடுக்க முயன்றார் கோதண்டராமன். ஆனால் பிடிவாதமாய்க் கிளம்பி விட்டான் ரஞ்சன்.

33

"ஏய்யா.. உனக்காகக் கோழியை வறுத்துக்கிட்டு இருக்கா உங்க அத்தை.. அதை ஒருவாய் சாப்பிட்டு விட்டுப் போ ராசா.." கோதை நாச்சியாரின் தாய் வள்ளியம்மாள் பேரனின் தாடையைப் பிடித்தபடி கெஞ்சுதலாய்க் கூறினாள்.

"இல்லை பாட்டி. ஊரில் என்ன அவசரமோ தெரியவில்லை. தாத்தா உடனே கிளம்பி வான்னு போன் போட்டுட்டார்.. நாங்க போகணும்..!" ரஞ்சன் படியிறங்கினான்.

"அதுக்காக அவிச்சு வைச்ச இட்டிலியில்.. வறுத்து வைச்ச கோழி வறுவலைப் போட்டு.. வாய்க்குள் தள்ள எவ்வளவு நேரமாகி விடப் போகுது.. நீங்க வாங்க மாப்பிள்ளை..." கோதண்டராமன் அவன் பின்னாலேயே படியிறங்கியபடி கூறினார்.

"உடனே கிளம்பி வான்னு தாத்தா சொன்ன பின்னால் நான் உட்கார்ந்து விருந்து சாப்பிட்டுக்கிட்டு இருக்க முடியாது மாமா.. என்னைப் புரிஞ்சுக்கங்க..." ரஞ்சன் காரின் பின் பக்கக் கதவைத் திறந்து பைகளைப் போட்டான்.

"நான் உங்க தாத்தாகிட்ட பேசறேன் மாப்பிள்ளை.." கோதண்டராமன் விடாமல் மல்லுக் கட்டினார்.

"உங்களை நான் பேசச் சொன்னதாகத் தாத்தா நினைப்பார் மாமா.. அது வேண்டாம்..." என்றபடி காரின் முன் பக்கக் கதவைச் சசிரேகாவிற்காகத் திறந்து விட்டவன்,

"ஏறு..." என்று அவளைப் பார்த்து அதட்டினான்.

அவள் அவசரமாய் ஏறிக் கொள்ளவும் கோதண்ட ராமனின் கையைப் பிடித்து,

"போய் வருகிறோம் மாமா.. பூங்கொடியைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்.. காலா காலத்தில் அவளுக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைத்து விடுங்கள்...!" என்று கூறினான்.

"முறை மாப்பிள்ளை நீங்க.. வேற பொண்ணைக் கட்டிக்கிட்டு என் பெண்ணுக்குக் காலா காலத்தில மாப்பிள்ளை தேடச் சொல்கிறீங்க.. இதுவும் என் காலக் கொடுமைதான்..!" கோதண்டராமனின் கண்கள் சிவந்தன..

"மாமா..! முடிஞ்ச கதையைப் பேசி என்ன பிரயோசனம்.. இனி நடக்கிறது நல்லதாக இருக்கட்டுமே.." ரஞ்சன் காரைக் கிளப்பினான்.

வெறும் வயிற்றோடு வேகமாய்க் காரை ஓட்டிக் கொண்டிருந்தவனின் முகம் கல் போல் இறுகியிருந்தது. சசிரேகாவிற்கு அவனிடம் வாய் திறந்து பேசப் பயமாக இருந்தது. தோப்பூரைத் தொட்டதும்.. ஊருக்கு வெளியே காரை நிறுத்தி விட்டு அவள் புறம் திரும்பி அமர்ந்தான் அவன்.

'என்ன கேட்கப் போகிறானோ...' என்ற பயத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் சசிரேகா..

"ஸோ.. உனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்ப மில்லை என்ற நிலை இன்று வரை தொடர்கிறது.. அப்படித்தானே..."

"இல்லை.. இல்லை..."

"ச்சீ.. பேசாதே.. நீ அவனிடம் பேசிக் கொண்டிருந்ததை என் காதால் நான் கேட்டேனே..."

"அவன் என்னைக் குற்றம் சொன்னான்.."

"நீ உடனே உண்மையைச் சொன்னாய்.."

"அப்படியில்லை ரஞ்சன்..."

"வேறு எப்படி...?"

"நான் அவனை ஏமாற்றி விட்டதாக அவன் நினைக்கிறான் ரஞ்சன்.. அதனால்..."

"நீ என்னை ஏமாற்றிக் கொண்டிருக்கும் கதையைச் சொன்னாய்.."

"இல்லை இல்லை..."

"இந்தக் கல்யாணம் உனக்கு விருப்பமில்லாமல் நடந்த கல்யாணம் என்பதை நான் மறந்துதான் போய் விட்டேன்.."

"ரஞ்சன்..."

"நீ அதைச் சரியான நேரத்தில் நினைவு படுத்தி விட்டாய்..."

"ரஞ்சன்..!"

"நேற்று இரவு மட்டும் மழை பெய்யாமலிருந்து.. தோப்பூருக்கு நாம் வந்திருந்தால்..."

'எப்படியிருந்திருக்கும்...' என்ற நினைவில் சசிரேகா வின் மனம் தளும்பியது.. அதுதான் நடக்காமல் போய் விட்டதே..

"நடக்கக் கூடாதது நடந்திருக்கும்.."

'அது நம் இருவருக்குமிடையே நடக்கக் கூடாத ஒன்றா..?' சசிரேகா மனம் வலிக்கக் கண் கலங்கினாள்.

அதைப் பார்த்த ரஞ்சனின் மனம் அவளை அணைத்துக் கண்ணீரைத் துடைத்து விட எண்ணித் துடித்தது. ஆனால்.. டேவிட்டிடம் அவள் சொல்லிய வார்த்தைகளை நினைத்தபோது அவனது நெஞ்சம் மீண்டும் இரும்பாக இறுகியது.

"ரஞ்சன்.. நான் டேவிட்டைக் காதலித்ததை உங்களிடமிருந்து மறைக்கவில்லை.. சொல்லி விட்டேன்.."

"உன் மேல் குற்றமில்லை என்கிறாய்..."

"என் மேல் குற்றமிருப்பதாக நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்...?"

"ம்ம்.. என் மேல்தான் குற்றம். உன் மனமறிந்தும்.. நான் உன்னைத் தொட்டேனே.. உன்னை ஆள ஆசைப்பட்டேனே..."

"ரஞ்சன்.."

"இனி அது போல் ஒரு போதும் நடக்காது..."

சசிரேகாவின் நெஞ்சம் குலுங்கியது. அவள் அதிர்ச்சி யுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அதை ஒதுக்கமாக நினைத்த ரஞ்சனின் முகம் இறுகியது.

'நேற்றைய நினைவை நினைத்து இவள் சங்கடப் படுகிறாளென்றால் என்ன அர்த்தம்..? அந்த டேவிட்டின் நினைவு இவள் மனதில் இருக்கிறது என்றுதானே அர்த்தம்..? இன்னும் மனதளவில் இவள் என் மனைவி ஆகவில்லையா..? மனதால் மனைவி ஆகாதவளைத் தொட நினைப்பது தவறு..' அவன் அவளறியாமல் ஓர் பெருமூச்சை வெளியேற்றினான்.

"டேவிட் வந்து அழைத்தவுடன் நீ ஓடியிருக்கிறாய்.. நீ இருக்குமிடம் என் தாய் மாமனின் வீடு என்று தெரிந்திருந்தும் அவனைச் சமாதானப்படுத்த முயன்றிருக்கிறாய்.. இது எனக்குத் தெரிவிக்கும் செய்தி ஒன்றுதான்.. சசிரேகா.. இனி நாம் வெளியுலகிற்குத் தான் கணவன்.. மனைவி..."

சசிரேகா வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டாள். கண்ணுக்குத் தெரியாத பனித்திரை கனமாக அவர்களுக்கு இடையே விழுந்து விட்டது.

## 34

கோதை நாச்சியார்.. கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தாள்..

"ஏன்டா.. எங்க அண்ணன் அவ்வளவு சொல்லியும்.. நீ காலைச் சாப்பாட்டிற்குக் கை நனைக்காமல் ஓடி வந்து விட்டாயாமே.."

"பசிக்கிறதும்மா.. டிபனை எடுத்து வைங்க.."

"விளையாடுகிறாயா..? உனக்காகக் கோழி அடித்து வறுத்து வைத்திருந்தால்.. சாப்பிட உனக்குக் கசக்கிறதா..? என் அண்ணன் வீடென்றால் அவ்வளவு இளப்பமா உனக்கு..?"

"அம்மா.. தாத்தாதான் என்னை உடனே கிளம்பி வரச் சொன்னார்.. எது கேட்பதாக இருந்தாலும் அவரிடமே கேளுங்கள்.."

சோபாவில் அமர்ந்து ஏதோ கணக்கு வழக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சோமய்யன் நிமிர்ந்தார். பேரனைப் பார்த்தார். பின் நிதானமாக மருமகளின் பக்கம் திரும்பி..

"அம்மா.. கோதை.. ரஞ்சனின் கையெழுத்து ஒன்று அவசரமாக எனக்கு வேண்டியிருந்தது. இன்னும் அரை மணி நேரத்தில் நான் அதைக் கொடுத்து அனுப்ப வேண்டும். அங்கே இவங்க சாப்பிட்டு விட்டுக் கிளம்பி வந்தால் நேரமாகி விடாதா..? அதனால் நான்தான் அவனை உடனடியாகக் கிளம்பி வரச் சொன்னேன்..." என்று சமாதானமாகக் கூறினார்.

கோதை நாச்சியாரின் கோபம் அடங்கியது.. மகனின் பசி அவளுக்கு நினைவில் வந்து விட்டது..

"சாப்பிட வாடா.. பசியோடு இருக்கிறாய்.. தாத்தா கேட்ட கையெழுத்தை உடனே போட்டுக் கொடுத்து விட்டு உள்ளே வா.." என்றபடி போய் விட்டாள்.

சசிரேகா ஆச்சரியத்துடன் சோமய்யனின் முகம் பார்த்தாள். எப்படி.. இவர் டக்கென்று அப்படி ஒரு பொய்யைச் சொன்னார். பேரனுக்கும்.. தாத்தாவிற்கும் இடையே இருந்த அந்தரங்கப் பிணைப்பு அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

சசிரேகாவின் பார்வையைக் கண்டு சோமய்யன் இதமாகச் சிரித்தார்.

"போம்மா.. போய்ச் சாப்பிடு..."

ரஞ்சன் அவளை முறைத்தவாறு முன்னே செல்ல அவள் பின்னால் சென்றாள். சாப்பிட்டவுடன் ரஞ்சன் வெளியே சென்று விட்டான்.

"எங்கே போய் விட்டான் இந்த ரஞ்சன்..? ஏம்மா.. சசி.. உன்னிடம் ஏதாவது சொன்னானா..?" கோதை நாச்சியார் வினவினாள்.

"வெளியே போகிறேன்னு மட்டும்தான் சொன்னார் அத்தை.."

சொல்லாமல் அவன் போய் விட்டதைக் கூறினால்.. ஏன்.. எதற்கு என்ற கேள்விகளைச் சந்திக்க வேண்டி

வரும் என்பதால்.. சசிரேகா இப்படிக் கூறிவிட்டு மாடிப்படியேறினாள்.

கொண்டு போன பைகளில் இருந்த துணிகளை எடுத்து துவைக்கும் இடத்தில் கொடுக்கச் சொல்ல வேண்டும் என்ற நினைவுடன் நாற்காலியில் அமர்ந்தாள். தூக்கம் வந்ததால் கட்டிலில் படுத்து தூங்கி விட்டாள்.. அறைக்குள் வந்த ரஞ்சனின் மனம் கொதித்தது.. தூக்கம் வராமல் விழித்துக் கொண்டிருந்தான்..

'என்னை நம்பு டேவிட்.. என் விருப்பமில்லாமல் தான் இந்தக் கல்யாணம் நடந்தது...' சசிரேகாவின் குரல் காதுகளில் ஒலித்தது.

சொல்லலாமா...? அப்படியொரு வார்த்தையை அவள் சொல்லலாமா..? முதல் நாளிரவு அவனது கைகளில் மெழுகாய் உருகி.. ஒட்டி உறவாடிவிட்டு.. மறுநாள் காலையில் இந்த வார்த்தைகளை அவள் சொல்லலாமா..?

அவன் மனம் கொதிகலனாய்க் கொதித்தது.. எப்படித் தூங்குகிறாள்.. பிரிவின் வேதனை தாக்கியிருந்தால்

இப்படி இவளால் தூங்க முடியுமா..? அந்த டேவிட்டைப் பார்த்தவுடன் எல்லாமே இவளுக்கு மறந்து விட்டதா...?

ரஞ்சன்.. தோப்பில் அவர்கள் இருவரும் தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்த நிகழ்வை நினைத்துக் கொண்டான்.

கொஞ்சம் கூட இவள் ஒதுக்கம் காட்டவில்லையே.. அன்றைக்கு மட்டும் இயல்பாய் என்னுடன் இழைந்தாளே.. புல்லட்டில் மூன்று பேர் சேர்ந்து அமர்ந்து பயணித்தபோது அவனது முதுகோடு ஒட்டுப்புல் போல ஒட்டிக் கொண்டு வந்ததை மறந்து விட்டாளா...?

சசிரேகா தூக்கத்துடன் புரண்டு படுத்தாள். அவளது குழல் கற்றை முதுகில் பரவித் தெரிந்தது. முதல் நாள் மாலையில் அவன் உணர்ந்த கூந்தலின் வாசனை அவனை அவளருகில் செல்லத் தூண்டியது.

'நேற்று இரவு மட்டும் இங்கே வர முடிந்திருந்தால்..'

ரஞ்சனின் உடலில் எதிர்பார்ப்புப் பொங்கி எழுந்தது. இரண்டு வாரங்களுக்கு மேல் மனைவியென்ற உரிமையுடன் அவனருகில் நிழலாக இருப்பவளை.. சொந்தம் கொண்டாடிக் கொண்டு ஒருவன் வந்து நின்றதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை..

என்னதான்.. அவனைப் பற்றி ரஞ்சன் அறிந்திருந்தாலும் அவன் வந்தவுடன் அனைத்தையும் மறந்து சசிரேகா அவனைத் தேடி ஓடியதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை...

எதிரே படுத்திருந்தவளின் உடல் வளைவுகள் அவனை ஆகர்ஷித்து 'அருகே வா'வென்று அழைத்தன.. பெண்சுகத்தின் உச்சத்தை மட்டும் மிச்சம் வைத்து அனைத்தையும் நுகர்ந்தவனின் மனம் அலை பாய்ந்தது.. அவளருகில் செல்லத் துடித்தது.. ஆனால்.. அன்று காலையில் அவள் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டவனின் மனம் பின் வாங்கியது.

'என் விருப்பமில்லாமல் இந்தக் கல்யாணம் நடந்து விட்டது.'

ரஞ்சன் சசிரேகாவிடம் மயங்கியதற்குக் காரணம்.. அவள் காட்டிய நாணம்.. ஆணின் தொடுகையை.. முதன் முதலாய் உணரும் பெண்மையின் சிலிர்ப்பை அவள் முகத்தில் அவன் கண்டான். அதை அவன் காதலித்தாக நினைத்த மணிஷாவிடம் அவன் கண்டதில்லை.

சசிரேகா புதிதாய் இருந்தாள்.. பெண்மையின் தன்மையை அவனுக்கு உணர்த்தினாள். மணிஷாவின் தொடுகையில் சங்கடப்பட்டு விலகுபவன்.. சசிரேகாவைத் தானாய்த் தொட்டு அணைத்தான். அவள் மேல் அவனுள் பொங்கியெழுந்த ஈர்ப்பும்.. காதலும் அவளை ஆண்டு விட அவனைத் தூண்டின.

மணிஷாவை மறந்து சசிரேகாதான் எல்லாமும் என்று ஆகிப்போய் அவளிடம் முழு மனதாய்க் காதல் சொல்லியும்.. பனித்திரை ஊடே வந்து விட்டது..

## 35

சசிரேகாவிற்கு விழிப்பு வந்ததும்.. எதிரே ரஞ்சன் அமர்ந்திருப்பதைக் கண்டு... ஆர்வத்துடன் எழுந்தாள். அவளது ஆர்வத்தைக் கண்ட ரஞ்சனின் முக இறுக்கம் தளர்ந்து ஓர் நொடி மென்மையாகியது.. அடுத்த நொடியில்.. மீண்டும் முகம் கடுத்தான்.

"நீ கோடீஸ்வரிதான்.. அதற்காக இங்கேயும் அப்படியே இருக்க நினைத்தால் அது நடக்காது.."

"நான் என்ன செய்தேன்...?"

அவள் புரியாமல் குழந்தை போல் மலங்க.. மலங்க.. விழித்தாள். ரஞ்சனின் மனம் மீண்டும் ஆடியது.. ஆனால் அதைத் திடப்படுத்திக் கொண்டவனாய்ச் 'சுள்'ளென்று அவன் பேசினான்.

"அழுக்குத் துணிகள் பைக்குள்ளேயே கிடக்கின்றதே.. அதை வெளியே எடுத்துப் போடும் எண்ணமில்லையா...?"

"நான் நினைத்தேன்..."

"யாரை..? அந்த டேவிட்டையா...?"

சசிரேகாவின் முகம் மாறியது. இவன் குத்திக் காட்டுகிறான்.

"இல்லை.. துணிகளை எடுத்துப் போட நினைத்தேன்.."

"அப்புறம்.. ஏன் மகாராணி தூங்கினீர்களாம்...?"

'நீ சொன்னாலும்.. சொல்லாவிட்டாலும் நான் மகாராணிதான்...' என்று சொல்லத் துடித்தவள் வாய் மூடிக் கொண்டாள்.

"என்ன பதிலைக் காணோம்...?"

"....."

"இவனுக்கெல்லாம் என்ன கணக்குன்னு நினைத்து விட்டாயா...?"

"...."

"அவனிடம் மட்டும் விளக்கம் சொன்னாய்.. அது எப்படி...?"

"......"

"அதுவும் புள்ளி மான் போல் தாவிக் குதித்து ஓடினாயாமே.. பூங்கொடி சொன்னாள்..."

பூங்கொடியின் பெயரைக் கேட்டதும் சசிரேகாவிற்குக் கோபம் வந்து விட்டது.. அவளால்தானே இத்தனையும் என்ற ஆற்றாமையோடு பொங்கி வெடித்தாள்.

"ஓ.. உங்கள் பூங்கொடி என்ன சொன்னாலும் அது உங்களுக்கு வேத வாக்கு இல்லையா.. அதை மறந்து போனேனே..."

"நீ அதை மட்டுமா மறந்தாய்...?"

ரஞ்சனின் விழிகள் அவளுள் ஊடுருவின.. சசிரேகா வின் முகம் சிவந்து விட்டது. அதைக் கவனிக்காதவன் போல் அவன் தொடர்ந்தான்...

"உனக்குக் கல்யாணமாகி விட்டது.. உன் கணவன் என்று நான் ஒருவன் இருக்கிறேன். என் தாய் மாமனின் வீட்டில் என் மரியாதையை ஏலம் போடக் கூடாது என்பதையும் சேர்த்து மறந்தாய்.."

"ரஞ்சன்.. மைன்ட் யுவர் வெர்ட்ஸ்..."

"நீ இதை என்னிடம் சொல்லுகிறாயா..? குட் ஜோக்.."

"என் பக்க நியாயத்தைக் கேட்கக் கூடாதென்ற முடிவோடு இருக்கிறீர்களா...?"

"எது உன் நியாயம்..? உனக்குக் கல்யாணமாகி ஒரு மாதம் ஆகப் போகிறது.. நீ உன்னைக் காதலித்தவனைத் தேடி ஓடுகிறாய்.. இதுவா உன் நியாயம்..?"

"அவன் எப்படி அங்கே வந்தான் என்றே எனக்குத் தெரியாது ரஞ்சன்.."

"ஆனால் அவன் வந்தவுடன் ஓடிப்போக மட்டும் தெரியும்.."

"நான் போகாவிட்டால்.. அவன் வீட்டுக்குள் வந்து.. உங்கள் மாமாவிடமும்.. அத்தையிடமும் விவரம் சொல்லிவிட்டு மாடிக்கு வந்து என்னைப் பார்ப்பேன் என்றானாம்.. எப்படி வசதின்னு உங்கள் மாமா பெண் பூங்கொடி என்னிடம் கேட்டாள். அவன் வீட்டுக்குள் வந்து விடுவானென்ற பயத்தில் நான் ஓடினேன். இதைப் பெரிய விஷயமாய்ப் பேசாதீர்கள்.."

ரஞ்சன் அதிர்ந்தான். பூங்கொடியின் கைங்கர்யமோ இது..? சசிரேகா தாமதித்திருந்தால் ரஞ்சன் குளித்துவிட்டு வந்து விடுவான்.. அதற்குள் சசிரேகாவைக் கீழே டேவிட்டிடம் அனுப்பப் பூங்கொடி கையாண்ட உத்தியை நினைத்துக் கசந்தான்.

'ம்ம்.. என் மாமனுக்கு மட்டும் இவளது நடவடிக்கையைப் பற்றித் தெரிவிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

என் பெண்டாட்டியின் கௌரவத்திற்காக வாய் மூடி நிற்க வேண்டியிருக்கிறதே..'

ஆனாலும்.. அவன் கீழே போனபோது டேவிட்டிடம் சசிரேகா கூறிக் கொண்டிருந்த வார்த்தைகளை அவனால் மறக்கவும்.. புறக்கணிக்கவும் முடியவில்லை.

"ஓ.. அவன் வீட்டுக்குள் வந்தால்தான் மாமா பார்ப்பாரா...? நீ வீட்டுக்குப் பின்னாடி அவனுடன் பேசிக் கொண்டு நின்றிருந்தால் பார்க்க மாட்டாரா...?"

அவள் எப்படிப் பதில் சொன்னாலும்.. அவன் இப்படிக் குதர்க்கமாகவே தான் கேட்கப் போகிறான் என்பது பிடிபட்டுப் போக.. சசிரேகா சோர்ந்து போனாள்.

"என்ன பேசாமல் இருக்கிறாய்...?"

"பேசி என்ன பிரயோஜனம்..?"

"அதைச் சொல்லு.. என்னிடம் பேசி உனக்கு என்ன பிரயோஜனம்.. நீ பேச வேண்டியவர்களிடம்தானே பேசுவாய்.."

"போதும் ரஞ்சன் ப்ளீஸ்.. இப்போது நான் என்ன செய்ய வேண்டும்..? உங்கள் கண்ணெதிரே நிற்காமல் போய் விடவா...?"

இதை கூறிவிட்டு... 'ப்ளார்' என்று கன்னத்தில் அறை வாங்கினாள் சசிரேகா.. இதுவரை அடி வாங்கி அறியாதவள் துடித்துப் போய் அவனைப் பார்த்தாள்.

அவளின் அந்தப் பார்வை.. அவனைக் கொன்று தின்றது.. விர்ரென்று வெளியே போய் விட்டான் அவன்.. வெகு நேரம் அடிபட்ட கன்னத்தைப் பிடித்துக் கொண்டே.. அடித்தவனை வெறுக்க முடியாமல் அவன் நினைவோடு கலந்து நின்று கொண்டிருந்தாள் சசிரேகா..

## 36

"ராகினி..! அண்ணி எங்கே....?"

"ஏன்.. என்னிடம் பேச மாட்டாயா...? அண்ணியிடம் தான் பேசுவாயா...?"

"விளையாடாதே.. கேட்டதற்குப் பதில் சொல்லு.."

"மாடியில் இருப்பாங்க.."

"அங்கே இல்லாததால்தானே உன்னிடம் வந்து கேட்கிறேன்.."

"நான் என்ன.. உன்னை அண்ணி முந்தானையில் முடிந்து வைத்திருப்பதைப் போல்.. அண்ணியை என் தாவணியிலா முடிந்து வைத்திருக்கிறேன்...?"

துடுக்காகப் பதில் சொன்னவளை முறைத்தான் ரஞ்சன். சசிரேகாவை அறையில் காணோம் என்று அவனுக்குத் தவிப்பாக இருந்தது.

அடித்துவிட்டுப் போனவனால் அமைதியாக இருக்க முடியவில்லை. மனம்.. மீண்டும்.. மீண்டும் அவளையே சுற்றி வந்தது. வீட்டுக்குத் திரும்பியதும் அவளை உடனே பார்க்க வேண்டும் போல் அவனுக்கு இருந்தது. தேடிப் போனால் அவளைக் காணோம்.

'எங்கே போயிருப்பாள்..?' என்ற யோசனையுடன் அவன் நின்றபோது...

"ரஞ்சன்.." என்று சோமய்யன் அவனை அழைத்தார்.

"தாத்தா..."

"கொஞ்சம் இங்கே வா..."

"ஒரு நிமிசம் தாத்தா.. ரேகாவைப் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்.."

"அவள் உன் பாட்டியோடும்.. அம்மாவோடும் கோவிலுக்குப் போயிருக்கிறாள்ப்பா.. நீ வா..."

'அப்பாடா..' என்று நிம்மதியாக இருந்து ரஞ்சனுக்கு.. 'அவள் கோவிலுக்குத்தான் போயிருக்கிறாள். வேறு எங்கும் போகவில்லை...' என்று நினைக்கும்போதே..

'வேறு எங்கு போயிருப்பாள் என்று நீ நினைத்தாய்..?' என்று அவனது ஆழ் மனம் கேட்டது.

"ரஞ்சா..."

"என்ன தாத்தா...?"

"இப்படி உட்கார்.." என்று திண்ணையில் அமர்ந்தவாறு கூறினார் சோமய்யன்.

ரஞ்சன் அவரருகே அமர்ந்தான். இருவரும் சற்று நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சட்டென்று சோமய்யன் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"உன் தாய் மாமனின் வீட்டில் என்ன நடந்ததுப்பா..?"

"தாத்தா..."

"காரணமில்லாமல் நீ கோபமாய்க் கிளம்பி வர மாட்டாயே..."

"தாத்தா.. என்னை மன்னித்து விடுங்கள். என்னால் இதற்குப் பதில் சொல்ல முடியாது.."

"ஏன்...?"

"இல்லை தாத்தா.. வேண்டாம்.. விட்டு விடுங்கள்."

"சரி.. விட்டு விட்டேன்.. நான் வேறு ஒன்றைப் பற்றி உன்னிடம் பேச வேண்டும்.."

"என்ன தாத்தா...?"

"உன் மாமனார்.. உன்னிடம் அவரின் கம்பெனி பொறுப்பை ஒப்படைக்க நினனக்கிறார்.."

சட்டென்று முகம் மாறினான் ரஞ்சன்.

'வீட்டோடு மாப்பிள்ளையாக்க நினைக்கிறார்களா..?'

"வேண்டாம் தாத்தா..."

"ஏன்ப்பா...?"

"அது சசிரேகாவின் சொத்து.."

"அவள் உன்னுடைய சொத்தாச்சேப்பா..."

"இல்லை தாத்தா.. பெண்டாட்டி சொத்தில்.. பெரிய மனிதனாக எனக்கு விருப்பம் இல்லை..."

"வேறு என்ன செய்யப் போகிறாய்...?"

"எனக்குத்தான் பெங்களூரில் வேலை கிடைத்திருக்கிறதே..."

"உனக்கு மட்டுமில்லை.. சசிரேகாவிற்கும் கிடைத்திருக்கிறது.."

"தாத்தா..."

ரஞ்சன் வாயடைத்துப் போனவனாய்ச் சோமய்யனைப் பார்த்தான்.

அவன் பார்வையில் ஏதோ செய்தி இருப்பது புரிந்தது..

"ரஞ்சா.. சசிரேகா பெங்களூரில் வேலைக்குப் போவது நல்லதல்ல.."

தாத்தாவிற்கு எப்படி இது தெரியும்..? ரஞ்சன் திகைத்து விழித்தான். பெங்களூரில் சசிரேகா தேர்வாகியிருக்கும் அதே கம்பெனியில் தான் டேவிட்டும் தேர்வாகி இருக்கிறான். அவனுடன் அவளும்.. ரஞ்சனும் ஒன்றாக எப்படி வேலை பார்க்க முடியும்..?

டேவிட்டிடம் நின்று இரண்டு வார்த்தைகள் சசிரேகா பேசியதையே அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே.. ஒரே அலுவலகத்தில் தினமும் வந்து அவன் பேசினால் எப்படித் தாங்கிக் கொள்வான்..?

"தாத்தா.. அது வந்து..."

"எனக்குச் சசியின் காதல் விவகாரம் தெரியும் ரஞ்சா.."

"தாத்தா..."

"ஜானகியும்.. அவளுடைய கணவரும் வந்து புலம்பினார்கள். உன்னைச் சரியில்லாத

பெண்ணிடமிருந்து மீட்க நினைத்திருந்த நான் அதைப் பயன்படுத்திக் கொண்டேன்."

"தாத்தா..."

"ஆனால் உன் காதல் விவகாரத்தை ஜானகியிடமும்.. அவளுடைய கணவரிடமும் நான் சொல்லவில்லை.. சசி நல்ல பெண். அவளும் சொல்ல மாட்டாள்.. இப்போது சொல்.. உன் தாய்மாமன் வீட்டில் என்ன நடந்தது..? நேற்றுக் கிளம்பிப் போகும்போது உங்கள் ரெண்டு பேருடைய முகத்திலும் இருந்த சந்தோசம்.. திரும்பி வரும்போது இல்லை.. என்ன விசயம்..?"

"அவன்.. அந்த டேவிட்.. அங்கே வந்திருந்தான்.."

"நினைத்தேன்.. சசி போய் அவனிடம் பேசினாளா..?"

"ம்ம்..."

"என்ன பேசினாள்...?"

ரஞ்சன் கூறினான். சோமய்யன் சற்று நேரம் யோசித்தார்.

"சசி.. உண்மையைத்தான் சொல்லியிருக்கிறாள். இதில் நீ கோப்பட ஒன்றும் இல்லைப்பா..."

ஆனால் ரஞ்சனின் மௌனம் அதை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அவருக்கு உணர்த்தியது.

## 37

சொந்தப் பேரனாகவே இருந்தாலும் கணவன்.. மனைவி அந்தரங்கத்திற்குள் தலையிடக்கூடாதென்ற கொள்கையுடன்.. அந்தப் பேச்சைத் தவிர்த்தார் பெரியவர். ஆனால் பேரனைப் பெங்களூர் போக விடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்.

"ரஞ்சா.. யோசித்துப் பார்.. நீ பெங்களூர் போய் வேலை பார்த்தால், சசியும் வேலை பார்க்க நினைப்பாள்.."

"அதற்காக.. என் மாமனாரின் கம்பெனியில் போய் ஒட்டிக் கொள்ளச் சொல்கிறீர்களா...?"

"நீ ஏன் அதை அப்படி நினைக்கிறாய்..? உன் மாமனாரை உனக்கு ஜெனரல் மேனேஜர் பதவியைத் தரச் சொல்கிறேன்.. அந்த வேலையைப் பார்த்து அதற்கான சம்பளத்தை நீ வாங்கிக் கொள்.. உன் மாமனாரின் காலம் வரை.. அவருக்கு அடுத்த பதவியில் இருக்க உனக்கென்ன தயக்கம்..?"

"இருந்தாலும் தாத்தா..."

"டேவிட் அணுக முடியாத இடம் அது, ரஞ்சன்.."

எதைச் சொன்னால் அவனைச் சம்மதிக்க வைக்க முடியுமோ.. அதைச் சொன்னார் சோமய்யன்.. அவரது கணிப்பு பொய்க்கவில்லை. ரஞ்சன் உடனே சரியென்று சொல்லிவிட்டான்.

கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்த பெண்களிடம் விசயத்தைச் சொன்னார் சோமய்யன்.

"இதைப் பாருடி ராகினி.. உன் அண்ணன் பட்டினத்திற்குப் போய்ப் பெரிய வேலையில் சேரப் போகிறானாமே.." என்றாள் ராஜலட்சுமி.

"என்ன மாமா இப்படிச் சொல்கிறீங்க.. ஒரே மகனை.. சம்பந்தி வீட்டிற்கு எப்படி அனுப்புவது..." கோதை நாச்சியார் தயங்கினாள்.

"நீ அதைச் சம்பந்தி வீடுன்னு ஏன் நினைக்கிறாய்..? இப்ப உன் மகன் பெங்களூர் போக வேண்டி வந்தால் என்ன செய்வ..? அதைப்போல நினைத்துக் கொள்ளம்மா.." இலகுவாகக் கூறிவிட்டார் சோமய்யன்.

வெளியே போயிருந்த லிங்கய்யன் வீடு திரும்பியதும் விவரம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. மனைவியைப் போலவே முதலில் மறுத்தார் லிங்கய்யன்.. மகனைத் தனியே அழைத்துச் சென்ற சோமய்யன்.

"ஏன்ப்பா.. நீ தெரிஞ்சுதான் பேசுறயா..? எப்படியும் உன் மகன் தோப்பூரில் இருந்து கலப்பையைப் பிடிக்கப் போறதில்லை.. வேலைக்கு வெளியூர் போகிறவன். பழையபடி அந்தப் பொண்ணு பின்னாடி போய் விட்டால் என்ன செய்வ..? இது அவனுக்கு உடந்தைப் பட்ட சொத்து.. பெரிய வேலையில் சேரப் போகிறான்.. அவன் மாமனார் காலத்திற்குப் பின்னால.. கம்பெனி பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகிறான். இதுக்குப் போய் இம்புட்டு பயம் காட்டுறீயே.. அந்தச் சொத்தெல்லாம் யாருதுப்பா.. உன் மருமகளுடையதுதானே.. வெட்டி வீராப்பு பேசிக்கிட்டு.. அதை ரோட்டில் போகிறவனுக்குக் கொடுத்து விடுவாயா..?" என்று உபதேசம் செய்தார்.

ஒரு வழியாய்.. எல்லோரையும் சம்மதிக்க வைத்து ரஞ்சனின் சென்னைப் பயணத்தை உறுதி செய்து விட்டு.. சென்னைக்குப் போனில் தகவல் சொன்னார் சோமய்யன்.

அன்று இரவு.. ரஞ்சன் அறைக்குள் போனபோது.. சசிரேகா கண்களை மூடிப் படுத்திருந்தாள். அவன் கதவை அறைந்து சாத்தியபோது அந்தச் சத்தத்தில் கண் விழித்துப் பார்த்தாள்.

சிவந்த கண்களால் அவளை உறுத்துப் பார்த்தபடி கட்டிலை நெருங்கினான் ரஞ்சன். முதல் நாளிரவு.. அவன் அவளது காதோரம் சொன்னது அவளது நினைவில் ஆடியது..

'இது என் வீடில்லையே கண்ணம்மா.. இதே போல்.. நாளை இரவும்.. என்னிடம் நீ வர வேண்டும்..'

அந்த வார்த்தைகளைத்தான் அப்போது அவனும் நினைத்துக் கொண்டிருந்தான். அவள் அதை மறந்து விட்டாளா.. என்ற வேட்கையுடன் வெறித்தான்.

அவள் மறக்கவில்லை.. சொன்னவனுக்கு அவை நினைவிருக்கிறதோ.. இல்லையோ.. என்ற சஞ்சலத்துடன்.. அவள் மௌனமாக இருந்தாள்...

'கள்ளி.. ஒரு பார்வை பார்க்கிறாளா.. விட்டத்தை வெறிக்கிறாளே.. விட்டத்திலா.. அவளது புருசன்

இருக்கிறான்..?' அவன் மனம் வெதும்பினான்.

'எப்படி நிற்கிறார்.. என்னை வெறுத்து விட்டாரே..' அவள் மனம் தவித்தாள்.

அவர்கள் இருவருக்கும் இடையே விழுந்த பனித்திரையை விலக்க அவர்களுக்கு ஓர் நொடி போதும்..

ஆனால்.. முதலில் அவன் விலக்க வேண்டுமே.. என்ற தயக்கத்துடன் அவளும்.. முதலில் அவள் விலக்கி அவனருகே வர வேண்டும்.. தன்னைத் தர வேண்டும் என்ற தாபத்துடன் அவனும் பனித்திரையின் இரு பக்கமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்..

குளிர் மிகுந்த பனித்திரையை விலக்க இருவருமே முனையவில்லை...

## 38

அந்தப் பிரம்மாண்டமான மோட்டார் உதிரிப்பாகங்களைத் தயாரிக்கும் கம்பெனிக்குள் ரங்கநாதனுடன் நடந்தான் ரஞ்சன்.. தொழிலாளர்களைச் சந்திக்க அவசரக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.. அதற்கு முன்னாலேயே.. அலுவலர்களுக்குத் தனி அழைப்பு விடுத்து.. மருமகனை அறிமுகப்படுத்தி விட்டார் ரங்கநாதன்..

"மீட் மிஸ்டர் ரஞ்சன்.. இனி இவர்தான் நம் கம்பெனியின் ஜெனரல் மேனேஜர்.. நான் பெயரளவில் தான் எம்.டி. உண்மையில் எனக்கு இணையான அத்தனை பவரையும் இவருக்கு நான் கொடுத்திருக்கிறேன்.."

அடுத்துக் கூடிய தொழிலாளர் கூட்டத்திலும் இதையே கூறினார் ரங்கநாதன்.. யூனியன் தலைவர்களைச் சந்திக்க வைத்தார்.. அனைத்து அதிகாரங்களும்

இனி ரஞ்சனின் கையில்தான் என்பதை மறைமுகமாக எல்லோருக்கும் உணர்த்தினார்..

"என்னப்பா இது.. மகளும் இன்ஜினியரிங் படித்திருக்கிறதாச் சொன்னாங்களே.. அந்தம்மாவிற்கு எந்தப் பொறுப்பையும் தரவில்லையா..?"

அங்கொன்றும்.. இங்கொன்றுமாகப் பேசப்படும் பேச்சுக்கள் ரங்கநாதனின் காதினில் விழத்தான் செய்தன..

அவரும் சசிரேகாவிடம் இதைப் பற்றிப் பேசத்தான் செய்தார்.. மகள் திருமணம் முடிந்த புதிதில் கோபமாக இருந்தாலும்.. இப்போது அதை மறந்து விட்டு சகஜமாய் இருப்பதில் அவருக்கும் நிம்மதி வந்திருந்தது.. பழைய படி பாசத்துடன் மகளிடம் பழக ஆரம்பித்தார்..

"சசி.. மாப்பிள்ளை நம் கம்பெனியின் ஜெனரல் மேனேஜர் ஆகப் பொறுப்பெடுத்துக் கொள்ளட்டும்.. நீ பெர்ஸனல் மேனேஜர் ஆகப் பொறுப்பெடுத்துக் கொள்.."

"நோ.. டாட்.."

"இன்னும் என் மீது கோபமா டார்லிங்.."

"அதற்காக இல்லை டாடி.. ஒரே உறையில் இரண்டு கத்திகள் இருக்கக் கூடாது.."

"சசி.."

"நம் கம்பெனிக்கு நான் வந்தால்.. அவருக்கான முக்கியத்துவம் குறைந்து விடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.."

"பட் சசி.. நீங்கள் ஒருவருக்கொருவர் பேசி.."

"வேண்டாம் டாடி.. வீணான விஷப்பரிட்சை எதற்கு..? நான் வேறு அவர் வேறு இல்லை.. இது நம் கம்பெனியில் இருப்பவர்களுக்குத் தெரியுமா..? எனக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விட்டால்.. என் வாழ்க்கை நிம்மதியாக இருக்காது டாடி.. எனக்கு என் கேரியரை விட.. என் வாழ்க்கைதான் முக்கியம்.."

படிப்பில் கெட்டிக்காரியான சசிரேகா.. தன் சுயத்தை மறந்தாள்.. ரஞ்சனுக்காக.. அவனுடைய அன்பிற்காக..

தன்னை ஜீரோவாக்கிக் கொண்டு வீட்டில் ஒதுங்கிக் கொண்டாள்..

இதை அறியாத ரஞ்சன்.. கம்பெனியின் வேலைகளில் ஆர்வமாய்த் தன்னை இணைத்துக் கொண்டான்.. சசிரேகாவை விடத் திறமை மிகுந்தவனான அவன் எடுத்த முடிவுகள் சில.. கம்பெனியை உச்சத்திற்குக் கொண்டு போயின..

ரங்கநாதனுக்குப் பெருமை பிடிபடவில்லை.. வீட்டிலும் வெளியிலும்.. மருமகனின் புகழைத்தான் அவரது வாய் பாடியது..

"ஜானு.. இன்றைக்கு அந்த அமெரிக்க கம்பெனியின் கான்ட்ராக்ட் நமக்குக் கிடைத்த செய்தியைச் சொன்னதும் தீனதயாளனின் முகம் எப்படி ஆச்சு தெரியுமா..?"

"எப்படி ஆனது..?"

"இஞ்சி தின்ற குரங்கு போல ஆகி விட்டது.. ஹா.. ஹா.."

கணவனின் வெற்றிகளைக் கேட்கும் போது சசிரேகாவிற்கு சந்தோசத்தில் மனம் தளும்பும்.. ஆனால் அவனை நேரடியாய்ப் பாராட்ட முடியாது..

அவன்தான் அவளிடம் பேசவே மாட்டானே.. மாமனார்.. மாமியாரின் முன்னிலையில்.. ஓரிரு வார்த்தைகள் பேசுவதோடு நிறுத்திக் கொள்வான்.. தனிமையில் நிமிர்ந்து அவள் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டான்.

சசிரேகா பொறுமை காத்தாள்.. அவனது நிழலாக இருக்க ஆசைப்பட்டாலும்.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அவன் மனம் திரும்பக் காத்திருந்தாள்..

ஆனால் அவளுக்குத் தெரியாது.. அவளது பார்வை அவன் பக்கம் திரும்புவதற்காகத்தான் அவனும் காத்துக் கொண்டிருக்கிறான் என்பது.

அன்று அவர்களுடைய திருமண நாள்.. சசிரேகா காலையிலேயே எழுந்து குளித்து.. புதுச்சேலை கட்டி.. தலையைப் பின்னினாள்..

'ம்ம்.. முடி வளர்ந்து விட்டது..' என்று நினைத்தவாறு இடுப்பைத் தொட்ட பின்னலைத் திருப்தியுடன் பார்த்துக் கொண்டாள்..

லேசான ஒப்பனையுடன்.. கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டவள்.. அறைக்குள் வந்து.. ஜன்னலைத் திறந்தாள்.. தோட்டத்தில் பனியில் குளித்த மலர்கள் தெரிந்தன..

'நேற்றுப் போல் இருக்கிறது.. மம்மி.. டாடியிடம் மல்லுக்கு நின்று.. வேறு வழியில்லாமல் தாலி வாங்கிக் கொண்டது.. அதற்குள் ஒரு வருடம் ஓடி விட்டதா..'

அந்த ஆனந்தத்தில் இருந்தவளுக்கு.. அவனும் அவளும் வாழ்ந்த வெறுமையான வாழ்க்கை நினைவிற்கே வரவில்லை..

அவளைப் பொறுத்தவரை அவனுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்.. அவனுடைய குரலைக் கேட்டுக் கொண்டிருந்தால் போதும்..

விசித்திரத்திலும்.. விசித்திரமாக.. குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த ரஞ்சனுக்கும் இதே நினைவு தான் தோன்றியது.

அன்று.. அவனுடைய தாய் மாமாவின் வீட்டில் அவளைத் தொட்டு அணைத்த அணைப்பின் நினைவே அவனைச் செலுத்திக் கொண்டிருந்தது..

அவளருகில் வெகு நேரம் இருந்தால்.. எங்கே தன் சுய கட்டுப்பாட்டை இழந்து விடுவோமோ என்ற தாபத்தில்.. தன்னை மறக்க கம்பெனியில் அதிக நேரத்தைச் செலவிட ஆரம்பித்தான்.

அதனால் கம்பெனியின் உயர்வு கூட ஆரம்பித்தது.. ரங்கநாதன் மருமகனின் திறமையில் மகிழ்ந்து போனார்..

அவருக்கு என்ன தெரியும்.. மகளுடன் இசைந்து வாழ முடியாமல் தான் மருமகன் இரவு.. பகல் பாராமல் கம்பெனியே கதியாகக் கிடக்கிறான் என்பதை அறியாமல்.. அவர் நித்தமும் நிம்மதியாய்த் தன் மனைவியுடன் உறங்கி எழுந்தார்..

"இந்த இளம் வயதிலேயே இப்படி இருந்தால்.. என் வயதில் மாப்பிள்ளை எப்படி இருப்பார்..?" ரங்கநாதன் பெருமையுடன் அடிக்கடி மனைவியுடன் பேசிக் கொள்வார்..

ரஞ்சன் குளியலறையில் இருந்து வெளியே வந்த போது சசிரேகா அவனுக்கு முதுகு காட்டி நின்றிருந்தாள்.

அழகாகப் பின்னப்பட்டிருந்த பின்னலை ரசித்துப் பார்த்தான்.. அவள் திருமணத்திற்குப் பின்னர்.. ஜீன்ஸைத் தவிர்ப்பதைத் தெரிந்து வைத்திருந்தவன்.. அன்று புடவையில் இருந்தவளைத் தொட முடியாத தவிப்புடன்.. கண்ணாடியின் முன் போய் நின்றான்..

சப்தம் கேட்டுத் திரும்பிய சசிரேகா.. அவனது உடைகளை அருகிலிருந்த டீப்பாயில் வைத்துவிட்டு அகன்றாள்..

'ஏன்.. இதை என் கையில் கொடுக்க மாட்டாளாமா..?' எரிச்சலுடன் நினைத்துக் கொண்ட ரஞ்சன்.. புதிய உடைகளை அணிய ஆரம்பித்தான்.

தினமும் இப்படித்தான்.. அவனுக்கான எல்லா வேலைகளையும் பார்த்துப் பார்த்துச் செய்வாள்.. ஆனால்.. அவன் அருகே வந்தால் மட்டும் நகர்ந்து விடுவாள்.. அவன் மனம்.. இந்தப் பனித்திரையின் பின்னே அவள் ஒளிவதைக் கண்டு மறுகும்.

அவன் கீழே இறங்கி வந்தபோது.. சசிரேகா அவனருகில் வந்து நின்றாள்.. அவன் புருவம் உயர்த்துவதைப் பார்த்துக் கொண்டே..

"டாடி.. மம்மியுடன் சேர்ந்து நின்று எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க.." என்றாள்..

அவன் புரிந்து கொண்டு.. அவளுடன்.. மாமனார்.. மாமியாரின் பாதம் தொட்டு நிமிர்ந்தான்.

"இந்தாங்க மாப்பிள்ளை.." என்று வெளிநாட்டுக் கார் ஒன்றின் சாவியைத் திருமண நாள் பரிசாக வழங்கினார் ரங்கநாதன்.

"கையை நீட்டுங்க.." என்று சசிரேகா கூறவும்.. புரியாத பார்வையுடன் கையை நீட்டினான்.

வைர மோதிரத்தைப் போட்டு விட்டாள் அவள்.. அவனுக்கு மனம் உறுத்தியது.. தான் பரிசளிக்காமல்.. அவளது பரிசை ஏற்றுக் கொள்வது.. அவனது ஆண்மையின் கர்வத்திற்குச் சவாலாய் இருந்தது.

"புறப்படு..!" என்றான்.. சசிரேகாவைப் பார்த்து..

"எங்கே..?" என்றாள் அவள் புரியாமல்..

"வேறு எங்கே உன்னை மாப்பிள்ளை கூப்பிடுவார்..? கோவிலுக்குக் கூப்பிட்டுப் போய் விட்டு.. சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போவார்..!" சந்தோசமாய்

ஜானகி அவளையும் அறியாமல் அவர்களைச் சேர்த்து அனுப்பினாள்..

## 40

வெண்மை நிறக் கடைசலுடன் கூடிய அஷ்ட லட்சுமி கோவில்.. அத்தனை லட்சுமிகளையும் வணங்கி விட்டு.. வெளியே வந்து.. கடலோரமாக அவர்கள் அமர்ந்தனர்..

உடைக்க முடிந்த.. அவர்கள் உடைக்க முயலாத மௌனம் அவர்களைச் சூழ்ந்திருந்தது..

'வாயைத் திறந்து பேசினால் என்ன.. முத்தா உதிர்ந்து விடும்..?'

'இவர் என்னிடம் பேசவே மாட்டாரா..?'

மனதிற்குள் அவர்கள் பொருமிக் கொண்டிருந்து விட்டு.. பேச்சின்றி எழுந்து காருக்குச் சென்றனர்.. ரஞ்சன் ஒரு நகைக் கடையின் முன்னால் காரை நிறுத்தினான்.. கேள்வியாகப் பார்த்தவளிடம்..

"என் ஜி.எம். வேலைக்கான சம்பளப் பணம் பேங்க்கில் நிறையச் சேர்ந்திருக்கிறது.." என்றான்.

"ஸோ..?"

"உனக்கு நகை வாங்கிக் கொடுக்க நினைக்கிறேன்.."

'பதிலுக்குப் பதிலா..' என்று நினைத்தவள்.. அந்த நினைவை முகத்தில் காட்டிக் கொள்ளவில்லை..

அவன் கையால் நகை வாங்கிக் கொள்வது நின்று போய்விடக் கூடாதே.. அதனால்.. பேசாமல் இறங்கி அவனைப் பின்பற்றினாள்.

"ம்ம்.. உனக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்.." என்றவனிடம்..

"எனக்குப் பிடித்ததைத்தான் நான் வாங்கி உங்களுக்கு பிரஸென்ட் பண்ணி விட்டேனே.. உங்களுக்கு எது பிடிக்கிறதோ அதை வாங்கிக் கொடுங்கள்.. போட்டுக் கொள்கிறேன்..!" என்றாள் அவள்..

ரஞ்சனின் மனதில்.. திருமணமான முதல் மாத நடுவில் அடித்த மழைச் சாரலின் நாள் நினைவில் வந்தது.. அதே சாரல் மீண்டும் அவன் மனதில் அடித்தது.. சாரலடித்த மனதுடன்.. நகைகளைப் பார்வையிட்டவன்.. அழகான காதணிகள்.. வளையல்கள்.. அட்டிகை.. மோதிரம் கொண்ட கல் நகை செட்டை எடுத்தான்..

"இதற்கு பில் போடுங்க..!" என்றவன்.. அவளிடம் அதைக் கொடுத்தான்..

அவர்கள் காரில் ஏறியதும்.. ரஞ்சன் காரை ஓட்டிக் கொண்டிருககை.. சசிரேகா.. தன் காது.. கைகளில் இருந்த நகைகளைக் கழட்டி.. கைப்பையில் போட்டாள்.. அவன் வாங்கிக் கொடுத்ததை உடனே அணிந்து கொண்டாள்.

பனித்திரை.. கொஞ்சம் விலகியது.. ரஞ்சனின் மனதில் இதம் பரவியது.. அவன் மீதான அவளது விருப்பத்தை.. இதைவிட அழகாக வெளிப்படுத்த முடியாது என்று அவனுக்குத் தோன்றியது.

"சாப்பிட்டு விட்டு சினிமாவுக்குப் போகலாமா..?"

"ம்ம்.. வீட்டிற்குப் போகலாம்.."

"வீட்டிற்கா..? இங்கே பார்.. இன்றைக்குப் பூராவும் ஊர் சுற்றுகிறோம்.. நைட்டுக்குத்தான் வீடு.."

அவன் 'நைட்' என்ற வார்த்தையை அழுத்தி உச்சரித்தான்.. அவளுடைய முகம் சிவந்தது.. வெகுநாட்களுக்குப் பின்னால் முகம் சிவந்தவளை ஆசையுடன் பார்த்தான் அவன்..

"உனக்கு என்ன பிடிக்கும்.." அவன் மெனு கார்டை அவள் பக்கம் நகர்த்த..

"ம்ம்.. உங்களைத்தான் பிடிக்கும்.." என்று அவள் சட்டென்று சொல்லி விட்டாள்..

அவன் கையிலிருந்த மெனு கார்டு நழுவியது.. பனித்திரையும் பாதிக்கு மேல் விலகிவிட்டது..

"ரேகா.." என்று அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"இப்போதுதான்.. நான் ரேகா என்பது நினைவிற்கு வந்ததா..?" அவள் கண் கலங்கினாள்..

"நீ மட்டும் என்னடி.. என்னைக் கண்டு கொள்ளாமல் தானே இருந்தாய்..?" அவனது மனதிலிருந்ததை அவனும் சொல்லி விட்டான்.

'அவன் அவளது அன்பிற்காக ஏங்கினானா..' ஆச்சரியத்துடன் அவள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த

போதுதான் அது நிகழ்ந்தது.

"ஹாய்.. மை டியர் ரஞ்சன்.." என்றபடி அவனருகே அமர்ந்து கழுத்தைக் கட்டிக் கொண்டாள், ஒரு பெண்..

"மணிஷா.. பப்ளிக் பிளேஸில் ஏன் இப்படி பிஹேவ் பண்ணுகிறாய்..?" என்றபடி சங்கடத்துடன் அவளது கைகளை விலக்கிவிட்டு சசிரேகாவின் முகம் பார்த்தான் ரஞ்சன்..

'மணிஷாவா..?' சசிரேகாவின் முகம் மாறியது.. விலகிய பனித்திரை மீண்டும் விரிந்து அவர்களுக்கு இடையே விழுந்தது..

41

"ஆக்சுவலி ரஞ்சன்.. நான் மும்பைக்குப் போய் விட்டேன்.. நீங்கள் இல்லாமல் பெங்களூரில் வேலை பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை.. போன வாரம்தான் சென்னைக்கு வந்தேன்.. நம்ம பிரண்ட் சர்மிளி இங்கே தானே இருக்கிறாள்.. அவள் உங்களைப் பற்றி சொன்னாள்.. உங்களைப் பார்க்க கம்பெனிக்கு வந்தேன்.. நீங்கள் மீட்டிங்கில் இருக்கிறதாய்ச் சொல்லிட்டாங்க.. பிக் மேன் ஆகி விட்டிங்களே.."

சசிரேகா என்ற ஒருத்தி அங்கு இருப்பதையே கண்டு கொள்ளாதவளாய் அவள் ரஞ்சனின் கை விரல்களோடு விரல் பிணைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தாள்..

'இவனாவது கையை உதறுகிறானா..? சசிரேகா பல் கடித்தாள்..'

பேரர் ஆர்டர் எடுக்க அருகில் வந்ததும்.. மணிஷா திரும்பி அவளுக்கு வேண்டியதைச் சொன்னாள்..

'இவளும் நம்மோடு சாப்பிடுகிறாளா..?' சசிரேகா விழியால் வினவ.. ரஞ்சன் தர்மசங்கடத்துடன் அவளைப் பார்த்தான்..

"ரஞ்சன்.. நம்ம கிளாஸ் மேட் விஷால் இருக்கானில்ல.. அவன் டைவர்ஸ் பண்ணிவிட்டு.. வேறு மேரேஜ் பண்ணிக்கிட்டானாம்.. அவன் வீட்டில் ஃபோர்ஸ் பண்ணியதால் மாட்டிக் கொண்டானாம்.. அப்படியே உன் கதை போல் இருக்கில்ல..?"

சசிரேகா பட்டென்று எழுந்து விட்டாள்.. ரஞ்சன் கூப்பிடக் கூப்பிட வாசலுக்கு வந்தவள்.. காலியாகப் போன.. கால் டாக்ஸி ஒன்றைப் பிடித்துக் கொண்டு வீடு திரும்பி விட்டாள்..

"என்ன சசி தனியாக வருகிறாய்.. மாப்பிள்ளை எங்கே..?"

"அவர்தான் இப்போது பிஸி மேன் ஆகிவிட்டாரே.. ஒரு போன் வந்தது.. போய் விட்டார்.."

சசிரேகா.. சாப்பிடாமல் மாடிக்குச் சென்று விட்டாள்.. சற்று நேரத்தில் அறைக் கதவு திறந்தது.. ரஞ்சன் உள்ளே வந்தான்.. அவள் முகம் திருப்பிக் கொண்டாள்... அவன் அவளருகில் அமர்ந்தான்.

"ஏன் எழுந்து வந்தாய்ன்னு கேட்க மாட்டேன்.."

"தேங்க்ஸ்.."

"அந்த நிலையில் யாராக இருந்தாலும் நீ செய்ததைத் தான் செய்வார்கள்.."

"ஓஹோ.."

"உன் கோபம் எனக்குப் புரிகிறது..?"

"கோபமா.. எனக்கா.. நெவர்.. நான் யார் உங்கள் மேல் கோபப்பட..?"

"ரேகா.. கோபத்தில் அதிகமாய் வார்த்தைகளை விடாதே.. நீ எனக்குப் பெண்டாட்டியென்பது உன் நினைவில் இல்லையா..?"

"முதலில் இன்றைக்கு நம் கல்யாண நாள் என்பது உங்கள் நினைவில் இருக்கிறதா... இல்லையா..?"

"ஏய்ய்... நானாடி அவளைக் கூப்பிட்டேன்.. அவளாக வந்தாள்.. அவளே ஆர்டர் பண்ணிக் கொண்டாள்.. என்னை என்ன செய்யச் சொல்கிறாய்..?"

"பாவம்.. நீங்கள் பச்சைக் குழந்தை.. நீங்கள் என்ன செய்வீர்கள்..?"

"ச்சு.. ரேகா.. நீயேன் அவளை என் பழைய காதலியாகப் பார்க்கிறாய்..? என் கிளாஸ் மேட்டாகப் பார்க்கக் கூடாதா..?"

"அவ்வளவு பெரிய மனம் எனக்கில்லை.."

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும் சொல்லு.. தோப்புக் கரணம் போடவா... சொல்லு.. போடுகிறேன்.."

அவன் காதைப் பிடித்துக் கொள்ளவும் அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது..

"ஹப்பா.. ஒரு வழியாக ஒரு வருசம் கழித்துச் சிரித்து விட்டாய்.."

"அவள் ஏன் வந்தாள்..?"

"இப்போதுதானே சிரித்தாய்..?"

"என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.."

"சொன்னால் அடிக்கக் கூடாது.."

"ரொம்ப பயந்தவர்தான்.. சொல்லுங்கள்.."

"நான் உன்னை நைஸ் பண்ணி வைத்துக் கொள்ள வேண்டுமாம்.."

"அதுதான் உங்களுக்குக் கை வந்த கலையாச்சே.."

"உன்னை மயக்க வேண்டுமாம்.."

"இனிப் புதிதாக மயக்க வேண்டுமா..?"

"ஏய்ய்.. ரேகா.."

அவன் அவளைப் புயலாய் ஆக்ரமித்தான்.. அவனது ஆவேசமான தொடுதலில் அவர்களுக்கு இடையே இருந்த

பனித்திரை சுக்கு நூறாய்க் கிழிந்து விட்டது..

சற்று நேரம் கழித்து விலகியவன்.. புயலில் சிக்கிய பூங்கொடியாய்க் கிடந்தவளின் முடி கோதி முத்தமிட்டான்.. அவள் புரண்டு படுத்து அவனது சட்டைப் பொத்தானைத் திருகினாள்..

"ம்ம்.. சொல்லுங்க.. அப்புறம் அவள் என்ன சொன்னாள்..?"

"ஏன்டி.. இந்த நேரத்தில் போய் அவளின் பேச்சு தேவையா..?"

"எனக்குத் தேவைதான்.. சொல்லுங்கள்.."

"அப்போ.. நான் உனக்குத் தேவையில்லையா..?"

"ரஞ்சன் ப்ளீஸ்.."

"ஓகே.. ஓகே.. சொல்லி விடுகிறேன். ரேகா.. அவளைப் பற்றி என் தாத்தா குறைவாகச் சொன்னார்.. அப்போது நான் அதை நம்பவில்லை.. ஆனால் இப்போது.. அவள் சொன்னதைக் கேட்டபின்.. எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்து தாத்தா என்னைக் காப்பாற்றி இருக்கிறார் என்பது எனக்குப் புரிகிறது.."

"அப்படி அவள் என்னதான் சொன்னாள்..?"

"உன்னை மயக்கி.. இந்தச் சொத்துக்களை நான் என் பெயருக்கு மாற்றி எழுதி வாங்கிக் கொள்ள வேண்டுமாம்.. அதன் பின்னால்.. உன்னை டைவர்ஸ் பண்ணி விட்டு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமாம்.."

உண்மையில் மணிஷா.. இதை வேறு விதமாகச் சொன்னாள்.. சசிரேகாவிற்கு மெல்லக் கொல்லும் விஷத்தைக் கொடுத்துக் கொன்று விட்டு.. மணிஷாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொன்னாள்..

"பாருங்கள் ரஞ்சன்.. நீங்கள் செய்திருக்கும் இந்தக் கல்யாணம் மிகவும் சரியான காரியம்.. சொத்தை அடைய இதுதான் சிறந்த வழி.. சொத்தை அவளை மயக்கி உங்கள் பெயருக்கு எழுத வையுங்கள்.. ஸ்லோ பாய்ஸன் கொடுத்து

அவளைக் கொன்று விடுங்கள்.. நாம் அப்புறம் ஜாலியாக என்ஜாய் பண்ணலாம்.."

ரஞ்சனுக்கு அவளைப் பார்க்கும்போதே குமட்டிக் கொண்டிருந்தது.

'இப்படியும் ஒரு பெண் இருப்பாளா...?'

"இதோ பார் மணிஷா.. நான் வேறு வகையைச் சேர்ந்தவன்.. பெண்டாட்டிதான் என் உயிர். அவளில்லாமல் நானில்லை. இப்போது ஆர்டர் கொடுத்த அயிட்டங்கள் வரும்.. உள்ளே தள்ளி விட்டு.. உன் இடத்தைப் பார்த்துப் போய்ச் சேர். இனியொரு முறை என்னிடம் இப்படி உளறிக் கொட்டினால்... உன் உயிர்.. உன் உடம்பில் இருக்காது.. ஜாக்கிரதை..."

42

இரவின் இதமான அமைதியில்.. சசிரேகா அவனை நெருங்கி வந்தாள்.. அவனது மார்பினில் தலை சாய்த்து.. இறுக்கிக் கொண்டாள். கிளர்ந்து அவள் பக்கம் சரிந்தவனின் தலை கலைத்து.. அவன் காதோரமாய் ரகசியம் பேசினாள்.

"அன்றைக்கு உங்க மாமா வீட்டில் என்ன சொன்னீங்க..?"

"என்ன சொன்னேன்.."

"இது என் வீடில்லைன்னீங்க.."

"ஆமாம்.."

"அதனால்.. நாளைக்கு இரவும் இதுபோல் என்னிடம் நீ வர வேண்டும்ன்னீங்க.."

"நினைவு இருக்கிறதாடி.. நினைவிருந்துமா.. இத்தனை நாள் என்னைப் பட்டினி போட்டாய்..?"

"ம்ம்.. முறைத்துக் கொண்டே இருந்தது நீங்களா.. இல்லை நானா..?"

"இப்போதாவது.. வாய் திறந்து இதைச் சொன்னாயே.."

"சொன்னது மட்டுமில்லை.."

"வேறு என்ன..?"

"நீங்கள் கேட்டுக் கொண்டது போல் வந்து விட்டேன்.."

"ரேகா.."

அவன் அவளை இழுத்துக் கொண்டான்.. கரையுடைத்த வெள்ளத்தில் அவள் மூச்சுத் திணற மூழ்கி.. முத்தெடுத்தாள்..

தோப்பூர் வீட்டில்.. அதிகாலையில் போன் மணி அடித்தது.. எடுத்துப் பேசிய கோதை.. ஆனந்தத்துடன் கூவினாள்..

"என்னங்க.. நம்ம மருமகள் உண்டாகியிருக்காளாம்.."

"அப்படியா.."

லிங்கய்யன் விசயத்தைத் தகப்பனிடம் சொல்ல எழுந்தபோது ராஜலட்சுமி..

"ஏன்ய்யா.. அந்தப் பெண் ஒல்லியா இருந்தாத்தானே நல்லா இருக்கும்..?" என்று கேட்டு வைத்தாள்..

"ஆமாம்மா.. அதுக்கென்ன இப்ப..?"

"இப்ப குண்டாகியிருக்காள்ன்னு உன் பெண்டாட்டி சொல்கிறாளே.."

லிங்கய்யன் கோதை நாச்சியாரின் முறைப்பைத் தாங்க முடியாமல் வாசலுக்கு விரைந்தார்..

"என்ன ஜானகி.. என்ன செய்துக்கிட்டு இருக்கே.."

"ம்ம்.. பத்தியச் சமையல் பண்ணிக்கிட்டு இருக்கேன்.. நம்ம சசியோட பாட்டியின் ஆர்டர்.."

"தோப்பூரிலிருந்து அவங்க டைரக்சன் கொடுக்கிறாங்களா..?"

"பின்னே.. நம்ம மகள் சுமப்பது அவங்க வீட்டு வாரிசு ஆயிற்றே.. அக்கறை இருக்காதா..?"

ஏழாம் மாதம்.. தோப்பூருக்குச் சசியுடன் சென்று முறைப்படி வளைகாப்பு செய்து அழைத்து வந்தார்கள்.. வளைகாப்பின்போது ரஞ்சன் சோமய்யனுக்கு நன்றி சொன்னான்..

"தாத்தா.. நீங்க விவரம் தெரிஞ்சவங்க... மணிஷாவிடமிருந்து என்னைக் காப்பாற்றினீங்க.."

'ஏன்டா.. நீதானேடா.. எங்க வம்ச விளக்கு.. நீ நல்லா இருந்தால்தானே நாங்க நல்லா இருப்போம்..'

ஒரு விடியலின்போது.. ரஞ்சனின் மகன் பிறந்தான்.. தோப்பூரே.. சென்னைக்குத் தனியாக ஒரு பஸ் பிடித்து.. குழந்தையைப் பார்க்கப் போனது...

வந்தவர்களை வரவேற்று.. உபசரித்து.. அனுப்பி வைத்தாள் ஜானகி.. குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி.. கொண்டாடினாள் கோதை நாச்சியார்.. அவள் மனது நிறைந்திருந்தது..

"நாங்க.. கிளம்புகிறோம் சசி.. நீ உடம்பைப் பார்த்துக்கோ.."

"சரிங்கத்தை.. ராகினி.. நன்றாகப் படிக்க வேண்டும்.. சரியா..?"

சசிரேகா அவர்களின் அன்புமிகு மருமகள் தானென்பதை உணர்த்தினாள்.. அவர்கள் எல்லோரும் போன பின்புவீடு வெறிச்சோடி விட்டதாக ரஞ்சனிடம் கூறினாள்..

"என்னது, வெறிச்சென்று இருக்கிறதா..? இங்கே வா.."

"எதற்கு..?"

"இன்னும் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்வோம்டி.. வீடு நிறைந்துவிடும்.."

அவன் அவளைக் கட்டிக் கொள்ள.. அவள் வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்து ஒன்றிக் கொண்டாள்..

உண்மையான அன்பிற்கு முன்னே பனித்திரை என்றுமே நிலைத்து நிற்காது.. மறைந்து விடும்..

... முற்றும் ...